சென்னைப் பல்கலைக் கழகக் கிறித்தவத் தமிழ்
இலக்கியத் துறை வெளியீடு: 3

திட்டூர்த் தேசிகரின்
சௌமியத் துறை

ஆசிரியர் :

டாக்டர் ஞா. இன்னாசி

பேராசிரியர் — தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகம்

1986

THITTUR THECIKAR'S

SOWMIYAT THURAI

AUTHOR

Dr. S. INNASI

Professor and Head
Chair on Tamil Christian Literature
University of Madras

UNIVERSITY OF MADRAS

1986

திட்டூர்த் தேசிகரின்

சௌமியத் துறை

ஆசிரியர் :

டாக்டர். சூ. இன்னாசி

பேராசிரியர் — தலைவர்

கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னைப் பல்கலைக்கழகம்

1986

முதற் பதிப்பு : 1986

உரிமம் : சென்னைப் பல்கலைக்கழகம்

விலை ரூ. 40-00

அச்சிட்டோர் : நளந்தா ஆர்ட் பிரிண்டர்ஸ்
356, லாயிட்ஸ் சாலை, சென்னை-600 005

முன்னுரை

திட்டூர் ரா. ஈசுரபாக்கிய ஈசாக்கு தேசிகர் என்பவரால் இயற்றப்பட்ட இந்நூல், கி.பி. 1894ஆம் ஆண்டு முதல் 1910ஆம் ஆண்டு வரை சிறுகச் சிறுக இயற்றப்பட்டுப் பின்னர் ஆசிரியரால் தொகுத்து முடிக்கப்பட்டதாகும். இத்தொகுப்பு 105 தலைப்புகளைக் கொண்டது. ஆசிரியர்தம் கையெழுத்துச் சுவடியில் ஒவ்வொரு தலைப்பில் உள்ள பாடல்களும் எழுதி முடிக்கப்பட்ட நாள் சுட்டப்படுகிறது. அவற்றை நோக்கின் நூலின்கண் அமைந்த வரிசை முறையில் ஆசிரியர் பாடல்களைப் பாடியதாகத் தெரிந்திலது. பல்வேறு சமயங்களில், பல்வேறு தலைப்புகளில் பாடி வைத்திருந்து, பின்னர் கருத்தியைபு தொடர்புறத் தொகுத்துள்ளார். அவற்றுள் 1902 பாடல்கள் அடங்கியுள்ளன என ஆசிரியரால் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள 'சௌமியத் துறை - தலைப்பட்டவணையும் கவித்தொகையும்' என்னும் பட்டியல் காட்டுகிறது. இவற்றுள் இரண்டாம் தலைப்பில் உள்ள சரணப்பத்து இருபது அடிகளையுடைய ஆசிரியப்பாவால் அமைந்தது. அதனை ஆசிரியர் இரண்டிரண்டடிகளையுடைய பத்துப்பாக்களாகக் கணக்கிட்டுள்ளார். அதனை ஒரே பாவாகக் கணக்கிட்டால் பாக்களின் எண்ணிக்கை குறையும்.

நூலின் தலைப்புப் பொருளைத் தொடக்கத்தில், குறிப்பு என்னும் தலைப்பிட்டு, ''சௌமியத் துறை என்றால் சௌமியம் - சாந்தம்; துறை-வழி. ஆகவே மனோசாந்தத்தையடைந்து கொள்ளும் வழியைக் கூறும் நூல் என்பது கருத்தாம்'' என ஆசிரியர் தம் கையெழுத்துச் சுவடியின் முகப்பில் குறித்துள்ளார். சாந்தம் என்பது யாது என்பதற்கான விளக்கம்போல, ''சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது'' (மத்.5:5), ''உங்கள் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக'' (பிலி.4:5) என்னும் விவிலியப் பகுதிகளைக் குறிப்பிடுகிறார். இவற்றினின்று விண்ணுலகையடைவதற்கு ஏற்ற வகையில், மனத்தில் அமைதி காண்பதற்கான குறிக்கோளை மனத்திருத்தி, இந்நூலில் அடங்கியுள்ள பாக்களை ஆசிரியர் பாடியுள்ளதாகத் தெரிகிறது.

பாடல் தலைப்புகளுள் பல, அவற்றுள் அடங்கிய பாடல்கள் முடிவுபெறும் தொடர்களாலேயே அமைக்கப்பட்டுள்ளன. நமப்பதிகம், நமோ பதிகம், தொழுவாம் பதிகம், சரண பங்கயப் பதிகம் போன்றவை அவ்வகையைச் சாரும். தேவார திருவாசகங்களின் தாக்குறவும் பல பகுதிகளில் கணப்படுகின்றன. அன்னைப் பத்து, சரணப் பத்து, ஞானச் சாழல், திருக்கழல், திருப்பல்லாண்டு போன்ற தலைப்புகளைக் கொண்டிருப்பதும், பெரும்பான்மைத் தலைப்புக்கள் பப்பத்துப்

பாக்களைப் பெற்றிருப்பதும் தேவார திருவாசகங்களை மனத்திருத்தி ஆசிரியர் இப்பாடல்களைப் பாடித் தொகுத்திருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தும்.

பிற நூல்களில் காணப்படாத சில தனித்தன்மைகள் இப்பாடல்களில் காணப்படுகின்றன. பெரும்பான்மையான தலைப்புகளின் அருகில் எவ்வெவ் விவிலியப் பகுதிகளின் அடிப்படையில் அத்தலைப்புப் பாக்கள் அமைந்துள்ளன எனச் சுட்டுவதும், பாக்களின் முடிவில் அவை எழுதி முடிக்கப்பட்ட நாளினைக் குறிப்பிடும் முறையும் காணப்படுகின்றன.

கண்ணனைப் பல்வேறு வடிவில் பாரதி கண்டு களித்தான். ஆனால் தேசிகர் இறைவனைப் பல்வேறு குலத்தினனாகக் கண்டு போற்றுவது எவ்விலக்கியத்திலும் காணப்படாத புதுமையாகத் தோன்றுகிறது. செட்டியாக, செம்மானாக, ஞானத் தட்டானாக, பட்டாரியனாக, பார்ப்பானாக, வண்ணானாக, கோனாராக, வேளாளனாகக் கண்டு, அவர் தம் நல்லியல்புகளால் பெறுகின்ற அருட்செயல்களைப் போற்றிப் புகழ்வது முற்றிலும் புதுமையே. சான்றாகச் செட்டியாகப் பாடுகையில்,

“ஞானச் சரக்கு விற்பா னம்மசெட்டி
நல்லாதா யங்காண்பா னம்மசெட்டி
ஈனச் சரக்கழிக்கா னம்ம செட்டி
இயேசு கிறிஸ்தெனும் நம்ம செட்டி ”

எனத் தொடங்கிப் பாடுகிறார். செம்மானாக உருவகிக்கையில்,

“தாரண சமாதானத்தின் சுவிசேஷத் திற்குரிய
வாயத்த மென்னும்
ஏரணி பாதரட் சையதனை யென்காற்கிட்
டனையே செம்மானே”

என்று புகழ்வதும், ஞானத் தட்டானாகக் கூறுகையில்,

“பாவக் களிம்பு நீங்கி யுள்ளம்
பத்தரை மாற்றுத் தங்கத் தூய்மையாக
தேவ நீதிக் குகையினற் புடந்தான்
செய்குவன் கருத்துடன் ஞானத்தட்டான்”

எனக் கூறுவதும், கோனாராகக் கருதுகையில்,

“கறவலாட் டைமெதுவாய் நடத்துங் கோனார்
கால்முடத் தைத்தோளிற் சுமக்குங் கோனார்
திறமுடன் நம்மந்தை மேய்க்குங் கோனார்
சீவனையும் மாடுகட்காய் கொடுக்குங்
கோனார்”

எனப் பாடுவதும், ஆசிரியர் உள்ளக் கிடக்கை இறைவனின் அருட் செயலைப் பல்வகையில் நினைத்துப் பார்ப்பதே என்பதனைத் தெளிவு படுத்தும். இவ்வாறு இறைவனை உருவகித்துப் போற்றுங்கால், அவர் தம் தொழிற் பயன்களை மட்டுமே சுட்டுகிறாரன்றிச் சாதிப் பாகுபாடு என்னும் குறுகிய வட்டத்தில் ஆசிரியர் அகப்பட்டுக் கொண்டிலர். எல்லாரும் சமம் என்னும் கோட்பாடே அவர்க்கு உடன்பாடு. அதற்கு ''பார்ப்பானும் பறையனும்'' என்னும் தலைப்பில் வரும் பாடல்களே சான்றாம். அதில் உள்ள,

''பறையுமெவனும் பறைய னன்றோ
    பறையனென் றெனைநீ பறைவானேன்
பறையும்நீயும் பறைய னல்லோ
    பார்க்காமற்பறை வாயோ பார்ப்பானே''

''ஒருவனொருத்தி நின்றுதா னல்லோ
    உண்டாச்சு மனுக்கோடி யனைத்தும்
கெருவங்கொண்டெனை நிஷேத மாகக்
    கீறியவரை நில்லா பார்ப்பானே''

போன்ற பாடல்கள் மேலோர் கீழோர் என்னும் பாகுபாட்டை ஆசிரியர் ஏற்றார் அல்லர் என்பதனைப் புலப்படுத்தும்.

இறைவனை மானிடர் இனத்தில் பல்வகைப் பிரிவினராக உருவகித் ததோடன்றி மானிடரல்லாப் பிற உயிரினங்களாகவும் கற்பித்துப் போற்றுகின்ற பாங்கும் இந்நூலில் காணப்படுகிறது. அவ்வாறு வாரண மாகப் போற்றுகையில்,

''ஆருக் கும்மடங் காத வாரணம்
    அண்டகோ ளங்க ளசைக்கும் வாரணம்
போருக் கோரினை யற்ற வாரணம்
    பொருபி சாசைப் பொடிசெய் வாரணம்''

எனத் தொடங்கிப் பாடுகிறார். *சிங்கமாக எண்ணிக் கூறும்பொழுதில்,*

''சீவர் கட்கெல் லாமேலாஞ் சிங்கம்
    சித்தக் களிற்றை யடக்கிய சிங்கம்
பாவர் கடைத்தேறத் தாங்கிய சிங்கம்
    பட்சமிகும் யூதாக் கோத்திரச் சிங்கம்''

என்பனவாய பாடல்கள் இடம் பெறுகின்றன. இறைவனை இவ்வாறு உருவகிப்பதோடன்றிப் பற்றுறுதி எனப்படும் விசுவாசத்தைக் கோழி யாக உருவகித்துப் பாடிய பகுதியும் இடம் பெறுகிறது. இறையருள்

மேல் பற்றுறுதி கொண்ட தம்மைக் குறத்தியாகக் கொண்டு விசுவாசக் குறத்தி என்னும் தலைப்பிலும் பாடியுள்ளார்.

''சுற்றதை மறைத்து நெஞ்சில் கபடமே புகுத்தி
நன்மை
பெற்றதை மறந்து கேடே பேசிடும் குறத்தி
யல்லேன்;
விற்றதைச் செம்பால் சிந்தி மீண்டவ னாலி
ரட்சை
உற்றதை யுயர்த்திக் கூறி யுவந்திடுங் குறத்தி
யானே''

என்பது அத்தலைப்பிலுள்ள பாடல்களில் ஒன்று. இவ்வாறே தம்மை மண்சட்டியாகக் கொண்டுபாடுகின்ற பாடற்பகுதியும் உண்டு. அப்பகுதி

''ஞானக் குலாலன் வனைந்த நெறியில்
நன்கு நிலையாமற் போன தாலே
ஊன வழுக்குட் புறமு மாகி
உதவா தெறிந்த மண்சட் டியானே''

எனத் தொடங்குகிறது.

இறைவனை பேருருவினனாக, பேரருளினனாக மட்டுமன்றி, ஏளனப் பொருள்களாகக் 'கல்லுளிமொங்கன்' போன்றும் பாடுகின்ற புதிய போக்கினை 'ஞானக் கல்லுளி மொங்கன்' என்னும் தலைப்பிலும் ஆசிரியர் கால அறிவியல் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு 'இரசாயன சாஸ்திரி' என இறைவனை உருவகித்துப் போற்றுவதை 'இரசாயன சாஸ்திரி' என்னும் தலைப்பிலும் காண முடிகிறது. எனவே 'சொல் புதிது; பொருள் புதிது' எனக் கூறிய பாரதியின் காலத்திலேயே தமிழ் இலக்கிய நெறியில் புதிய மரபினைப் புகுத்திய புலவர் திறம் ஆய்விற்கும் போற்றற்கும் உரியது.

இவ்வாறு தமிழ் இலக்கிய நெறியில் சில புதிய போக்குகளைப் புகுத்திய ஆசிரியர் பழைய மரபுகளையொட்டியும் சில பகுதிகளை அமைத்துள்ளார். ஊஞ்சல், அம்மானை போன்ற தலைப்புகளில் உள்ளவை அத்தகையன. பாம்பாட்டிச் சித்தரின் பாடல் போன்று பாடப்பட்ட பாடற்பகுதி 'விசுவாசப் பாம்பாட்டு' என்னும் தலைப்பில் இடம் பெறுகிறது. அகத்துறை இலக்கிய மரபினையொட்டி, ஏலாமைக் கிரங்கல், கனவு, காதல், வரவு வழுத்தல் போன்ற பகுதிகள் இடம் பெறுகின்றன.

ஆசிரியர் சௌமியத் துறை மட்டுமின்றிச் செல்லப் பிள்ளைத் தாலாட்டு, நன்னாட்டம், விக்கின விநாசரகவல், காலக் கொடுமை, அகப்போய்க்கமைவு, வேதநீதி, கிளிக்கீதை, கிறிஸ்துமாலை, பூத னூர்ப்பதிகம், மெய்ஞானமாலை, திட்டூர்க் கலம்பகம் ஆகிய சிறு நூல் களையும் யாத்துள்ளார். அவற்றுள் மெய்ஞ்ஞான மாலை மட்டுமே அச் சில் வந்துள்ளது. அச்சிற்கு வாரா ஆசிரியர் படைப்புக்கள் இருநூற் றுக்கு மேல் இருப்பதாகவும் அவற்றுள் பல மதுரை அரசரடியில் உள்ள தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் உள்ளதாகவும் தெரிகிறது. ஆசிரியர் படைப்புக்கள் அனைத்தும் சமய நோக்குடையனவாயினும் அவற்றில் பொதிந்துள்ள அறக்கருத்துக்கள் பொதுநெறி தழுவியனவேயாம்.

ஆசிரியர் தம் படைப்புக்களில் வட்டார வழக்குச் சொற்களையும் பேச்சு மொழிச் சொற்களையும் கலந்து பாடியுள்ளார். பக்கிடாந்தனே (5-7), மானாங்காணி (8-10), ரமிப்புக்கும் (18-19), ஏடாகோடங் களில் (22-7), கசுமால (43-6), கோணமான (47-4) போன்ற சொற் கள் அத்தகையனவே.

ஆசிரியர் படிப்போர்க்குத் தம் உள்ளக் கருத்தைப் புலப்படுத்தும் நோக்கில் சில சொற்களுக்கான பொருள் விளக்கத்தைத் தாமே தம் சுவடியில் குறித்துள்ளார். நாற்கண் = விசுவாசம், நம்பிக்கை, அன்பு, பரிசுத்தம் (19-2), பிரமன்-பிதா, ஐங்கரன் = ஐ-' அம் + கரன் = ஆவி (43-9) போன்றவை அவர் தரும் விளக்கங்களுட் சில.

தியாகித்தோய் (8-31), திடத்தி (13-9), கெம்பீரிக்க (15-7), கடைக்கணித்து (20-2) பெருபிக்க (44-4) முதலிய புதிய சொல்லாக் கங்களும் காணப்படுகின்றன.

பதிகங்கள் அவற்றுக்கான தலைப்புகள் பாவகைகளைச் சுட்டுதல், நூலின் இறுதியில் காணப்படும் தலையட்டவணை கவித்தொகை ஆகி யவை திட்டூர்த் தேசிகருடையவை. கவித்தொகை எண்ணிக்கை பற்றிய ஆசிரியர் கருத்துப் பொருந்துமாறில்லை. தலைப்புகட்கான விளக்கங்கள் அருஞ்சொற் குறிப்புகள் ஆகியவை பதிப்பாளருடையவை.

இத்தகைய கவிதைக் குவியல்களைப் படைத்தளித்த ஆசிரியரின் வாழ்வியல் பற்றி விரித்துரைக்கும் நூல்கள் எதுவும் வெளிவந்திலது. அவரைப்பற்றி இரண்டொரு கட்டுரைகளே தெரிய வந்துள்ளன.

குமரி மாவட்டத்திலுள்ள திட்டுவிளை என அழைக்கப்படும் திட்டூ ரைச் சேர்ந்த ஆசிரியர் கி. பி. 1858 ஆண்டில் சைவக் குடும்பத்தில் பிறந்தார். ஈசுவர பாக்கியம் என்பது அவரது இயற்பெயராகும். இரண் டாம் வயதிலேயே தந்தையை இழந்தார். தம் தமிழ்க் கல்வியை ஐந்

தாம் ஆண்டில் தொடங்கினார். 11ஆம் வயதில் கிறித்தவ சமயத்தில் ஈடுபாடு கொண்டார். 14ஆம் வயதில் திருமுழுக்குப் பெற்று ஈசாக்கு என்னும் கிறித்தவத் திருப்பெயர் பூண்டார். அதுமுதல் ஈசுவர பாக்கிய ஈசாக்கு என அழைக்கப் பெற்றார். தம் 15ஆம் ஆண்டில் ஆசிரியப் பணியை மேற்கொண்டார். பின்னர் தமிழ்க் கல்வியோடு சமயக் கல்வி யிலும் ஈடுபாடு கொண்டார். பின்னர் களிபங்காடு என்னும் கிராமத்தில் நற்செய்திப் பணியாற்றினார். அங்கு அவரிருந்த வீடு எங்கணும் தமிழ் நூல்கள் நிறைந்திருந்தனவாம். அங்குத்தான் அவர் தம் படைப்புப்பணி நடைபெற்றிருத்தல் வேண்டும். இவர் எழுதியுள்ள சில பாடல்கள் 'தெக்ஷிண தீபம்' என்ற இதழில் வெளிவந்ததாகவும், அவற்றுள் நன் மனையாள், ஜாதிபேதப் பதிகம், ஜீவநாயகத் தூது, உடல் எடுத்த பயன் என்ன? திருப்பள்ளி எழுச்சி, சமுத்திரதீரத் தியானம், மெய்ப் பொருட்பதிகம், வேதப் பதிகம் முதலியன சிறந்தவை எனவும் 1936 ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் தேசோபகாரி' இதழில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரையால் அறிகிறோம். மருத்துவத் துறையிலும் சிறந்து விளங்கியதாகக் கூறுகின்றனர். தேசிகர் என்னும் சிறப்புப் பெயரும் பெற்றார். தம் 74 ஆம் வயதில் 1932ஆம் ஆண்டில் ஆசிரியர் இறையடி சேர்ந்தார்.

எதிர்கால ஆய்வாளர்க்கு மிகுந்த பயன்தரும் இவ்வரிய படைப்பு வெளிவருவதற்கு நாகர்கோவில் ஸ்காட் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் த. இயேசுதாசு அவர்களே முதற்காரணர். அவரே ஆசிரி யர் தம் கையெழுத்துச் சுவடியைப் பெற்றுத் தந்தவர். அவருக்கு மிகுந்த நன்றியுடையேன். தட்டெழுத்தில் படியெடுத்துதவிய துறை உதவியா ளர் திரு. மா. அமிர்தலிங்கம் அவர்கட்கும் என் நன்றி உரியது.

இதனை வெளியிட அனுமதி அளித்த சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்கும், சிறப்பாகத் துணைவேந்தர் டாக்டர் பொ. பா. சுந்தரேசனார் அவர்கட்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

சென்னை 600 005
5—8—1986

அன்பன்,
சூ. இன்னாசி

உள்ளுறை

	முன்னுரை	v
	காப்பு	1
1.	நமப்பதிகம்	1
2.	சரணப்பத்து	3
3.	போற்றிப் பதிகம்	4
4.	சரணப் பதிகம்	6
5.	நமோ பதிகம்	9
6.	தொழுவாம் பதிகம்	13
7.	தொழுதேன் பத்து	15
8.	சரண பங்கயப் பதிகம்	17
9.	தலைகொள் பதிகம்	19
10.	திருநாம விளக்கப் பதிகம்	21
11.	திருத்தாட் பதிகம்	24
12.	இயேசு கிறிஸ்து விளக்கப் பதிகம்	26
13.	அலந்தேன் பத்து	28
14	கனவு	31
15.	அக்கைச்சி	33
16,	காதல்	35
17.	வரவு வழுத்தல்	36
18.	சுதந்தரன்	38
19.	பெருமாள்	41
20.	தேவ வல்லபம்	44
21.	பணிவாற்றல்	47
22.	ஊர்	49
23.	சுகம்	50
24.	மனரம்மியானந்தம்	52
25.	இரக்ஷண்ய வியப்பு	54

26. ஆவாள் ... 55
27. ஆனந்த நளினம் ... 57
28. வாழ்க்கைப்பாடு ... 59
29. ஞானப்பால் கறவெனல் ... 62
30. அரிதுணர்த்தல் ... 63
31. சுய நீதி ... 65
32. வற்புறுத்தல் ... 67
33. விசுவாசக் குறத்தி ... 69
34. காளம் ... 71
35. அம்மானை ... 72
36. விசுவாசப் பாம்பாட்டு ... 74
37. ஞானவெற்றியுந்தி ... 77
38. பாங்கி சாக்ஷியம் ... 79
39. ஞானாமிர்தம் ... 80
40. அதிசயப்பத்து ... 82
41. ஞானோபதேச விம்பில் ... 83
42. அந்திக் காப்பு ... 86
43. உரிமை பாராட்டல் ... 89
44. கருக்குப் பட்டயம் ... 91
45. திருப்பல்லாண்டு ... 93
46. நாடன் ... 96
47. பாவியினறிக்கையும் இரட்சையும் ... 98
48. மண் சட்டி ... 101
49. ஏலாமைக்கிரங்கல் ... 103
50. குணலை ... 104
51. தோழிப்பெண் ... 107
52. தற்பொருள் ... 111
53. பறை ... 112
54. பார்ப்பான் ... 114
55. பறையனும் பறைச்சியும் ... 116
56. பார்ப்பானும் பறையனும் ... 118
57. வேளாளன் ... 119
58. இருபிறப்பாளர் ... 121
59. அந்தணன் ... 123
60. வண்ணான் ... 125

61. செம்மான் ... 126
62. பட்டாரியன் ... 128
63. செட்டி ... 129
64. ஞானத்தட்டான் ... 131
65. ராஜா ... 132
66. ஞானக் கல்லுளி மொங்கன் ... 134
67. சான்றான் ... 136
68. சான்றோன் ... 137
69. நாடாழ்வானும் நாடாழ்வியும் ... 139
70. அன்னைப் பத்து ... 141
71. இரசாயன சாஸ்திரி ... 142
72. ஞானார்த்தப் பிரலாபம் ... 144
73. நிலைமை நிர்ணயம் ... 146
74. ஆராட்சிக் கடா ... 147
75. வாரணம் ... 149
76. சிங்கம் ... 151
77. கோழி ... 152
78. வார்த்தீக கண்டனம் ... 154
79. அச்சோ ... 157
80. இதயத்தியம்பல் ... 159
81. பஞ்சரத்தினம் ... 162
82. ஞானச்சாழல் ... 163
83. தாய் வாசகம் ... 165
84. தந்தை மந்திரம் ... 167
85. தேகம் ... 169
86. ஆத்துமா ... 170
87. குடும்பன் ... 172
88. தச்சன் ... 174
89. குலாலன் ... 175
90. கோனார் ... 177
91. திருக்காவல் நாட்டம் ... 179
92. ஜெபத்தூது ... 180
93. வெற்றிக்கொட்டு ... 183
94. பூரண ரட்சகர் ... 185

95.	புனர் ஜனனத் தெளிவு	...	187
96.	கிறிஸ்தவன்	...	189
97.	சுவர்க்க நாட்டம்	...	190
98.	விசுவாச வவிசுவாசவியல்	...	193
99.	அவனே நானாவது	...	195
100.	சகத்துவாத தண்டாயுதம்	...	198
101.	ஊஞ்சல்	...	200
102.	ஞானப்பந்தாட்டு	...	203
103.	திருக்கழல்	...	206
104.	நற்புத்தி	...	208
105.	வாழ்த்து	...	211

காப்பு

(கலிநிலைத்துறை)

இறையை முக்கார ண[1]ங்குவிந் திறைஞ்சி மெய்வேதப்
பறையை[2] மாத்தமிழ்ப் பாவினத் தோச்சிய சௌமியத்
துறையை அனுதினஞ் சுவிசேடச் சபையின் றிலங்கக்
கறையை[3] யொழிக்கவந் தெழுங்கர்த்த னாவிநங் காப்பு.

1. நமப்பதிகம்

[' நம ' எனில் போற்றி எனப் பொருள் தரும். பதிகம் எனில் பத்துச் செய்யுட்களால் ஆகிய பாடல் தொகுதி எனப் பொருள் தரும் ; நமப்பதிகம் எனில் பத்துச் செய்யுட்களால் கடவுளைப் போற்றும் பகுதி எனப் பொருள் பெறும். இறைவனின் இயல்புகளையும் ஆற்றல் களையும் போற்றிப் புகழ்வதே இப்பதிகத்தின் நோக்கம் ஆகும். தலைப்பின் அருகில் சங். 69 ; 30 என்னும் எண் குறிப்புக் காணப் படுகிறது. விவிலியத்தில் உள்ள 69, 30-ஆம் சங்கீதங்களின் அடிப் படையில் இப்பகுதியை ஆசிரியர் அமைத்துள்ளதாகத் தோன்றுகிறது. கூர்ந்து நோக்கின், சங்கீதம் 69-4இல் உள்ள ' இறைவா போற்றி ' என்னும் குறிப்பும், சங்கீதம் 30-21இல் உள்ள ' ஆண்டவர் வாழ்த்தப் பெறுவாராக ' என்னும் குறிப்பும் இப்பதிகத்திற்குக் கருப்பொருள்கள் எனலாம். வடமொழி வேதமந்திரங்களில் கடவுளை வாழ்த்தப் பயன் படும் ' நம ' என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருப்பது ஆசிரியர்தம் காலச்சூழ்நிலையில் உள்ள வடமொழிச் செல்வாக்கினைக் காட்டும்.]

(கலிவிருத்தம்)

1. ஒருவ னே ! நம உசித னே ![4] நம
அருவ னே ! நம அமல னே ! நம
திருவ னே ! நம தேவ னே ! நம
குருவ னே ! நம கோல னே ! நம.

2. அத்த னே ! நம அருள னே ! நம
சித்த னே ! நம சீல னே ! நம
சுத்த னே ! நம சுகிர்த னே ![5] நம
நித்த னே ! நம நிட்க ளா[6] ! நம.

3. ஆதி யே ! நம அருபி யே ! நம
நீதி யே ! நம நிரஞ்ச னா ![7] நம
சோதி யே ! நம சூட்ச னே ![8] நம
நாதி யே ! நம நாய கா ! நம.

4. தேட்ட னே ![9] நம திரித்து வா ! நம
வீட்ட னே ![10] நம மெய்ய னே ! நம
பாட்ட னே ![11] நம பரம னே ! நம
ஈட்ட னே ![12] நம இன்ப னே ! நம.

5. அம்ப ரா ![13] நம அதுல னே ![14] நம
எம்ப ரா ![15] நம இயேசு வே ! நம
தம்ப னே ![16] நம சயம்ப னே ![17] நம
நம்ப னே ![18] நம நலிவி லாய் ! நம.

6. வேத னே ! நம விமல னே ! நம
போத னே ! நம புகழ னே ! நம
நாத னே ! நம ஞான னே ! நம
தாத னே ! நம சௌரி யா ![19] நம

7. ஈச னே ! நம ஈறி லாய் ! நம
தேக னே ! நம தீதி லாய் ! நம
நேச னே ! நம நிரந்தரா ! நம
வாச னே ! நம மகத்து வா ! நம.

8. மதுர னே ! நம மகிழ்ச்சி யோய் ! நம
சதுர னே ![20] நம தலைவ னே ! நம
விதுர னே ![21] நம விதித்த வா ! நம
உதுர னே ![22] நம ஊர்த்த வா ! நம.

9. கார ணா ! நம கடவு ளே ! நம
ஆர ணா ![24] நம அதிகு ணா ! நம
பூர ணா ! நம புண்ணி யா ! நம
தீர ணா ![25] நம சிருஷ்டி கா ! நம.

10. நல்ல னே ! நம ரட்ச கா ! நம
வல்ல னே ! நம வார்த்தை யே ! நம
தொல்ல னே ![26] நம சுயாதி பா ![27] நம
எல்ல னே ![28] நம இமனு வேல் ! நம.

1. முக்கரணம் — மனம், வாக்கு, காயம்.
2. வேதப்பறை — வேத முழக்கம். 3. கறை — பாவக்கறை
4. உசிதன் — தகுதியானவன் 5. சுகிர்தன் — நன்மையானவன் ;
6. நிட்களன் — தூய்மையானவன் ; 7. நிரஞ்சனன் — கடவுள் ;
8. சூட்சன் — ஆராய்ந்தறிபவன் ;
9. தேட்டன் — தேடுவதற்குரியவன் ;
10. வீட்டன்—வானுலகோன் ;
11. பாட்டன் — முன்னையோன் ; 12. ஈட்டன் — செல்வன் ;
13. அம்பரன் — மேலுலகோன் ; 14. அதுலன் — கடவுள் ;
15. எம்பரன் — எம்இறைவன் ;
16. தம்பன் — பற்றுக்கோடானவன் ;
17. சயம்பன் — தானேயானவன்; 18. நம்பன் — நம்முடையவன்;
19. சௌரியன் — சுகமுடையவன் ;
20. சதுரன் — வானகர்க்குரியவன் ; 21. விதுரனே — அறிஞனே ;
22. உதுரன் — உயர்ந்தோன் ; 23. ஊர்த்தவன் — உலகைச் செலுத்துபவன் ; 24. ஆரணன் — படைத்தவன் ; 25. தீரணன் — தீரன் ; 26. தொல்லன் — பழமையானவன் ; 27. சுயாதிபன் — தனக்குத் தானே தலைவனானவன் ; 28. எல்லன் — ஒளியானவன்.

2 சரணப்பத்து

சரணம் எனில் அடைக்கலம் எனப் பொருள்படும். பாவில் அடங்கிய பத்துப் பகுதிகளிலும் பத்துமுறை சரணம் எனக் கூறித் தன்னை அடைக்கலப்படுத்துவதால் சரணப்பத்து என்றும் பெயர் பெற்றது. திருவாசகத்தில் வரும் அடைக்கலப்பத்தினை மனத்துட் கொண்டு சரணப்பத்து இயற்றப்பட்டது போலும். தலைப்புக்கருகில் சங். 16 : 7 என்னும் எண் குறிப்புக் காணப்படுகிறது. ஆதலின் சங்கீதம் 16-7 இல் வரும் ' ' உம்மிடம் அடைக்கலம் புகுவோரை எதிரிகளிடமிருந்து காப்பவர் நீரே ' ' என்னும் பகுதியும், சங். 7-1 இல் வரும் ' ' என் இறைனவாம் ஆண்டவரே ! உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன் ' ' என்னும் பகுதியும் இப்பத்துக்கு அடிப்படை எனக் கொள்ளலாம்.]

(ஆசிரியப்பா)

மலர்தலை யுலகின் மல்கிருள் அகல[1]
இலகொளி பரப்பியாள் எம்பிரா! சரணம்
முதலீ றொப்பள வில்லாய்![2] முளரிப்[3]
பதமென் தலைமேல் பதித்தாய்! சரணம்.
அற்புத மூர்த்தி அலங்கிய[4] ஆர்வப்
பொற்புறும்[5] கடவுள் புகழடி சரணம்.

மனவிருள் இரிய[6] மாண்மறைப் போதம்[7]
முனிவற[8] அருளுமெய் மூலா! சரணம்.
ஐங்கண் டங்கள்[9] ஆழிதீ பகங்களும்[10]
துங்க நாமம் துலங்குவோய்![11] சரணம்.
தொடங்கந் நாளே தோமா அடிகள்
தடங்கொள் இந்தியா தந்தோய்! சரணம்.
திருவுடல் வடுவா பரணம்[12] சிறக்கும்
குருவவ தாரம் கொண்டோய்! சரணம்.
கன்னி முதலிம கல்லகம்[13] வரையும்
மன்னும் சபைபல வளர்ப்போய்! சரணம்.
ஐரோப் பாநின் றருள்நிறை பன்மிஷன்[14]
பரோப காரப் படுத்தினோய்! சரணம்
இருநில முழுதும் எழும்பிவாழ் திருச்சபை
பெருநலம் புரிவரம் பெய்வோய்! சரணம்.

1. நன்னூலின் சிறப்புப் பாயிரத் தொடக்க அடிகளையொட்டித் தொடங்கப்பட்டுள்ளது;
2. முதலும் முடிவும் ஒப்பும் அளவும் இல்லாதவனே!
3. தாமரை; 4. இரக்கம் காட்டும்; 5. அழகுறும்;
6. கெட்டழிய; 7. திருமறை மொழிகள்; 8. வெறுப்பின்றி;
9. அமெரிக்கா, ஆசியா, ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா ஆகிய கண்டங்கள்;
10. தீபகற்பங்கள்; 11. விளங்குபவனே!
12. திருவுடலில் பட்ட காயங்களாகிய அணிகலன்;
13. கன்னியாகுமரி முதல் இமயமலை வரை.
14. மறைபரப்பு நிறுவனம் (Mission).

3. போற்றிப்பதிகம்

'போற்றி போற்றி' என முடிகின்ற பத்துப் பாடல்களைக் கொண்டதனால் போற்றிப் பதிகம் எனப் பெயர் பெற்றது. இயேசுவின் அருட்செயல்களையும் இரக்கப் பெருக்கினையும் வியந்து போற்றிப் பரவுகிறது. தலைப்புக்கருகில், சங். 116;13 என்னும் எண் குறிப்புக் காணப்படுகிறது. சங்கீதம் 116-1இல் வருகின்ற ''மக்கள் இனத்தாரே! நீங்கள் யாவரும் ஆண்டவரைப் போற்றுங்கள். மண்ணுலக மக்களே! நீங்கள் அனைவரும் அவரைப் புகழ்ந்தேத்துங்கள்'' என்னும் பகுதியும், 13-7இல் வருகின்ற ''ஆண்டவர் தம் மக்களுக்கு நல்ல வாழ்வு அளிக்கும்போது, யாக்கோபின் இனத்தார் களிகூர்வர், இஸ்ராயேல் மக்கள் அகமகிழ்வர்'' என்னும் பகுதியும் இப்பதிகத்தை எழுதத் தூண்டியிருத்தல் கூடும். திருவாசகத்தின் போற்றித் திருவகவலைப் போன்று இறைவனை இப்பதிகம் வாழ்த்திப் புகழ்கின்றது.

(அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

1. போற்றியோ நமவி யேசு! பூரண இரட்சிப் பீந்தாய்.
போற்றியோ நமவி யேசு! புகலெனக் கென்றும் ஆனாய்.
போற்றியோ நமவி யேசு! புகழ்பெருந் திடவு மைப்பேன்.
போற்றியோ நமவி யேசு! சயசய போற்றி போற்றி.[1]

2. பொருந்திலேன் உலக நேசம் புண்ணியன் உனையே யன்றி
மருந்திலேன் பாவ நோய்க்கு மகத்துவ வேதம் அல்லால்
அருந்திலேன் நாளும் ஏழை ஆத்துமம் பிழைக்கும் ஊணே[2]
வருந்திலேன் நின்பின் செல்ல மாசிலாய் போற்றி போற்றி.

3. அருளுடைந் தோடும் அன்பாம் அழகிய மலரே! என்நெஞ்
சிருளுடைந் தோடச் செய்த இரவியே![3] அலகை[4] போடும்
மருளுடைந் தோடி வையம் வான்கதி புகச்செய் நல்லா!
தெருளுடைந் தோடா தாள்வாய்! சேவடி போற்றி போற்றி.

4. மடவுளே[5] கிடச்செய் கொண்டேன் மாணடி சிரசில் எந்தாய்
திடவுளே[6] தருவாய் பாவத் தீயராக் கதரை வெல்ல
அடவுளே தங்கள்[7] ஈட்டா[8] தடக்கிநல் கரிய தாழ்மை
கடவுளே நீயென் தஞ்சம் கழலிணை போற்றி போற்றி.

5. போற்றிநின் இரக்கம் அன்பு பொருந்திய செய்கைக் காக
போற்றிநின் சிலுவை யாகப்[9] புண்ணிய பலனுக் காக.
போற்றிநின் அழைப்பு சுத்தம் பொருத்துதல் ஆதிக் காக
போற்றிநின் மகிமைக் காகப் பூரணா! போற்றி போற்றி.

6. ஆதர வானோய்! போற்றி ஆறுதல் அளித்தாய்! போற்றி
தீதர வூர்தி[10] யின்மேற் செயமருள் இறைவா! போற்றி.
நீதர[11] வுலகை வென்ற நிறையன்பா தரங்கெட் டோரை
மாதர[12] வாக்கி விண்ணில் வாழ்விப்போய் போற்றி போற்றி.

7. பழித்தனன் பாவ வாழ்க்கை பழிச்சினன் பரம இன்பம்
ஒழித்தனன் பொருளின் நாட்டம் ஒழிந்திடா நீ என் தேட்டம்[13]
கழித்தனன் அசடர் சேர்க்கை கண்டனன் நல்லோர் இட்டம்[14]
செழித்தனன் சிலுவை யின்கீழ் தேவனே! போற்றி போற்றி.

8. மலைகடல் அலைந்தேன் பாவ மாசறா விசுவா சத்தில்
அலைகடல் ஆகா துள்ளம் அருகில ளிப்பாய் தூய்மை
உலைகடம்[15] உயிரோ டாவி யுறுபொருள் யாதகா ணிக்கை
நிலைகட வாது காத்தாள் நின்னடி போற்றி போற்றி.

9. பிழைப்பவன் நீயென் றும்உன் பிழைப்பினற் பங்கு மேவ
அழைப்பவன் நீயே வந்தால் ஆத்தும ஜீவன் காக்க
உழைப்பவன் நீயே ஞான உயிர்க்குணம் செயலில் தோன்றற்
கிழைப்பவன் நீயே கிறிஸ்து யேசுவே! போற்றி போற்றி.

10. திருவனே! போற்றி எங்கள் தெய்வமே போற்றி போற்றி
குருவனே! போற்றி எண்ணில் கோடியாம் புவனம் செய்த
கருவனே![16] போற்றி ஞானக் கண்ணனே! போற்றி அன்பின்
உருவனே! போற்றி யீரைந் துயர்குணா! போற்றி போற்றி!

1. 'சயசய போற்றி' என்னும் திருவாசகத் திருச்சதக முதற்பாடல் தொடர் ஒப்புநோக்கத்தக்கது.
2. ஆன்ம ஈடேற்றத்திற்குரிய உணவாகிய தேவநற்கருணை அப்பம்.
3. கதிரவன்; 4. பேய்; 5. மடமை; 6. ஆற்றல்;
7. இழிவு துன்பங்கள்; 8. சேராமல் 9. நெஞ்சு;
10. ஊர்தியாகிய சிலுவை; 11. இழிந்த; 12. உயர்ந்தவராக்கி;
13. செல்வம்; 14. விருப்பம்; 15. உலை+கடம்=அழியும் உடல்
16. மூலவனே..

4. சரணப் பதிகம்

[சரணம் என்னும் சொல்லே ஒவ்வொரு விருத்தத்திலும் எட்டு முறை வருமாறு அமைத்துப் பத்துப் பாக்கள் பாடியுள்ளமையால் சரணப் பதிகம் என்னும் பெயர் பெற்றது. சங்கீதம் 145-2இல் வரும் ''என் வாழ்நாளில் ஆண்டவரைப் புகழ்வேன்; என் உயிருள்ள வரையில் நான் கடவுளுக்குப் புகழ் பாடுவேன்'' என்னும் பகுதியும், 2-12 இல் வரும், ''அவரிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் பேறு பெற்றோர்'' என்னும் பகுதியும் இப்பதிகத்திற்கு அடிப்படையாயின எனலாம்.]

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

1. உன்னத தேவனே! சரணஞ் சரணம்
உச்சித[1] வேதனே! சரணஞ் சரணம்
முன்னத முதிப்பித்தோய்![2] சரணஞ் சரணம்
முப்பொரு ளொருவனே! சரணஞ் சரணம்
பின்னத மாகினோய்![3] சரணஞ் சரணம்
பெரும்பலி[4] முடித்தவா! சரணஞ் சரணம்
என்னத மொழித்தவா![5] சரணஞ் சரணம்
இயேசு கிறிஸ்துவே! சரணஞ் சரணம்.

2. பாதமே கெதியிட்டாய்![6] சரணஞ் சரணம்
பரிசுத்தம் வளர்ப்பித்தாய்! சரணஞ் சரணம்
நீதமே[7] யுருவானாய்! சரணஞ் சரணம்
நீசரை மீட்டவா! சரணஞ் சரணம்
போதமே யருள்கோன்![8] சரணஞ் சரணம்
பொருடெளி வாக்கினாய்![9] சரணஞ் சரணம்
ஏதமே[10] மாற்றினாய்! சரணஞ் சரணம்
இயேசு கிறிஸ்துவே! சரணஞ் சரணம்

3. மாசுர ரிறைவனே![11] சரணஞ் சரணம்
மண்ணிலர்க் கரசனே![12] சரணஞ் சரணம்
பாசுர மறவானே![13] சரணஞ் சரணம்
பத்திப்பயிர் வளர்ப்போனே! சரணஞ் சரணம்
பூசுர ரின்பனே![14] சரணஞ் சரணம்
புதுவரப் பிரசாதா! சரணஞ் சரணம்
ஈசுர வடிவனே![15] சரணஞ் சரணம்.
இயேசு கிறிஸ்துவே! சரணஞ் சரணம்

4. தட்டாதே செல்வனே! சரணஞ் சரணம்
சருவத யாபரா! சரணஞ் சரணம்
முட்டாத[16] ஞானனே! சரணஞ் சரணம்
மூவுல காள்பவா! சரணஞ் சரணம்
கொட்டாத[17] கையனே! சரணஞ் சரணம்
குலபதி! யிணைகழற் சரணஞ் சரணம்
எட்டாத விலட்சணா! சரணஞ் சரணம்
இயேசு கிறிஸ்துவே! சரணஞ் சரணம்.

5. விஞ்சலை யுடையவா![18] சரணஞ் சரணம்
வேத விளக்கனே! சரணஞ் சரணம்
அஞ்சலை யொழித்தவா! சரணஞ் சரணம்
ஆறுத லளித்தவா! சரணஞ் சரணம்
துஞ்சலை[19] நீத்தவா! சரணஞ் சரணம்
சுறுசுறுப் பீந்தவா! சரணஞ் சரணம்
எஞ்சலை[20] நீக்கடி சரணஞ் சரணம்
இயேசு கிறிஸ்துவே! சரணஞ் சரணம்.

6. ஒள்ளிய[21] திருவடி சரணஞ் சரணம்
உவந்துகேள் திருச்செவி சரணஞ் சரணம்
வள்ளிய[22] திருக்கரஞ் சரணஞ் சரணம்
மறந்திடாத் திருவுளஞ் சரணஞ் சரணம்
தெள்ளிய திருவிழி சரணஞ் சரணம்
தினங்கார்[23] திருச்செயல் சரணஞ் சரணம்
எள்ளிய லழித்தவா![24] சரணஞ் சரணம்
இயேசு கிறிஸ்துவே! சரணஞ் சரணம்

7. தோதகஞ்[25] செய்கிலாய்! சரணஞ் சரணம்
சுவிசேட சத்தியா! சரணஞ் சரணம்
மேதகம்[26] பகர்பவா! சரணஞ் சரணம்
மெய்யவ தாரனே சரணஞ் சரணம்
பாதகம் பொறுத்தவா! சரணஞ் சரணம்
பழிசாபந் தீர்த்தவா! சரணஞ் சரணம்
ஏதக மானவா![27] சரணஞ் சரணம்
இயேசு கிறிஸ்துவே! சரணஞ் சரணம்.

8. நித்திய சுயம்புவே![28] சரணஞ் சரணம்
நேசாலங் காரனே![29] சரணஞ் சரணம்
துத்திய நாமனே![30] சரணஞ் சரணம்
சோபித தொழிலனே![31] சரணஞ் சரணம்
மித்திய நாசனே![32] சரணஞ் சரணம்
மெஞ்ஞானக் குரவனே![33] சரணஞ் சரணம்
எத்திய கடுவென்றோய்![34] சரணஞ் சரணம்
இயேசு கிறிஸ்துவே! சரணஞ் சரணம்

9. மூலனே! மெய்யடி சரணஞ் சரணம்
மோட்சாதி பதியே! சரணஞ் சரணம்
சீலனே! சேவடி சரணஞ் சரணம்
திவ்யனே![35] தூயடி சரணஞ் சரணம்
கோலனே! குழகடி[36] சரணஞ் சரணம்
குலந்தொழு முத்தடி சரணஞ் சரணம்
ஏலனே![37] சீரடி சரணஞ் சரணம்
இயேசு கிறிஸ்துவே! சரணஞ் சரணம்.

10. நேசனே! வரதக்கை[38] சரணஞ் சரணம்
நீதனே![39] யபயக்கை சரணஞ் சரணம்
தேசனே! புகலடி சரணஞ் சரணம்
தேட்டனே! தெருளடி சரணஞ் சரணம்
வாசனே! என்றைக்குஞ் சரணஞ் சரணம்
மகத்துவ வரசனே! சரணஞ் சரணம்
ஈசனே! நம்பினேன் சரணஞ் சரணம்
இயேசு கிறிஸ்துவே! சரணஞ் சரணம்.

சரணப் பதிகம்

1. உயர்ந்த 2. உயர்வைத் தோற்றுவித்தவனே
3. திருமேனியில் துன்புற்றவனே! 4. சிலுவைப்பலி
5. என் தாழ்வினைப் போக்கியவனே! 6. கதியாய்த் தந்தவனே!
7. நீதி அருள்கின்ற அரசன் 9. பொருள் தெளிவாக்கினவனே!
10. குற்றம்! 11. மா + சுரர் + இறைவனே = விண்ணோர் தலைவனே! 12. மண்ணிலில்லாமல் விண்ணில் வாழ்வோர்க்கு அரசனே! 13. பாசுரம் + மறவானே! = தெய்வீக வசனங்களை மறவாதவனே! 14. வழிபடுவோர்க்கு இன்பமானவனே!
15. இறைவடிவானவனே! 16. குறையாத 17. உதறிவிடாத
18. குறைவுறாதவனே! 19. சாவினை 20. குறைவினை
21. ஒளியையுடைய 22. வள்ளல் தன்மையுடைய
23. கார்கால மேகம் போன்ற! 24. இழிவைப் போக்கியவனே!
25. வஞ்சகம் 26. மேன்மை 27. ஒருமையானவனே!
28. தானாக ஆனவனே! 29. நேச அலங்காரனே!
30. தூய்மையான நாமம் கொண்டவனே!
31. மங்கலத் தொழிலுடையவனே!
32. தீமைகளைப் போக்குபவனே! 33. குருவே!
34. அச்சத்தை வென்றவனே! 35. திவ்வியனே! 36. அழகிய திருவடி 37. ஆற்றலுடையவனே! 38. அருளுகின்றகை
39. நீதியையுடையவனே!

5. நமோ பதிகம்

['நமோ நமோ' என வாழ்த்தி முடியும் பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளதால் நமோ பதிகம் என்னும் பெயர் பெற்றது. சங்கீதம் 149-1இல் உள்ள ''ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள் ; புனிதர்கள் சபையில் அவரது புகழ் ஒலிப்பதாக'' என்னும் பகுதி இப்பதிகத்திற்குக் கருவாக அமைந்தது.]

(அறுசீர் விருத்தம்)

1. சம்பூரணா! கிருபாக ரா! பரா! தயாபரா! மனோகரா! குலசேகரா!
எம்பூரணா! கருணாகரா! நிராதா! எழிலாகரா பராபரா! சுதாகரா!
நம்பூரணா! இனிவாகரா![1] சராசரா! நரேந்திரா![2] குலேந்திரா!
சுகேந்திரா!
அம்பூரணா! அறிவாகரா! நலவாதரா! அருளாரணா! கிறிஸ்தீசுரா!
நமோநமோ!

2. அத்தனே! பரிசுத்தனே! அதிசித்தனே! அன்பத்தனே![3]
வாக்குத்தத்தனே![4] தியாகத்தனே!
நித்தனே! நிறைபத்தனே! சுயசித்தனே! நீதிகர்த்தனே!
விவேகத்தனே ! சதா — காலத்தனே
வித்தனே! ஏவைவித்தனே[5]! மனுக்குலத்தனே! விமலசொத்தனே!
திருவுளத்தனே! உயர்நலத்தனே!
முத்தனே! விண்டலத்தனே! விகசித்தனே![6] முழுச்சத்தனே![7]
கிறிஸ்தீசுரா! நமோநமோ.

3. ஈசனே! செகதீசனே! அருளேசனே! எங்கணேசனே! பவராசனே!
அமலேசனே!
வாசனே! குமரேசனே! உல்லாசனே! மறைக்கோஷனே ![8]
பிரகாசனே! உபதேசனே!
ராசனே! கிருபேசனே! எங்கும்வாசனே! நற்சந்தோஷனே!
திரியேகேசனே![9] புண்ணியேசனே!
தேசனே! ஜீவேசனே![10] புலைவிமோசனே![11] சிலுவைநேசனே!
கிறிஸ்தீசுரா !நமோநமோ.

4. நாட்டனே! சுரர்பாட்டனே![12] கதிவீட்டனே! நரர்தேட்டனே![13]
கிருபைமேட்டனே![14] அருளீட்டனே!
நீட்டனே! பலியாட்டனே! நயனோட்டனே![15] நிசநாட்டனே!
முன்தேட்டனே! நிலைத்தேட்டனே!
ஏட்டனே! சிவசிட்டனே![16] ஞானஊட்டனே! எஞ்சேட்டனே![17]
தூதர்பாட்டனே! சுவர்க்கபூட்டனே![18]
மீட்டனே! இனியத்தோட்டனே! இதயக்கூட்டனே!
மிடிகண்டோட்டனே![19] கிறிஸ்தீசுரா! நமோநமோ.

5. தன்னனே! உயர்பொன்னனே! துய்மன்னனே![19]அ
சயசின்னனே! அருளுன்னனே![20] பிரசன்னனே[12]
அன்னனே![22] அனையன்னனே![23] நய நன்னனே![24]
அமலோன்னனே![25] ஒளிர்தென்னனே![26] அமுதபன்னனே![27]

முன்னனே! மனுதுன்னனே![28] அமிர்தபன்னனே!
மோட்சமின்னனே[29] கிருபாசன்னனே![30] பிதாவன்னனே![31]
வன்னனே![32] வரைவின்னனே![33] குருசின்னனே![34]
மகிழுனன்னே! கிறிஸ்தீசுரா! நமோநமோ.

6. அண்ணனே! தூதர்பண்ணனே![35] ஞானக்கண்ணனே!
அமலவிண்ணனே! தயாளண்ணனே! மனத்தண்ணனே![36]
நண்ணனே![37] புயத்திண்ணனே! எமக்கண்ணனே![38]
நறுஞ்செண்ணனே![39] ஜீவஉண்ணனே![40] மீட்குமெண்ணனே!
வண்ணனே! அகிலபண்ணனே![41] தாழ்மைக் கொண்ணனே![42]
வண்மைக்கண்ணனே![43] மாறாவிண்ணனே! எட்டாஎண்ணனே![44]
மண்ணனே! யார்க்குமெண்ணனே![45] நீதிக்கண்ணனே!
மகிமைக்கண்ணனே! கிறிஸ்தீசுரா! நமோநமோ.

7. சாந்தனே! ராஜவேந்தனே! நரரேந்தனே![46] தரணியேந்தனே!
சருவசேந்தனே![47] மோட்சபோந்தனே![48]
காந்தனே! வேதசேந்தனே! பாவசீந்தனே! கருணைநீந்தனே!
சுகுணகோந்தனே![49] அன்புட்பூந்தனே![50]
ஆந்தனே![51] சபைக்காந்தனே! தேவமாந்தனே! அரியமைந்தனே!
அரும்வேதாந்தனே! அருட்போதாந்தனே!
பாந்தனே[52] மெய்ச்சித்தாந்தனே! விவேகாந்தனே![53]
பக்கிடாந்தனே![54] கிறிஸ்தீசுரா! நமோநமோ.

8. அக்கனே![55] தீமைஎக்கனே[56] பத்தியொக்கனே![57]
அன்புப்பொக்கனே![58] துட்டர்கக்கனே![59] பரிவிற்சிக்கனே[60]
சொக்கனே![61] பிணைத்துக்கனே![62] எங்கும் புக்கனே[63]
சோபைத்திக்கனே![64] அன்பர்பக்கனே![65] மூடாச்சக்கனே![66]
செக்கனே![67] காயத்தொக்கனே![68] நம்பத்தக்கனே!
சிலுவைநக்கனே[69] தந்தைபக்கனே! சுருதியிக்கனே![70]
மிக்கனே! கொற்றப்பக்கனே![71] செல்வப்பொக்கனே![72]
விமலசொக்கனே! கிறிஸ்தீசுரா! நமோநமோ.

9. ஞாலனே! அனுகூலனே! தேவபாலனே! நரகோலனே![73]
வேதநூலனே! மோட்சபாலனே!
மேலனே! மனுவேலனே! ஆன்மமாலனே! விண்மண்மூலனே!
சதாகாலனே! மனவிசாலனே!
ஏலனே![74] ஜீவதாலனே![75] ஈடிற்றோலனே![76] இணையில்வாலனே!
மரிசூலனே! பரிபாலனே!

கோலனே! செங்கோலனே! ஒப்பில்வேலனே! குணசீலனே!
கிறிஸ்தீசுரா! நமோநமோ.

10. சத்தியா! அதீதபுத்தியா![77] அநாதிகாலத்தியா![78] தருணத்தியா![79]
உனதவுத்தியா![80] மாறாமுத்தியா!
நித்தியா! ஒரேமத்தியா![81] போததித்தியா![82] நிறைந்தபத்தியா!
வேதகுத்தியா![83] நீதிக்கத்தியா![84]
துத்தியா![85] களங்கசுத்தியா![86] காக்கும்பித்தியா![87] சுவிசேஷத்தியா!
அதிதனத்தியா! எமைநத்தியா![88]
சித்தியா![89] சீர்திருத்தியா! தீங்கழித்தியா![90] சிதைவிற்றத்தியா![91]
கிறிஸ்தீசுரா! நமோநமோ.

5. நமோ பதிகம்

1. இனிமையின் உறைவிடமே!; 2. மானிடரின் தலைவனே!;
3. அன்பு அத்தனே! அன்புத் தந்தையே!;
4. சொல்லில் வள்ளல் தன்மையுடையவனே!;
5. ஏவையின் வழியில் மானிடனாய்த் தோன்றியவனே!;
6. மலர்ச்சியுடையவனே!; 7. முழுமையான ஆற்றல் கொண்டவனே!;
8. வேதமுழக்கம் செய்தவனே!; 9. மூவொரு இறைவனே!;
10. ஜீவ ஈசனே; 11. இழிவைப் போக்கியவனே!; 12. வானவர்க்கு முன்னோனே!; 13. மானிடரின் செல்வனே!; 14. அருளில் உயர்ந்தவனே!; 15. நன்மையை நோக்குபவனே!; 16. உயிர்க்கு உறுதியானவனே!; 17. எம் தந்தையே!; 18. வானுலக முதல்வனே!; 19. வறுமையை ஓட்டுபவனே!;
19(அ). 'துய்ய' என்பது கெடுதல்விகாரம் பெற்றுத் 'துய' என வந்தது. 20. அருளையே நினைப்பவனே!; 21. எங்கும் காட்சியாய் இருப்பவனே!; 22. 'அண்ணனே' என்பது எதுகை நோக்கி 'அன்னனே' என ஆளப்பட்டுள்ளது; 23. 'அன்னை' என்பது கெடுதல் விகாரம் பெற்று 'அனை' என வந்தது — அன்னை போன்றவனே!; 24. நன்மையையே விரும்புபவனே!;
25. 'அமலோனே' என்பது விரித்தல் பெற்று 'அமலோன்னே' என வந்துள்ளது ; 26. ஒளிர்கின்ற அழகுடையவனே!; 27. அமுதை அருள்பவனே!; 28. மக்களை நெருங்கி வருபவனே!;
29. வானுலகில் ஒளிர்பவனே!; 30. 'கிருபாசனனே' என்பது விரித்தல் விகாரம் பெற்று 'கிருபாசனனே' என வந்துள்ளது. கிருபை ஆசனனே = கருணைக்கு உறைவிடமே!; 31. பிதா அன்னனே = தந்தையைப் போன்றவனே!; 32. 'வண்ணனே' என்பது எதுகை நோக்கி 'வன்னனே' என வந்துள்ளது; 33. எல்லையில்லாதவன்;
34. குருவின் சின்னமானவனே!; 35. வான தூதர்களால் பண்பாடித் துதிக்கப்படுபவனே!; 36. மனத்தில் குளிர்ச்சியுடையவனே!;
37. விரும்புபவனே!; 38. எமக்கு அண்ணனே;

39. நல்வடிவானவனே!; 40. உயிருக்கு உணவாகியவனே!;
41. உலகை உண்டாக்கியவனே!; 42. தாழ்ச்சி கொண்டவனே!;
43. வள்ளல் தன்மை கொண்டவனே!; 44. எண்ணத்திற்கு எட்டாதவனே!; 45. எவரும் எண்ணிப் பார்ப்பதற்குரியவனே!;
46. மானிடரின் தலைவனே!; 47. அனைத்திற்கும் அரசனே!;
48. வானுலகம் சென்றவனே!; 49. நற்குணப்பற்றானவனே!;
50. அன்பு பூண்டவனே!; 51. 'ஆத்தனே' என்பது எதுகை நோக்கி 'ஆந்தனே' என ஆளப்பட்டுள்ளது ' — தலைவனே!;
52. பாசமுடையவனே!; 53. விவேகம் + அந்தனே = விவேகத்தின் எல்லையானவனே!; 54. புறா வடிவாகிய கடவுளே!;
55. கண்ணானவனே!; 56. தீமையை வெறுப்பவனே!;
57. பத்தியோடு ஒன்றுபவனே!; 58. அன்பு மிகுதியானவனே!;
59. துட்டரை வெறுப்பவனே!; 60. அருளால் சிக்குபவனே!;
61. தூய்மையானவனே!; 62. துன்புறுவோருக்காக இணைந்து துக்கப்படுபவனே!; 63. எங்கும் புகுந்திருப்பவனே!; 64. அழகு நிறைந்தவனே!; 65. அன்பருக்கன்பனே!; 66. மூடாத அருட்கண்ணையுடையவனே! ; 67. அருட்கொடையாற்சிவந்தவனே!
68. உடற் காயங்களோடு தொங்கியவனே!; 69. பார்ச்சிலுவையை விரும்பியவனே!; 70. மறையருளியவனே!
71. வெற்றியை உடையவனே !
72. செல்வ மிகுதியானவனே!; 73. மானிட உருவானவனே!;
74. அனைத்தையும் இயற்றுபவனே!; 75. உயிர் வாழ்தற்குரிய உணவு உண் கலம் ஆனவனே!; 76. ஈடில்லாத முழக்கம் கொண்டவனே!; 77. வானோர்க்கும் மேலான அறிவுடையோனே!
78. முடிவில்லாத காலத்தை உடையவனே!;
79. காலத்திற்கேற்றவாறு அருள்பவனே!; 80. மேன்மையான செல்வம் படைத்தவனே!; 81. ஒரே நீதியையுடையவனே!;
82. அறிவு வடிவானவனே!; 83. வேதத்தில் அடக்கமானவனே!;
84. நீதிவாள் கொண்டவனே!; 85. எங்கட்கு உணவாக ஆனவனே!;
86. களங்கமற்றவனே!; 87. எமக்குக்காவலாக உள்ளவனே!;
88. எம்மை விரும்புபவனே!; 89. எமக்குச் சித்தியைத் தருபவனே!;
90. தீமையை அழிப்பவனே!; 91. அழிவினின்று காப்பவனே!

6. தொழுவாம் பதிகம்

['தொழுவாம்' என முடியும் பத்துப் பாடல்களைக் கொண்டு முடிந்து இறைவனைத் தொழ வேண்டும் என அறிவுறுத்துவதால் 'தொழுவாம் பதிகம்' எனப் பெயர் பெற்றது. ''ஆண்டவரைப் போற்றிப் பாட வேண்டும் ; அவரது திருப்பெயரைப் புகழ்ந்தேத்த வேண்டும்'' என்றும் மையக்கருத்துடைய 95, 96ஆம் சங்கீதங்களின் அடிப்படையில் இப்பதிகம் அமைந்துள்ளது].

(வஞ்சித்துறை)

1. அளவை கடந்தவன்
பிளவை[1] யொழித்தவன்
புளவை[2] யழித்தவன்
வளவை[3] காறொழுவாம்.[4]

2. ஆதி யனைத்தையும்
ஓதி யமைத்தவன்
பேதி யான்கழற்
போதி[5] னைத்தொழுவாம்.

3. தேவ வவதாரி
பாவப் பரிகாரி
ஜீவற் கனுசாரி[6]
சேவ டிகடொழுவாம்.[7]

4. இந்து தேயரைச்
சிந்து செம்புனற்[8]
பந்து வாக்கியாள்
முந்து சரண்டொழுவாம்.[9]

5. ஈன மனுக்குலம்
ஞான வொளிவுற
தான முதியன்பு
வான னைத்தொழுவாம்.

6. எங்கு நிறைந்தோனுட்
டங்கு தயாளன்விண்
பங்கு மிடவன்பு
பொங்கு கழற்றொழுவாம்.

7. காயமோ ரைந்தான்
நேய மிகுந்தான்
தாய ரனைநலன்
தூய பதந்தொழுவாம்

8. புன்மை வருத்துவெந்
தின்மை யழித்தெங்கும்
நன்மை பெருக்குயர்
வன்மை யடிதொழுவாம்.

9. ஒழிய துன்மதம்
கழிய வகமலம்[10]
அழிய விடர்வரம்
பொழிய பரன்றொழுவாம்.

10. பரத கண்டத்தார்
நரத யாளன்செங்
கரத லத்துற[11]
வரத னடிதொழுவோம்.

1. பாகுபாட்டை; 2. தீமையை; 3. வளமையுடையவனை; 4. கால் + தொழுவாம்; 5. திருவடி மலரினை; 6. உயிர்க்கு உதவியானவன்; 7. சேவடிகள் + தொழுவாம்; 8. செந்நீர்; 9. சரண் + தொழுவாம்; 10. மனத்தில் உள்ள மாயை; 11. கைகளில் பெற.

7. தொழுதேன் பத்து

['துணைத்தாள் தொழுதேனே' என முடியும் பத்துப் பாடல் களைக் கொண்டு இறையருள் பெற அவன்தாள் தொழுவதால் 'தொழுதேன் பத்து' என்னும் பெயர் பொருத்தமாயிற்று. 'யாவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்' 'என் இறைவா! உம்மைப் புகழ்ந்தேத்து கிறேன்' என்னும் உட்கருத்துக்களைக் கொண்ட 116, 117ஆம் சங்கீதங்களை மையமாக வைத்து இப்பதிகம் அமைந்துள்ளது].

1. எந்தாய்! என்றாய்நீ! ஏற்ற குருவிறைநீ!
வந்தாய் புரக்கவெனை மாசிற் பெருமானே!
தந்தாய் ஒருவாக்கு; தள்ளாய் உனைநம்பினேன்;
சொந்தாய்! தலைகுனிந்துன் துணைத்தாள் தொழுதேனே.

2. பாருஞ் செழிவாழ்வும்[1] படர்காற் றெதிர்பூளை[2]
ஆருந் துணையில்லேன் அவதி கண்டயரேன்
நேரு முனதுசித[3] நில்வம்[4] பேருதவி
சோரு முளந்தேற்றுன் துணைத்தாள் தொழுதேனே.

3. தானே எனிற்பரிவு சாற்றற் கரிதமைத்தாய்
வானே நிலைவீடு மன்ன வழிதிறந்தாய்
தேனே! மறப்பேனோ? சிந்தா குலமறத்தீர்த்
தோனே![5] தேம்பொழியுன் துணைத்தாள் தொழுதேனே.

4. குலமே பெரிதென்பார் கூவிப் பணமென்பார்
நலமே பெரிதென்பார் நற்கு ணங்களென்கார்
கிலமே[6] னும்[7] மவரைக் கிட்டேன் எனைவதைத்த
துலமே[8] வியபவந்தீர்[9] துணைத்தாள் தொழுதேனே.

5. அற்றேன் இகவுறவால்[10] ஐந்தீ பகரீவு[11]
கற்றேன் அதினுழியக்[12] கடினத் தாற்போதம்
பெற்றேன் அருளாவிப் பேறு மறந்தினியான்
சுற்றேன் இழிபூநின்[13] துணைத்தாள் தொழுதேனே.

6. கண்ணா! ஒளியின்பா! காதா[14] தொனியினியா!
விண்ணா! அமர்வாழ்வா! வேதா! உரைஞானா!
பண்ணா! சாரீரா! பற்றாதுனைக்[15] கடந்து
தொண்ணாந் தலைகிலனுன்[16] துணைத்தாள் தொழுதேனே!

7. எப்பா வமுந்தீர்த்தே இரக்கம் எனக்களித்த
அப்பா! உனைநிகரார்? அறியேன் உலகறியா
செப்பா ரருஞ்சிலுவைத்[17] தியாகா! ஜகதீசா!
துப்பா ருனதலர்செந்[18] துணைத்தாள் தொழுதேனே.

8. அரியா! மாற்றலரை அழிக்கா துருகன்பிற்[19]
பெரியா! சொற்றவறாப்[20] பெருமா! காரணவா!
உரியா! உலகேத்தற் குறைவா[21] நொறுங்குளக்கண்[22]
துரியா[23] கதிப்புணையுன்[24] துணைத்தாள் தொழுதேனே.

9. நில்லேன் மறுதுணைகள் நினைந்துன் மறையல்லால்
கல்லேன் பரகதியைக் காட்டும் வழிக்குறிப்பாய்ப்
புல்லேன், கவிபிறர்க்குப் புகன்றேன் தந்தைநிற்கு
சொல்லேன் துதிவேறே துணைத்தாள் தொழுதேனே.

10. மாயா வரமருள்வாய் மனதிற் களிப்பிடுவாய்
சேயா யெனை[25]யாளுன் செயற்குப் பதிலறியேன்
தேயா வொளிகாலும் தேவா! கிறிஸ்தீசா!
தூயா! திரித்துவ நின்துணைத்தாள் தொழுதேனே.

1. செழிப்பான வாழ்வும்; 2. இலவம் பஞ்சு; 3. உனது + உசித;
4. நிலவு + அம்; 5. சிந்து + ஆகுலம் + அற + தீர்த்தோனே;
6. சிறிதேனும்; 7. விரித்தல் விகாரம்; 8. நிறைந்த;
9. துலம் + மேவிய + பவம் + தீர்; 10. இகம் + உறவர்ல் =

உலகப்பற்றால்; 11. பகர்+ஈவு=சிறப்பித்துக் கூறப்படும் இரக்கம்; 12. அதின்+ஊழிய, 'ஊழிய' என்பது குறுக்கல் விகாரம் பெற்று 'உழிய' என ஆயிற்று; 13. 'இழிபு' என்பது நீட்டல் விகாரம்பெற்று 'இழிபூ' என ஆகியது. 14. வேண்டுதலைக் கேட்கும் செவியோனே; 15. பற்றாது+உனை; 16. தொண்ணாந்து+அலைகிலன்+உன்; 17. செப்பார்+அரும்+சிலுவை; 18. துப்பார்+உனது+அலர்; 19. அழிக்காது+உருகு+அன்பில்; 20. சொல்+தவறா+பெருமா; 21. உலகு+ஏத்தற்கு+உறைவா=உலகு ஏத்துதற்குரியவான் உறைபவனே; 22. நொறுக்கு+உளம்+கண்; 23. சுமப்பவனே; 24. கதி+புனை+உன்; 25. எனை+ஆள்+உன்.

8. சரண பங்கயப் பதிகம்

['சரணஞ் சரண பங்கயமே' என நிறைவுறும் பத்துப் பாடல்களைக் கொண்டு இறைவன் திருவடிகளில் சரணமடைதலால் சரண பங்கயப் பதிகம் என்னும் பெயர் பெற்றது. சங்கீதங்கள் 46, 11 ஆகியவை புலப்படுத்தும் நுண்பொருள் அடிப்படையில் இப்பதிகப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளனவாகத் தெரிகிறது].

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

1. அருச்சொற் சுவிசே ஷப்பொருளை அன்போ டருளி
னாலாய்ந்து
செஞ்சொற் கவிபா டிடவருள்செய் தெளியே னுளத்தை
முனங்கெடுத்த
புஞ்சொற்[1] றுறைக்கு விலக்கினையே பொருவிற் றயைக்கே
தீடளிப்பேன்[2]
சஞ்சொற் றவறா[3] மாதேவா! சரணஞ் சரண பங்கயமே.

2. தேனே! பாலே! கற்பகத்தின் திகட்டா வமுதே! பழரசமே!
கோனே! கோவே! கேடறவெங் குலத்தி லுதித்த தனிமுதலே!
வானே! வானின் பிரவையெலாம்[4] வயங்கக் கான்மூ லச்சுடரே!
தானே கண்டென் கலியொழித்தோய்! சரணஞ்சரண பங்கயமே.

3. என்னை யரிநேர் பீறவெழும்[5] இழுதைச் சிரசைச்
சிதறடித்தோய்!
உன்னை மறக்கிற் பிழைப்பேனோ? உலகீ தெனக்காந்
துணையாமோ;
முன்னை யடியர் பங்கமர்ந்தாள்[7] முறைமை யின்றும்
வழுவானே!
தன்னை யெனக்காய்த் தியாகித்தோய் சரணஞ் சரண
பங்கயமே.

4. என்கோ லத்தை யெடுத்தாய்நீ எளியே னுனைப்போ
லாகவென்றே
புன்கோ லத்தைப் பழையதாம்[8] போட்ட னலங்கோ
லம்மடைந்தேன்[9]
மன்கோ லங்க ளனைத்துமுனால்[10] வாய்க்கு மன்றோ? புவியிலின்னம்
தன்கோ லத்தோ டெழும்பரனே! சரணஞ் சரண பங்கயமே.

5. எண்ணா தனவெல் லாமெண்ணி ஏழை நெஞ்ச மெலியாமல்
கண்ணா யிருந்தென் கலியகற்றும் கருணா கரனே!
தயைக்கடலே!
பண்ணா[11] லுன்றாட் காரமிட்டுப்[12] பணியுந் தினப்பே
றளித்தனையே
தண்ணா ரகனே! [13] நன்றியுன்னுஞ் சரணஞ் சரண பங்கயமே.

6. ஒருமா தந்நா ளுண்டகனி உலகுக் கிழுக்கீந் தலைத்தவறத்[14]
திருமா வடைந்த வொருகனிகை[15] திகழுங் கனியாய்க்
கனிந்தனையே
பெருமா வரங்கள் யாங்களுறப் பெரிதாய் வழியுந்
திறந்தனையே
தருமா றென்னோ வீடிறைவா! சரணஞ் சரண பங்கயமே.

7. பேரோ வரச சேவைகளோ பெரிய மனுட கேண்மைகளோ
சீரோ சட்ட வடுச்சுவையோ திரிபா லடை[17] பற்
கலைச்சுகமோ[18]
ஊரோ டொத்த வாழ்வுகளோ உரைவே றெவையோ
விவையனைத்தும்
தாரோ டழியும்[21] நீயழியாய் சரணஞ் சரண பங்கயமே.

8. மூழித்[20] தயிரா யுடைமனதை மோக்ஷ மார்க்கத் தொருப்படுத்த
ஆழித்தனாயி லுனையலதார்[21] அறியா துலக மடியனம்பி[22]
நூழிற்[23] புரையச் சுற்றிநிற்க நுவலற்[24] கரிய தயைகூர்ந்தாய்
தாழித் தீப[25] மாகாதாள்[26] சரணஞ் சரண பங்கயமே.

9. அஞ்ச வடிக்குந் துன்பவலை ஆழி[27] சுவற[28] வடிப்பவனீ
நெஞ்ச முறைதீப் பவமாசை நீக்கும் புண்ய தீர்த்தனும்நீ
துஞ்சு வரும்போ தரியதிடச் சுகிர்த மளிக்கு மிரக்ஷகனீ
தஞ்ச மெனக்கா னாய்நிமலா! சரணஞ் சரண பங்கயமே.

10. நானாங் கார மலையேறி நழுவு வீழ்ந்தூ ணங்கொண்டேன்
மானாங் காணி[29] யாயலைந்தே வசையுஞ் சுமந்தே
னொண்டியென
சூனாங்[30] கிருபை கூர்ந்தனையே சுகமாக் கினையே
வயஞ்சுடரும்
சானாங் கோடுஞ்[31] சுமப்பவனே! சரணஞ் சரண பங்கயமே.

1. 'புன்சொல்' என்பது எதுகை நோக்கிப் 'புஞ்சொல்' என ஆனது. 2. தயைக்கு ஏது+ஈடு+அளிப்பேன்; 3. சம்+சொல்+தவறா= அன்புடைய சொற்கள் தவறாமல்; 4. பரப்பெங்கும்; 5. கிழிக்க+எழும்; 6. பொய்மை; 7. பங்கு+அமர்ந்து+ஆள்; 8. பழைய ஆதாம்' என்பது தொகுத்தல் விகாரமாய்ப் 'பழையாதாம்' என ஆளப்பட்டுள்ளது; 9. அலங்கோலமடைந்தேன்' என்பது விரித்தல் விகாரம் பெற்று 'அலங்கோலம்மடைந்தேன்' என அமைந்துள்ளது 10. அனைத்தும்+உன்னால்; 'உன்னால்' என்பது தொகுத்தல் விகாரமாய் 'உனால்' என ஆனது; 11. 'பன்னாள்' என்பது எதுகை நோக்கிப் 'பண்ணாள்' என வந்தது; 12. உன்+தாட்கு+ஆரம்+இட்டு=உன் திருவடிகட்கு மாலையிட்டு; 13. தன்+ஆர்+அகனே!; 14. இழுக்கு+ஈந்து+அலைத்து+அலற; 15. அன்னைமரி; 16. சட்டியில் உள்ள இளங்காய்ச் சுவையோ; 17. திரிபால்+அடை= அங்குமிங்கும் திரிந்து அடைகின்ற; 18. கலை இன்பமோ; 19. அடியோடு அழியும்; 20. மத்து; 21. உனை+அலது+ஆர்; 22. உலகம்+அடியன்+நம்பி; 23. படர்கொடி; 24. கூறுதற்கு; 25. குடத்துள் இட்ட விளக்காக; 26. ஆகா + தாள்; 27. கடல்; 28. வற்ற; 29. தாறுமாறாய்; 30. மகன்; 31. சானு+ஆங்கு+ கோடும்=தோளில் வலிமைமிக்க மரத்தைச் சுமந்தவனே!

9. தலைகொள் பதிகம்

['தலைகொள்வாம்' என முடியும் பத்துக் கலிநிலைத்துறைப் பாக்களைக் கொண்டுள்ளதால் தலைகொள் பதிகமாயிற்று. சங்கீதங்கள் 96, 2 ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப்பட்ட குறிப்புக் காணப்படுகிறது].

(கலிநிலைத்துறை)

1. உன்னு தற்கரி தாம்பரன்[1] மகவென வுதித்து
மன்னு பாடுகள் பிலாத்ததி காரத்தின் மருவி
துன்னு கொல்கொதாக் குன்றுறுஞ் சிலுவைமேற் றொங்கி[2]
தன்னு யிர்த்தியா கத்தினன் சரண்டலை[3] கொள்வாம்.

2. ஜாதி யாவையுங் கொடுங்கடி தாட்சிறை[4] தவிர்த்து
ஜோதி காலிறை குடிகளாய்ச் சுதர்களாய் வளர்த்தி
நீதி சாலவுண் டாகவெஞ் சிலுவையி னிலவும்
கோதி லாச்செனீர்[5] கொடுத்தவன் சரண்டலை கொள்வாம்.

3. ஞான நன்மைகள் காவென நல்குயர் கரமும்
ஊன மார்க்கம்யா முழன்றிடாது[6] யவைமா புயமும்
சூன ழிந்தெழத்[7] துலங்குக டாக்ஷமுஞ் சொந்தத்
தான தேவகு மாரபொற் சரண்டலை கொள்வாம்.

4. பொன்மு டித்தலைப் புரவலரிருதயம் புனற்கால்
என்மு னப்பட நடத்துவல் லபங்களை யெல்லாம்
சொன்மு னுரைப்படி[8] யடக்கிவைத்துதி[9] மஹாராஜன்
தன்மு னங்குனிந் தருள்மொழி சரண்டலை கொள்வாம்.

5. ஆறு தலையுற[10] வஞ்சு தலையறுத் தனந்த[11]
பேறு பெறநிலை பெரும்புக ழிகபர மெழும்பக்
கூறு மொப்பறுஞ்[12] சுவிசேஷங் கூறுமெஞ்ஞானத்
தாறு[13] நம்முளம் பாய்ச்சிறை[14] சரண்டலை கொள்வாம்.

6. அன்பி னார்கவி மடைதிறந் தகமெலாம் பரப்பி
துன்பி னால்வருந் திடரொழித் துதைமெய்ப்[15] பத்தி
இன்பி னானந்த மோங்கவே[16] யிரங்கியே செம்மான்
தன்பி னடைகொள[17] வவன்றிருச் சரண்டலை கொள்வாம்.

7. உலக மீதிலெஞ் ஞானியு முரைத்திரா ஞானம்
இலகத் திருவத ரந்திறந் தியம்பியஞ்[18] ஞானக்
கலக மியாவையுங்[19] கீழ்ப்படுத் திக்கதி கடையத்
திலக மாதெளி வருள்குரு சரண்டலை கொள்வாம்.

8. நன்மை நாட்டமாய் நானிலர்க் குதவிடா தனந்தம்
தின்மை செய்பர சமயகோ ளரி[20] சுவிசேஷப்
பொன்மை யார்மதந்[21] தழைக்கவே புவியன்பர்க்காவித்
தன்மை யருள்கிறிஸ்தற் புதன் சரண்டலை கொள்வாம்.

9. கெட்ட விக்கிர கார்ச்சனை[22] யுலகரைக் கெடுக்கும்
துட்ட பாதையென் றுடைத்தொளிர் தூய நல் வணக்கம்
சிட்ட ரெங்கணுஞ் செய்யவுந் தரவளித் திழியா
அட்ட பாக்கியமடை விப்போன்சரண்டலை கொள்வாம்.

10. பூமியா வையுமொருகுடை நிழலினுட் புரந்து
காமி யங்களைத் திருப்புகழ் காலவே[23] நல்கிச்
சாமி கரித்தவீண் டேவரை[24] யழித்தவர் தலைமேல்
தாமி டும்பத பதியேசு சரண்டலை கொள்வோம்.

1. அரிதாம் + பரன் ; 2. மேல் + தொங்கி ; 3. சரண் + தலை ; 4. கடிது + ஆள் + சிறை ; 5. இரத்தம் ; 6. யாம் + உழன்றிடாது ; 7. பாடுபட்ட திருமகன் இறப்பால் எழும் ; 8. சொல் + முன் + உரைப்படி ; 9. வைத்து + உதி ; 10. ஆறுதல் பெற ; 11. அஞ்சுதலை + அறுத்து + அனந்த ; 12. ஒப்பு + அறும் ; 13. மெஞ்ஞானத்து + ஆறு ; 14. பாய்ச்சு + இறை ; 15. உன்னத மெய், ' உன்னத ' என்பது தொகுத்தல் விகாரமாகி ' உனத ' என வந்தது ; 16. இன்பின் + ஆனந்தம் + ஓங்கவே ; 17. தன் + பின் + அடை + கொள ; 18. திரு + அதரம் + திறந்து + இயம்பிய ; 19. கலகம் + யாவையும் ; 20. பிற சமயக் கொள்கைகளை அழிக்கும் சிங்கம் போன்ற ; 21. பொன்மை + ஆர் ; பொன் போன்ற ; 22. சிலை யுருவ வழிபாடு ; 23. சூழவே ; 24. வீண் +தேவரை.

10. திருநாம விளக்கப் பதிகம்

இயேசு கிறிஸ்துவின் திருநாமச் சிறப்பினை விளக்கும் பத்து விருத்தங்களைக் கொண்ட பகுதியாதலின் திருநாமவிளக்கப் பதிகம் என்னும் பெயர் பெற்றது. 'முடிவில்லா வாழ்வு என்பதுஉண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே '' (யோவா 17-3) என்றும் விவிலியப் பகுதியின் அடிப் படையில் இப்பதிகம் இயற்றப்பட்ட குறிப்புக் காணப்படுகிறது.

(எழுசீர் விருத்தம்)

1. எல்லா வுலகும் படைத்தா னுலகர்
இதய நிலக்கண் ணடர்ந்த
பொல்லா வினையாங் களையைக் களையப்
புவியோர் மனுவா யுதித்தான்
சொல்லா லளத்தற் கரும்பா டடைந்தான்[1]

தூயன் றிருநா மங்கேள்
நல்லா ரிகம்வின் போற்றிக் களிக்கும்
நமோவி யேசு கிறிஸ்தே.

2. சாக வடிக்குங் கொடிய கடிவெஞ்
சதிக டவிர்ந்து[2] மனுக்கள்
தேக மான்ம மாவி யாதி[3]
சிறக்கச் செய்ய விரங்கி
ஏக பரமன் றனையே பலியாய்
ஈத்தான் றிருநா மங்கேள்
நாக சுரரும் நரரும் வணங்கும்
நமோவி யேசு கிறிஸ்தே.

3. அட்ட திசையும் பவமன் னிப்போ
டமலம் நீதி யடையத்
திட்ட முடனே ஜீவ சுவிசே
ஷத்தைத் தீட்டத் திரளாய்ச்
சிட்ட ரனுப்பி மகிமை பெருக்கும்
தேவ திருநா மங்கேள்
நட்ட மறநம் பினரைக் காக்கும்
நமோ வியேசு கிறிஸ்தே.

4. தேடு வோர்மா நலங்க டழுவத்[4]
தினம்வின் னருளைப் பொழிவோன்
கேடு தொடர்தீ வழிக்கு விலக்கிக்
கிருபைக் கரத்தா லணைப்போன்
சூடு புகழ்ச்சி முழுது மேற்கச்
சொந்தன் றிருநா மங்கேள்
நாடு செழிக்கக் கலிகே டகற்றும்
நமோவி யேசு கிறிஸ்தே.

5. தழுவி யொழுகும் விமல நிலைமை
தனையிப் புவிவேட் கையினால்
வழுவி யலகை[5] வழியி லுலையும்
மனாதி[6] ஞான மடையக்
கழுவி மாறாக் கதிக்கா ளாக்கும்
கருத்தன் றிருநா மங்கேள்

நழுவி வீழாப் பலத்தை யருளும்
நமோவி யேசு கிறிஸ்தே.

6. ஊறும் பாவ விச்சை மசிய
ஊக்கஞ் சிறக்கப் பகையால்
சீறும் பிசாசை மடக்கி யடிக்கும்
திறமை பெருக நெஞ்சம்
தேறும் வேதப் புதைய லெடுக்கச்
செய்வோன் றிருநா மங்கேள்
நாறும் நாற்பூ வார மெமக்கீ[7]
நமோவி யேசு கிறிஸ்தே.

7. பாவி மரித்த லலஜ்ஜி வித்தல்
பரிவாய் விரும்புஞ் சாந்தன்
தாவி வருந்து மனதை யருளால்
தளைந்து நடத்தோர் சமர்த்தன்
ஆவி யுண்மை வணக்க நாட்டன்
அன்பன் றிருநா மங்கேள்
நாவி னாலே விளக்கற் கரிய
நமோவி யேசு கிறிஸ்தே.

8. பூத பௌதீ கங்கள் மேலான்
பொருவ லில்லான்[8] வாக்கா
தீத னொருவன்[9] றிரியே கத்தான்[10]
திவ்விய வேத வொளியான்
பேத நாதந் திரத்தி லடங்கான்
பெரியன் றிருநா மங்கேள்
நாத கீத நீத சீல
நமோவி யேசு கிறிஸ்தே.

9. எத்து முலக நசையுல் லோலத்[11]
திழுப்புண் டெழுநீர்க் குமிழிச்[12]
சொத்துஞ் சொகுசும் வாழ்வு மிகுக்கச்
சுழல லொழித்துதம[13] நெறிகள்
பத்து முறையே தழுவற் குதவி
பகர்வோன் றிருநா மங்கேள்
நத்து மெவையு மிணைநிற் கரிய
நமோவி யேசு கிறிஸ்தே.

10. தன்னா லாதி யனைத்துந் தோற்றித்
தானே முதலா யோயாப்
பொன்னா வமர பதியாய்ச் சமஸ்த
புவன கருணா கரனாய்
என்னா வரற்றுந் துதிக ளவைக்கும்
ஏற்றோன் றிருநா மங்கேள்
நன்னா மம்மிக் கமைந்து பொலியும்
நமோவி யேசு கிறிஸ்தே.

1. அளத்தற்கு+அரும்பாடு+அடைந்தான்; 2. சதிகள்+தவிர்ந்து; 3. தேகம்+ஆன்மம்+ஆவி+ஆதி; 4. நலங்கள்+தழுவ; 5. பேய்; 6. மன்+ஆதி = மன்னாதி என வர வேண்டியது தொகுத்தல் விகாரம் பெற்று 'மனாதி' என வந்துள்ளது; 7. பூ+ஆரம்+எமக்கு+ஈ; 8. பொருவல்+இல்லான்; 9. வாக்கு+அதீதன்+ஒருவன்; 10. திரி+ஏகத்தான்; 11. ஆசையாகிய பெருவெள்ளம்; 12. இழுப்புண்டு+எழு+நீர்க்குமிழி; 13. சுழலல்+ஒழித்து+உத்தம; 'உத்தம' என்பது தொகுத்தல் விகாரம் பெற்று 'உதம' என ஆளப்பட்டுள்ளது.

11 திருத்தாட் பதிகம்

[ஒவ்வோர் அடியும் இறைவனது திருத்தாளின் பெருமை கூறி முடிவுறுவதால் திருத்தாட்பதிகம் என்னும் பெயர் பெறுகிறது. தலைப்பின் அருகில் மத். 15; 30 என்னும் எண் குறிப்புக் காணப்படுகிறது அதுகொண்டு, ''மக்கள் திரள்திரளாக அணுகி, ஊமை, குருடர், முடவர், ஊனர் இன்னும் பலரையும் கொண்டுவந்து அவரது காலடியில் வைக்க, அவர் அவர்களைக் குணமாக்கினார்'' என்னும் பகுதியே இப்பதிகத்தின் அடிப்படை என உணரலாம்.]

கலி விருத்தம்

1. சொல்லரு மருவமா யெங்குந்[1] துன்னுதாள்
எல்லரு மருச்சிக்க விம்மை[2] தோன்றுதாள்
வெல்லரு மழிம்பனை[3] மிதித்து வென்றதாள்
பொல்லரு மடுத்துயப்[4] போந்த யேசுதாள்

2. நாடியே நலந்திரள் நல்கு நல்லதாள்
தேடியே யடைபவர் சிறுமை நீக்குதாள்

வாடியே யலைபவர் வாட்ட மோட்டுதாள்
பாடியே புகழ்ந்துயப் பரத்திற் கூட்டுதாள்

3. தீனரைப் பிணியறச் செய்யும் வல்லதாள்
தானரை யொருகுடை தாங்கு நேயதாள்
கானரைக் கரையமை கப்ப லானதாள்
ஞானரைத் திருநிழல் நடத்துந் தேவதாள்.

4. தீயவள் மனத்துயர் தீய்த்த தூயதாள்
நேயவள் நளதமிட்[5] டிறைஞ்சு நீடுதாள்
மாயவள் நிலைநிலா தொழிந்த மானதாள்
தாயவள் நிகரெழுந் தாண்டு கொண்டதாள்

5. ஊரெலா மலைந்துப தேச[6] மூட்டுதாள்
நீரெலா மொருங்கமை நிமல நேசதாள்
பாரெலாந் தலைகொண்டு பணிதற் கானதாள்
சீரெலா முவந்தருள்[7] தேவ செல்வதாள்

6. வெம்பிய பவவுள வேன[8] மாற்றுதாள்
நம்பிய அனைவரி னலிவு[9] நீற்று[10] தாள்
சம்பிய விருதயத் தவக்கம்[11] போக்குதாள்
அம்பிய லறிந்தெமை[12] யணைக்கும் ஞானதாள்.

7 ஞாலத்தைப் பதபடி நன்கு கொண்டதாள்
காலத்தை யுருட்டியாள் கனங்கொள் வான்[13]தாள்
சீலத்தை நிழலினர் சிறக்க நல்குதாள்
கோலத்தை முடிமரங்[14] கொண்டு சென்றதாள்.

8. வீரமாய் எழுந்திரை மேற்செல் வெல்வி[15] தாள்
கோரமாய் முனையிரும் பறையக்[16] கொண்டதாள்
தீரமாய் வருபகை தீர்த்தெ ழுந்ததாள்
ஆரமாய் முடித்திர ளணியப் பெற்றதாள்.

9. அண்டரும் புவியரு மடங்கிப் போற்றுதாள்
வண்டருந்[17] திருந்தருள் மழையை யூற்றுதாள்
கண்டருஞ் சுடர்க்கெலாஞ் சோதி காலு[18]தாள்
எண்டருந் துகைகளெட் டரிய[19]வின்பதாள்.

10. களவறு திருவழி யிரங்கிக் காட்டுதாள்
பிளவறு பலிமுடி பிரிய மானதாள்
அளவறு நரர்கதி யடைய வைத்ததாள்
நளவறு பவபழி நலிகி றிஸ்துதாள்.

1. சொல்+அரும்+அருவமாய்+எங்கும்; 2. எல்லரும்+அருச்சிக்க+இம்மை=எல்லோரும் போற்றுமாறு இவ்வுலகில்; 3. வெல்லரும்+அழிம்பனை; 4. பொல்லரும்+அடுத்து+உய=பொல்லாதவரும் சார்ந்து நன்னிலை பெற; 5. நளதமிட்டு=நடனமாடி;
6. உபதேசம்+ஊட்டுதாள்; 7. சீர்+எலாம்+உவந்து+அருள்;
8. பாவம் நிறைந்து நொந்த உள்ளத்தின் வேதனையை;
9. அனைவரின்+நலிவு; 10. போக்கும் தாள்; முன்னடியில் 'மாற்றுதாள்' என்பதற்கு எதுகையாக 'நீக்குதாள்' என்பது 'நீற்றுதாள்' என அமைந்துள்ளது; 11. கவலை; 12. அம்பு+இயல்+அறிந்து+எமை; 13. 'கொள்வான்' என்பது செய்யுளுக்காக அகரச்சாரியை பெற்று 'கொள்வான' என அமைந்துள்ளது;
14. சிலுவை; 15. வெற்றி கொண்ட; 16. ஆணியால் அறையப்பட்ட; 17. வம்பர்; 18. ஒளிர்கின்ற;
19. எண்ணுவதற்கும் எட்டுவதற்கும் அரிய.

12. இயேசு கிறிஸ்து விளக்கப் பதிகம்

[தலைப்பின் அருகில் யோவா 8.25 என்னும் எண்குறிப்புக் காணப்படுவது கொண்டு, ''அவர்களே, 'நீர் யார்?' என்று வினவ, இயேசு கூறினார்: நான் யாரென்று உங்களுக்குத் தொடக்க முதல் சொல்லி வந்தேனோ அவர்தாம் நான் ''என்னும் விவிலிய நற்செய்தியடிப்படை கொண்டது இப்பதிகம் எனலாம். 'இயேசு கிறிஸ்து யார்?' என்பதற்கான விளக்கம் தருவதோடு, 'இயேசு கிறிஸ்துவே!' என ஒவ்வொரு பாடலும் முடிவுறுவதால் இயேசு கிறிஸ்து விளக்கப் பதிகம் என்னும் பெயர் பெற்றது.]

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

1. ஆதியின் முழுவதும் வகுத்தவர் ஆதமே வாளைப் படைத்தவர்
வாதியின் மேற்செயங் கொண்டவர் மாதிறல் யாகம் முடித்தவர்
நீதியின் சூரிய னானவர் நீணிலர் வாழ்வழி தந்தவர்
சாதியின்[2] கேடொழி தற்பரர் சத்திய இயேசு கிறிஸ்துவே!

2. இருந்தவ ரிருப்பரென் றென்றுமி ருக்கின்ற வர்மகா ஞானியர்
அருந்தவ நீதி முடித்தவ ரடிமை விலைமுறி[3] கிழித்தவர்
தகுந்தவ சீவிய விசுவாசந் தானேது வக்கிமு டிப்பவர்
மருந்தவ ருந்துணை பண்டிதர் மாசிலா இயேசு கிறிஸ்துவே!

3. அண்டகோ ளங்களைத் திருக்கையா லந்தரத் தியக்கியே
தாங்குவோர்
கண்டகோ பாலரின்[4] மகிழ்ச்சியார் ககனசாஸ் திரிகளின்
புகழ்ச்சியார்
விண்டகோ பாக்கினை குணப்பட்டோர் மேல்விடா விரக்கத்
தயாபரர்
வண்டகோ குடிகளைத் திருத்துவோர் மகத்துவ இயேசு
கிறிஸ்துவே!

4. ஈனகு லாமருக் கெட்டிடா ரெளியருக் காம்புகல் தட்டிடார்
வானகு ழுஉக்களுக் காண்டவர் மண்ணிலுள் ளோர்தமை
மீண்டவர்[5]
பானத சர்க்கரை யாகினார் பத்தா னின்பவாழ் வாகினார்
ஊனகு ணந்தவி ரெம்பிரா[6] னுன்னத இயேசு கிறிஸ்துவே!

5. சீரற்ற பேய்பவஞ் சாபமுஞ் சேர்ந்தவை பின்றொடர்ந் தேவரும்
ஏரற்ற யாதனை[7] நான்கையு மேறிய சிலுவையால் வென்றவர்
நேரற்ற பிரபஞ்ச வாழ்வினை நிச்சயஞ் செய்தேனோ
மாய்கின்றீர்?
காரற்ற வேரிகள் காத்தலேன்? கதிவழி இயேசு கிறிஸ்துவே!

6. வாசனே யென்றடி முத்துக வழியினி லழியா மலோய்விலா[8]
நேசனே யென்று நெருங்குக நித்தியம் மெய்மறை யோதியே
ஈசனே யென்றின்பா யேத்துக எங்கெங்கும் மெய்ப்பறை
சாற்றுக
தேசனே ரெங்கணுங்[9] காண்கிலோம் திருப்பெயர் இயேசுகி
றிஸ்துவே!

7. தெள்ளிய போதனை யளிப்பவர் தெய்வீக முத்தொழிலு
டையவர்
ஒள்ளிய மனுடவ தாரத்தில் உத்தம முச்செயற் றம்பிரான்
தள்ளிய தட்டிடார் நம்பியே தாள்கெதி யாய்ப்புகு மெவரையும்
எள்ளிய னீற்றியாட் கொள்பவ[10]ரின்பமர் இயேசு கிறிஸ்துவே!

8. ஆதிமு தனோவா நாள்வரை[11] யன்னதன் பின்னபி ராம்வரை[12]
வேதமு தற்றீர்க்கன் காலமும் விளங்கு தீர்க்கா நானாகாலமும்
நீதமு ரைத்தொளிர் முன்றூ தன்நேர் தினமுங் கூறப்பட்டவர்
போதமு கந்தளி சற்குரு புண்ணிய இயேசு கிறிஸ்துவே!

9. ஆடுக ளர்மனு வோங்கிடற் கருமுயல் வாற்றுநற் கோனவர்,
பாடுக ளாற்பரி பூரணர், பரிசுத்த பாதைய கன்றநங்
கேடுக ளறுப்பவர், நாஞ்செய கெம்பீ ரமோச்சரு ளீய்பவர்[13]
நாடுக டொறுந்தொழு நாயக னன்மைசெய் இயேசு
கிறிஸ்துவே!

10. நேயமே யோருரு வானவர் நீசர டைக்கலங்
கொண்டுயக்
காயமே னியிலைந் துமேவினார் கன்மிக ளாமெமைத்
தாங்கினார்
தேயமே சீர்ப்படும் நாளிது தேவகு மாரனின் றழைக்கின்றார்
தூயமே லாம்பதி சேர்வழி சோபித இயேசு கிறிஸ்துவே!

1. பகைவன்; 2. மானிடச் சாதி; 3. முறிச்சீட்டு; 4. ஞானியர்; 5. மீட்டவர்; 6. ஊன + குணம் + தவிர் + எம்பிரான்; 7. வேதனை 8. வழியினில் + அழியாமல் + ஓய்விலா; 9. தேசனுக்கு நிகராக எங்கும்; 10. எளிமையை நீக்கி ஆட்கொள்பவர்; 11. ஆதிமுதல் நோவா நாள்வரை; 12. அன்னதன் பின் அபிராம் வரை; 13. மேலுலகம் நல்குபவர்.

13. அலந்தேன் பத்து

[தலைப்புக்கருகில் யோபு 23—3 எனக்காணப்படும் எண் குறிப்பு, ''அவரை எங்கே கண்டுபிடிக்கலாம் என்று மட்டும் எனக்குத் தெரிந்தால், அவரது இருக்கையருகில் நான் நெருங்கக் கூடுமானால்'' என்னும் யோபு ஆகமப்பகுதியே இப்பகுதியின் மையக் கருத்து என உணர்த்துகிறது.

இறைவனைக் காண இயலாமல் தவிக்கின்ற நிலையை உணர்த்தலாலும் ஒவ்வொரு பாடலும் 'அலந்தேன்' என முடிவதாலும் 'அலந்தேன் பத்து' என்னும் பெயர் பெற்றது].

எண்சீர் ஆசிரிய விருத்தம்

1. ஞானத் தேனைச் சீவ வமுதை
நாவிற் கினிய கரும்பின் ரசத்தை
மானத் துரையை மகிமை யானை
மனதின் மகிழ்ச்சி யருளு வானை
ஊனத் துறைக ளொழிநல் லவனை

ஒருவ ரேனும் நிகரில் லானை
ஈனத் தனங்க ளொழிப்பித் தாளும்
இறையைக் காணு மாறிங் கலந்தேன்.

2. தேடி யென்னைச் சேர்த்துத் திருத்தி
சேட்டை புரியிந் திரிய மடக்கி
நாடி ஞான வழியி லொழுக
நல்ல வுதவி யருளு வானை
பாடி யன்பு கூர்ந்து நாயேன்
பணிந்து நம்பி யறியும் பரனை
ஈடி லாநற் கருணை யானை
இன்பங் கதிக்கக் காண்க வலந்தேன்.

3. ஊனக் கண்ணிற் கொளித்து மேன்மை
ஒளிரும் பரிசுத் தாவி யருண்மெஞ்
ஞானக் கண்ணிற் றோன்று மகிமை
நன்கு காலுந்[1] தேவ தேவை
ஈனக் குலங்க ளேத்து முருவ
இனங்கட் கரிய வருவ ரூபாய்த்[2]
தானக் கண்ணாற் கண்க ளாலும்
சருவே சுரனைக் காண்க வலந்தேன்.

4. சிரத்திற் கரத்தைக் குவித்தும் வீழ்ந்து
தெண்டஞ் செய்து மெழுந்து கீதம்
பரத்திற் றொனிக்க வுரத்து மமர்ந்தும்
பாடி யாடி வாக்குத் தத்தம்
திரத்திற்[3] பற்றி யகத்தின் மகிழ்ந்தும்
சிந்தை தெளிந்தே பரிசுத் தாவி
வரத்திற் கதித்தும் விளங்கச் செய்யும்
வகையி னானைக் காண்க வலந்தேன்.

5. படிகப் பச்சை நிறனே! யன்பார்
பார்வை நயனா? மேகக் கரனே!
இடிக ளனைய வகித ருடனே[4]
இயம்பு வசனா! தவறா விதியா!
குடிக ளரசர் நீதி தழைக்கக்
கூறும் வளங்க ளீட்டுந் தலைவா!

அடிக டலைகொண் டுருகிப்[5] பணிய
ஐயா! வெளியேன் காண்க வலந்தேன்.

6. ஒட்டா தெங்கும் நிறைந்த பொருளே!
வுண்ட வெவர்க்கு மடுத்த தெருளே![6]
கெட்டா ருய்தற் கெழுந்த குருவே!
கீறு முளக்கண் ணுறைந்தா ளருவே!
முட்டா வரமீட் டுயர்நிர் மலனே!
மோசு மறுக்குஞ் செபத்தின் பலனே!
தட்டா மார்க்கந் திறந்த தேவா!
தமியே னாளுங்[7] காண்க வலந்தேன்.

7. வஞ்ச மனுகா மனத்தி னானை
மண்ணோர் வாழுங் கருத்தி னானை
தஞ்ச மென்றோர் பங்கி னானைச்
சருவ நன்மைக் கரத்தி னானை
கிஞ்ச ருயர்மா வரத்தி னானைக்
கெட்ட பவநா சஞ்செய் வானை
நெஞ்ச முருகிக் கவிந்து போற்ற
நீளன் புடனே காண்க வலந்தேன்.

8. இருளைச் சமுக வொளியால் விலக்கும்
ஈச னையென் பாச னைமா
அருளை நாடு மெவர்க்குங் கொடுக்கும்
அரிய விரக்க வுருக்கத் தானை
தெருளை வேத வசனங் கொண்டே
சிறக்க வருத்தும் போத நலனை
மருளை யகற்றும் ஞான பரனை
மனதக் களிக்கக்[8] காண்க வலந்தேன்.

9. வேண்டு மரிய வுசித வுதவி
மிகுந்த கிருபைப் பெருக்கா லீட்டி
மாண்டு போகுந் தருணம் வரினும்
மனதைத் திடத்திப்[9] பாச மறுத்துத்
தாண்டு பால மாகித் தேற்றிச்
சமஸ்த வாழ்வுந் ததும்பு விண்ணும்
ஆண்டு களிக்கு மருமைத் தேவ
அடிக ளின்றே காண்க வலந்தேன்.

10. *சீறி யெழுந்த கடிது ரெண்ணம்*[10]

தீய்த்து விண்போய் வருமா வேந்தை

மாறி லாமாக் கருணை வெள்ளம்

மடுப்பித் தகத்தின்[11] றாபந்[12] தணித்தே

ஈறி லாநல் வளங்க ளருளும்

எங்கள் குலத்தின் கொழுந்தை யிடையில்

பாறி லாத[13] விமையா நோக்கால்

பார்த்தே மகிழ வெளியே னலந்தேன்.

1. ஒளிர்கின்ற; 2. அருவமான வடிவாய்; 3. திறமாகப் பற்றி; 'திறம்' என்பது எதுகை நோக்கிச் 'திரம்' என ஆளப்பட்டுள்ளது; 4. வானோருடன்; 5. அடிகள்+தலை+கொண்டு+உருகி; 6. ஒளியே; 7. தமியேன்+நாளும்; 8. மனது+அக்களிக்க; 9. திடப்படுத்தி; 10. கடி+துர்+எண்ணம்; 11. மடுப்பித்து+அகத்தின்; 12. தாகம்; 13. பாறு+இலாத=குறைவில்லாத.

14. கனவு

[இறுதி நாளில் நடைபெறும் தீர்ப்பினைக் கனவில் காண்பதாக இப்பகுதி அமைந்துள்ளதால் 'கனவு' எனப் பெயர் பெற்றுள்ளது.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. *நீங்காச் சிந்தை யுடையவளாய்*

நிலைநிலா வுலகைக் குப்பையாயெண்ணி

தூங்காமற் றூங்கி யிருக்கையில்யான்

சொல்லற் கரியவோர் கனவுகண்டேன்

2. நீர்நிலை வற்றிச் சுவறிப்போனது

நீலவான் மீன்கள் தரைவீழ்ந்தன

பார்நிலை யாவும் குழப்பமாயின

பாங்கீ யிதென்னவோர் கனவுகண்டேன்

3. ஆட்சி யரண்மனை மாடகூடம்

அம்பலஞ் சத்திர மாஸ்தானங்கள்

சூட்சி யிதென்னே நீர்க்குமிழிபோல்

சுறுக்கா யழிந்திடவோர் கனவுகண்டேன்

4. வான சத்துவங்க ளசைவுற்றன
வாகான பூதியங்கள்[1] வெந்துருகின
கான மிதிற்காண்கப்[2] பட்டனவெல்லாம்
காண்கா தொழியவோர் கனவு கண்டேன்

5. மேலோ கினின்றொரு விராஜன்வந்தார்[3]
விள்ளுதற் கிலைவாக் கவர்மகிமையை
பூலோ கிலிவர்முன்னாள் பாடுபட்டாராம்
பூவை யீர்! நானொரு கனவுகண்டேன்

6. மூன்று மகிமை துலங்கவெழுந்தார்
முன்மாண் டயாவரையு முயிர்த்தெழுப்பினார்
சான்று திரளாக முன்னிறுத்தி
தக்கவி சாரணைசெயக் கனவுகண்டேன்

7. புத்தக மைந்து திறக்கப்பட்டது
புலம்பின ரிருளின் கூட்டத்தாரெலாம்
மத்தகர்[4] போலே யங்குமிங்கும்
மறிந்தனர் பலரிதோர் கனவுகண்டேன்

8. ஜீவ புஸ்தகத்தி லில்லா நாமர்
தீக்கிடங்[5] கேகவும் மற்றவர்கள்
மேவ லாகினா ரின்பவீடு
விரும்பிக் கேளிதோர் கனவுகண்டேன்

9. தூய வரசரியே சுகிறிஸ்துவோடு
சொல்லரு மானந்தந் துய்த்தார்பத்தர்
நேய மிழந்தமற்றோர் யாதனைப்பட்டார்[6]
நினைக்க நடுங்கிதோர்[7] கனவுகண்டேன்

10. என்சொல் வேனா னென்றோழி[8]
எளியா ளுமின்ப வீட்டிலானேன்
பன்னற் கரியகி ருபையல்போ
பாடினேன் புதுக்கவி விழித்துக் கொண்டேன்.

1. செல்வங்கள்; 2. காண்; 3. மேலுலகிலிருந்து ஒர் அரசர் வந்தார்; 4. பைத்தியங்கள்; 5. தீக்குழி; 6. வேதனைப்பட்டார்; 7. நடுங்கியதோர்; யகரம் இடைக்குறையாக ஆளப்பட்டுள்ளது. 8. என் தோழி.

15. அக்கைச்சி

[தன்னிலும் மூத்த உடன்பிறந்தாளை அக்கா, அக்காள், அக்கைச்சி ஆகிய சொற்களால் அழைப்பர். இவற்றுள் அக்கைச்சி என்னும் சொல் 'தங்கச்சி' என்னும் சொல்லை நோக்கி ஒப்புமை யாக்கத்தால் ஏற்பட்டதாகலாம்.

ஒரு பெண், எளியளாகிய தன்னை இறைவன் ஆட்கொண்டருளிய செயலை 'அக்கச்சி' என விளித்து அவளிடம் கூறுவதுபோல் இப்பதிகம் அமைந்திருத்தலின் 'அக்கைச்சி' எனத் தலைப்பிடப்பட்டிருக்கிறது.

தலைப்பினருகில் எசே. 16 — 8 என்னும் எண் குறிப்புக் காணப்படுகிறது. அதுகொண்டு, ''அவ்வழியாய்க் கடந்துபோன நாமோ உன்னருகில் வந்து, 'நீ பருவ மங்கையாய் இருப்பதைக்கண்டு நமது ஆடையை உன்மேல் விரித்து, நிருவாணத்தை மூடினோம்; பிறகு உனக்கு நாம் ஆணையிட்டு உன்னுடன் உடன்படிக்கை செய்தோம். நீயோ நம்முடையவள் ஆனாய்' என்கிறார் ஆண்டவராகிய இறைவன்'' என்னும் பழைய ஏற்பாட்டுப் பகுதியே இப்பதிகத்தின் கருப்பொருள் என உணரலாம்].

குறள் வெண் செந்துறை

1. கன்னிப்பருவ முடையவளாய்க்
 கந்தை பொதிந்து வழிகிடந்தேன்
 மன்னிச்[1] சுடருமோர் பேரழகன்
 வந்தென்னை எழுப்பினன் கேளக்கைச்சி.

2. பார்த்தால் நீயொரு கன்னியானால்
 பகரழ கந்தஸ்தாதி[2] யொன்றுமில்லை
 சேர்த்தால் சீராக வாழுவாயா?
 செப்பெனக்[3] கேட்டனன் கேளக்கைச்சி.

3. நாண மிருந்தாலும் பருவகால
 நாட்ட மிருந்ததா லோமென்றென்[4]
 மாண மிகுபெரியோன் தனக்கிசைய
 மாற்றினா னென்னுருவங் கேளக்கைச்சி.

4. விரும்பத் தக்க ரூபமானேன்[5]
 மேனிநற் கந்தம்[6] வீசலானேன்

திரும்ப ஒர்வெண்பட் டாடையளித்துச்
சிங்காரித்தான் கலனாற்[6] கேளக்கைச்சி.

5. தனக்குநா னுரியா ளெனச்சொலிக்கும்
தகுந்த முத்திரையுந் தரிப்பித்து[8]
மனக்கு நிரம்ப மகிழ்ச்சிதந்தான்
வாக்கிலையவ் வின்புரைக்கக்[9] கேளக்கைச்சி.

6. பூலோக வின்பனைத்தும்[10] பொய்யற்பம்
பொருந்த வேண்டாமவை யெனப்போதித்தே
மேலோக வின்பவி நோதம்செய்தான்
விசேஷம் என்ன! ஆ! கேளக்கைச்சி.

7. என்னை முழுதுந் தனக்குள்ளாக்கி
இன்பத்தால் நான்மகிழ்ந்து கெம்பீரிக்க[11]
தன்னை முழுது மெனக்களித்தான்
சற்றும்விட்டு நீங்கவில்லை கேளக்கைச்சி.

8. பாதாதி கேசாந்தம்[12] புளகாங்கிதம்
பற்றுது பிராணேச னன்பைக்கூற
வாதாதி தோஷமின்றி யெஞ்ஞான்றும்
மகிழ்ச்சி யளிக்கின்றான் கேளக்கைச்சி.

9. ஏது மில்லாத வெளியாளுக்
கெல்லையின் றியிகபர செல்வமளித்தான்
கோது[13] மறத்துடைத் துக்[14] காக்கின்றான்
கெர்ற்றவன் மிகுநாமங் கேளக்கைச்சி.

10. குன்றா வாசவி யேசுகிறிஸ்து
கொடுத்தரட் சணியப் பேரானந்தம்
பொன்றா தொருபோதும் நித்தியவீடு
பொருந்தி வாழ்வேனான்[16] கேளக்கைச்சி.

1. விரும்பி; 2. பகர்+அழகு+அந்தஸ்து+ஆதி; 3. சொல்லென்று;
4. 'ஆம்' என்றேன்; 5. வடிவமானேன்; 6. நறுமணம்;
7. அணிகலனால்; 8. அணிவித்து; 9. அவ்+இன்பு+உரைக்க = அந்த இன்பத்தைக் கூற; 10. இன்பு+அனைத்தும்;
11. புத்துணர்ச்சிபெற; 12. பாதம்+ஆதி+கேசம்+அந்தம் = அடி முதல் முடி வரை; 13. குற்றம்; 14. அறவே நீக்கி;
5. குறையா மணமுடைய; 16. வாழ்வேன் நான்.

16. காதல்

[தலைப்பின் அருகில், உன். 1;4 என எண் குறிப்பு உள்ளதால் உன்னத சங்கீதத்தின் 1, 4 ஆகிய பகுதிகளே இத்தலைப்பின்கீழ் உள்ள பாடல்களின் கருப்பொருள் எனத் தெரிகிறது.

தனக்கும் இயேசு பெருமானுக்குமிடையே உள்ள தெய்வீகக் காதலை ஒரு பெண் புலப்படுத்துவதாய் இப்பகுதிப் பாடல்கள் அமைந்துள்ளன].

குறள்வெண் செந்துறை

1. பெருங்காதல் கொண்டேனே னம்மே-யென்னைப்
பேணவிகந்[1] தேடிவந்த பெருமான் பொன்னடிக்குப்
பெருங்காதல் கொண்டேனே னம்மே.

2. பூலோக மநித்திய மம்மே-யென்னைப்
புண்ணியப்படுத்தவந்த பூமானே நித்தியம்
பூலோக மநித்திய மம்மே.

3. கட்டழக னியேசுதுரை யம்மே-யென்னைக்
கடைவிழி நோக்காலே கவரநான் சோகமுற்றேன்
கட்டழக னியேசுதுரை யம்மே.

4. சொல்லவாக் கில்லைகா ணம்மே-கிறிஸ்து
சுந்தரன் றிருவழகைச் சுகுணந்தூய் செயலைச்
சொல்லவாக் கில்லைகா ணம்மே.

5. ஆச்சரிய வன்பன்கா ணம்மே - உலகம்
அனைத்துமே வாழத்தன் னாருயிர்த்தி யாகமிட்டான்
ஆச்சரிய வன்பன்கா ணம்மே.

6. எக்காலு மெங்கணு மம்மே - யென்னை
ஈடேற்றும் மீட்பனைக்கண் ணேறெடுத் தொளிருவேன்
எக்காலு மெங்கணு மம்மே.

7. சொன்னசொற் றவறா னம்மே - வேதந்
துலங்குமெய் வாக்குத்தத்தம் துல்லிபம் நம்புகின்றேன்
சொன்னசொற் றவறா னம்மே.

8. எட்டாத தீங்கரும்ப னம்மே[2] - என்மேல்
இரங்கியடுத் துவந்திதயத் திதிப்பானான்
எட்டாத தீங்கரும்ப னம்மே.

9. விலையேறு மாணிமுத்த[3] னம்மே - எளியவென்
மிடிதீர இலவசமாய் மேவினன்வாழ் வானேன்
விலையேறு மாணிமுத்த னம்மே.

10. தெய்வீக திரவிய னம்மே - விசுவாசத்
தேட்டத்தால் கண்டடைந்தேன் செல்வத்தால்
வாழ்வடைந்தேன்
தெய்வீக திரவிய னம்மே.

1. இவ்வுலகம்; 2. தீம்+கரும்பன்+அம்மே; 3. விலையேறும்+ஆணிமுத்தன்.

17. வரவு வழுத்தல்

[தலைப்பின் அருகில் யூதா 14-15 என்னும் எண் குறிப்பு உள்ளது. ஆதலின், ''இதோ ஆண்டவர் எல்லாருக்கும் தீர்ப்பிட எண்ணற்ற தம் தூதர்களோடு வந்தார். இறைப்பற்றில்லாதவர்களுக்காகவும், பாவிகள் தமக்கு எதிராகப் பேசிய ஆணவச் சொற்களுக்காகவும் அவர்களைக் கண்டிக்க வந்தார் ''என்னும் விவிலியப் பகுதியே இப்பாடல்களுக்கு அடிப்படையாகும்.

இறைவன் வரவைக் கூறி அவரை வரவேற்க ஆயத்தமாகுமாறு இப்பாடல்களில் கவிஞர் இறைமக்களை வேண்டுகிறார்].

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஆத்தும புரிநகரை யலங்காரஞ் செய்யுமேடோ
அகத்தின் வீதியெலா மன்புக்கொடி கட்டுமேடோ
பூத்தும ணக்குங்குணப் பூஞ்செடிக ணாட்டு[1] மேடோ
பொன்னுலக மஹாராஜன் புறப்பட்டு வருகின்றான்.

2. மனத்தி ருத்திக்கும்பம் வழிநெடுக வையுமேடோ
வாழ்வி னம்பிக்கையான வாழைமரம் நாட்டுமேடோ

சனத்தி ருத்திதருஞ் சமாதானங் கட்டுமேடோ
தற்பரனாம் மஹாராஜன் தாரணிக்கு வருகின்றான்.

3. மெய்யான விசுவாச விளக்கெங்கு மேற்றுமேடோ
விழிப்போடு ஜெபம்புரிந்து மேனாக்கி நீல்லுமேடோ
பொய்யான வேஷபத்தி போக்கடித்துப் போகுமேடோ
புவிபுரந்த மஹாராஜன் பூமியாள வருகின்றான்.

4. நம்பிக்கைத் தோரணங்க ணாற்றிசையும் நாட்டுமேடோ
நாக்கடுப்பால்[2] வாய்ப்பறையை நன்கொலிக்க வோச்சுமேடோ
வெம்பிக்கை[3] வேகாமல் வீண்வேலை நீக்குமேடோ
மேலோக மஹாராஜன் மேதினிக்கு வருகின்றான்.

5. சத்திய வேதகானஞ் சந்திதொறும் பாடுமேடோ
கற்போத வெக்காளஞ் சலியாம லூதுமேடோ
நித்திய துதிமுழக்க நிதப்பழக்கஞ் செய்யுமேடோ
நிருமல மஹாராஜன் நேமியாள வருகின்றான்.

6. அரிதான சிலுவையன்பை ஆனந்தமாய் நினையுமேடோ
அவ்வன்பா லேவல்பெற்றே ஆயத்தங்கள் செய்யுமேடோ
பெரிதான விரட்சையிட்ட[4] பெருங்கருணை யெண்ணுமேடோ
பிரபல மஹாராஜன் பேணுதர வருகின்றான்.

7. தலைகளை மேலாகச் சந்தோஷமா யுயர்த்துமேடோ
சாத்தானுக் கஞ்சாமற் றக்கதலம் நில்லுமேடோ
வலைகளைத் தாண்டியோடி வரவுபார்த் திருமேடோ
மாசறுக்கும் மஹாராஜன் மகிமையுடன் வருகின்றான்.

8. எப்போது மியேசுநாம சங்கீர்த்தன மியம்புமேடோ
இன்பமண வறைவாழ்க்கை யெய்துநலந் தேடுமேடோ
தப்போதுந் திருட்டலகைத்[5] தந்திரங்கள் வெல்லுமேடோ
சத்திய மஹாராஜன் சடுதியிதோ வருகின்றான்.

9. விருந்து மண்டபத்தை வெகுவிதானஞ் செய்யுமேடோ
விளங்குதிரு முத்திரையை மேலாக வையுமேடோ
திருந்து மிருதயமாங் காட்சிப்பொருள் சேருமேடோ
சீமைக்கெலாம் மஹாராஜன் தீவிரமாய் வருகின்றான்.

10. ஆகு மயராம லாயத்தமா யிருங்களேடோ
ஐயன்வரு மாரவார மவனியெங்குங் கேட்குதேடோ
தேருஞ் சுவிசேடத் திருவுரைக ளியாவுமேடோ
தேவமைந்த மஹாராஜன் ஜெயகோலமாய் வருகின்றான்.

1. செடிகள் + நாட்டும் + ஏடா!; 2. நாவாகிய பிரம்பால்;
3. கைவெம்பி = கை வெப்பமடைந்து; 4. மீட்பினைத் தந்த 5. பேய்.

18. சுதந்தரன்

[''விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும்" எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது'' என்னும் நற்செய்திப் பகுதியே இத்தலைப்பின் உட்பொருள் என்பதனை அதனருகில் உள்ள மத். 28-18 என்னும் எண் குறிப்புப் புலப்படுத்துகிறது.

இருபது பாடல்களைக் கொண்ட இப்பகுதியில் ஒவ்வோர் அடியும் 'சுதந்தரன்' என முடிகிறது. உலகில் முழு உரிமை பெற்றவர் இறைமகன் இயேசு ஒருவரே என உணர்த்துகிறது.]

இரட்டைக் குறள்வெண் செந்துறை

1. ஆதி காரண னான சுதந்தரன்
அகில லோக மடக்குஞ் சுதந்தரன்
நீதி நல்கும் நிறைந்த சுதந்தரன்
நின்ம லவவ தார சுதந்தரன்.

2. என்னை வாழ்விக்க நாடு சுதந்தரன்
என்னு ருவெடுத் துற்ற சுதந்தரன்
தன்னை மாபெலி யாக்குஞ் சுதந்தரன்
சற்கு ருவவ தார சுதந்தரன்.

3. தேவ னாகவிண் வீற்றாள்[1] சுதந்தரன்
தேடி வந்தெமைச் சேர்த்த சுதந்தரன்
ஜீவன் மெய்வழி யான சுதந்தரன்
சீர்த ருமவதார சுதந்தரன்.

4, தீய பாவமன் னிக்குஞ் சுதந்தரன்
ஜீவியத் தூய்மை யீயுஞ் சுதந்தரன்
நேயமுற் றும்பா ராட்டுஞ் சுதந்தரன்
நீசம் போக்கவ தார சுதந்தரன்.

5. ஒருவ னாயெங்கு மாளுஞ் சுதந்தரன்
உலக தேவர்க்குந் தீர்ப்பிடுஞ் சுதந்தரன்
சருவ வியாபக வல்லப சுதந்தரன்
தாங்கி யாளவ தார சுதந்தரன்

6. ஞானம் யாவு முடைய சுதந்தரன்
நற்கு ண நதி பாய்ச்சுஞ் சுதந்தரன்
ஊனந் தீய்த்தே யுரஞ்செய் சுதந்தரன்
உலகுய் யும்மவ தார சுதந்தரன்.

7. பாவி யைக்கரை யேற்றுஞ் சுதந்தரன்
பயந்தருஞ் சாவை வெல்லுஞ் சுதந்தரன்
மாவி சித்திர மறையின் சுதந்தரன்
மானி லவவ தார சுதந்தரன்.

8. யேசு வென்றிரு நாம சுதந்தரன்
இம்மா னுவேலென் றியம்பு சுதந்தரன்
தேசு லாவிய மோக்ஷ சுதந்தரன்
தீவை கொல்லவ தார சுதந்தரன்.

9. நித்தி யத்துவங் கொண்ட சுதந்தரன்
நேமி யன்பர்கள் மேவுஞ் சுதந்தரன்
துத்தி யம்மெலா மேற்குஞ் சுதந்தரன்
சொல்ல ருமவ தார சுதந்தரன்.

10. முத்தொ ழிற்றேவ னான சுதந்தரன்
மூவ ரோருரு வான சுதந்தரன்
முத்தொ ழின்மத்தி யஸ்த சுதந்தரன்
முத்தி நல்கவ தார சுதந்தரன்.

11. வேத பாரகர் மலைக்குஞ் சுதந்தரன்
மிடைந்து பரிசேயர் திகைக்குஞ் சுதந்தரன்
பேத சதுசேயர் பிரமிக்குஞ் சுதந்தரன்
பேசரும்மவ[2] தார சுதந்தரன்.

12. ஆயக் காரரை யேற்குஞ் சுதந்தரன்
அசுத்தப் பவிகளை[3] யாளாக்குஞ் சுதந்தரன்
மாயக் காரரைக் கண்டிக்குஞ் சுதந்தரன்
மகத்து வத்தவ தார சுதந்தரன்.

13. ஆபி ராமெதிர் பார்த்த சுதந்தரன்
அரிய மோசே யுரைத்த சுதந்தரன்
தாபித் தேதீர்க்கர்[4] சாற்றிய சுதந்தரன்
தக்க நல்லவ தார சுதந்தரன்.

14. தாவி தாதிபன்[5] வம்ச சுதந்தரன்
தைய லேவை[6] வித் தான சுதந்தரன்
மாவி சேட மகிமைச் சுதந்தரன்
மாத யாவவ தார சுதந்தரன்.

15. நீதி மாந்தர்க்குண் டாக்குஞ் சுதந்தரன்
நெருங்கு மெவரையும் புரக்குஞ் சுதந்தரன்
வாதி[7] வன்சிர கதைக்குஞ் சுதந்தரன்
வைய மீளவ தார சுதந்தரன்.

16. ஜீவ காரண னான சுதந்தரன்
தீய வுள்ளஞ் சீர்செய்யுஞ் சுதந்தரன்
சாவ தைவென்று யிர்க்குஞ் சுதந்தரன்
சாவ புண்யாவ தார சுதந்தரன்.

17. விக்கி ரகங்களை நசிக்குஞ் சுதந்தரன்
மெய்நம் பிக்கை விளைக்குஞ் சுதந்தரன்
அக்கி ரமமெலா மழிக்குஞ் சுதந்தரன்
ஆனந் தவவ தார சுதந்தரன்.

18. எங்குஞ் செங்கோ லியற்றுஞ் சுதந்தரன்
எத்தே வருந்தந்[8] தாளுஞ் சுதந்தரன்
பொங்குந் துடுக்கரை யடக்குஞ் சுதந்தரன்
பூமி வாழவ தார சுதந்தரன்.

19. இருத யங்களை ரமிப்பிக்குஞ்[9] சுதந்தரன்
எல்லாத் துக்கமு மொழிக்குஞ் சுதந்தரன்
பொருத நில்வேட்கை போக்குஞ் சுதந்தரன்
புலையை மாற்றவ தார சுதந்தரன்.

20. வாசா மகோசர னான சுதந்தரன்
மன்னு சுவிசேஷம் விளக்குஞ் சுதந்தரன்
தாசா ளின்புறும்[10] புண்யமீ[11] சுதந்தரன்
சத்தி யவவ தார சுதந்தரன்.

1. விண்ணிலிருந்து ஆள்கின்ற; 2. பேசரும்+அவதார "பேசருமவதார' என வர வேண்டியது செய்யுளுக்காக விரித்தல் விகாரம் பெற்று 'பேசரும்மவதார' என ஆளப்பட்டுள்ளது; 3. 'பாவிகளை' என்பது பவிகளை எனக் குறுக்கல் விகாரமாய் வந்துள்ளது; 4. தீர்க்கதரிசிகள்; 5. தாவிது+அதிபன்; 6. ஏவாளின் விதையான; 7. பேய்; 8. எத்தேவரையும் வெற்றி கொள்ளும்; 9. நிரப்பும்; 10. அடியாள் இன்பமடையும்; 11. புண்ணியத்தை வழங்குகின்ற.

19. பெருமான்

[பாடலின் ஒவ்வோர் அடியும் பெருமாள் என முடியுமாறு இருபது பாடல்கள் இத்தலைப்பில் அடங்கியுள்ளன. தலைப்பின் அருகில் உரோ. 1.5 என்னும் எண் குறிப்புக் காணப்படுகிறது. அனைத்தும் இறைவனே என்பது இப்பகுதியின் உட்பொருள். வைணவர் தம் மூலமுதல்வனைப் பெருமாள் என அழைப்பது போலச் சுட்டிக் கூறுவது சிந்தனைக்குரியது.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. அண்டமெலா மாக்கிய வநாதிமூலப் பெருமாள்
ஆறுலக்ஷ ணங்களமை யானந்தப் பெருமாள்
கண்டமெலாந் தெண்டனிடுங்[1] காருணியப் பெருமாள்
கதிவழி காட்டியேசு கர்த்தனேநம் பெருமாள்.

2. எண்ணிலா மூன்றுவர்க்க மீன்றளித்த பெருமாள்
எழும்புங் கடலலைகட் கெல்லையிட்ட பெருமாள்
கண்ணிலா தவர்க்குநாற் கண்கொடுத்த[2] பெருமாள்
கணக்கரு மன்பிலங்குங் கடவுளேநம் பெருமாள்.

3. காலசக் கரத்தைக் கைக்கமைத்த பெருமான்
கானவி நோதமெலாங் கண்டுவைத்த பெருமாள்

ஞாலசக் கரத்தங் காணாட்டிய[3] பெருமாள்
நன்மைவடி வானவரே நம்முடைய பெருமாள்.

4. தந்தானைத் தனைத்தானார்[4] சாசுவத[5] பெருமாள்
சந்தோ ஷபூரணந் தங்கிய பெருமாள்
வந்தானைத் தள்ளாத மாவிரக்கப் பெருமாள்
மனுடாவ தாரியாய் வந்தவர்நம் பெருமாள்.

5. உள்ளன்பு நிறைந்த வுன்னத பெருமாள்
ஒருவர் நிகரோதற் கொண்ணாத பெருமாள்
கள்ளன்பு வெறுக்குங் கனதுதிப் பெருமாள்
கண்டடியர் கலியகலுங்[6] கர்த்தனேநம் பெருமாள்.

6. பக்திக்கு வித்தான பரமகதிப் பெருமாள்
பரலோகஞ் சேரும்வழி பற்றியமெய்ப் பெருமாள்
தித்திக்கும் மெய்வேதத் தேனூட்டும் பெருமாள்
தேடிவந் தெமைப்புரந்த தேவனே நம் பெருமாள்.

7. இருநீதி சவதரித்த[7] வீசுரப் பெருமான்
ஏழைகளை மறக்காத விரக்கமிகும் பெருமாள்
தருநீதி வெண்ணாடை தட்டிலாத பெருமாள்
தலைகளெல் லாம்பணியத் தக்கவர்நம் பெருமாள்.

8. எட்டாத சீர்செய விலங்கிய பெருமாள்
ஈடணி வெலநல[8] வேந்தலளி[9] பெருமாள்
கட்டாத வன்மனமா கட்டியாகும் பெருமாள்
கற்பிதத்தார்[10] கண்டுசொலற் கரியனேநம் பெருமாள்.

9. ஒன்றுமூன் றாகியே யொன்றான பெருமாள்
ஓதுசுய வுத்தியுத்திக் குணர்வரிய பெருமாள்
சென்றுமூன் றாந்தினஞ் சீவித்த[11] பெருமாள்
செப்பரிய வாச்சாரிய சித்தனேநம் பெருமாள்.

10. நரனாகப் பூதலத்தி னலம்புரிந்த பெருமாள்
நல்லவராய்த் தீயவரை நன்றாக்கும் பெருமாள்
பரனாக வியாபகத்திற் பரந்திலங்கும் பெருமாள்
பத்திநெறிக் கொத்தாசை பண்ணுவர்நம் பெருமாள்.

11. தீயமனஞ் சுத்திசெயுந் திருச்சோரிப்[12] பெருமாள்
சித்தாந்த வேதாந்தத் தெளிவான பெருமாள்
தூயமன மாவியினாற் றொண்டர்க்கிடும் பெருமாள்
சுவிசேஷத் திருஞானக் களஞ்சியம்நம் பெருமாள்.

12. என்னவந்தும் நம்பினரை யிடரில்விடாப் பெருமாள்
எனைத்தேடி மீண்டுகொண்டா ஸியேசுமகா பெருமாள்
கன்னவந்து கடிநெருங்கிற் கலைத்துவிடும் பெருமாள்
கன்மஷநோ[13] யறத்துடைக்குங் கரனேநம் பெருமாள்.

13. சோதனையை வென்றுயநற் றுணைநிற்கும் பெருமாள்
தூயசீவி யஞ்சிறக்கச் சூட்சிக்கு[14] மெம் பெருமாள்
வேதனையை நம்பினர்க்கு விலக்கியாளும் பெருமாள்
வெளித்துற விவேடபத்தி விரும்பார்நம் பெருமாள்.

14. பொன்னடியென் றலைபதித்த புண்ணியப் பெருமாள்
பூலோகப் பற்றறுத்த புகழ்சுடரும் பெருமாள்
தன்னடி கீட்டினம்[15]நான் றங்கவருள் பெருமாள்
சாகாத வாழ்வருளுந் தந்தையேநம் பெருமாள்.

15. எத்தனை பவிகளையோ[16] யீடேற்றிய பெருமாள்
ஈனமத வூனமற வீட்டருளின் பெருமாள்
இத்தனை யெனற்கரிய வின்பமூட்டும் பெருமாள்
ஏவைமக்க டீதொழித்த[17] வீசனேநம் பெருமாள்.

16. சத்திய வழிநடக்கத் தற்காக்கும் பெருமாள்
சகலவித விடறல்களுந் தவிர்த்தாளும் பெருமாள்
நித்திய ஜீவனிலே நிலைநிறுத்தும் பெருமாள்
நிர்மல நிராமய[18] நேயனேநம் பெருமாள்.

17. அடைக்கல ஸ்தாபன அருமைநிறை பெருமாள்
யாரையும் வருகவென வழைத்தாளும் பெருமாள்
படைக்கல மீந்துபவப் படையழிக்கும் பெருமாள்
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்நம் பெருமாள்.

18 முந்தியவர் சகலத்துக்கும் மூலமான பெருமாள்
மோசகடி வன்சிறகை முறித்தெறிந்த பெருமாள்
பிந்தியவ ரனைத்தொழிந்தும் பேதமில்லாப் பெருமாள்
பேசரிய மகிமைசுடர் பிரானேநம் பெருமாள்.

19. வேதாந்த வவதார மெஞ்ஞானப் பெருமாள்
மேதினிவன் னிருளகல விளங்கிரவிப்[19] பெருமாள்
போதாந்த மாரிபொழி புகழுடைய பெருமாள்
பொய்மறைதாக் கிடரறுக்கும்[20] பொன்வா
ணம்பெருமாய்.

20. வல்லமையா யிஸரலரை வழிகாத்த பெருமாள்
வலுபார்வோ னாதியரை மாய்த்தொழித்த பெருமாள்
சொல்லமையாத் துணிகரற்குத்[21] தொல்லையிடும் பெருமாள்
தோத்திரங்க ணிதமேற்குந்[22] தூயனேநம் பெருமாள்.

1. வணங்கும்; 2. விசுவாசம், நம்பிக்கை, அன்பு, பரிசுத்தம்;
3. தம்+கால்+நாட்டிய; 4. தந்தை மகன் தூயஆவி என மூவொரு இறைவனாகிய; 5. நிலையான; 6. துன்பமகலும்;
7. உண்டாக்கிய; 8. சுடணை = வலியரை; 9. ஏந்தல்+அளி;
10. கற்றவர்; 11. உயிர்த்த; 12. திருஇரத்தம்; 13. பிறவிப் பாவம்; 14. ஆலோசிக்கும்; 15. கிட்டிய; 16. பாவிகள் என்பது குறுக்கல் விகாரம் பெற்று 'பவிகள்' என ஆனது; 17. மக்கள்+ தீதொழித்த; 18. நோயிலாத; 19. விளங்குகின்ற கதிரவனாகிய;
20. தாக்கி+இடர்+அறுக்கும்; 21. துணிவுடையோர்க்கு;
22. தோத்திரங்கள்+நிதம்+ஏற்கும்.

20. தேவ வல்லபம்

[தலைப்பின் அருகில் மத். 19-6 எனக்காணப்படும் எண் குறிப்பினைக் கொண்டு, 'தேவனால் எல்லாம் முடியும்' என்பதே இப்பகுதிப் பாடல்களின் உட்பொருள் என்று அறியலாம்.

ஒவ்வொரு பாடலின் இறுதி வரியும், எல்லாம் வல்ல இயேசு தேவனைத் தவிர மற்றவரால் செய்ய இயலுமோ? என வினவுவது போன்று முடிவுறுகிறது.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. பூரண திருமொழி புகன்றுல கனைத்தையும் பூக்கச்
செய்தாளவும்
புடைத்தெழும் பவ்விட[1] மிறக்கிடத் திருச்சோரி புண்யம
ருந்தாக்கவும்

ஆரண வமுதூட் டியாவியின் வளர்ச்சி யையதி கரிப்பிக்கவும்
அவதார மானயேசு தேவனை யல்லால்வே றாருக்குஞ்
செய்யலாமோ?

2. மாறாத விருநீதி சம்பாத்தியஞ் செய்துவ ழங்கிமாந்
தரைமீட்கவும்
மலரடி சரண்புகு வோரைக் கடைக்கணித்து மனம்புதிப்
பித்திலக்கவும்
ஆறாத வுளமெலாஞ் சத்தியத் தாற்றெளி வாக்கிக்
கலிபோக்கவும்
அமருமுத் தொழில்யேசு தேவனை யல்லால்வே
றாருக்குஞ் செய்யலாமோ?

3. சுந்தர நல்லொழுக்கம் வளர்விசு வாசத்தை துவக்கி
முடித்திடவும்
சுயநீதிப் பித்தகலப் பிரமாண மலையேறி சுய்வுணர்ச்
சிகளாக்கவும்
அந்தர மேலமு தத்திலுயர் பவன மன்பர்[2] களுக்காக்கவும்
அமரர்கொண் டாடும்யேசு தேவனை யல்லால்வே
றாருக்குஞ் செய்யலாமோ?

4. கூறிய புலனைந்தும் பொறியைந்தின் வழியிலேகு
மண்டைசெய் யாதாக்கவும்
குரைகட லெனவெழு முவத்திர வங்களைக் குலைகலங்
காதாக்கவும்
ஆறிய விருதய சமாதான பெருக்க மருளி மகிழூட்டவும்
ஆனந்த நாடரியேசு[3] தேவனை யல்லால்வே
றாருக்குஞ் செய்யலாமோ?

5. சஞ்சலக் கொளும்ம னதினுக் காறுதற் றைலம் பூசிடவும்

தலைசுழற் றெனில்வீண் கவலைக ளனைத்தையுந்
தணித்து நன்கீட்டவும்
அஞ்ச லளிபரா வெனுமெ வருக்கும பயஸ்த[4] மீந்திடவும்
ஐங்கா யயேசு தேவனை யல்லால்வே றாருக்குஞ்
செய்யலாமோ?

6. பத்திப் பயிரெலாம் பலன்றர வருண்மழை பக்குவத் தேவிடவும்
பாவிகள் மனந்திரும் பிக்குணப் படவேபன் முயற்சி
கள்செய்யவும்

அத்திமு தலெறும் பீறான வுயிர்க்கெலா மாகா ரம்மீயவும்[5]
அகிலமே லானயேசு தேவனை யல்லரல்வே றாருக்குஞ்
செய்யலாமோ?

7. கோடாம லிலக்கை[6] யேதினம் நோக்கி குதுகலத்
தோடோட்டவும்
கூளிசெய்[7] தந்திர விடறலை[8] விளக்கிக் கொடுத்துக்
கடப்பிக்கவும்
ஆடாம லந்தக்க கரணஞ் சிலுவையிலமைந்து துலங்கிடவும்
அன்பு ருயேசு தேவனை யல்லால்வே றாருக்குஞ்
செய்யலாமோ?

8. வீட்டுப் பவுரிஷு[9] மேவு மளவும் மேதினி தனினாளும்[10]
மெலிவற வெந்நிலை[11] தனிலும் மனரம்மியம் விருத்தி
யாக்கிடவும்
ஆட்டுக் காலுந்துதி பாட்டுவாய் தொழுங்கை யாக்கிச்செழிப்
பித்திடவும்
அற்புதயேசு தேவனை யல்லால்வேறா ருக்குஞ்
செய்யலாமோ?

9. நில்லா வுலகைச் சதமெனல் நீக்கி நித்தியஜீ வன்னாடவும்[12]
நிலவிய தேவை யானவொன் றையே நிறைவு
டன்றேடவும்[13]
அல்லா தரியதெவை யோவ வையெலா மருளி னாலாக்கவும்[14]
அகில பதியேசு தேவனை யல்லால்வேறா ருக்குஞ்
செய்யலாமோ?

10. இருண்ட பன்மத மெல்லா மொழியவோ ரெழிற்சம
யம்நாட்டவும்
இத்தரை முழுது மொருகுடைக் காக்கி யேற்றசெங்
கோலோச்சவும்
அருண்ட[15] மனதைத் திடத்தி சுவிசேஷானந்த[16] வருளீட்டவும்
ஆருயிர்த் தானயேசு தேவனை யல்லால்வே றாருக்குஞ்
செய்யலாமோ?

1. பாவமாகிய நஞ்சு; 2. உயர்பவனம்+அன்பர்களுக்கு; 3. நாடர்+இயேசு; 4. அபயம்; 5. ஆகாரம்+ஈயவும்; 'ஆகாரமீயவும்' என்பது விரித்தல் விகாரம் பெற்று 'ஆகாரம் மீயவும்' என வந்துள்ளது; 6. கோடாமல்+இலக்கை; 7. பேய் செய்கின்ற; 8. தந்திர+இடறலை; 9. உயர்நிலை; 10. மேதினிதனில்+நாளும்; 11. மெலிவற+எந்நிலை தனிலும்; 12. ஜீவன்+நாடவும்;

13. நிறைவுடன்+தேடவும்; 14. அவையெலாம்+அருளினால்+ஆக்கவும்; 15. மருண்ட; 16. சுவிசேஷம்+ஆனந்த+அருள்+ஈட்டவும்.

21. பணியாற்றல்

[''நம்மை உண்டாக்கின கருத்தருக்கு முன்பாக நாம் பணிந்து முனிந்து முழந்தாற் படியிடக்கடவோம் வாருங்கள்'' என்னும் 95ஆம் சங்கிதத்தின் 5ஆம் வசனம் இப்பகுதியின் கருப்பொருள் என்பதனைத் தலைப்பின் அருகில் உள்ள எண் குறிப்பு உணர்த்துகிறது. பொருளுக்கேற்ப ஒவ்வொரு பாடலும் 'தாள் பணிவோம்' என முடிகிறது.]

கொச்சகக் கலிப்பா

1. ஆதியா யந்தமுமா யமைந்தநடு வாய்மூலச்
சோதியா யுலகமெலாந் தோத்திரிக்கும் பேரன்பாய்
நீதியாய்ப் பந்தனத்து ணிற்கரும[1] கோசரமாய்
நாதியா[2] யெமைப்புரக்கும் நாயகனற் றாள்பணிவாம்.

2. சத்தியமா யருவுருவாய்த் தற்பாதி ரித்துவமாய்[3]
நித்தியமாய் நிருமலமாய் நிரஞ்சனமாய்[4] நிகரிலதாய்
துத்தியமாய் மருளறுக்குஞ் சுவிசேட வாகடஞ்சொல்[5]
பத்தியமாய்[6] நின்றாளும் பரன்பதுமத் தாள்பணிவாம்.

3. பான்மலியு மொளிமஞ்க்கும்[7] பரலோக சூரியனாய்
தேன்மலியுஞ் சுவையெவையுந் திகட்டாத தெள்ளமுதாய்
வான்மலியும் பேரின்ப வாழ்வருளி ரக்ஷகனாய்
கான்மலியும்[8] மறையளித்த கருணையன்செந் தாள்பணிவாம்.

4. சீர்பூத்த திருவீட்டுச் செல்வமெலாம் நல்கிறையாய்
கார்பூத்த விருதயத்தின் களங்கமறு புண்ணியமாய்
சூர்பூத்த[9] விகமடியார்[10] சுகவாற்றல் பெறும்வழியாய்
தார்பூத்த முடியரசர் தாள்வோன்பொற் றாள்பணிவாம்.

5. திரிமூர்த்தி[11] யென்றுலகர் செப்பியவ ரிச்சைவழி
திரிமூர்த்தி யல[12] விச்சை தீய்மூர்த்தி பவமலையைத்
திரிமூர்த்தி[13] யாய்க்கன்னி சேயானா னன்பருளம்[14]
திரிமூர்த்தி[15] யெனப்பாடி சிரங்குனிந்து தாள்பணிவாம்.

6. காலையினும் நண்பகலுங் கதிரவனி னொளியொளிக்கும்
மாலையினும் வீடுவெளி மகிழ்ந்துபுட்கள் பாடுதென்னஞ்
சோலையினும் யாத்திரையுஞ் சுகமெடுக்குந் தலம்பலவும்
வேலையினுந் துதியோதி விரைகமழ்பூந் தாள்பணிவாம்.

7. துருப்பிடித்த விருப்புளமாய்த் தொல்லைசிக்கிக் கிடப்போரை
கருப்பிடித்த நாதனன்றிக் கவைக்கிணக்கு[16] வாரிலையால்
குருப்பிடித்த சீடனெனக் குறுகிநமைத் தடுத்தாண்டான்
மருப்பிடித்த[17] விதழலர்ந்து மதுபொழிபூந் தாள்பணிவாம்.

8. புண்குணத்தான் முடைநாறும் புன்பவத்தி லுழல்வாரை
தண்குணத்தான் மணங்கமழுஞ் சன்மார்க்க ராக்கிவைக்க
எண்குணத்தான்[18] றிருமகவா லேற்றவழி திறந்தனனே
விண்குணத்தான் புகழோச்சி மேன்மையொளிர் தாள்பணிவாம்.

9. ஆறாடித் தலங்கள்சுற்றி யரனயன்மால் பலர்தொழுது
நீராடி[19] மண்ணாடி[20] நெடுமுடலைப் பலவாறுங்
கூறாடி நின்றாலுங் குலையாவெம் பவங்குருதிச்
சேறாடித் தீரவருஞ் சிலுவைகொண்டான் முன்பணிவாம்.

10. ஒன்றானே[21] முப்பொருளு மொன்றானே களங்கமறும்
ஒன்றானே யண்டின்றுக் கொன்றானே மனந்திரும்பார்
ஒன்றானே[22] பொருவலிலா வொன்றானே கரையேறும்
ஒன்றானே யென்றேத்தி யொன்றான தாள்பணிவாம்.

1. பந்தனத்துள் + நிற்க + கருமகோசரமாய்; 'நிற்க கரும' என்பது இடைக்குறைந்து 'நிற்கரும' என வந்தது; 2. ஆதரவாய்; 3. மூவொரு இறைவனாய்; 4. கடவுளாய்; 5. சுவிசேடமாகிய மகத்துவ வாகட நூல் சொல்லுகின்ற; 6. கட்டுப்பாட்டு மருத்துவ முறையாய்; 7. ஒளியை விஞ்சுகின்ற; 8. மணம் நிறைந்த; 9. நோயுற்ற; 10. இகம் + அடியார் = இல்வுலகோர்; 11. மூவொரு இறைவன்; 12. மனம் விரும்பியபடி திரிகின்ற மூர்த்தி அல்லன்; 13. பாவமலையைச் சுழற்றிய மூர்த்தி; 14. அன்பர் + உளம்; 15. திரிகின்ற மூர்த்தி; 16. சுவைக்கு இணக்குவார்; 17. மணம் நிறைந்த; 18. தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலா ஆற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை ஆகிய எட்டுக் குணங்களையு முடைய இறைவன்; 19. 'நீராடி' என்பது எதுகை நோக்கி 'நீறாடி' என அமைந்துள்ளது; 20. மண்ணின் மீதாடி; 21. ஒருவனே யானவனே; 22. மனந்திருந்தாதவரோடு ஒன்றாதவன்.

22. ஊர்

['நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது' என்னும் பிலிப்பையருக்கு எழுதிய திருமுகம் 3ஆம் அதிகாரம், 20ஆம் வசனமே இப்பகுதியின் அடிப்படைப் பொருள் என்பதனைத் தலைப்பின் அருகில் உள்ள 'பிலிப்-3;20' என்னும் எண் குறிப்பு உணர்த்துகிறது.]

இரட்டைக்குறள் வெண் செந்துறை

1. நித்திய வாழ்க்கை நிறைந்தவூ ரெங்களூர்
நின்மல சங்க[1]முறைந்தவூ ரெங்களூர்
சத்திய மொன்றே தழைத்தவூ ரெங்களூர்
சந்தோஷ மேவுரு வானவூ ரெங்களூர்.

2. பாவம் பிணிமுப்பி லாதவூ ரெங்களூர்
பரிசுத்தம் பொங்கிக்கு லாவுமூ ரெங்களூர்
கோவம் பகையணு காதவூ ரெங்களூர்
குருதிச்சம் பாத்திய[2] மானவூ ரெங்களூர்.

3. துக்கம் விசாரமில் லாதவூ ரெங்களூர்
தூயநெஞ் சோடு துதிக்குமூ ரெங்களூர்
பக்கம் பொறிகள்பா யாதவூ ரெங்களூர்
பரனொரே[3] கீர்த்திவி ளங்குமூ ரெங்களூர்.

4. ஜீவ நதிப்பாய்ச்ச லானவூ ரெங்களூர்
தேவாட்டுக் குட்டி சிறக்குமூ ரெங்களூர்
மேவ மணியக முள்ளவூ ரெங்களூர்
விசுவாசர் மாத்திரம் மேவுமூ ரெங்களூர்.

5. அருபிக ளாலே நிறைந்தவூ ரெங்களூர்
அனுதினம் புதுக்கவி பாடுமூ ரெங்களூர்
சொருபிக டீயராய்ச்[4] சூழுமூ ரெங்களூர்
சுயஞ்சோதி யாய்த்தேவன் காலுமூ ரெங்களூர்.

6. மரண நதிக்கப்பா லானவூ ரெங்களூர்
மரித்துயிர்த் தெழுந்து சேருமூ ரெங்களூர்
கரண[5] மயக்கங் களைந்தவூ ரெங்களூர்
காசினி[6] வாழ்வைக் கழிக்குமூ ரெங்களூர்.

7. கோடாகோ டிப்பேர்கொண் டாடுமூ ரெங்களூர்
குழந்தைக தேவனைப்[7] போற்றுமூ ரெங்களூர்
ஏடாகோ டங்களில் லாதவூ ரெங்களூர்
இரவிதிங் களாதி வேண்டாவூ ரெங்களூர்.[8]

8. பன்னிரு வாசலின் கோட்டையூ ரெங்களூர்
பகலிர வில்லாத பரமவூ ரெங்களூர்
மன்னித யங்குதி போடு[9]மூ ரெங்களூர்
மாமிச சிந்தையொ ழிந்தவூ ரெங்களூர்.

9. ஜீவ தருக்க ணிரம்பு[10]மூ ரெங்களூர்
திரியேக தேவோடும் வாழுமூ ரெங்களூர்
காவ லராய்முடி சூட்டுமூ ரெங்களூர்
கலிக ளெவரையுங்[11] காண்காவூ ரெங்களூர்.

10. ஆறிரு ரத்தினக் கோட்டையூ ரெங்களூர்
அழியாத பரலோகே யானந்த[12] வெங்களூர்
கூறிரு நீதிநன் கடையுமூ ரெங்களூர்
குருயேசு ஆயத்தஞ் செய்தவூ ரெங்களூர்.

1. தூயவர் கூட்டம்; 2. இரத்தம் சிந்திப் பெற்றது; 3. பரனோடு; 4. சொருபிகள்+தூயராய்; 5. மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணம், 6. மேலுலக; 7. குழந்தைகள்+தேவன்; 8. கதிரவன் நிலவு முதலியவை தேவைப்படாமலே ஒளிபெற்றுத் திகழும் ஊர்; 9. மனிதனின் மனம் மகிழ்ச்சியால் ஆடும்; 10. ஜீவதருக்கள்+நிரம்பும்+ஊர்; 11. தீயர் எவரையும்; 12. பரலோகே+ஆனந்தம்.

23. சுகம்

[தலைப்பிற்கேற்றவாறு பாடல்களின் அனைத்து அடிகளும் 'சுகம்' என முடிகின்றன. தலைப்பினருகில் காணப்படும், '1. கொரி 2-9ம் என்னும் எண் குறிப்பு, ''கண்ணுக்குப் புலப்படாதது; காதுக்கு எட்டாதது; மனித உள்ளத்தில் எழாதது; கடவுள் தமக்கு அன்பு செய்கிறவர்களுக்காக ஏற்பாடு செய்தது'' என்னும் விவிலியப் பகுதியின் உள்ளடக்கமே இத்தலைப்புப் பாடல்கள் எனச்சுட்டும். இறைவன் அன்பருக்கு அருளும் இன்ப சுகங்கள் இப்பகுதியில் தொகுத்துரைக்கப்படுகின்றன; அச்சுகங்கள் இறைவன் சிலுவை சுமந்து பெற்றுத் தந்தவை எனவும் சுட்டப்படுகின்றன].

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. அஞ்ஞானத் தார்க்கு விளங்காத தெஞ்சுகம்[1]
அஞ்சும்[2] மென் றோருக்குத் தோன்றுவ தெஞ்சுகம்
மெஞ்ஞான வீதியு லாவுவ தெஞ்சுகம்
வேதன் சிலுவை விளைவான தெஞ்சுகம்.

2. சொக்கான வாகடஞ்[3] சொல்லாத தெஞ்சுகம்
தொல்புவிப் பண்டிதர் தோற்றாத[4] தெஞ்சுகம்
மிக்கான கல்வி விளக்காத தெஞ்சுகம்
வேதன் சிலுவை விளைவான தெஞ்சுகம்.

3. தேவநே சப்பூண்டாற் செழித்த தெஞ்சுகம்
ஜீவதண் ணீருண்டு தேறிய தெஞ்சுகம்
மேவநேர் பாதை விசுவாச மெஞ்சுகம்
வேதன் சிலுவை விளைவான தெஞ்சுகம்.

4. ஆசைகண் மூன்றிற்கு[5] மப்புறத் தெஞ்சுகம்
அறிவைக் கடந்த வமலமே யெஞ்சுகம்
வேசைகள் போன்மத வீண்வென்ற[6] தெஞ்சுகம்
வேதன் சிலுவை விளைவான தெஞ்சுகம்.

5. துட்டரி னைக்கியந்[7] தொலைத்த தெஞ்சுகம்
துன்பத்து ளின்பங்கள் சூடிய தெஞ்சுகம்
மெட்டரின் சிந்தை விலகிய தெஞ்சுகம்
வேதன் சிலுவை விளைவான தெஞ்சுகம்.

6. மண்ணின் சொகுசை மதியாத தெஞ்சுகம்
வருந்திப் பிறர்சேமம் வாஞ்சிப்ப[8] தெஞ்சுகம்
விண்ணின் பௌரிஷம்[9] மேவிய தெஞ்சுகம்
வேதன் சிலுவை விளைவான தெஞ்சுகம்.

7. பொய்யான தொன்றும் பொருந்தாத தெஞ்சுகம்
பூரண நம்பிக்கை பூத்த தெஞ்சுகம்
மெய்யான தெல்லாம் விரவிய தெஞ்சுகம்
வேதன் சிலுவை விளைவான தெஞ்சுகம்.

8. தக்க துணிகளாற்[10] றழைத்த தெஞ்சுகம்
சாவென்று தத்துவந் தரித்த தெஞ்சுகம்
மிக்க வுறுங்கரி[11] மேவிய தெஞ்சுகம்
வேதன் சிலுவை விளைவான தெஞ்சுகம்.

9. பூலோகச் சிற்றின்பர் பூணாத தெஞ்சுகம்
போதர வாருற்றுப் போற்றிய தெஞ்சுகம்
மேலோகப் பேரின்பர் மேவிய தெஞ்சுகம்
வேதன் சிலுவை விளைவான தெஞ்சுகம்

10. நித்திய வாழ்க்கை நிரம்பிய தெஞ்சுகம்
நெஞ்சா குலங்களை[12] நீங்கிய தெஞ்சுகம்
மித்திய[13] நூற்கள் விரிக்காத தெஞ்சுகம்
வேதன் சிலுவை விளைவான தெஞ்சுகம்.

1. விளங்காதது + எம் + சுகம்; 2. ஐம்புலன்களையும்; 3. நிவாரணம்; 4. தோன்றாதது; 5. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூன்றுக்கும்; 6. விலைமாதர் இன்பம் போன்ற வீணானவற்றை வெறுத்து வென்றது; 7. தீயவர் தொடர்பினை; 8. விரும்புவது; 9. இன்பம்; 10. துன்பங்களால்; 11. சிறந்த சான்று; 12. மனத்துன்பங்களை; 13. பயனற்ற.

24. மனரம்மியானந்தம்

[''துயரத்தில் ஆழ்ந்தவர்களாய்த் தென்படுகிறோம்; ஆனால் எப்பொழுதும் மகிழ்ச்சியில் திளைக்கிறோம். நாங்கள் ஏழைகளாயினும் பலரைச் செல்வராக்குகிறோம். ஒன்றுமே இல்லாதவர்கள்போல் இருக்கிறோம்; ஆனால் அனைத்துமே எங்களுக்குச் சொந்தம்'' என்னும் விவிலியப் பகுதியின் அடிப்படையில் இப்பகுதிப் பாடல்கள் அமைந்துள்ளன என்பதனை, ஆசிரியரின், 'கொரி. 6-10' என்னும் எண் குறிப்பால் உணரலாம். சித்தர்கள் பாடலைப் போல பெண்ணை முன்னிறுத்தி அழைத்துக் கூறும் முறையில் ஒவ்வொரு பாடலும் 'பெண்ணே!' என முடிகிறது.

அடிநான்காய்த் தம்மிலொத்து வந்த இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. அருமை யானவிசு வாசத்தைப் பெற்றோம்
ஐய னிதயா சனந்[1]தங்கப் பெற்றோம்
ஒருமை யானமன வெண்ணங்கள் பெற்றோம்
ஒன்றுங் குறைநமக் கில்லைகாண் பெண்ணே.

2. துன்பத்திற் தேவன்பைக் கண்டிடப் பெற்றோம்
சுவிசேஷ மெய்வாக்குத் தத்தங்கள் பெற்றோம்
இன்பத்திற் பிரபஞ்சம் பற்றாமை பெற்றோம்
என்றும் நமக்கோர் குறைவில்லை பெண்ணே.

3. குன்றாத மனரம்ய செல்வங்கள் பெற்றோம்
குறைகூறி முறையிடா நற்குணம் பெற்றோம்
பொன்றாத நீதிமா வஸ்திரம் பெற்றோம்
புவிபரத் திலைக்குறை நமக்கறி பெண்ணே.

4. ஞானா காரங்க டினமுண்ணப்[2] பெற்றோம்
நற்சக வாசசம் பாஷணை பெற்றோம்
வானா கார்[3]இ யேசுவைப் பெற்றோம்
வையகத் தார்நமக் கொப்பாகும் பெண்ணே.

5. உபத்திர வத்திற் புகழ்தற் பெற்றோம்
உறுதி பரிசுத்த வாவியாற்[4] பெற்றோம்
அபத்திர மால்வழி முற்றிற்கப்[5] பெற்றோம்
ஆரிங்கீ டாமெமக்[6] கானந்தி[7] பெண்ணே.

6. கெட்ட வீண்பெரு மைகெடப் பெற்றோம்
கிறிஸ்து மகிமை யணிந்திடப் பெற்றோம்
அட்ட பாக்கிய ம[8]வருக்குட் பெற்றோம்
அண்டா[9] முறுமுறுப் போர்போதும் பெண்ணே.

7. செல்வச் சுவிசேஷ வணிகலம்[10] பெற்றோம்
தீமையை நன்மையால் வென்றிடப் பெற்றோம்
வல்ல தேவநிழல் வாழப் பெற்றோம்
வாட்டு மோநம்மை யேதும்பார் பெண்ணே.

3. யுத்தியை வேதத்திற் கட்டிடப் பெற்றோம்
யோசனை யைத்தேவன் பாற்சொலப் பெற்றோம்
புத்தியைச் சுத்தியைப் பத்தியைப் பெற்றோம்
பொற்கதி வாழ்வுறத் தடையேது பெண்ணே.

9. துய்ய கிறிஸ்தோடே யத்துவம்[11] பெற்றோம்
சோதனை வரிலவர் தாங்கருள் பெற்றோம்
செய்ய நற்கரு ணைசேரப் பெற்றோம்
தேவ மக்கணமக் காரி[12] பெண்ணே.

10. வீரமாய் முத்துறை தாண்டிடப் பெற்றோம்
விசுவாச மாதியெண் படி[13]யேறப் பெற்றோம்
கூரமாய் லக்கைப்[15] பார்த் தேயோடப் பெற்றோம்
குறையேது கிறிஸ்தெலாம் நமக்காகிற் பெண்ணே.

1. ஆண்டவனின் இதயமாகிய பீடத்தில்; 2. ஞானம்+ஆகாரங்கள்+தினம்+உண்ண; 3. வான்+ஆகாரம்; 4. பரிசுத்த+ஆவியால்; 5. தீமைதருகிற மயக்க வழிகள் முடிவுற; 6. ஆர்+இங்கு+ஈடாம்+எமக்கு; 7. மகிழ்ச்சிகொள்; 8. எட்டுவகைப் புண்ணியப் பேறுகளும்; 9. இறைவனை நெருங்காமல்; 10. சுவிசேஷம்+அணிகலம்; 11. தூய கிறித்துவின் தன்மை; 12. தேவமக்கள்+நமக்கு+ஆர்+ஈடு; 13. விசுவாசம் முதலிய எட்டுப்படிகள்; 14. கூர்மையாய் உரிய இடத்தை.

25. இரக்ஷண்ய வியப்பு

[தலைப்பின் அருகில், 'தீத். 3-5' என்னும் குறிப்புக்காணப்படுகிறது. ஆதலின் ''நீதிநெறியைப் பின்பற்றி நாம் செய்த நற்செயல்களை முன்னிட்டன்று; தம் இரக்கத்தை முன்னிட்டே புதுப்பிறப்பைத் தரும் திருமுழுக்கினாலும் புத்துயிர் அளிக்கும் தூய ஆவியாலும் இறைவன் நம்மை மீட்டார்'' என்னும் விவிலியப் பகுதியின் அடிப்படையில் இப்பகுதிப் பாடல்கள் அமைந்துள்ளனவாகக் கொள்ளவேண்டும். இறைவன் மானிடன்மேல் கொண்ட பற்றும், பாவத்தினின்று மீட்ட இரக்கப் பெருக்கமும் வியப்புக்குரியனவாக, 'ஐயனே' என்னும் வியப் பிடைச் சொல்லைப் பயன்படுத்திச் சிறப்பித்துரைக்கப்படுகின்றன].

அடியிரண்டாய்த் தம்மிலொத்து வந்த குறள்வெண்செந்துறை

1 ஆக்கினன் றாயுந்தி[1] யையகோ-சூதரை[2] தோற்றினனையகோ!
தேக்கினன் மாநல மையகோ-தேடிவந் தாண்டன னையகோ!

2. தந்தனன் லூக்காமுன் னையகோ-சாற்றினன் றன்புக மையகோ!
வந்தனன் நெஞ்சறை[3] யையகோ-மாபவம் போக்கின னையகோ!

3. ஊற்றின னாவியை யையகோ-உண்மையைக் காட்டின னையகோ!
ஆற்றின லுள்ளத்தை யையகோ-ஆனந்த மீந்தன னையகோ!

4. மறுபிறப் பாக்கின னையகோ-மாற்றினன் ஜீவிய மையகோ!
உறுப்பிறப் பாகினா[4] னையகோ-ஒதற் கரியவ னையகோ!

5 கந்தையை மாற்றின னையகோ-கதிநீதீ சூட்டின னையகோ!
நிந்தையைநீக்கின னையகோ-நிட்களக் குர்தியா[5] லையகோ!

6. கண்ணொரு நான்கிட்டா[6] னையகோ-கர்த்தனன் சோதனைக்
கையகோ[7]!
விண்ணொரு வீடிட்டா னையகோ-வெற்றிச்சி லுவையா
லையகோ!

7. ஈட்டின னைம்பல[8] னையகோ-எண்படி[9] யேற்றின னையகோ!
கூட்டினன் பந்தியி[10] லையகோ-குற்றங்கள் மன்னித்தா
னையகோ!

8. ஏகன்றி ரியேக னையகோ-எங்கும் நிறைந்தவ னையகோ!
வாகனி[11]ணையிலா னையகோ-மாறா விலக்ஷ்ண னையகோ!

9. தேசுசுடர் வேத னைய[12]கோ தேசங்க ளெங்கணு மையகோ!
யேசுகிறிஸ் தென்பா னையகோ-இரக்கப் பெருங்கட
லையகோ!

10. உடுத்தின னைந்துடை[13] யையகோ-ஊட்டினன் ஞானப்பா
லையகோ!
படுத்தினன் கீழ்பவ மையகோ-பாறாத[14] பங்கானா னையகோ!

1. தாய்+உந்தி=தாயின் வயிறு; 2. ஆதாம் முதலானோரை; 3. நெஞ்சாகிய அறையில்; 4. உறுப்பு+இறப்பு+ஆகினான்= உடலாய்த் தோன்றி மறக்குமாறு ஆயினான்; 5. நிட்களம்+ குருதியால்; களங்கமற்ற இரத்தத்தால்; 'குருதி' என்பது 'குர்தி' என இடைக்குறையாய் வந்துள்ளது; 6. கண்+ஒருநான்கு+ இட்டான்; நான்கு கண்களைத் தந்தான்; 7. சோதனைக்கு+ ஐயகோ; 8. ஈட்டினன்+ஐம்பலன்=ஐந்து பயன்களைத் திரட்டித் தந்தான்; 9. எட்டுப்படிகளின் மீது ஏற்றிச் சிறப்பித்தான்; 10. திருவிருந்தில்; 11. வாகன்+இணையிலான்=திருச்சிலுவையாகிய வாகனத்தைக் கொண்ட இணையற்ற சிறப்புடையவன்; 12. வேதன்+ ஐயகோ; 13. உடுத்தினன்+ஐந்து+உடை=ஐந்து திருக்காயங் களையே ஆடையாகக் கொண்டவன்; 14. விடுபடாத.

26. ஆவாள்

[இறைவனைத் தம்மை வாழ்வித்த தலைவியாக எண்ணிப்பாடிய பாடல்களைக் கொண்டது. தலைப்பினருகில் 'காதலி' என்னும்

குறிப்பும் காணப்படுகிறது. இறைவன் எவ்வெவ் வகைகளில் தம் தலைவியாகி விளங்குகிறான் என்பதை ஆசிரியர் விளக்கி ஒவ்வோர் அடியும் 'ஆவானே' என முடியுமாறு பாடியிருக்கிறார். அமரகவி சுப்பிரமணிய பாரதி கண்ணனைத் தலைவியாக, காதலியாகப் பல்வேறு நிலைகளில் பாடியுள்ளார். எனினும் இவ்வாசிரியர் அவருக்கு முன்னே பாடியிருப்பதை இப்பகுதியின் முடிவில் எழுதிய நாளை 27-8-1896 எனக் குறித்திருப்பதால் உணரலாம்.]

இரட்டைக்குறள் வெண் செந்துறை

1. ஒருவன் கருணைய னாவானே
    உலகுற்றான் றேடிநமை[1] யாவானே
தருவன் புதியவுள மாவானே
    சந்தேகங் கொன்றுகே ளாவானே.[2]

2. பண்டோர்க் குபகாரி[3] யாவானே
    பாவப் பரிகாரி யாவானே
தொண்டோர்க் கனுசாரி[4] யாவானே
    சுவிசேஷத் தூயொளி யாவானே.

3. கிட்டா வரும்பொரு ளாவானே[5]
    கிறிஸ்தே செனும்நாமி[6] யாவானே
ஒட்டா வியாபிகா ணாவானே[7]
    உளமயற் சஞ்சீவி[8] யாவானே.

4. கொண்டான் விலைக்கிரய மாவானே[9]
    கொத்தடிமை சாசுவத மாவானே[10]
கண்டான் பெலவீன[11] மாவானே
    கைதூக்கிப் பேறளித்தா னாவானே.

5. காடிடுங்[12] கேடறுப்பா னாவானே
    கங்குல்பக லுங்காப்பா னாவானே
வீடிடுஞ் சத்திய னாவானே
    விசுவாசி கட்கிறையோ னாவானே.

6. காரணனி யாவிற்கு[13] மாவானே
    காரிய பராமரிப்போ னாவானே
பூரணன் றன்மைசெய லாவானே
    புகழ்க்கெலாம் பாத்திரனே யாவானே.

7. தம்பிரா னெந்நாளு மாவாளே
சந்தோஷ சம்பன்ன[14] னாவாளே
எம்பிரா னம்பினே[15] னாவாளே
ஈந்தாளி ரக்ஷணிய மாவாளே.

8. தந்தான் கழறலைமே[16] லாவாளே
தரித்தனன் பின்னக[17] மாவாளே
வந்தான் றுணையாக வாவாளே
வழுத்தற் கரியவன்ப[18] னாவாளே.

9. ஆருக்கு மாதரவா னாவாளே
ஐம்பல னீவள்ள[19] லாவாளே
பேருக்குச் சேர்ச்சையா[20] னாவாளே
பேரானந் தக்கட லாவாளே.

10. வெம்பி மெலியண்மோ[21] வாவாளே
வேத வுரைகேடி[22] யாவாளே
நம்பிக் களிகூர்தி[23] யாவாளே
ஞான ரகசிய மாவாளே.

1. உலகுற்றான் நமைத் தேடி; 2. கேள் + ஆவாள் = உறவினள். ஆவாள்; 3. பண்டோர்க்கு + உபகாரி = பண்டையோர்க்கு உதவுபவள் = முதியோர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்பவள்; 4. தொண்டோர்க்கு + அனுசரி = தொண்டரை அனுசரித்து வாழ்பவள்; 5. கிட்டா + அரும் + பொருள்; 6. நாமத்தையுடையவள்; 7. ஒட்டா + வியாபிகான் + ஆவாளே = எதிலும் பற்றிக் கொள்ளாமல் எங்கும் நிறைந்திருக்கின்றவள் ஆவாளே; 8. உள்ள மயக்கத்தைப் போக்குகின்ற அருமருந்து; 9. கொண்டவனுக்கு விலை கொடுத்துப்பெற்ற பொருளாவாள்; 10. என்றென்றும் அடைந்தவனுக்கு அடிமைபோல் ஆவாள்; 11. பலவீனம்; 12. சாக்காடிடும்; 13. காரணன் + யாவிற்கும்; 14. மகிழ்ச்சி நிறைந்தவன்; 15. எம்பிரான் + நம்பினேன் 16. கழல் + தலைமேல்; 17. முள்முடி தரித்தவன்; 18. வழுத்தற்கு + அரிய + அன்பன்; 19. ஐம்பலன் + ஈ + வள்ளல்; 20. சேசையான்; 21. மெலிந்து; 22. வேத மொழிகளைக் கூறிக் கேடுகளைப் போக்குபவள்; 23. மகிழ்ச்சியை அளிக்கக் கூடியவள்.

27. ஆனந்த நளினம்

[இறைவன் நடனமாடிக் கொண்டு தோன்றி, என்னைத் தன்னுடையவன் என்பதற்குரிய அடையாளத்தை இட்டுச் சென்றான்

என்பதனை இப்பகுதிப் பாடல்கள் விளக்குகின்றன. நடனமாடுபவரின் சலங்கை, ஆடை, வளை, அரைஞாண், மிஞ்சி, காறை, காதணி, கணையாழி, பரிமளம், மௌலி முதலியனவாக முறையே நன்னடத்தை நீதி, புண்ணியம், சத்தியம், வழுவாமை, வணக்கம், தந்தை மொழி கேட்டல், ஈவிரக்கம், கீர்த்தி, மகிமை ஆகியவற்றைக் கூறியிருப்பது சிந்தனைக்குரியது. ''நீங்களும் உங்கள் மீட்பின் நற்செய்தியாகிய உண்மை வார்த்தையைக் கேட்டு விசுவாசம் கொண்டு வாக்களிக்கப் பட்ட பரிசுத்த ஆவியின் முத்திரையைக் கிறிஸ்துவுக்குள்ளே பெற்றுக் கொண்டீர்கள்'' என்னும் விவிலியப் பகுதியின் அடிப்படையில் எழுதப் பட்டது என்பதனைத் தலைப்பினருகில் காணப்படும் 'எபே. 1-13' என்னும் எண் குறிப்பு உணர்த்துகிறது.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. நல்ல நடக்கைச் சலங்கை சலசலென
 நாதன் திருமக னென்பா லெழுந்தருளி
 சொல்ல வரிய விஷயங்கள் சொற்றினன்
 சொந்தம் நீ யென்றடை யாளந்தரிப் பித்தனனே.

2. நீதிச் சித்திரத் தையலாடை கசகசென
 நேய பரன்புத்திர னென்பா லெழுந்தருளி
 சோதி மணவறை சேர்ப்பேனென் றோதினன்
 தோகைநீ[2] யென்றடை யாளந்தரிப் பித்தனனே.

3. புண்ணிய செயற்றங்க வளைகள்[3] கலகலென
 பொன்னாட் டிறைபால னென்பா லெழுந்தருளி[4]
 கண்ணிய மானவாக்குத் தத்தங்க ளிட்டனன்
 காதலிநீ யென்றடை யாளந்தரிப் பித்தனனே.

4. சத்திய வரைஞாண் இலங்கிப்[5] பளபளென
 தற்பரன் றிருக்குமர னென்பா லெழுந்தருளி
 நித்திய சுதந்தர மருளுவே னென்றனன்
 நேசிநீ யென்றடை யாளந்தரிப் பித்தனனே.

5. வழுவாமை மிஞ்சிதிரு விரலின் மினுமினென
 மாசிலாத் தேவசுத னென்பா லெழுந்தருளி
 தழுவாமை வெருண்டோட வின்பச்சொற் பற்றினன்
 தையனீ[6] யென்றடை யாளந்தரிப் பித்தனனே.

6. அரிய வணக்கமாங் காறை[7] தளதளென
ஆதி திருமைந்த னென்பா லெழுந்தருளி
பிரிய வசனங்க ளேராளங்[8] கூறினன்
பேதைநீ யென்றடை யாளந்தரிப் பித்தனனே.

7. தந்தை மொழிகேட்குங் காதணி மனமனென
சருவே சுரன்குழந்தை யென்பா லெழுந்தருளி
கந்தை துறத்தியைந்து பட்டாடை சூட்டினன்
காந்திநீ யென்றடையா ளந்தரிப் பித்தனனே.

8. ஈவி ரக்கக்கணை யாளி[9] சுடசுடென
ஈசன் றிருக்குமர னென்பா லெழுந்தருளி
மாவி நோத வசனங்க ளோதினன்
மங்கைநீ யென்றடை யாளந்தரிப் பித்தனனே.

9. கீர்த்திப் பரிமளங்கள் கமகம கமவென
கெம்பீர வையன்மக வென்பா லெழுந்தருளி
நேர்த்தி யாயருள் பெய்வாய் திறந்தனன்
நீநங்கை யென்றடை யாளந்தரிப் பித்தனனே.

10. பூரண மகிமை மௌலி[10] மிளிமிளென
புகழன் றிருச்சீல னென்பா லெழுந்தருளி
ஆரண ஞான வுரையாட்டஞ் செய்தனன்
அருமைநீ யென்றடை யாளந்தரிப் பித்தனனே.

1. சொன்னான்; 2. மயில் போன்ற பெண் நீ; 3. செயல்+தங்கவளைகள், 4. பொன்னாட்டு+இறைபாலன்+என்பால்+எழுந்தருளி; 5. சத்தியம்+அரைஞாண்+துலங்கி; 6. தையல்+நீ; 7. வணக்கமாகிய காப்பு; 8. வசனங்கள்+ஏராளம்; 9, ஈவிரக்கமாகிய கணையாழி; 10. தலைமுடி.

28. வாழ்க்கைப்பாடு

[ஒரு தலைவியின் வாழ்வு அவள்தன் எண்ணத்திற்கேற்ற தலைவன் கிடைத்தால் நிறைவுறும். தான் எண்ணிய தலைவனாம் இறைவனின்

குணவியல்புகளால் தலைவியாகிய தன் வாழ்க்கை நிறைவுறுவதாகக் கூறுவதுபோல் இப்பகுதி அமைந்துள்ளது. உன்னத சங்கீதத்தின் எட்டாம் பகுதியில் வரும் அமைப்பு முறையே இப்பகுதிக்குத் தூண்டு கோலாயிற்று எனத் தலைப்பினருகில் காணப்படும் 'உன். 8 : 1-3' என்னும் எண் குறிப்பால் தெரிய வருகிறது.

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. காரண னாகி யிருப்பா னாகில்
 காரிய மாக்குஞ் சமர்த்த னாகில்
ஆரண நாத னாவ னாகில்[1]
 அரிதின் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே

2. குணங்க ளொளிசெய் பரம னாகில்
 குவலயர்[2] மீதன்பு கூர்வ னாகில்
கணங்க ளதிபதி[3] யாவ னாகில்
 கைகூடி முடிந்ததென் வாழ்க்கைப்பாடே.

3. எங்கு நிறைவியா பகனே யாகில்
 எல்லாம் வல்ல சித்த னாகில்
பொங்கு பொறிபுலன் காப்பா னாகில்
 பொருந்த முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

4. விண்ட விதம்புவிக் கெழுந்தா னாகில்
 மீட்பின் கிரியை முடித்தா னாகில்
கண்ட வடிகள்கரி கூறின ராகில்
 கடிதின் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

5. ஒளியா யிருளை[4] யவித்தா னாகில்
 உருவ பந்தங்கடந்து நின்றா னாகில்
தெளியா மனங்க டெளித்தா னாகில்[5]
 சிறப்பாய் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

6. காய மைந்து தரித்தா னாகில்
 கைகாட் டியென்னை யழைத்தா னாகில்
நேய முந்தியெனிற் கொண்டா னாகில்[6]
 நிறைவாய் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

7. ஆருக் கும்பொது வானா னாகில்
 ஆலயம் மறைபொது வைத்தா னாகில்
நேருக் கெவரையுங் கொணர்வா னாகில்
 நிச்சயம் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

8. நன்மைக் கரிய சகாய னாகில்
நவவர மிரங்கிப் பகர்வ னாகில்
தின்மை யொழிக்குங் கருண னாகில்
சீராய் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

9. மரண வலிவென்ற தேவ னாகில்
மரித்தோ ருயிர்த்தெழுப்பும் வள்ள லாகில்
கரண மயக்கொழி கர்த்த னாகில்
களிப்பாய் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

10. கோடா கோடித்திரு நாம னாகில்
குறையேது மருவாப் பூரண னாகில்
வாடா தகமகி ழீவா னாகில்[7]
வளமாய் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

11. சொல்லை மறுக்கா மெய்ய னாகில்
சுதந்தர மிருமை நல்குவ னாகில்
தொல்லையூ டின்ப மருள்வா னாகில்
சுறுக்கின் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

12. சிலுவைத் தரிசன மிட்டா னாகில்
சிந்தை புதுப்பித்துக் காத்தா னாகில்
வலுவைச் செபத்துக் கிட்டா னாகில்
மகிழ்வாய் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

13. சத்திய சுவிசேஷங் கூறின னாகில்
தானொழுகி மாதிரி வைத்தா னாகில்
நித்திய ஜீவாதி பதியே யாகில்
நேராய் முடிந்ததென் வாழ்க்கைப் பாடே.

1. ஆரணம் + நாதன் + ஆவன் + ஆகில் = வேதமுதல்வனல்;
2. உலகத்தோர்; 3. கணங்கள் + தளபதி = வானோர் கூட்டத்துத் தலைவன்; 4. ஒளியா + இருளை = நீங்காத இருள்; 'ஒழியா' என்பது ஒளியா என ஆளப்பட்டுள்ளது; 5. மனங்கள் + தெளித்தானாகில்; 6. நேயம் + முந்தி + எனில் + கொண்டானாகில்; அன்பு மிகுந்தவன் எனில் = என்னை ஆட்கொண்டான் எனில்;
7. வாடாது + அகம் + மகிழ் + ஈவானாகில் = குறையாத மகிழ்ச்சியைத் தருவானாகில்.

29. ஞானப்பால் கறவெனல்

[தலைப்பினருகில் '1 பே. 2 – 3' என எண்குறிப்புக் காணப் படுவது கொண்டு, ''நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தை களைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்' என்னும் விவிலியப் பகுதியே இத்தலைப்புப் பாடல்களை எழுத ஆசிரியரைத் தூண்டியுள்ளது என உணரலாம்.]

தரு

1. நித்தம் பிழைத்திடப் பால்கற-மன
நேர்மைகுன் றாமலே பால்கற
வித்தை விளங்கவே பால்கற-மெய்
வேதப் பசுவிலே பால்கற.

2. அன்பு வளரவே பால்கற-அரு
ளானந்த மோங்கவே பால்கற
துன்பந் துரும்பாகப் பால்கற-உயர்
சுருதிப் பசுவிலே பால்கற.

3. பத்தி செழிக்கவே பால்கற-தேவ
பவுசு[1] விளங்கவே பால்கற
யுத்தி யடக்கியே பால்கற-வேத
உத்தமப் பசுவிலே பால்கற.

4. ஞானஞ் சிறக்கவே பால்கற-பிறர்
நன்மை பிறக்கவே பால்கற
ஊனஞ் சிதறவே பால்கற-மறை
உண்மைப் பசுவிலே பால்கற.

5. காலையும் மாலையும் பால்கற-உளக்
கலயம் நிரம்பவே பால்கற
வேலை யிடையிலும் பால்கற-அருள்
வேதப் பசுவிலே பால்கற.

6. தூய்மை யிலங்கவே பால்கற-மனச்
சோம்பலில் லாமலே பால்கற
வாய்மை யலங்கவே[2] பால்கற-சத்ய
வாக்கியப் பசுவிலே பால்கற.

7. பழைய மடுவிலே[3] பால்கற-அதின்
பற்றுநாற் காம்பிலும் பால்கற
உழைப்பு நலம்பெறப் பால்கற-பரன்
உரையாம் பசுவிலே பால்கற.

8. புதிய மடுவிலே பால்கற-மூன்று
பொருந்திய காம்பிலும் பால்கற
துதிபெலன் மல்கவே பால்கற-தேவ
சுவிசேஷப் பசுவிலே பால்கற.

9. வழியினுக் குதவியாய்ப் பால்கற-நீ
வளருதற் கேதுவாய்ப் பால்கற
அழிம்பனை[4] வெல்லவே பால்கற-கிறிஸ்
தையுரைப் பசுவிலே[5] பால்கற.

10. மூர்த்தி சிந்தைபெறப் பால்கற-வரும்
மோசத்திற் குதவியாய்ப்[6] பால்கற
வார்த்தைப்பா டுன்னியே பால்கற-வழு
வாவேதப் பசுவிலே பால்கற.

1. மகிமை; 2. ஒளிபெற; 3. மடி; 4. பேயினை;
5. கிறிஸ்துவைப் பற்றி உரைக்கும் பசு; 6. வரும் தீமைகளிலிருந்து தப்புவதற்கு உதவியாக.

30. அரிதுணர்த்தல்

[''நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்'' என்னும் விவிலிய வாசகமே இப்பகுதியின் அடிப்படை என்பதனை தலைப்பின் அருகில் ஆசிரியர் சுட்டியிருக்கும் '1. பேது. 4-18' என்னும் எண் குறிப்பு உணர்த்துகிறது.]

அடியிரண்டாய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண்செந்துறை

1. தூய மறையிரு வேற்பாடும்[1]
சுத்தாவி[2] பேரருள்பெற் றோதிநில்லார்
காய வினைகளற லரிது காணும்
கலைகளால் வெல்வ தரிதுகாணும்.

2. வேதத் திணங்காத[3] சாஸ்திரங்கள்
வேண்டிய வையந்திரி பறப்பயின்றும்[4]
போதத் தொளியலங்க[5] லரிதுகாணும்
பொறிபுலன் கீழ்ப்படுத்த லரிதுகாணும்.

3. சுயநீதி[6] யாமிழி கந்தையினைத்
துரிதிற் களையா விடிற்றேவ
ஜெயநீதி யடைத லரிதுகாணும்
திருக்கதி சேர்த லரிதுகாணும்.

4. பத்திக் கிரியைபல் விதஞ்செயினும்
பாவ மலரவரி[7] னாகிவாழ்தல்
மத்தி யஸ்தமிலா லரிதுகாணும்
மறவழி யேது மரிதுகாணும்.

5. யேசு கிறிஸ்துவை விசுவாசித்
திணையறுந் திருத்தாள்[8] பின்பற்றாக்கால்
பேசு மைக்கிய[9] மரிதுகாணும்
பேரின்ப மொய்த்த[10] லரிதுகாணும்.

6. சிலுவைப் பிராணத் தியாகேசன்
சீரடிப் புகலின்றி யீஷணையின்
வலுவை வெல்ல லரிதுகாணும்.
மகிமை யடைத லரிதுகாணும்.

7. தீன தயாள னருட்சுவிசேஷத்
திருநெறிக் கடங்கிப் பிழையாக்கால்[11]
ஞான ராக லரிதுகாணும்
ஞாலோப காரியாத[12] லரிதுகாணும்.

8. தேனென ஞானோப தேசமுரை
திருமத்தி யஸ்தனோ டொப்புரவில்லால்
யானென தெனவற[13] லரிதுகாணும்
யாத்திரை துறைசேற லரிதுகாணும்.

9. ஜாதி பேத முருவவணக்கம்
தானிறை யெனல்றேவ மோக்ஷவீட்டின்
நீதி மானாத லரிதுகாணும்
நித்தியஜீ வன்கிடைத்த லரிதுகாணும்.

10. எத்தனை காலங் கிறிஸ்தவனென்
திருந்தும் மறுபிறப் பாகாவிடில்
அத்தனைக்[14] கண்டடை தலரிதுகாணும்
அல்ல லொழித லரிதுகாணும்.

1. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு; 2. தூயஆவி; 3. வேதத்து+இணங்காத=வேதத்திற்குள் அடங்காத; 4. வேண்டிய+ஐயம்+திரிபறப் பயின்றும்; 5. போதத்து+ஒளி+அலங்கல்=மறையொளி விளங்குதல்; 6. தன்னலம்; 7. பாவம்+மலர்+அகிதன்=பாவம் தோன்றுவதற்குப் பகைவன்; 8. விசுவாசித்து+இணை+அரும்+திருத்தாள்; 9. பேசும்+ஐக்கியம்; 10. பேரின்பம்+மொய்த்தல்=பேரின்பமடைதல்; 11. வாழாவிட்டால்; 12. மேலுலகத்திற் குரியவராக; 13. யான்+எனது+என+அறல்; 14. தலைவனாகிய இறைவனை.

31. சுயநீதி

[''அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்களின் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநிலைக்குக் கீழ்ப்படியாதிருக் கிறார்கள்'' என்னும் விவிலியப் பகுதியே இத்தலைப்புப் பாடல்களுக்கு அடிப்படை என்பதனை ஆசிரியரது 'உரோ 10_3' என்னும் எண் குறிப்பு உணர்த்தும். சுயநீதியை விட்டொழிக்க வேண்டும் என இப்பகுதியில் வலியுறுத்தப்படுகிறது].

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. அத்த னோடே சமாதான மாவதும்
ஆவி வரப்பிர சாதமுண் டாவதும்
சுத்த ஜீவியஞ் செய்திற னாவதும்
சுயநீதி முற்றினும் விட்டிடி னல்லவோ.

2. அட்ட படிக ளேறிமே லாவதும்
அஞ்சு மடக்கியாள் கிறிஸ்தவ னாவதும்
துட்ட வலகை[1] மேற்செய மாவதும்
சுயநீதி முற்றினும் விட்டிடி னல்லவோ.

3. வாதுண்ட நெஞ்சி லன்புண் டாவதும்
மற்ற மனிதர்க் குபகாரி யாவதும்

வேலும் வாளும் போலுமை வருத்து
மேமனச் சாட்சிகிடீர்.

6. காரண யேசு கிறிஸ்துவை யறிந்து
கதிவழி கூடீரேல்
மாரண[4] வ க்கை வயப்பட் டலற
வருமே யையோகிடீர்.

7. நீதி யிரவிச் செட்டை[5] நன்னிழற்கீழ
நிலைகொண் டொழுகீரேல்
ஜோதி மகிழ்ச்சி சுகமுயல் விழந்தே[6]
துயர முறுவீர்கிடீர்.

8. தத்துவம் மூன் று[7] மந்திரே யாப்போல்
தரித்து நிலையீரேல்
எத்துவம் பன்னோ வடைநர கன்றோ[8]
எய்திட லாகுங்கிடீர்.

9. குள்ளப் பத்த னனையரட் சணியங்[9]
கொண்டு முயலீரேல்
விள்ளற்[10] கரிய நித்திய வீடு
மேவ லாமோகிடீர்.

10. ஆயக்காரனை நிகரா யறிக்கை
அரற்றா[11] விடிலிறைவன்
நேயத் தோடீ[12] பாவவி மோசனம்
நேரலா காதேகிடீர்.

1. முயற்சி செய்வீர்; 2. தாள்+நிழற்கண்; 3. விடாது+ஊழி=யுகமுடிவில் விடாது; 4. கொலை செய்கின்ற; 5. கதிரவனாகிய திருக்குமாரனை; 6. சுகத்தைக் காணும் முயற்சியை இழந்து; 7. விசுவாசம், நேசித்தல், பின்பற்றல் ஆகிய தத்துவங்கள்; 8. எத்து+வம்பு+அன்னோ+அடை+நரகு+அன்றோ; 9. குள்ளப்பத்தன்+அனைய+ரட்சணியம்=குள்ளச் சக்கரியாசு மீட்படைந்ததைப் போன்று; 10. கூறுவதற்கரிய; 11. கூறா விட்டால்; 12. நேயத்தோடு.

33. விசுவாசக் குறத்தி

[தம்மை இறை விசுவாசப் பற்றுறுதி மிக்க குறத்தியாகப் பாவித்து இப்பதிகத்தை ஆசிரியர் பாடியுள்ளார். ''நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன்; விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்'; என்னும் திமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபப் பகுதியே இப்பதிகத்துக்குத் தூண்டுதல் எனத் தலைப்பினருகில் காணப்படும் எண் குறிப்பால் உணர முடிகிறது.]

ஆசிரிய விருத்தம்

1. விக்கிர கத்தை மெய்ச்சி வீம்புகள் பலவாய்ப் பேசி
வக்கிர பழைய பாம்பை[1] மகிழவை குறத்தி யல்லேன்;
சக்கிர வர்த்தி யேசு தாரணிக் கெழுதல் கூறிச்
சுக்கிர[2] னுதயங் காட்டுந் தொழிலனை குறத்தி யேனே.

2. நீதிபே தகமா யன்பு நெஞ்சிலாப் பகையாய் நானா
ஜாதிபே தத்தீங் கோதிச் சரிந்திடுங்[3] குறத்தி யல்லேன்;
சூதிபே[4] தகத்தைக் காட்டித் தொழிலிழி வெனலை யோட்டி
ஆதிபே ரெங்குங் கந்த[5] மடிக்கநில் குறத்தி யேனே.

3. மின்னிய லொத்த வாழ்வை மெய்யென மயக்கிப் பத்தி
நன்னிய லலங்கு சிந்தை நழுவவை குறத்தி யல்லேன்;
பொன்னிய லொழுக்க மூட்டிப் பொன்னகர் வழியே தீட்டி
மன்னிய லெவர்க்கும் வாய்க்க வருந்திடுங் குறத்தி யேனே.

4. மூதலிப் பற்ற கர்மப் பாலினை[6] முழங்கிச் சொல்லி
பாதலி[7] பின்னே செல்லப் பண்ணிடுங் குறத்தி யல்லேன்;
சாதலி னின்று மாந்தர் தப்பிநித் தியமேல் வீட்டில்
போதலி னுதவி செய்யும் பொறுப்புறுங் குறத்தி யேனே.

5. சீஷரின் வாழ்வை யன்று திரண்டகைப் பொருளா சிக்கும்
கோஷரின்[8] கூட்ட மெய்ச்சிக் கூறிடுங் குறத்தி யல்லேன்;
தோஷரின் பவநோய் போக்கித் தூய்மையீ குரவன் போற்றி[9]
போஷரின்[10] குறைவை மாற்றும் புதுமைசேர் குறத்தி யேனே.

6. சங்கர னனுஷன் மார்த்தன்[11] சார்ந்திடு பசவ னாதி[12]
வெங்கர வலகைப் போதர்[13] விரை கொளுங் குறத்தி யல்லேன்;
பொங்கர[14] வழியச் சீவன் புண்ணிய தியாகம் செய்த
அங்கர[15] கிறிஸ்து போத மமர்ந்துரை குறத்தி யேனே.

7. விப்பிர மகம தீய[16] மிரட்டுபாப் பியபுத் தத்தால்[17]
தப்பிரம் மியக்கே டாகிச் சலித்திடுங் குறத்தி யல்லேன்;
எப்பிர மத்தின் மேலாயி லங்கிய யேசு கிறிஸ்து
சுப்பிர னுபதே சத்தாற் சுகமுறுங் குறத்தி யேனே.

8. கற்றதை மறைத்து நெஞ்சிற் கபடமே புகுத்தி நன்மை
பெற்றதை மறந்து கேடே பேசிடுங் குறத்தி யல்லேன்;
விற்றதைச் செம்பால்[18] சிந்தி மீண்டவ னாலி ரட்சை
உற்றதை யுயர்த்திக் கூறி யுவந்திடுங் குறத்தி யேனே.

9. பீடைகொண் டுசாவி னோரைப் பேய்க்குல வாய்க்குட் போக்கி
மூடை[19] கொண் டொழியச் செய்யும் மூடஞ்சேர் குறத்தி
யல்லேன்;
ஆடைகொண் டாட்டுசீத மகற்றனேர் கிறிஸ்தைக் காட்டி
பாடைகொண் டவர்க்கு[20] மாற்றல் பயப்பிக்குங் குறத்தி
யேனே.

10. பூதியம்[21] மனுடர் மற்றும் பொருளுயிர் தெய்வ மென்று
சூதியம்[22] பிடுபுன் னிச்சாத்[23] தொழிற்செயுங் குறத்தி யல்லேன்;
ஆதியம் பரனே தேவன் அகிலமுஞ் சிருஷ்டிப் பென்றே
சோதியம் மறையொத் தோதுஞ் சுதந்தரக் குறத்தி யேனே.

1. பாவத்தில் வீழ்த்திய பேயாகிய பாம்பை; 2. வெள்ளியாகிய கிரகம்; 3. சாதித்திடும்; 4. சூது என்பது சூதி எனத் திரிந்துள்ளது; 5. வாசனை 6. வினை; 7. பாதகம்; 8. கூக்குரலிடும்; 9. இறைவனைப் போற்றி; 10. வாழ்விப்பவரின்; 11. பிற சமயம்; 12. விருப்புள்ளவனாகி; 13. பேய்த்தன்மை கொண்ட போதகரை; 14. தீமை; 15. அழகிய அருட்கரங்களையுடைய; 16. இசுலாமிய; 17. கத்தோலிக்கர் போதகத்தால்; 18. இரத்தம்; 19. பாவமூடை; 20. சாவைக் கொண்டவருக்கும்; 21. புனிதம்; 22. சூது+இயம்பிடு; 23. புன்+இச்சா = தீய இச்சை.

34. காளம்

[''எக்காளத்தை எடுத்து உன் வாயிலே வை'' என்னும் ஓசே ஆகமப் பகுதியின் வெளிப்பாடே இப்பகுதியின் உள்ளீடு எனத் தலைப் பினருகில் உள்ள எண் குறிப்பால் அறியலாம். இறைவனின் அருளாற் றலும் அருட்செயல்களும் இப்பதிகத்தால் புலனாகின்றன.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. ஆதி யுருவாச்சென் றூதடா காளம்
அகிலம் புரந்ததென் றூதடா காளம்
சோதி வெளியாச்சென் றூதடா காளம்
தொல்லை யொழிந்ததென் றூதடா காளம்.

2. பாவந் தொலைந்ததென் றூதடா காளம்
பரிசுத்தம் வாச்சுதென் றூதடா காளம்
சீவன் சிறந்ததென் றூதடா காளம்
திருவரு ளுற்றோ மென் றூதடா காளம்.

3. இச்சை யிறந்ததென் றூதடா காளம்
இன்பம் பிறந்ததென் றூதடா காளம்
உச்சைமா[1] நிலையென் றூதடா காளம்
உரைக்கரும்[2] நித்தியமென் றூதடா காளம்.

4. ஒருமை யானோமென் றூதடா காளம்
ஒரேதிரித் துவத்தோடென் றூதடா காளம்
அருமை யடைந்தோமென் றூதடா காளம்
அத்தன்[3] சமூகத்திலென் றூதடா காளம்.

5. தத்துவந் தாண்டி[4]யென் றூதடா காளம்
சந்தோட[5] தற்பரனென் றூதடா காளம்
அத்துவ[6] மைக்கியமென் றூதடா காளம்
அல்ல பொருட்கலப்பென் றூதடா காளம்.

6. முன்னிலைமை யுன்னிநின் றூதடா காளம்
மோசப் பிசாசொடுங்க வூதடா காளம்
நன்னிலைமை வாய்த்ததென் றூதடா காளம்
நல்லவிசு வாசத்தாலென் றூதடா காளம்.

7. வாச்சுதிரட்சிப் பென்[7] றூதடா காளம்
மனந்திரும் பியதாலென் றூதடா காளம்
போச்சு தாக்கினையென்[8] றூதடா காளம்
புண்ணிய மூர்த்தியாலென் றூதடா காளம்.

8. அறிவைக் கடந்தோனென் றூதடா காளம்
அதீதப் பொருளென் றூதடா காளம்
பொறிவை கடிகொன்றானென்[9] றூதடா காளம்
பூதலமெல் லாந்தொனிக்க வூதடா காளம்.

9. தத்துவ மசிமயக்கென்[10] றூதடா காளம்
சகசீவே சன்வேறென்[11] றூதடா காளம்
எத்துவம் பகற்கவென்[21] றூதடா காளம்
இயேசுவே கதிவழியென் றூதடா காளம்.

10. வேதமே சத்தியமென் றூதடா காளம்
விளக்குபொரு ளியேசுவென் றூதடா காளம்
போதமே காளமென் றூதடா காளம்
புவியின்பம் பொய்மையென் றூதடா காளம்.

1. உச்சியிலுள்ள சூரியன்; 2. 'உரைக்க+அரும்' என்பது இடைக் குறை பெற்று 'உரைக்கரும்' என வந்துள்ளது; 3. இறைவன்; 4. தத்துவம்+தாண்டி; 5. விருப்போடு; 6. இறை இயல்பு; 7. வாச்சுது+இரட்சிப்பு+என்று; 8. போச்சுது+ஆக்கினை+என்று; 9. பேயாகிய பாம்பினைக் கொன்றானென்று; 10. தத்துவமசி+ மயக்கு+என்று; 11. சகசீவேசன்+வேறு+என்று; 12. பிற தத்துவங்களை விலக்குக என்று.

35. அம்மானை

[தமிழகத்தில் வழங்கும் அம்மானைப் பாடல்களை மனத்திருத்தி இறைவனின் திருவருட் செயலைப் பாடிப் புகழ்ந்த பதிகமே இது. அதற்கேற்ப, பாடல்களின் ஒவ்வோர் அடியும் 'அம்மானை' என முடிவு பெறுகிறது].

வெண்செந்துறை

1. ஆதி யனைத்து மமைத்தனர்கா ணம்மானை
ஆதரித்துக் காப்பாற்ற யாளுகின்றா ரம்மானை
நீதி நிறைவேற்றி நேசித்தா ரம்மானை
நிச்சய வாக்கு நிகழ்த்தினா ரம்மானை.

2. எல்லா முடைய விறைவர்கா ணம்மானை
ஈயுமி ரட்சை யிலவசங்கா ணம்மானை
சொல்லா லளக்கரிய தூயர்கா ணம்மானை
தோத்திர மேற்கச் சுதந்தரர்கா ணம்மானை.

3. ஒன்றே யவதார முண்மைகா ணம்மானை
உற்ற விசுவாச மொண்டும்பே றம்மானை
நன்றே தினம் புரிதல் ஞானங்கா ணம்மானை
நன்மை செயார் ஞானரெனல் நாணங்கா[2] ணம்மானை.

4. ஆசை சிலுவை யறைவரன்ப[3] ரம்மானை
அல்லற்கட் காசையென்ப தாணிவே[4] ரம்மானை
பூசையுருவிற் பொருத்தற்புலை யம்மானை
பூண்டாவி யுண்மையினாற் பூட்டற்[5] சுத்த மம்மானை.

5. பேசா மவுனம் பெருமகந்தை யம்மானை
பேசா தனபேசற் பெரும்பாவ மம்மானை
ஈசா னிரட்சை யியம்பறகட னம்மானை
இயேசுபரன் மாதிரியே யேற்றதிம்பர்க்[6] கம்மானை.

6. ஆத்துமா வெல்லா மொன் றல்லகா ணம்மானை
அநித்தியந் தான்சிருஷ்டிப் பத்தனையு மம்மானை
ஆத்துமா வாதிநித்திய மாகுங்கா ணம்மானை
ஐய ரநாதிநித்திய ரா[7] குவ ரம்மானை.

7. கண்டதெலாந் தெய்வமா காதுகா ணம்மானை
கர்த்தர் படைப்பாகார் காரணர்கா ணம்மானை
விண்டதெலாம் வேதமல மெய்மறையொன் றம்மானை
மெலிவித யந்தேற்று மியல்[8] சாட்சி யம்மானை.

8. ஈச னொருவனுண் டெவ்வுயிர்க்கு மம்மானை
இல்லை யெனல்மூட மிறுமாப்பா மம்மானை
நீசக் கடியுறவு[9] நித்தியகே டம்மானை
நீங்கினர்க்கே மெய்வேத நிச்சயமா மம்மானை.

9. மன்னன் கிறிஸ்துடனே மாண்டுயிர்த்தோ மம்மானை
வாழுது யிரவர்க்குள்[10] மாட்சிமையா யம்மானை
முன்னன் பிறைவரன்பு[11] மோசமற்ற தம்மானை
முளைத்ததிற் பின்னன்பு[12] மூன்றுங்கா ணம்மானை.

10. காய மகிழ்ச்சி கடைக்குதவா தம்மானை
காதலிக்கிற் பாரங் கதிப்பாகு[13] மம்மானை
தூய வுளமடைதல் சொல்லரும்வாழ் வம்மானை
துய்யநிலை விஸ்வாசஞ் சூழ்விக்கு மம்மானை.

1. விசுவாசம் அடைகின்ற; 2. வெட்கத்திற்குரிய; 3. இறைவன் மீது கொண்டுள்ள ஆசை என்னும் சிலுவையில் தம்மை அறைந்து இணைத்துக் கொள்வர்; 4. அல்லல்கட்கு+ஆசை+என்பது+ஆணிவேர்; 5. இணைப்பு; 6. இவ்வுலகில் உள்ளோர்க்கு; 7. ஐயர்+அநாதி+நித்தியர்; 8. இதயத்தைத் தேற்றும் இயல்புடைய 9. தீயஉறவு; 10. வாழுது+உயிர்+அவர்க்குள்; 11. முன்+அன்பு+இறைவர்+அன்பு; 12. பின்+அன்பு; 13. சுமையதிக மாகும்.

36. விசுவாசப் பாம்பாட்டு

[பாம்பாட்டிச் சித்தரின் பாடல் வடிவத்தை மனத்திருத்திப் பாம்பை அழைத்து ஆடுமாறு கூறுவது போல், இறைவன் திருவருட் செயல்களையும் அருட்கொடைகளையும் நினைந்து போற்றும் பகுதியாக இஃது அமைந்துள்ளது.]

குறள் வெண்செந்துறை

1. ஆதி மத்தி யாந்த ரஹித[1]
அற்புத வன்பிறை[2] நல்கி ரட்சையால்
தீதி ழிந்து போச்சு தென்றே
சிறப்புட னாடுவிசு வாசப் பாம்பே.

2. கருமத்தி னாலே கீழ்ப்ப டிதலைக்
கற்றுநில் லாதபொறி புலன்க ளெல்லாம்
திருமத்தி யஸ்தன் புண்ணி யத்தினால்
சீர்ப்பட் டடங்கியதென் றாடு பாம்பே.

3. தத்துவ சுவரூப விசார ணையினால்
சத்திய மறிந்துவிடு தலைபெ றாமல்
எத்துவம் பிற்சுழன்ற[3] நிற்பர் தங்கள்
இயேசுபர னாற்போச்சென் றாடு பாம்பே.

4. உலக ஞான மயக்கச் சுழியில்
உள்ள மமிழ்ந்திநல் விறை யோடு

கலக மிட்ட விழிந்த வியல்பு[4]
கதிர்ப்பனி[5] யானதென் றாடு பாம்பே.

5. அந்தக் கரணங்களி லடர்ந்தி ருந்த
அருவ ருப்பான கன்ம ஷங்கள்
சொந்த வுயிர்த்தி யாகஞ் செய்த
சுவாமியா லொழிந்தவென் றாடு பாம்பே.

6. ஆசை வனவழி முன்ன ரலைந்த
அகவிந் திரியங்க ளிடைவி டாமல்
பூசை வழியிற் பதிந்தி லங்கும்
பூரிப்பு வாய்த்ததென் றாடு பாம்பே.

7. ஞாயப் பிரமாண விசார ணையினால்
நன்கு விளங்கிய பாவ நிலைமை
நேய சுவிசேஷ விசார ணையினால்
நீங்கிப் போனதென் றாடு பாம்பே.

8. மூன்றா லிரண்டைக் கண்டதி லொன்றின்
முக்கிய மகிமைச் சோதி கண்டு
சான்றான் மைகொண்ட மேன்மை நினைந்து
தலையை யுயர்த்திநின் றாடு பாம்பே.

9. விட்டில் விளக்கொளி வீழ்ந்தி றப்பபோல்
மேதினிச் சிற்றின்பப் பகட்டிற் சாடி
மட்டி லமையாதிங் குற்றுழல் கையில்[6]
மன்னன்யேசு மீண்டதுன்னி யாடு பாம்பே.

10. கண்டுபின் னொழியும் புகையைப் போன்று
கழியும் வாணாட்[7] சுலப மாக
தொண்டு புரியத் தடுத்தாட் கொண்ட
சுந்தரனைப் போற்றிநின் றாடு பாம்பே.

11. பாவக் களையைப் பிடுங்கி யெடுத்து
பத்திப் பயிரைத் தினமுங் காக்கும்
தேவ குமாரன் செயலைப் புகழ்ந்தே
திருச்சபை காண் கநின் றாடு பாம்பே.

12. அஞ்ஞான மங்கை மனந்தி ரும்பி
ஐயன் றிருவழகு கண்டு வாழ

மெஞ்ஞான தோகை தோத்திரம் பாட
    விச்சித் திரமாக[8] வாடு பாம்பே.

13. பூமி யடங்கலு மொன்று போலே
    புண்ணிய மூர்த்திசெம் பாதம் பழிச்ச
நேமி யாசார மறவும் நீங்கி
    நிருமல மறைமுறை யாடு பாம்பே.

14. கட்புலன் காணொணாப் பேரொளி தன்னை
    கடைகெட்ட மனுடர்தம் மனது திரும்பி
உட்புலன் கொண்டு கண்டு தேற
    உற்சாக மாயெழும்பி யாடு பாம்பே.

15. திருமறைக் கூடை மண்டல மிட்டு
    தெருவேறி னாபே சித்தாக் கிணங்கி
ஒருமறை வின்றிக் களறி நின்றே
    உல்லாசங் கொண்டிநீ யாடு பாம்பே.

16. ஞான போனது பான முண்டு
    நல்லுடம் பாயாசந் தீர்த்துக் கொண்டு
மான திரித்துவச் சீரடி தன்னை
    மகிழ்ச்சி யுடன்போற்றி யாடு பாம்பே.

17. வேருக்குத் தக்க கனியு முண்டு
    விசுவாசத் தினுக்கேற்க நற்செய லுண்டு
பேருக்கு கிறிஸ்தவர் கடைசி வெட்கம்
    பெறுவதே கெதியென் றாடு பாம்பே.

18. நாலு மாறுங் கற்பனைச்[9] சாரம்
    நாத னுரைத்தன னிரு சட்ட மாக
மேலும் மேலுமதைக் கற்று மொழுகார்
    மெய்ப்பல விழப்பரென் றாடு பாம்பே.

19. முத்தி மேல்வீடு புகுதும் மட்டும்
    மொய்யிடை[10] யூறியேசு துணையால் வென்றே
சித்தி யலங்கு நடைவி ளங்கத்
    தினமூக்கம் வேண்டியதென் றாடு பாம்பே.

20. சாரஞ் செடியா லேற்கா விட்டால்
    தழைத்துக் கனிகொடுக் காதே கொடிகள்

ஆரம் பம்போற் கிறிஸ்தி னிலைக்கார்
ஆவிகனி கொடுக்காரென் றாடு பாம்பே.

21. கானந்த மாகுங் கிறிஸ்து வருகை
காட்டுது பலகுறி காத்திருப் போரே
ஆனந்தப் பொன்னுல கிற்பங் கடைவார்
அல்லார்க்குக் காரிருளென் றாடு பாம்பே.

22. கூறிய முதுமூலத் துக்க நாதியாம்[11]
குணஞ்செயற் பரிமள வாச தேவனைத்
தேறிய சுவிசேஷ ஞானா னந்தத்
தீங்கனிக் கீதம்பாடி யாடு பாம்பே.

23. சாயுச் சியம்திரு வாணத்தின் மேலாம்
தளங்கும் பரலோக வின்ப வீட்டில்
மேயும் நித்திய ஜீவனை நாடி
மேனோக்கி நம்பிக்கையோ டாடு பாம்பே.

24. சாவு சாவாமை யாக மாறி
சச்சிதா னந்ததேவன் சந்நிதா னத்தில்
தாவு சிலாக்கிய முடலுயி ருக்கும்
சாரும் நிசமாயென் றாடு பாம்பே.

25. மூசா கோற்பாம்பு[12] வேற்றுப் பாம்பை
முழுதும் விழுங்கியபோற் பழைய வரவைக்
கூசா தழித்தியேசு சித்தனார் கைக்குள்
கொஞ்சிக் கொஞ்சி விளையாடி யாடு பாம்பே.

1. உயர்ந்த; 2. அற்புத அன்பு இறை; 3 எத்து வம்பில் சுழன்ற; 4. இழிந்த இயல்பு; 5. கதிரவன்முன் பனிபோல; 6. இங்கு + உற்று + உழல்கையில்; 7. வாழ் + நாள்; 8. வியப்பாக; 9. பத்துக் கட்டளை 10. துன்பத்தின் இடையில்; 11. முதலும் முடிவுமற்ற; 12. மூசாவின் கோலாகிய பாம்பு.

37. ஞானவெற்றியுந்தி

[திருவாசகத்தில் வரும் திருவுந்தியாரை மனத்திருத்திப் பாடப் பட்ட பகுதியாகும். பெண் குழந்தைகள் உந்தி பறத்தல் என்ற விளை யாட்டு விளையாடும் போது பாடப்படுகின்ற பாடலே திருவுந்தியா கும். திருவாசகத்தில், முப்புரம் எரித்தமை சுட்டப்படுவதுபோல் இப்பகுதியில் ஐம்புரம் அழித்தது கட்டப்படுகின்றது. திருவுந்தியாரில் 19 கலித்தாழிசைப் பாடல்கள் அமைந்திருக்க, இப்பகுதியில் 10 கலித் தாழிசைகள் அமைந்துள்ளன]

கலித்தாழிசை

1. ஆல மருத்திய[1] ஆங்காரச் சாத்தானைக்
கோல மெடுத்தழித்தா னுந்தீபற
குமர பரினியே சுத்தீபற.

2. மிஞ்சிய முன்னுலகம் மூர்க்க மடங்கவெள்ளம்[2]
அஞ்ச வனுப்பிவென்றா னுந்தீபற
அருந்தய வாளனென் றுந்தீபற.

3. பொல்லாத வைம்புரம் பூண்டக்கி னிக்களித்தான்[3]
சொல்லாப் புகழினனென் றுந்தீபற
தோத்திர கீர்த்தனனென் றுந்தீபற.

4. அஞ்ஞானக் கூட்டத்தி லாபிரகா மைமீண்டான்
மெஞ்ஞான சோதியென் றுந்தீபற
மெய்வாக்குத் தத்தனென் றுந்தீபற.

5. தார்மே லிஸரலரைத் தான்மீட்க வற்புதமாய்
பார்வோனை மாய்த்தானென் றுந்தீபற
பாவப்பரி காரியென் றுந்தீபற.

6. சாதிக ளின்மேலே தாவீதன் வெற்றிபெற
ஆதியாய் நின்றானென் றுந்தீபற
ஆச்சரிய ரட்சகனென் றுந்தீபற.

7. கோட்டப்ப பிலோனைக் குப்புறத் தள்ளியே
கூட்டினன் யூதரையென் றுந்தீபற
குவலய மீட்பனென் றுந்தீபற.

8. தரணித னுவெடுத்துச் சாபாக்கி னைதடுத்து[4]
நரர்கெதி யானானென் றுந்தீபற
நம்பினோர் வாழ்வாரென் றுந்தீபற.

9. பாவமன் னிப்பும் பரிசுத்த ஜீவியமும்
மேவவழி யானானென் றுந்தீபற
மேன்மைப் பராபரனென் றுந்தீபற.

10. நித்திய ஜீவ நிலைமை யளிக்கின்ற
சத்திய கர்த்தனென் றுந்தீபற
தலைகழற் சூடிநின் றுந்தீபற.

1. விஷங்கொண்ட; 2. நோவாப் பெருவெள்ளம்; 3. அக்கினி மழை; 4. சாவாகிய துன்பத்தினைத் தடுத்து.

38. பரங்கி ச்ரக்ஷியம்

[தோழி இறைவனுக்குச் சான்று சொல்வதுபோல் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது.]

குறள்வெண் செந்துறை

1. ஈடேற்று மிரக்ஷக னெவரோ வென்றாள்
இன்பத்திரு வவதார புருஷ னென்றாள்
காடேற்று மலகைவெல்[1] கர்த்த னென்றாள்
கதிகத[2] வந்திறந்த கரத்த னென்றாள்.

2. கருணை நதிபாயுங் கண்ண னென்றாள்
கவனித்தெம் ஜெபங்கேள் காத னென்றாள்
அருணை[3] வெள்ளைதிறத் தழக னென்றாள்
அன்பே யுருவான வண்ண[4] லென்றாள்.

3. தேவா லயமதின் சிறப்புக ளென்றாள்
செழிபலி பீடந் திருவிளக் கென்றாள்
ஒவா யசுவென்றா[5] ளுண்மை யென்றாள்
ஒன்றுமூன் றொன்றான வொளிகா ணென்றாள்.

4. தள்ளா தணைக்குந்திருத் தாள னென்றாள்
தலைகொளற் கேற்ற சருவேச னென்றாள்
விள்ளா[6] மகோன்னத விற்பன னென்றாள்
மீட்பின் மகிமை விளக்க னென்றாள்.

5. ஜனன மரணமறு தனிய னென்றாள்
சகளீ கரித்த[7] தயாள னென்றாள்
மனன முறற்கினிய[8] மறைய னென்றாள்
வந்துலகஞ் சிறைமீண்ட மன்ன னென்றாள்.

6. சாவாற் சாவைவெல் சத்த னென்றாள்
சாஸ்வதா னந்த சயம்ப[9] னென்றாள்
ஏவாள் குலக்கொழுந் தெம்பிரா னென்றாள்
எத்தேச மெக்குலமு மேத்துவோ னென்றாள்.

7. மூவித ஸ்நான முறைய னென்றாள்
முத்தி வழிகாட்டும் முன்னோ னென்றாள்
பாவி தன்னிடம்வரில் பகையா னென்றாள்
பரிசுத்தம் பாக்கியம் பகர்வே னென்றாள்.

8. என்றும் பிழைத்திருக்கு மியேசு வென்றாள்
இடும்பர்[10] மதவழிவல் லேந்த லென்றாள்

பொன்றும் நரர்க்குறுதி புகழ்வோ னென்றாள்
பூமி தனிச்செங்கோல் புரிவோ னென்றாள்.

9. தேவ னென்றாடேவ[11] சொருப னென்றாள்
செப்பருந் தந்தைசுதன் சீராவி யென்றாள்
ஜீவர்க் கதீத[12] ஜெகோவா வென்றாள்
திருவிரு வேறுபாட்டுச் செல்வ னென்றாள்.

10. புறமதங் காணாத புண்ணிய னென்றாள்
பொய்மையழி மெய்மைச் சம்பூரண னென்றாள்
இறமதத் தார[13]ழைத்தா ளிரக்க னென்றாள்
எனக்குமெய் யாஸ்தியான வெந்தை யென்றாள்.

1. பேயை வெல்கின்ற; 2. பரலோக கதியைத் தர; 3. கதிரவன் நிறமுடைய; 4. உருவான+அண்ணல்; 5. யசு+என்றாள்; 6. கூறவியலாத; 7, அனைவருக்கும் உதவும்; 8. மனப்பாடம் செய்வதற்கு இனிய; 9. தன்னிலே நிலைபெறுவதற்குரியவன்; 10. தீயவர்; 11. என்றாள்+தேவ; 12 வாழ்வோர்க்கு மேலானவன் 13. பிற சமயத்தார்.

39. ஞானாமிர்தம்

['கோனே! ' என விளித்து நல்ல மேய்ப்பனைக் காட்டி, நல்லறிவு கொளுத்திச் சிறந்த ஞானச்செல்வத்தைப் பெறத் தூண்டுமாறு இப் பதிகம் அமைந்துள்ளது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. நித்திய மேய்ப்பனை நோக்கு கோனே
நிறைபிச காதாடு[1] நடத்து கோனே
சத்திய மேய்ச்சலைக் காட்டு கோனே
தண்ணீர்த் துறையி லமர்த்து கோனே.

2. இடுக்க வழியேக முடுக்கு[2] கோனே.
எப்போதும் முன்னே நீ செல்லு கோனே.
கெடுக்க வருஞ்சிங்கந் தாக்கு கோனே
கெட்டிவிசு வாசநிலை நிற்றி[3] கோனே.

3. காய மகிழ்ச்சி கனவு கோனே
கதியுறு வாழ்வே நியதி கோனே
தூய திரேகம் முயிர்க்குங் கோனே
சுவிசேஷ நம்பிக்கை போற்று கோனே.

4. அறவாழி யந்தணனி யேசு[4] கோனே
அகிலம் புரக்கும்புண் யேசன் கோனே
இறவாழித்[5] தெப்ப மவன்றாள் கோனே
எக்காள மூதிதை யெங்குங் கோனே.

5. ஒருபிறப் பாலிரு சாவு[6] கோனே
ஒழியாத யாதனைப்[7] பவ்வங்[8] கோனே
இருபிறப் பாலொரு மிர்த்து[9] கோனே
என்றென்றும் பேரின்ப வாழ்க்கை கோனே.

6. நன்மைக்குத் தின்மைபேய்ச் சிந்தை கோனே
நன்மைக்கு நன்மை நரசிந்தை[10] கோனே
தின்மைக்குத் தின்மைபசுச் சிந்தை கோனே
தீமைக்கு நன்குதேவ சிந்தை கோனே.

7. சீவ னுனக்கு வேண்டுகிற் கோனே
செத்தேநீ போகவேண்டும் நிச்சயங் கோனே
தேவனப் போதுதானுன் சீவன் கோனே
தெளியார்சந் தேகரிந்த ஞானங் கோனே.

8. அறிவு போதாது கேட்டி கோனே
அரிய வொழுக்கமேமெய் யறிவு கோனே
மறிவு[11] நல்லதன் றுணர்வு[12] கோனே
மனந்திரும் பினர்க்கே வாழ்வு கோனே.

9. அகத்து நூற்கே புறத்துநூல் கோனே
அடையா ளம்பாவ மல்லகாண் கோனே
இகத்து மதம்நமக் கில்லை கோனே
இயேசுவேநம் புண்ணியா தரவு கோனே.

10. செல்வத்திற் சிறப்பு ஞானங் கோனே.
தினமுங் காக்குமுனை ஞானங் கோனே
செல்வம்நீ காக்க வேண்டுங் கோனே
சிதையும் ஞானஞ்சிதை யாது கோனே.

1. விலகிப் போகாமல் ஆடுகளை; 2. செலுத்துகின்ற; 3. நிலை நிறுத்தும்; 4. அந்தணன்+இயேசு; 5. இறவு+ஆழி = இறப்பாகிய கடல்; 6. ஒரு பிறப்பால்+இருசாவு; 7. துன்பம்; 8. கடல்; 9. இரு பிறப்பால்+ஒருமிர்த்து; ஒருமிர்த்து = ஒருமித்து = ஒன்றாகி; 10. மனித சிந்தை; 11. மறுத்தல்; 12. நல்லது+அன்று+உணர்வு.

40. அதிசயப்பத்து

[திருவாசகத்தில் வரும் 'அதிசயப்பத்து' என்னும் பதிகத்தை மனத்திருத்திப் பாடப்பட்ட பாக்களே இப்பகுதியில் இடம் பெறு கின்றன. இறைவனின் அருட்செயல்கள் எவ்வெவ் வகைகளில் எல்லாம் அதிசயிக்கத் தக்கனவாய் அமைந்துள்ளன என்பது இப்பகுதி யில் சுட்டப்படுகிறது.]

வெண்செந்துறை

1. இன்ப வருவுருவா யெங்கும் நிறைந்த கர்த்தன்
துன்ப புவிகுருவாய்த் தோன்ற லதிசயமே.

2. செப்ப வரிய சிறப்புடையா னீனநரர்
தப்ப தகன்றுய்யத்[1] தாழ்ந்த ததிசயமே.

3. தேனூறிப் பாயுந் திருத்தாளன் வெம்பாவச்
சூனூறி யர்பிணையாத்[2] தோன்ற லதிசயமே.

4. விண்ணாடர் போற்றும் விமலர் குருபரனாய்
மண்ணாடர் நல்லாக[3] வந்த ததிசயமே.

5. பாவ மொழித்தெம்மைப் பாக்கியமேல் வீடேற்றத்
தேவ னவதாரஞ் செய்த ததிசயமே.

6. நீதி யெமக்காக நித்தன் குருசேறி
வாதி தரஞ்சிதைத்த மாவன் பதிசயமே.[4]

7. தீய பவம்பொறுத்தென் சிந்தை புதிதாக்கி
தூய வழிசெலுத்தல் சுத்த வதிசயமே.

8. தஞ்ச மெனக்காகித் தட்டலைத நீக்கிமனக்[5]
கிஞ்சந்[6] தொலைத்தாள் கிருபை யதிசயமே.

9. சுயநீதி கந்தையெனச்[7] சொல்லிமா தேவ
நயநீதி தந்தருளும் நட்போ ரதிசயமே.

10. வாடித் தியங்காமல் வன்மனங்கா டோடாமல்
தேடியிரட் சித்தாணற் செய்கை[8] யதிசயமே.

1. தப்பு+அது+அகன்று+உய்ய ; 2. குற்றத்திலே திகழ்வோருக்கு இணையாக ; 3. நல்+ஆக=நல்ல நெஞ்சத்தில் ; 4. மா+அன்பு+அதிசயமே ; 5. தட்டு+அலைதல்+நீக்கி+மன ; 6. சிறுமை ; 7. தீயதென. 8. இரட்சித்து+ஆள்+நற்செய்கை

41. ஞானோபதேச விம்பில்

[''தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம் ; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல; அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல'' என்னும் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபப் பகுதியின் அடிப்படையில் இஃது எழுதப் பட்டிருப்பதைத் தலைப்பின் அருகில் உள்ள எண் குறிப்பைக் கொண்டு உணரலாம். விம்பில் எனில் விம்மி ஒலித்தல் எனப் பொருள் கொள்ள லாம். கும்மியடி என முடிவுறும் பாடல்களைப் போல் விம்பிலடி என முடிவுறுவது மலையாள மொழிச் செல்வாக்காக இருக்கலாம்; அல்லது கன்னியாகுமரி வட்டார நாட்டுப்புற வியற்கூறாக இருக்கலாம்.]

கலித்தாழிசை

1. சச்சிதா னந்த தயாபரன்[1] மூர்த்தியாய்
இச்செகம்[2] வந்தானென் றிம்பிலடி
எம்பாவந் தீர்த்தானென் றிம்பிலடி.

2. காரண சற்குருவாய்க் காசினி சஞ்சரித்
தாரண மோதினனென்[3] றிம்பிலடி
அஞ்ஞானந் தீய்த்தானென் றிம்பிலடி.

3. புண்ணிய யாகம் புரிந்துல கத்தோருக்
கெண்ணிய முடித்தானென் றிம்பிலடி
இயம்பரு மன்பானென்[4] றிம்பிலடி.

4. ஆராமை தீர்க்க வழைந்தசம் பூரணன்
பேரா னடுக்கிலென்[5] றிம்பிலடி
பேதக மில்லானென் றிம்பிலடி.

5. அண்டிப் பிடித்தவ ரைம்பலன்[6] கைமேலே
ஒண்ட வருள்வானென்[7] றிம்பிலடி
உண்மைக் கதிபதியென் றிம்பிலடி.

6. மேட்டிமைக் கண்ணாதி விட்டோடச் செய்யதி
தாட்டிக போதகனென்[8] றிம்பிலடி
சத்திய சாட்சியென் றிம்பிலடி.

7. தானந் தவங்க டவிர்க்கா[9] நரர்பாவத்
தீனந் தொலைத்தானென் றிம்பிலடி
திருரத்தத் தாலேயென் றிம்பிலடி.

8. அறிவுமெஞ் ஞான மநாதிநா ளாகச்
செறிந்த களஞ்சியமென் றிம்பிலடி
தேவாதி தேவனேயென் றிம்பிலடி.

9. வேண்டுதல் வேண்டாமை வித்தக மாயுள்ள
ஆண்டா னமலனென் றிம்பிலடி
அனைத்துக்கும் மேலோனென் றிம்பிலடி.

10. பாவ வெறுப்பும் பரிசுத்த வாஞ்சையும்
தேவ னுடைமையென் றிம்பிலடி
சீர்செய லுள்ளோனென் றிம்பிலடி.

11. ஒருக்கா லிறையுதித் துன்னதஞ் சேறலொத்
தொருக்கால் பிறப்பிறப்பென்[10] றிம்பிலடி
உலகமர் மாக்களுக்கென் றிம்பிலடி.

12. மாற்றிப் பிறத்தல் மருவலிச் சீவனிற்றான்[11]
வேற்றுமை வஞ்சனையென் றிம்பிலடி
மெய்மறைநற் சாட்சியென் றிம்பிலடி.

13. தத்துவ வாராட்சி[12] தாரா தொருவருக்கும்
நித்திய ஜீவனென் றிம்பிலடி
நேரும்நம் பிக்கையாலென் றிம்பிலடி.

14. தோற்ற மொடுக்கஞ் சுயம்பான தேவனாலே
மாற்றமற் றாவதென் றிம்பிலடி
மாயையா லல்லவென் றிம்பிலடி.

15. திரிசிய மெல்லாஞ்[13] சிதையு மநித்தியம்
பிரியம்வைக் காதீரென் றிம்பிலடி
பேரருள் தேடுமென் றிம்பிலடி.

16. அறிவல்ல வந்த வறிவுக்கு[14] மேலாகும்
குறியான தேவனென் றிம்பிலடி
கும்பிட்டு வாழ்வீரென் றிம்பிலடி.

17. ஆத்துமாவல்ல வதற்குமே லாங்கடவுள்
தோத்திரஞ் செய்வீரென் றிம்பிலடி
சும்மா விராதீரென் றிம்பிலடி.

18. சும்மா விருத்தற் சுகமல்ல வூக்கமே
எம்மையுஞ் செம்மையென் றிம்பிலடி
இயற்கையுஞ் சாட்சியென் றிம்பிலடி.

19. இருக்காதி நால்வசனத் தேறுபொருணிச்சயம்[15]
பெருக்கருள் வேதமுர ணிம்பிலடி
பேசுமீ தஃதின்மே லிம்பிலடி.

20. மெஞ்ஞானஞ் சத்திய வேதச்சொல் மற்றவை
அஞ்ஞானங் கண்டறியென் றிம்பிலடி
ஆருயிர் தேய்முனமென் றிம்பிலடி.

21. நான்மறை யாறங்கம் நாட்டும் புராணங்கள்
சூன்முறை[16] பற்றீரென் றிம்பிலடி
சுருளுவீர் நாளையென் றிம்பிலடி.

22. முன்னிலைச் சுட்டொழிக்க முடியார்க் கத்துவிதப்
பின்னுரை யேதுக்கென் றிம்பிலடி
பேரருட் கிறிஸ்தைநம்பி யிம்பிலடி.

23. எட்டையா ராய்ந்துநில் யேசுவே நீவாழக்
கோட்டைவே றில்லையென் றிம்பிலடி
குணப்பட நாளிதுவென் றிம்பிலடி.

24. ஆடை யழுக்கனு காமற் சுனையூற்றில்
நீடித் துவைத்துடுத் திம்பிலடி
நிதமுஞ் சூட்சமாய்நின் றிம்பிலடி.

25. சிரசிற்கு டேற்காமற் றேய்ப்பாய் நறுந்தைலம்
பரமன் றிருச்சமுகத் திம்பி லடி
பாரக் கவலைகள்விட் டிம்பிலடி.

1. இரக்கமுள்ளவன் ; 2. இவ்வுலகம் ; 3. ஆரணம்+ஓதினன்+என்று=வேதம் அருளினான் என்று ; 4. இயம்பரும்+அன்பான்=கூறுதற்கு அரிய அன்புடையவன் ; 5. பேரான்+அடுக்கில்+என்று=அடுக்கடுக்கான பெயர்களையுடையவன் ; 6. ஐந்து பலன்கள் ;
7. ஒண்ட+அருள்வான்+என்று ; 8. போதகன்+என்று ;
9. தவங்கள்+தவிர்க்கா ; 10. பிறப்பு+இறப்பு+என்று ;
11. மறுபிறப்பில் ; 12. தத்துவம், ஆராய்ச்சி முதலியவை ;
13. செல்வச் சிறப்பெல்லாம் ; 14. அந்த+அறிவுக்கு+மேலாகும் ;
15. தேறுபொருள்+நிச்சயம் ; 16. சூழுகின்ற முறைகள் ;

42. அந்திக் காப்பு

[அந்தி எனில் இறுதி எனப் பொருள் கொண்டு, வாழ்வின் இறுதிக் காலத்தில் இறைவனே தம்மைக் காக்க வல்லவன் என எண்ணிப் பாடிய பத்து விருத்தங்களைக் கொண்ட பகுதியாக உள்ளது.]

எண்சீர் விருத்தம்

1. காரண னாகி யனைத்தும் படைத்தாள்[1]
கருணா கரனென் னந்திக் காப்பு[2]
ஆரண[3] மருளி யகத்தி னிருளை
அறுத்தாள்[4] பரனென் னந்திக் காப்பு
பூரண மாய்நம் பிக்கை மனதில்
பொலியச் செய்தா னந்திக் காப்பு
தீரண மாகச்[5] சிலுவை யேறிச்
செயித்தா னிசமென்[6] னந்திக் காப்பு.

2. பாதக மொழிக்கத் தாரணி யுதித்துப்
பலியா னவனென் னந்திக் காப்பு
தீதக முடைய[7] திரிமூர்த் திகட்கும்
தீர்வை யிடுவோ னந்திக் காப்பு

கோதக ருரையத்[8] துவித மொழிக்கக்[9]
குலவுமெஞ் ஞான னந்திக் காப்பு[10]
வாதக மொழித்தே விசுவா சத்தால்
மதிதேற் றமல னந்திக் காப்பு.[11]

3. நித்திய விரக்கப் பெருக்க முடைய
நிமல தேவ னந்திக் காப்பு
சத்திய வேத வொளிகீ ழுலகைத்
தழைக்க வழைப்போ[12] னந்திக் காப்பு
பத்திய தழிக்குங்[13] கவலை விலங்கைப்
பறத்தும்[14] வலனென் னந்திக் காப்பு
சுத்திய னைத்தும்[15] விசுவா சிகட்குச்
சூழ்விப் போனென் னந்திக் காப்பு.

4. நாட்டிய திவிய சபைக்கு மேலாம்
நலங்க டினமு[16] மருள்வோன் காப்பு
தீட்டிய வாக்குத் தத்த மனுவும்[17]
சிதையா திடுவோ னந்திக் காப்பு
சூட்டிய கீத மாலை புனைந்து
சுகிர்தம் பகர்வோ னந்திக் காப்பு
மூட்டிய ஞான வாவி[18] யனலை
மூளச் செய்வோ னந்திக் காப்பு.

5. போதனை நானா விதங்க ளாகப்
பொழியுங் குருவென் னந்திக் காப்பு
சாதனை மறைக்கு முரணா தென்றும்
தழையத் துணைப்போ[19] னந்திக் காப்பு
வேதனை யொழித்தம் பரத்திற் கூட்டும்
விமல னீதி[20] யந்திக் காப்பு
சூதனை வென்றே தீதை யொழிக்கச்
சூரந் தருவோ[21] னந்திக் காப்பு.

6. சீருயர் தேவ னாகு மநாதி
திரித்துவ கர்த்த ரந்திக் காப்பு
நேருயர் விசுவா சிகளை நாளும்
நிமலந்[22] தவறா தாள்வோன் காப்பு
போருயர் புவியின் மயலைச்[23] செயிக்கப்
புதிய பெலனை யருள்வோன் காப்பு

பாருயர் சபையை விருத்தி யாக்கும்
பரமன் றினமென்[24] னந்திக் காப்பு.

7. ஆறுதல் வளமா யருளி யிதயத்
தமைத விடுவோ னந்திக் காப்பு
தேறுதல் விமல ஜீவி யத்தில்
தினமுந் தருவோ னந்திக் காப்பு
மாறுதல்[25] தேவ பத்திக் குறலைப்
பறத்தி[26] வளர்ப்போ னந்திக் காப்பு
சீறுதல் செயும்பேய்ச் சிறகை முறித்த
திறவோ னெளியே[27] னந்திக் காப்பு.

8. நம்பிய வெவர்க்கு மருந்து ணைசெய்[28]
நல்ல கிறிஸ்தென் னந்திக் காப்பு
வெம்பிய பாவ விதயம் புதுக்கும்
மிகுபு னிதனென் னந்திக் காப்பு
சம்பிய வுடலு முயிரா வியும்நோய்[29]
தணியப் பரிப்போ னந்திக் காப்பு
பம்பிய[30] துதிக ளடங்க லுக்கும்
பாத்தி ரன்னென் னந்திக் காப்பு.

9. உழுதவர்க் காம்பே றிடுபூ[31] நிகராய்
உலகர்க் குகுப்போ[32] னந்திக்காப்பு
அழுதவர்க் காற்ற லீந்து காத்தாள்[33]
அத்த னடிமைக் கந்திக் காப்பு
பழுதவர்க் காகா துரைத்துத்[34] தயவாய்
பவரை[35] மீட்போ னந்திக் காப்பு
தொழுதவர்க் கென்றும் மனப்பாக் கியமீ
சுயம்பே தினமென் னந்திக் காப்பு.

10. இலங்கிய வேத ஞான மென்னுள்
இருத்தி வளர்தே வந்திக் காப்பு[36]
கலங்கிய தருணந் திடத்துஞ் சிலுவைக்
காட்சி யானென் னந்திக் காப்பு
மலங்கிய காணந் தெளியத் திவிய
வாக்குப் பகர்வோ னந்திக்காப்பு
துலங்கிய மேல்வீ டேற்று மரிய[37]
சுகிர்த பரனென் னந்திக் காப்பு.

1. படைத்து+ஆள்; 2. இறுதிக் காலத்தில் காப்பான்; 3. வேதத்தைத் தந்து; 4. அறுத்து+ஆள்; 5. 'திரணம்' என்பது எதுகைக்காகத் தீரணம் என நீட்டல் விகாரம் பெற்றது; 6. செயித்தான்+நிசம்+என்; 7. தீமையுடைய; 8. கோதகர்+உரை+அத்துவிதம்; 9. அத்துவிதம்+ஒழிக்க=குறையுடையோர் கோட்பாட்டை ஒழிக்க; 10. மெஞ்ஞானன்+அந்திக் காப்பு; 11. மதி+தேற்று+அமலன்+அந்திக்காப்பு; 12 தழைக்க+அழைப்போன்+அந்திக் காப்பு; 13. பத்தியது+அழிக்கும்; 14. விரட்டுகின்ற; 15. தூய்மையனைத்தும்; 16. நலங்கள்+தினமும்; 17. தத்தம்+அணுவும்; 18. ஞான+ஆவி+அனலை; 19. அழிப்போன்; 20. விமலன்+நீதி; 21. சூரம்+தருவோன்=வீரமளிப்போன்; 22. நிமலம்+தவறா+கடவுள்+தன்மை; 23. மயக்கத்தை; 24. பரமன்+தினம்+என்; 25. பறந்து சென்று; 26. விரைவாய்; 27. திறவோன்+எளியேன்; 28. நம்பிய+எவர்க்கும்+அரும்+துணை+செய்; 29. சம்பிய+உடலும்+உயிர்+ஆவியும்+நோய்; 30. பொங்கியெழுகின்ற; 31. உழுதவர்க்கு+ஆம்+பேது+இடு+பூ=உழுதவர்க்குரிய பலனைத் தரும் பூமி; 32. உலகர்க்கு+உகுப்போன் 33. காத்து+ஆள்; 34. பழுது+அவர்க்கு+ஆகாது+உரைத்து; 35. தயவு+ஆய்பவரை=தயவுடையவரை; 36. வளர்+தேவு+அந்திக்காப்பு; 37. மேல்வீடு+ஏற்றும்+அரிய.

43. உரிமை பாராட்டல்

[தமக்கு எல்லாம் இறைவனே; ஆதலின் அவனுக்குத் தம்மிடம் உரிமையுண்டு. அவ்வுரிமையின் பயனாய்த் தாம் எவ்வெவ்வாறு செயல்படுகிறார் என இப்பகுதியில் கூறப்படுகிறது. பாடலின் ஒவ்வொரு வரியின் இறுதிச் சொல்லும் தென்கோடித் தமிழ்நாட்டுப் பேச்சுமொழி வழக்கில் 'செபிக்குதேன்' 'தெளிகுதேன்' என்றாற் போன்று ஆளப்பட்டுள்ளது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஆசை யொழிக்கச் செபிக்கு தேனே
   அருண் மறை ஞானந் தெளிகு தேனே[1]
   பூசை யுனக்கே புரிகு தேனே
   பொற்பாத மென்றலைமேற்[2] சூடு தேனே.

2. உன்னன்பை யாரோடும் பேசு தேனே
   உன்னருட் செல்வமே நாடு தேனே
   என்னேர முன்னினைவு[3] கொள்ளு தேனே
   இறையுனின் றண்ணளியென் றுன்னு தேனே.[4]

3. யானென தென்ப தொழிக்கு தேனே
இரண்டு நினைவற நிற்கு தேனே
வானென நின்னை மதிக்கு தேனே
வல்லாவி யருண்மழைக்[5] கேங்குதேனே.

4. பாவ விநாச தயை நினைக்குதேனே
பரிசுத்தம் நல்கருளை யுணரு தேனே
தேவ மனிதனான தோரு தேனே[6]
சிரந்தரை படவீழ்ந்து பணிகு தேனே.

5. ஐக்கிய பதவியா சிக்கு தேனே
ஐம்பல னிடுந்தயை போற்று தேனே
பொய்க்கென் னிருதயத்தை விலக்கு தேனே
பூரணமா யுன்பெலத்தைச் சாரு தேனே.

6. விசுவாசத் தாற்செயம் மேவு தேனே
மெஞ்ஞான வீதிவழி செல்லு தேனே
கசுமால சேர்க்கை[7] கசக்கு தேனே
கடவுளுன் றுணையால்முன் னேறு தேனே.

7. எனைநீ விலைகொண்ட தோரு தேனே
எங்கணுமுன் பணிசெய்ய நாடு தேனே
உனையெனக் கெல்லாமுமாய்க் காண்கு தேனே
உத்தமனாய் நாட்கழிக்கத் துணிகு தேனே.

8. உன்னோடே யத்துவிதம் நாடு தேனே
ஒப்பிலாத் தேவனென வணங்கு தேனே
பன்மார்க்கக் குத்திருளம்[8] வெறுக்கு தேனே
பரிசுத்த சுவிசேஷம் விரும்பு தேனே.

9. ஆதி பிரமனாய்க்[9] கும்பிடு தேனே
அமல குமரனா யேத்து தேனே
சோதி யங்கரனாய்த்[10] தொழுகு தேனே
சொல்லருந் திரியேகனாய் வணங்கு தேனே.

10. யேசு கிறிஸ்து நாமந் தெளிகு தேனே
இனிமை யெதினுங்கண் டருந்து தேனே[11]
மாசி கழல்துறையது[12] நம்பு தேனே
மனச்சமா தானங்கண் டடைகு தேனே.

1. செபிக்கிறேன்; 2. பொற்பாதம்+என்தலைமேல்; 3. என்னேரம்+உன்+நினைவு; 'எந்நேரம்' என்பது எதுகை நோக்கி 'என்னேரம்' என ஆளப்பட்டுள்ளது; 4. இறை+உன்+இன்+தண்ணளி+என்று+உன்னுதேன்; 5. வல்+ஆவி+அருள்+மழைக்கு; 6. மனிதன்+ஆனது+ஒருதேன் = மனிதனானதை ஓர்ந்து உணர்கிறேன்; 7. தீய தொடர்பு; 8. பன்மார்க்கம்+குத்து+இருளம் = பல சமய மார்க்கங்களில் தீமை பயக்கின்ற இருண்ட கொள்கைகளை; 9. ஆதியில் படைத்த பிதாவினை; 10. ஐ+அம்+கரனை = அழகிய தூய ஆவியை; 11. கண்டு+அருந்துதேன் = கண்டு அருந்துகிறேன்; 12. குற்றங்கள் அகல்கின்ற துறையதுவென.

44. கருக்குப் பட்டயம்

[''கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது; ஆற்றல் மிக்கது. இரு பக்கமும் கருக்கு வாய்ந்த எந்த வாளினும் கூர்மையானது'' என்னும் எபிரேயருக்கு எழுதிய நிருபப் பகுதியின் அடிப்படையில் எழுதப்பட்டதே இப்பகுதி என்பதனைத் தலைப்பின் அருகில் காணப்படும் ஆசிரியரது எண் குறிப்பால் உணரலாம்.

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. பூலோகக் கொல்லன டித்ததல்ல
   பூமிநின் றெடுத்த விரும்புமல்ல[1]
   மேலோக விளைவு வேலைதேராய்
   மின்னும்நங் கருக்குப் பட்டயமே.

2. ஆதி ஞதலா யருஞ்செ யங்கள்
   அடைந்த தெங்கணும் நிகரற்றது
   சோதி கதிரோன் சுடர்மழுக்கும்
   துலங்குநங் கருக்குப் பட்டயமே.

3. சாத்தானை யிதுகொண்டு தேவசுதன்
   தலையரிந் தடியின்கீட் டளினன்[2]
   மாத்தானை[3] வெல்லப்பத் தர்யாரும்
   வழங்கனங்[4] கருக்குப் பட்டயமே.

4. புலனை வென்றமெய் யிருடிகளும்
பூமியும் பணித்தநல் லரசர்களும்
நலனைப் பெருபிக்க[5] வழங்கியது
நாடுநங் கருக்குப் பட்டயமே.

5. தேவ கரத்திற் சொலிப்பதுவும்
தேவதூதர் கைகளில் சுடருவதும்
சீவ ரலங்கப் பிடிப்பதுவும்
திகழும்நங் கருக்குப் பட்டயமே.

6. ஆஸ்திக பக்ஷத் தவசியமாம்
அரிய பெரிய ஜெயம்வருத்தி
நாஸ்திக முற்றும் தலையரிதல்
நாளும்நங் கருக்குப் பட்டயமே.

7. நித்திய ஜீவனும் வல்லமையும்
நிறைந்த திருபுறமுங் கூரானது
சத்திய மொன்றையே நிலைநிறுத்தும்
தகைத்துநங் கருக்குப் பட்டயமே.

8. ஆத்துமா வாவி கணுக்களுனை[6]
அகலப் பிரிக்க வுருவக்குத்தும்[7]
சேத்தும மிறுகும் வேளைதிடத்தும்[8]
செய்யநங் கருக்குப் பட்டயமே.

9. ஆதிபிரமனாய்க்[9] கும்பிடு தேனே
அமலகுமரனா யேத்து தேனே
சோதி யைங்கரனாய்த்[10] தொழுகு தேனே
சொல்லருந் திரியேகனாய் வணங்கு தேனே.

10. யேசு கிறிஸ்துநாமந் தெளிகு தேனே
இனிமை யெதினுங்கண் டருந்து தேனே.[11]
மாசு கழல்துறையது[12] நம்பு தேனே
மனச்சமா தானங்கண் டடைகு தேனே.

1. எடுத்த+இரும்பும்+அல்ல; 2. தலை+அரிந்து+அடியின்+கீள்+தள்ளினன்; 'கீழ்' என்பதற்குப் பதில் கீள் என வந்தது ழகரப் போலியாகும்; 'தள்ளினன்' என்பது இடைக்குறையாக 'தளினன்' என வந்துள்ளது; 3. பெரிய படையை; 4. வழங்கல்+நம்; 5. பெருகச்

செய்ய; 6. ஆத்துமா+ஆவி+கணுக்கள் ஊனை; 7. பிரிக்க+உருவக்+குத்தும்; 8. கண் சேட்டுமம் இறுகி உயிர்பிரிய மூடும் வேளையில் திடப்படுத்தும்; 9. தேவதாசரில்+உலகு+உரைக்கும்; 10. முத்துமணியினும்+உச்சிதம் = முத்துமணியினும் உயர்ந்தது; 11. மலையைக் கூழ் போன்று கரைப்பதற்கு.

45. திருப்பல்லாண்டு

[பிற சமயத்தினரின் திருப்பல்லாண்டுப் பாடல்களை மனத்திருத்தி தம் இறைவனைப் போற்றிப் புகழ இப்பகுதி படைக்கப்பட்டுள்ளது.]

அடிநான்காய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண்செந்துறை

1. அகண்ட பரிபூரண சச்சிதா னந்தமகா
 அமலர்க்குப் பல்லாண் டோதவாரீர்
 அதீத[1] சுயம்பிர காச மனோகர
 ஐயற்குப் பல்லாண் டோதவாரீர்
 சுகண்ட முனைந்திக முதித்த[2] சுயாதிப
 சுவாமிக்குப் பல்லாண் டோதவாரீர்
 சுய நீதி களைத்தவர்க் கிருநீதி[3] நலமருள்
 சுயம்புக்குப் பல்லாண் டோதவாரீர்.

2. பொறிவழி புலன்போ யிழியாத் தகையருள
 பூரணற்குப் பல்லாண்டோத வாரீர்
 புத்தியோ டுத்தியும்[4] பத்திக் கிசையவை
 புண்ணியர்க்குப் பல்லாண் டோதவாரீர்
 நெறிவழி கோணா தொழுகத்[5] துணைபுரி
 நிமலர்க்குப் பல்லாண் டோதவாரீர்
 நேயமே யோருரு வாகியெம்[6] பவமொழி[7]
 நீதற்குப் பல்லாண் டோதவாரீர்.

3. சத்திய குணாகரத யாபரகிர் பாகர[8]
 சத்தனுக்குப்[9] பல்லாண் டோதவாரீர்
 சந்தோஷ சம்பன்ன சாசுவத ஸ்தோத்திர

தூனிக்குப்[10] பல்லாண் டோதவாரீர்
நித்திய நிஷ்களங்க[11] நிரஞ்சன[12] நிராமய[13]
நேசற்குப் பல்லாண் டோதவாரீர்
நேற்று மின்று மென்றுமா றாதமெய்
நித்தருக்குப் பல்லா ண்டோதவாரீர்.

4. ஞானா னந்தத் திருவமு தூட்டும்
நம்பிக்குப் பல்லாண் டோதவாரீர்
நன்மைமெய் யாகவே நான்செய் வேனுனக்கென்ற
நாதனுக்குப் பல்லாண் டோதவாரீர்
வானா னந்தப் பதியா யத்தஞ்செய்[14]
மன்னர்க்குப் பல்லாண் டோதவாரீர்
மகிமை மௌலி[15] யிறக்கிச்செங் கழல்வைத்து[16]
வணங்கியே பல்லாண் டோதவாரீர்.

5 ஆதி யநாதி யற்புத விற்பன
அத்தருக்குப் பல்லாண் டோதவாரீர்
ஐந்தப்பங் கொண்டை யாயிரவர் போஷித்த
அதிசயற்குப் பல்லாண் டோதவாரீர்
வாதி விஷத்தலை மிதிஜெயஞ் சூடும்[17]
மகிபற்குப் பல்லாண் டோதவாரீர்
வல்லமை செயலிலும் வாக்கிலும் துலக்கிய
வானற்குப் பல்லாண் டோதவாரீர்.

6. ஏகனோ னடக்கிய மெய்தவே[18] தூய்குருதி
இறைத்தவர்க்குப் பல்லாண் டோதவாரீர்
இச்செக முழுதுமீ டலவாத்து மாவுக்கென்ற[19]
எம்மா னுக்குப்பல்லாண் டோத வாரீர்
நாகனோ டமரிட் டவன்சிறை விடுத்த[20]
நாடற்குப் பல்லாண் டோதவாரீர்
ஞாய விதிகொடுக்குஞ் சகலலோ கேச[21]
நடுவற்குப் பல்லாண் டோதவாரீர்.

7. சருவ ஜீவ தயாபர ஞான
தயாளுக்குப்[22] பல்லாண் டோதவாரீர்
சதோதய பாஸ்கர[23] தசகுண வெண்செயல்
சதுரற்குப் பல்லாண் டோத வாரீர்

உருவ வணக்க மருவருத் தகற்றும்
உன்னதற்குப் பல்லாண் டோத வாரீர்
உள்ளத்தில் மெஞ்ஞான விளக்கொளி காக்கும்
உரவோர்க்குப் பல்லாண் டோதவாரீர்.

8. தேம்படு சுவிசேஷ போதனா மிர்தமருள்[25]
தேவனுக்குப் பல்லாண் டோதவாரீர்
திரித்துவ வொருத்துவ வெகுத்துவ ஜீவத்துவ[26]
செய்யனுக்குப் பல்லாண் டோதவாரீர்
வீம்படு செயற்கெமை[27] விலக்கியா தரிக்கும்
வித்தனுக்குப் பல்லாண் டோதவாரீர்
வித்தையை யருளினால் மேன்மைய தாக்கும்
மெய்யனுக்குப் பல்லாண் டோதவாரீர்.

9. தாழ்வெலா மொருங்கே துடைத்து யர்த்துமகா
தற்பரற்குப் பல்லாண் டோதவாரீர்
சருவ வியாபக சருவஞ்ஞ வல்லப
சரணற்குப் பல்லாண் டோதவாரீர்
வாழ்வெலாம் விசுவாச மார்க்கருக் கீயும்
வரனுக்குப் பல்லாண் டோதவாரீர்
வானமும் பூமிபா தலமுங் கொண்டாடும்
மகிபற்குப் பல்லாண் டோதவாரீர்.

10. தஞ்சமும் நலஞ்சமா தானமும் நல்கும்
சயம்பர்க்குப் பல்லாண் டோதவாரீர்
தளங்குமெய்[28] வரமனோகர் வாக்குத்
தத்தனுக்குப் பல்லாண் டோதவாரீர்
கொஞ்சமும் பழுதின்றிப் பாவிகளை யீடேற்றும்
கொற்றவர்க்குப் பல்லாண் டோதவாரீர்
கொடுத்துங் குறையாத வள்ளலைக் கொண்டாடிக்
கும்பிட்டுப் பல்லாண் டோதவாரீர்.

1. அளவிடற்கரிய; 2. சுகண்டம்+முனைந்து+இகம்+உதித்த— விண்ணிலிருந்தும் விரும்பி மண்ணில் தோன்றிய; 3. இரண்டு இன்றியமையாக் கட்டளைகள்; 4. புத்தியோடு+உத்தியும்; 5. கோணாது+ஒழுக; 6. ஓர்+உருவாகி+எம்; 7. பவம்+ஒழி; 8. குணாகர+தயாபர+கிர்பாகர; 9. ஆற்றல் உள்ளவனுக்கு;

10. புகழுக்குரியவருக்கு; 11. களங்கமற்ற 12. கடவுள்; 13. கடவுள்; 14. வான்+ஆனந்தப்பதி+ஆயத்தம்+செய்; 15. மகிமை மிக்க நம் திருத்தலையை; 16. இறைவன் திருவடிகளில் வைத்து; 17. பேயாகிய பாம்பின் தலையை மிதித்து வெற்றி கொண்ட; 18. ஐக்கியம்+எய்தவே; 19. முழுதும்+ஈடு+அல+ஆத்துமா+வுக்கு என்ற; 20. நாகனோடு+அமரிட்டு+அவன்+சிறை+விடுத்த; 21. நீதித் தீர்ப்பு வழங்குகின்ற அனைத்துலகங்கட்கும் தலைவன்; 22. தயையுடையவனுக்கு; 23. கதிரவன்; 24. ஆற்றல் உடையவனுக்கு; 25. அமிர்தம்அருள்; 26. திருத்துவம்+ ஒருத்துவம்+வெகுத்துவம்+ஜீவத்துவம்; 27. செயற்கு+எமை; 28. மெய் நிறைந்த.

46. நாடன்

[உலக நாடுகட்கெல்லாம் உரிமையாளன் என்னும் பொருளில், இறைவனை 'நாடன்' என அழைத்துத் தமக்கு அவனே அடைக்கலம் என்பதைப் பத்துப் பாடல்களில் புலப்படுத்துகிறார். தலைப்புக்கேற்ப ஒவ்வொரு பாடலும் 'நாடனே' என முடிவுறுகிறது.]

அறுசீர் விருத்தம்

1. சோதி வானமும் பூமியுஞ் சொல்லி னாற்படைத் தச்சொலே[1]
ஜாதி யாருய மானுவாய்த்[2] தரணிவந் துயிர்த்தியா கத்தால்
நீதி நேடவந் நீதியை நீணி லர்பெற[3] வாருமென்
றோதி நில்லுனைப்[4] போற்றினே னுலகெ லாம்பரி நாடனே.[5]

2. அச்சமுற்றவென் னெஞ்சினை[6] யபய நற்கரத் தாற்றிடம்[7]
மிச்ச மாயுறச் செய்துயர் வித்தகச் சீவிப் பியற்றவாள்[8]
எச்ச பையுளுங் கூறுவே[9] னெங்க ளுந்தொழு தேத்துவேன்
உச்ச விண்பதி வீற்றிருந் துலகெ லாம்பரி நாடனே.

3. திண்மை யார்புயத் தாலெனைத் தீங்கி னின்றுபு ரந்தருள்
வெண்மை யாகியென் னிருதயம் மிக்க வின்புற நன்கருள்
அண்மை யாகியென் காறவ றானு[10] காத்தரு ளிகபரம்[11]
உண்மை யோடுனைச் சேவிப் பேனுல கெலாம்பரி நாடனே

4. தூத சேனைக ளீள்விணார்ந் தொளிருஞ் சேனைகள்[12] மாபெரும்
பூத லத்துயிர்ச் சேனைகள் பூன்ற[13] தாவர சேனைகள்
காத லார்மணி யாதியாங்[14] கணித நூற்களும் வாய்திறந்
தோத ருஞ்சேனைத் திரளமை[15] யுலகெ லாம்பரி நாடனே.

5. பொன்னை மாதரைப் பூமியைப் போற்றி நின்றவர் வெட்கினர்
தன்னை நம்பிய வல்லருஞ் சார்ந்த னர்கடை நாணமே[16]
என்னை மெய்மறை காட்டிமீ ளிணையிற் பேர்பரி வுன்னியே[17]
உன்னை யேசரணொண்டினே[18] னுலகெ லாம்பரி நாடனே.

6. கற்ற கல்வியும் வாழ்க்கையுங் கைதரா நெருங்கா யத்தில்[19]
சுற்ற மும்முற வோர்களுந் துன்பவே ளையிலென் செய்வார்
பெற்ற தாயும்பி தாவும்நீ பேச விப்பிர பஞ்சத்தில்[20]
உற்ற பேர்பிறி தில்லையே யுலகெ லாம்பரி நாடனே.

7. நீக்கமின்றியே தீவினை நெஞ்சஞ் சாமலே[21] செய்வதில்
வீக்க முள்ளவர்க் குடைந்தை யாய்வெறி[22] தருங்கொடு மாலனாய்
ஆக்க மற்றவர்க் குழிய னாயடி[23] வணங்கிநில் லாமலே
ஊக்க மென்னில் வருத்தி யாளுல கெலாம்பரி நாடனே.

8 மான மொன்றுமி லாதுதீ வழியி லோடியி ளைத்தனன்[24]
ஞான போதனை யைச்செவி நயந்தி டாதுசு ழன்றனன்
ஈன ரோடுற வாகின னின்று[25] மானசாந் திரமடைந்
தூன மாற்றுனை நம்பினே[26] னுலகெ லாம்பரி நாடனே.

9. புத்தி யாய்மறை யாய்ந்துநற் போத னையுப தேசமும்
சித்தி யாகச்செய் தாத்துமா[27]சேக ரித்துளத் தில்லமர்
பத்தி யைத்தெளி விக்கவென் பக்கம் நீதுணை நின்றுனின்
உத்தி யோகனா யாடின முலகெ லாம்பரி நாடனே.

10. தெண்ட னிட்டுனை[28] நாடொறுஞ் சேவித் தின்பமு றாததீ
வண்ட னாங்கடி யாற்பசை வற்றி[29] மூவித வாசையாம்
சண்ட மாருதச் சருகு போற்றா பரம்மறு[30] பாவிநான்
ஒண்ட வேறிடங் காண்கிலே[31] னுலகெ லாம்பரி நாடனே.

1. 'சொல்லே' என்பது ' சொலே ' என இடைக்குறையாய் வந்துள்ளது ; 2. உயர்ந்த மனிதனாய் ; நேட+அந்நீதியை + நீள் நிலர் + பெற ; 4. நில் + உனை ; 5. பாதுகாத்துவரும் நாடனே.

6. என் + நெஞ்சினை ; 7. கரத்தால் + திடம் ; 8. சீவிப்பு + இயற்ற + ஆள் ; 9. சபையுளும் + கூறுவேன் ; 10. என் + கால் தவறாது ; 11. காத்து + அருள் + இகம்+பரம் ; 12. தூதசேனைகள் + நீள் + விண் + ஆர்ந்து +ஒளிரும் + சேனைகள்; 13. நிறைந்த ; 14. மணி +ஆதியாம் ; 15. திரள் + அமை ; 16. இறுதியில் வெட்கமடைந்தனர் ; 17. மீள் + இணையில் + பேர் + பரிவு + உன்னியே ; 18. சரண் + ஒண்டினேன் ; 19. நெருங்கு + ஆபத்தில் ; 20. இ + பிரபஞ்சத்தில் ; 21. நெஞ்சு + அஞ்சாமலே ; 22. வீக்கம் + உள்ளவர்க்கு + உடந்தையாய் ; 23. ஆக்கம் + அற்றவர்க்கு + ஊழியன் + ஆய் + அடி ; 'ஊழியன்' என்பது குறுக்கல் விகாரமாய் 'உழியன்' என வந்துள்ளது ; 24. வழியில் + ஓடி + இளைத்தனன் ; 25. ஈனரோடு + உறவாகினன் + இன்று ; 26. அடைந்து + ஊனம் + மாற்று + உனை நம்பினேன் ; 27. சித்தியாகச் செய்து + ஆத்துமா ; 28. தெண்டன் + இட்டு + உனை ; 29. தீவண்டன் + ஆம் + கடியால் + பசைவற்றி ; 30. சருகுபோல் + தாபரம் + அறு.

47. பாவியினறிக்கையும் இரட்சையும்

[தன் பாவச் செயல்களை அறிக்கையிட்டு இறைவனிடம் மன்னிப்பு வேண்டி அதன் வழி மீட்படையத் துணையாகுமாறு இப்பகுதிப் பாடல்கள் அமைந்துள்ளன.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஆசை வனத்து[1] டலையு தேனே[2]
   அக்கிரம விலங்குகண் டஞ்சு தேனே
   பூசை தெரியா துலையு தேனே
   புலையின்பம் புக்கிப் புலம்பு தேனே.

2. சோதனைக் குள்ளே புகுது தேனே
   சோரத் தனங்க ளியற்று தேனே
   வேதனைப் பாதை துணிகு தேனே
   மெய்யனுன் கீர்த்தி மறைக்கு தேனே.

3. உள்ளொன்றுவெளி யொன்றாய் நிற்கு தேனே
   உதட்டில் நயவசனங் காட்டு தேனே

தள்ளொன்று மில்லாமற் செய்யு தேனே
சபையிலோ பத்தனைப்போற் றோற்று தேனே.[3]

4. நாணயமாய் பிரசங்கங் கூறு தேனே
நடக்கையிற் கோணமாணச்[4] செல்லு தேனே
வேணவித மதிபிறர்க் கோது தேனே
வித்தியாச மெனிற்காண்கா தேங்கு தேனே.

5. ஞான சம்பாஷணை செய்யு தேனே
நாசப்பேய்ச் சிந்தையகங் காக்கு தேனே
ஊனமொண் டான்போ[5] லுரைக்கு தேனே
ஒருகோடியோ பாவ மீட்டு தேனே;[6]

6. அஞ்ஞானி யென்றயலைக் கூவு தேனே
அலகை வழியின்பம் பற்று தேனே
மெஞ்ஞானி நானென நடிக்கு தேனே
வேதவிதி வழுக்கி நடக்கு தேனே.

7. ஆசார மாய்ப்பூசை செய்யு தேனே
அகலப்போய் மனம்போல் நடக்கு தேனே
காசாசை கொண்டு கழியு தேனே
கபடஞானங்கள் கதைக்கு தேனே.

8. உனைவிடப் பலதையும் நேசிக்கு தேனே
உன்னைக் கனஞ்செயா[7] தூசு தேனே
எனைப்போற் பிறரையெண் ணாதிருக்கு தேனே
ஏழையி டும்பா[8] யிடறு தேனே.

9. ஐயோ! நான் மாபாவி துக்கிக்கு[9] தேனே
ஆருமற்றே னீயே[10] தஞ்சஞ் சேரு தேனே
தெய்வமே! திருக்குருசை நோக்கு தேனே
தீய்னென் பவம்பொறுக்கக் கெஞ்சு தேனே.

10. மனந்திரும் புதல்தர நாடு தேனே
மாய்மாலம் வெறுத்துண்மை தேடு தேனே
தினம்பெரு மிரட்சை[11] யிடவேண்டு தேனே
தேவா! நினையேபுகல் கொள்ளு தேனே.

11. ஜீவ நதியில் முழுகு தேனே
தேவநீதி வெண்ணாடை போர்த்து தேனே

பாவ விருப்பம் வெறுக்கு தேனே
பரனுனை யேசார்ந்து கொள்ளு தேனே.

12. உன்றிரு வாக்குத்தத்தம் நம்பு தேனே
உளமுடைந்தே கண்ணீர் சிந்து தேனே
என்றிரள் மீறுதல்க ளுணரு தேனே
இயேசுபரன் புண்ணியம் பற்று தேனே.

13. எனதுதீர் மானங்கள்வீண் காண்கு தேனே
ஈசாநின் றுணைகெதி தேரு தேனே
மனது கறாளி[12] விளங்கு தேனே
மறித்துநீ நடத்தமன் றாடு தேனே.

14. சுயநம் பிக்கை யொழிக்கு தேனே
சுவாமி யுனைவிசுவா சிக்கு தேனே
நயந்தருஞ் சோரிநதி[13] யாடு தேனே
நல்ல சமாதானம் மேவு தேனே.

15. பாழென் னிருதயம் பார்க்கு தேனே
பரிதாப னிரக்கநீ[14] நம்பு தேனே
சூழென் னிருபுறமும் அஞ்சு தேனே
சோதனை வெல்லவரம் வேண்டு தேனே.

16. நெஞ்ச முருகிப் பணியு தேனே
நின்னீதி யென்னீதி[15] நம்பு தேனே
வஞ்சனை யின்றி வருகு தேனே
மன்னித்தா யென்பாவம் போற்று தேனே.

17. பெருமலை யென்பாவ மெண்ணு தேனே
பெரிததி லுன்றயை[16] காண்கு தேனே
உருவெடுத் தாயதால் வாழு தேனே
ஓசன்னாப் பாடி மகிழு தேனே.

18. ஆச்சரிய முன்னன்பு தழுவு தேனே
அம்மயமாய்[17] நின்றிலங்க வாசிக்கு தேனே
ஒச்சுன் கழறலை கொள்ளு தேனே
ஒளியாம லுன்சாட்சி சொல்லு தேனே.

19. திருரத் தநீதி பெருக்கு தேனே
தேவா! நமஸ்காரஞ் செய்யு தேனே
வருகை யெதிர்பார்த்து நிற்கு தேனே
வல்லா விசார்பி[18] லொதுங்கு தேனே.

20. மாபாவி யென்னைப் புரந்த நாதா!
வாஞ்சையா யெனைப்பாதம் படைக்கு தேனே![19]
கோபாக் கினைநீக்கி யாள்பி தாவே!
கும்பிடுதேன் சீர்பாத மல்லேலூ யா[20].

1. ஆசை வனத்தூடு = ஆசையாகிய காட்டில்; 2. அலைகிறேன்; 3. தோன்றுகிறேன்; 4. குறையுடையவனாய்; 5. ஊனம் + ஒண்டான்போல் = குறை நெருங்காதவனைப் போல்; 6. பாவம் + ஈட்டுதேனே; 7. மதிக்காமல்; 8. இடைஞ்சலாய்; 9. வருந்துகிறேன்; 10. ஆரும் + அற்றேன் + நீயே; 11. மீட்புத்தர; 12. தடுமாறி; 13. இரத்த ஆற்றில்; 14. பரிதாபன் + இரக்கம் + நீ; 15. நின் + நீதி + என் + நீதி; 16. பெரிது + அதில் + உன் + தயை; 17. அன்பு + மயமாய்; 18. வல்லமையுடைய ஆவியைச் சார்ந்து; 19. நின்னடியில் ஒப்படைக்கிறேன்; 20. சீர்பாதம் + அல்லேலூயா.

48. மண்சட்டி

[பயன்படாத ஓட்டை மண் சட்டியாகத் தம்மை உருவகித்து அதனைப் பயனுள்ள பாண்டமாக மாற்றிய இறைவன் அருளைப் போற்றும் பகுதியாக இஃது அமைந்துள்ளது.]

இணைக்குறள் வெண்செந்துறை

1. ஞானக் குலாலன் வனைந்த நெறியில்
நன்கு நிலையாமற் போன தாலே
ஊன வழுக்கும் புறமு மாகி
உதவா தெறிந்த மண்சட்டி யானே.

2. ஆருந் தொடாமற் றொடக்குக் குழியில்
ஆகா துடைகழிவுப் பாண்டங்க ளோடே
சேருந் தினங்கள் பலகி டந்தேன்
தீட்டாகிப் போன மண்சட்டி யானே.

3. எண்ணமற்[1] றங்கே கிடக்கும் வேளை
இகபர பதியான யேசு கிறிஸ்து
அண்ணலென் னருகே கடந்து போகையில்
அருள்விழி நோக்குறு மண்சட்டி யானே.

4. தேவர் பெருமான் றிருமன தாகிச்
செகப்பழிப் பெண்ணா[2] மற்றிருக் கரத்தால்
ஜீவ தயாபர னாய்த்தொட் டெடுக்கும்
சீர்பெற்றுக் கொண்ட மண்சட்டி யானே.

5. ஆண்டகை யெடுத்தெ னைத்திரு விரத்த
அமல பொய்கையிற் சுத்தி செய்து
மாண்டகை பொலியுந் திருநோக் கத்தில்
வைக்கும்பே றடைந்த மண்சட்டி யானே.

6. தீட்டான வென்னைப் புனித மாக்கி
சிங்காரத் தோட்டத்தி னானா விதமாம்
நாட்டான செடிகட்குப் புனலொ ழிக்க[3]
நாடி யமைத்த மண்சட்டி யானே.

7. என்னிலே தீட்டுப யோக மின்மை
எல்லா மிருந்துங் கருணா கரனார்
தன்னிலே நலம்பெறற் காக்கிக் கொண்ட
தண்ணருள் மறக்கேன் மண்சட்டி யானே.

8. நல்ல நிறமும் மணமு முள்ள
நானா விதமலர் கனியு மங்கே
வல்ல எஜமான் கிருபை யாலே
மலிந்த வற்ப[4]மண் சட்டி யானே.

9. என்னைப் பிரயோ சனப்ப டுத்தி
எம்மான் றிருப்புகழ் கீர்த்திப் படவே
தன்னைத் தாழ்த்திய வரிய வன்பை
சந்தத மேந்து மண்சட்டி யானே.

10. முடிவு பரியந்த மென்னைக் கொண்டு
முடிக்கச் சித்த மான வெல்லாம்
இடிவு சேராம னிறைவுறச் செய்வார்
என்றுந் துதியவர்க்கு மண்சட்டி யானே.

1. எண்ணம்+அற்று; 2. செகம்+பழிப்பு+எண்ணாமல் 3. நீரைச் செடிகளுக்கு ஊற்ற; 4. மலிந்த+அற்ப.

49. ஏலாமைக்கிரங்கல்

[இறைவனின் திருவுள்ளத்திற்கு ஏற்ற வகையில் தூய கிறித்தவ னாகத் தம்மால் ஆக முடியவில்லையே என்று எண்ணி இரங்குவதாக இப்பகுதிப்பாடல்கள் அமைந்துள்ளன. பாடல் பொருளுக்கு ஏற்ப ஒவ்வோர் அடியும் 'ஆகில்லோ' என முடிவுறுகிறது. ஆகு+இல்லோ என இரு சொற்களின் சேர்க்கையாகிய 'ஆகில்லோ' என்னும் சொல் ஆசிரியரின் வட்டார வழக்குச் சொல் போல் தோன்றுகிறது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. அஞ்சையும் வென்றடக்குஞ் சாணானே[1] னாகில்லோ
 ஐரண்டுங்[2] கைக்கொள்ளு மன்பானே னாகில்லோ
 விஞ்சையு[3] மொழுக்கமு மேவினே னாகில்லோ
 மெய்யன்றி ருச்சாயல் விரவினே னாகில்லோ.

2. அன்பேயு ருவாய லங்கினே[4] னாகில்லோ
 அந்நியர்க்குச் சந்தோஷ மாகினே னாகில்லோ
 துன்பே சகிக்கத் துணிவானே னாகில்லோ
 துரையேசு செம்பாதத் தூளானே னாகில்லோ.

3. பூரண விசுவாசம் பொருந்தினே னாகில்லோ
 பொய்யாசை மூன்றினையும் போக்கினே னாகில்லோ
 ஆரணத் தேனமிர்த மருந்தினே[5] னாகில்லோ
 அஞ்ஞானம் முற்றிலு மகற்றினே[6] னாகில்லோ.

4. என்னை மறந்தே யிலங்கினே னாகில்லோ
 எப்போதுஞ் சுவிசேஷ மியம்பினே னாகில்லோ
 தன்னை யுயிர்ப்பெலியாய்த் தாக்கினே னாகில்லோ
 தற்பெருமை சுட்டெரித்துத் தங்கினே னாகில்லோ.

5. ஊக்கஞ் செபத்தி லுடைத்தானே னாகில்லோ
 உண்மை யகமுகமு மொன்றானே[7] னாகில்லோ
 நீக்கம் பகைக்கு நெருப்பானே னாகில்லோ
 நிரம்பச் சிலுவை நினைவானே னாகில்லோ.

6. கள்ள மனதைக் கருக்கினே[8] னாகில்லோ
 கரைந்துள் ளுடைந்து கனிவானே னாகில்லோ

வள்ளற்றிருமகிமை வாஞ்சித்தே[9] னாகில்லோ
வாதாட்டத் தீநாட்டம் மாற்றினே னாகில்லோ.

7. ஓயாமற் கிறிஸ்தடிபின் னோடினே னாகில்லோ
உன்னததூ யாவிபெல னொண்டினே[10] னாகில்லோ
தேயாமற் றேவன்பிற் றேறினே[11] னாகில்லோ
சிந்தை புதிதாகித் திருந்தினே னாகில்லோ.

8. ஆசை சிலுவை யறைந்திலே னாகில்லோ
ஐந்துடை சூடிய லங்கினே னாகில்லோ
பூசை நிமலமாய்ப் பூட்டினே னாகில்லோ
பொன்னாடன் றாழ்மைபொ ருந்தினே[12] னாகில்லோ

9. சகமயற் சாஸ்திரங்கள் தள்ளினே னாகில்லோ
சத்தியவே தந்தலைமேற் றாங்கினே னாகில்லோ
அகமயற் றீப்பார்வை யருக்கினே[13] னாகில்லோ
ஆழ்ந்த வவதானி யாகினே னாகில்லோ.

10. தேவ வறிவினிலே தேறினே னாகில்லோ
செழிசுவி சேஷாந்தந் தெளிந்திலே னாகில்லோ
பாவச் செயலோய்வு பற்றினே[14] னாகில்லோ
பரிசுத்தர் பார்க்கும்வீ டாகினே னாகில்லோ.

1 சான்றோன்; 2. ஐ + இரண்டும் = பத்தும்; பத்துக் கற்பனைகளையும்; 3. கல்வி; 4 விளங்கினேன்; 5. தேன் + அமிர்தம் + அருந்தினேன்; 6. முற்றிலும் + அகற்றினேன்; 7. அகமும் + முகமும் + ஒன்றானேன்; 8. ஒழித்தேன்; 9. விரும்பினேன்; 10. அடைந்தேன்; 11. தேவன் + பின் + தேறினேன்; 12. தாழ்ச்சியை அடைந்தேன்; 13. தீய பார்வையை வெறுத்தேன்; 14. பாவச்செயல் + ஓய்வு + பற்றினேன் = பாவச் செயல்களை ஒழித்தேன்.

50. குணலை

['குணலை' எனில் வீராவேசத்தால் கொக்கரித்தல் எனப் பொருள்படும். இறைவனால் பெற்ற அருட்பயன்களை உரக்கக் கூறுவாயாக என்னும் பொருளில் பாடல்கள் அமைந்துள்ளமையால் குணலை என்னும் பெயர் பெறலாயிற்று.]

நான்கடி இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. விழுதலை யையனருள்[1] விசுவாசத் தெப்பமேறி
வென்றுகரை சேர்ந்தோமென் றிடுகுணலை
மெய்யினை யறிந்ததால் விடுதலை யடைந்தனம்
மேவினோ மானந்தமென் றிடுகுணலை
அழுதலை முற்றிலு மகற்றிய திறைகரம்[2]
ஆறுதல் பெற்றோமென் றிடுகுணலை
அஞ்ஞான வீதியினி யலைகிலோஞ் சுவிசேஷ
அறிவு துலங்கினவென் றிடுகுணலை.

2. பத்தியை யருளினாற் பலப்படுத்தின னையன்
பாறாதினி விர்த்தி யாமென் றிடுகுணலை
பாழிலே திரிமனம் பரம தியானநிலை
பற்றிய[3] சிலுவை யிலென் றிடுகுணலை
புத்தியைச் சத்தியமாம் பொருப்பிலே யிருத்தினன்
புகழ்பரன் காப்பானெனன் றிடுகுணலை
பூரண பரிசுத்தம் பொருந்த விரத்தநதி
போயாடிக் கொண்டோமென் றிடுகுணலை.

3. வருஞ்சோதனை வெல்ல வாய்த்தது மீட்பரின்
மாட்சியுறும் வல்லமையென் றிடுகுணலை
மகிமைப் பராபரனின் மங்கள நாமத்துக்கே
மாகனம் மாதுதியென் றிடுகுணலை
பெருஞ்சோ தியைநிகர் பிதாவினுட ராட்சியத்தில்
பிரகாசித் திருப்போமென் றிடுகுணலை
பேழையினா லெண்மரைக்கார் பெருமானா னாங்களும்[4]
பிழைக்கிறோம் வெல்கிறோமென் றிடுகுணலை.

4. பத்துவா தைவிடுத்துப் பார்வோன்வன் சிறைமீண்ட
பரமனெம் மிரட்சகனெனன் றிடுகுணலை
பாராழி பிரித்தடி பணிந்தவர் கடத்திய
பலத்தோனெம் மீட்பனெனன் றிடுகுணலை
கத்துவா திகளுளங் கலங்கமெய் மறைபொழி
கடவுளெம் புரந்தரனென்[5] றிடுகுணலை
காசினி வாழத்தனைக்[6] கையளிமே லாங்கருணா
கரனேயெம் மீசுரனெனன் றிடுகுணலை.

5. அஞ்ஞானக் கோட்டைக ளனைத்தையுந் தரைசெய
அரும்புயனெந் தளபதியென்[7] றிடுகுணலை
அதிபல வீனரைக்கொண் டரியவெற் றிபடைக்கும்
அண்ணலெஞ்சே னாபதியென்[8] றிடுகுணலை
விஞ்ஞான வன்பினாலே மேவலரைக் கீழ்ப்படுத்தும்
வித்தகனெம் படைத்தலையென் றிடுகுணலை
மிக்கநன்மை செய்துதீமை வென்றிலங்கும் மாசிலா
வேதனேயெம் பொருந னென்[9] றிடுகுணலை.

6. சத்துருக் களுக்குந் தயவுடனே ராளநலம்[10]
சார்வித்து வெல்வோமென் றிடுகுணலை
தன்னையறி யாதவரைத் தாங்கியே படிப்பித்துத்
தலைவனைக் காட்டுவோமென் றிடுகுணலை
மித்துருப் பேதம் விளைத்தவர்க் குந்தயவு
மேவிப் பொறுப்போமென் றிடுகுணலை
வேதாந்த சித்தாந்த மெய்யொளிர் சிலுவைகீழ்
விளங்குவோஞ் சாஸ்வதமென் றிடுகுணலை.

7. அன்பொரு நான்குமே யலங்கிக் கிறிஸ்துபொன்
னடிதொடர்ந் தேகுவோமென் றிடுகுணலை
ஆவியி னாற்றின மடைபுதுப் பெலனாலே
அயர்கிலோம் போரிலென் றிடுகுணலை
துன்பொரு மிக்கவே[11] சூழினும் பின்னிடோம்
துணைகிறிஸ் தேசுவென் றிடுகுணலை
சுய நீதி களைந்திறை[12] சொந்தநீதி தரித்ததால்
சுத்தாங்க ரானோமென்[13] றிடுகுணலை.

8. சத்திய வேதமமை சரித்திர மதுவுண்ட
தலைவெறி கொண்டோமென் றிடுகுணலை
தவறாமெய் யுபதேச சளியாக்கட் குடித்ததால்[14]
தகும்பெல னுற்றோமென் றிடுகுணலை
நித்திய தேவன்பா லிரத்தசாட் சிகளாக
நிற்போ மிடைகிலமென்[15] றிடுகுணலை
நீதிக்குப் பிழைத்துப் பாவத்துக்கு நீறிட
நேர்ந்தன மோசன்னாவென்[16] றிடுகுணலை.

9. எவ்வாச் சிரமங்களு மிலங்கநிற் போங்கிறிஸ்[17]
தேசைய னருளாலென[18] றிடுகுணலை

இயேசுவை யன்றிமற் றெவ்வறங் களுக்குமே
இலைதனிற் பூரணமென் றிடுகுணலை
செவ்வாச் சிரமிகளாய்ச் செழியனு கூலமெலாம்[19]
செய்பரன் கிறிஸ்துவென் றிடுகுணலை
திரியேக தேவனைச் சேர்ந்தவர்க்கோர் போதும்வெட்கம்
சேராதே நிச்சயமென் றிடுகுணலை.

10. கிருபைய்ாங் கிரிதங்கக் கிடைத்தது[20] கிருபையால்
கேடற்றோம் நாடுற்றோமென் றிடுகுணலை
கிறிஸ்துயிர் சாபலன் கெம்பீரமல் லேலூ யா![21]
கீர்த்திமா தேவனுக்கென் றிடுகுணலை
அருமையாம் விசுவாச மவனியை வெலுஞ்செயம்
அபரோட்ச மானோமென்[22] றிடுகுணலை
அலகைவெந் தலைபொடி[23] யையனங் கையெழுத்
தாயினோா[24] மாமெனென் றிடுகுணலை.

1. விழு+தலை+ஐயன்+அருள்=சிறந்த தலைவனாகிய இறைவனின் அருள்; 2. அகற்றியது+இறை+கரம்; 3. பற்றின; 4. பெருமானுல்+ நாங்களும்; 5. புரந்தரன்+என்று=பாதுகாப்பவன் என்று; 6. 'தன்னை' என்பது இடைகுறையாகத் 'தனை' என வந்துள்ளது. 7. அரும்+புயன்+எம்+தளபதி+என்று; 8. அண்ணல்+எம்+ சேனாபதி+என்று; 9. எம்+பொருநன்+என்று; 10. தயவுடன்+ ஏராளம்+நலம்; 11. துன்பு+ஒருமிக்கவே; 12. களைந்து+இறை; 13. சுத்தம்+அங்கர்+ஆனோம்+என்று; 14. கள்+குடித்ததால்; 15. தடுமாற மாட்டோம்; 16. நேர்ந்தனம்+ஒசன்னா+என்று; 17. எவ்+ஆச்சிரமங்களும்+இலங்க+நிற்போம்+கிறிஸ்து; 18. ஏசு+ ஐயன்+அருளால்+என்று; 19. செவ்+ஆச்சிரமிகளாய்+செழி+ அனுகூலம்+எலாம்; 20. தங்குவதற்குரிய கிருபையாகிய மலை கிடைத்தது; 21. கெம்பீரம்+அல்லேலூ யா; 22. அபரோட்சம்+ ஆனோம்+என்று; 23. பேயின் தலை பொடியாகுமாறு மிதித்த; 24. ஐயன்+அம்+கையெழுத்து+ஆயினோம்.

51. தோழிப்பெண்

[இறைவன் தமக்குக் காட்டிய அருட்செயல்களைத் தம் தோழியை அழைத்துக் கூறுவதுபோல் அமைந்த பத்து விருத்தங்களைக் கொண்டமையால் தோழிப்பெண் என்னும் தலைப்பைப் பெற்றுள்ளது.]

அறுசீர் விருத்தம்

1. உண்டுண் டென்றே யானிருக்கவே
உடையா னெழுந்தென் னுணர்வுட்புகுந்து
பண்டுண் டெனநீ[1] பற்றியவைகள்
பாழென் றருளுரை யான்மொழிந்து[2]
கண்டுண் டிருவென் கருணையமுதம்
கலியி லென்றான் றிருப்புகழை
விண்டுண் டுய்வே னிகபரங்களில்
விடிந்த திரவுகாண் டோழிப்பெண்ணே.

2. பந்தம் புகுத்தும் விரிந்தவழியின்
பற்றை யருட்சுரி கையாற்றுணித்து
மந்த வகத்தை[4] விசாரணையினில்
மாற்றிச் சச்சிதா னந்தனியான்
எந்த நிலையும் மனத்திருத்தியுள்
எய்தத் தானேயென் பங்காகியே
சொந்த மகவாய்ச் சுவிகரித்தனன்
துள்ளுதென் னாகமுந்[5] தோழிப்பெண்ணே.

3. எட்டுத் திசைக்கண் ணெங்கெனினுமே
இருந்துந் தொழுதவர்க் கானவையாம்
மட்டுக் கருளுந் திரித்துவபரன்
வாச தனதர விந்தக்கழல்[6]
தொட்டுத் தழுவி முத்தித்தினம்
சுகிக்க விரக்ஷணி யம்பகர்ந்து
கட்டுக் கடங்கா மனக்களிற்றினைக்[7]
கட்டினான் றனையயாற் றோழிப்பெண்ணே.

4. பாவ வகோர வெயிலெனின்மிகப்
பட்டு மூர்ச்சித்தியான் வருந்துகையில்
காவ லன்யேசு கிறிஸ்திரங்கியே
கடுகியி ரக்ஷணிய நீர்தெளித்து
ஜீவ தேற்றம் நல்கிவழியைத்
தெரிவித் தொழுகத்தி ராணியிட்டான்[8]
ஆவ லுடனென் னையனடிகள்
அருச்சித்தா னந்திப்பேன் றோழிப்பெண்ணே.

5. எங்கும் நிறைந்த வியாபகன்றனை
எண்பந் தனதந் திராதிகளால்[9]
தங்கும் வழியிட்டோ மெனப்பிதற்றும்
தவறொத் துருவங்க[10] ளைச்சேவித்து
மங்கும் மனக்கண் டருங்கெடுதிகள்
மகிமைச் சுவிசேஷ விரவியுமிழ்[11]
பொங்குஞ் சுடர்நீக் கிடமனதினால்
போற்று மருளுற்றேன்[12] றோழிப்பெண்ணே.

6. ஆசைச் சூறா வளிச்சுழிதனில்
அகப்பட் டனர்த்தங்க ளடைந்தவெனை[13]
ஓசைக் கடற்றரை[14] வான்மகிழவும்
உம்பர் தம்பிரா னெம்பெருமான்
காசைக்[15] கருணை யான்மனித்துடன்[16]
கவலை யிருட்போக்கி யாதரித்தான்
பூசை புரிவன் றினம்நலமெண்ணி
பூமான் றிருச்சரண் டோழிப்பெண்ணே.

7. எல்லை யிற்பே ரின்பசுகத்தில்
என்றும் வாழ்ந்திட வெனைப்படர்த்த
தொல்லை யொழிக்க விகத்துதித்தமா
தூயனெனக்கென் றவஸ்தைவகித்துச்
சொல்லை நம்பி யுய்முறைநெறி
சோரி[18] யாற்பிர திஷ்டைசெய்தான்
அல்லை[19] முகவெய் யோனாலிலக்கும்[20]
அருணா தன்மறக்கேன்[21] றோழிப்பெண்ணே.

8. தூய வாவி யுகந்தருள்பரி
சுத்தத் தாலு பராசத்தியத்தில்
நேய விசுவா சம்பொருந்தியே
நிலைப்ப தாலுமுண்டா மீட்பை
தீய னும்பெற் றுவப்படையவென்
சீர்கேட் டைக்குண மாக்கிவைத்தான்
காயம் மனவாக் கொருமையுற்றவன்
காற்றலை சுமப்பேன்[22] றோழிப்பெண்ணே.

9. ஞான ஜீவன் றனைத்துறந்தியான்[23]
நரக பாதைப்பிண மாய்க்கிடந்தேன்
தீன தயாளஇ யேசுகிறிஸ்தால்
சிதையாப் பிராணன் பெற்றெழுந்தேன்
ஊன நாட்ட மறத்தொலைத்தனன்
உசித வுணர்வு தியானமிட்டனன்
கான முழக்கு வேனற்றமிழில்
கர்த்தன் றுதிகெம்பத்[24] தோழிப்பெண்ணே

10. அஷ்ட பாக்கி யம்பெருகியோட
அஷ்ட படியேற்றங் கழிந்திலங்க
அஷ்ட நற்குண வாசங்கமழ்
அஷ்டா னந்தங்கள் மேவிநிற்க
அஷ்ட பந்த னத்தடங்கிலானல்[25]
அஷ்ட மாசெயலன் யாருமடைய[26]
அஷ்ட திசையும் நிறைந்தனனன்
களித்தான் மகிழ்ந்தனன் றோழிப்பெண்ணே.

1. பண்டு+உண்டு+என+நீ; 2. பாழ்+என்று+அருள்+உரையால்+மொழிந்து; 3. அருளாகிய வாளால்; 4. மந்த+அகத்தை; 5. துள்ளுது+என்+ஆகமும்; 6. தனது+அரவிந்தம்+கழல்=தனது தாமரை மலர் போன்ற திருவடி; 7. உள்ளமாகிய யானையை; 6. திராணி+இட்டான்=ஆற்றலைத் தந்தான்; 9. என்பந்தன+தந்திராதிகளால்=என்னைச் சூழ்ந்துள்ள தந்திரச் செயல்களால்; 10. தவறு+ஒத்து+உருவங்களை; 11. சுவிசேஷ+இரவி+உமிழ்=விவிலியமாகிய கதிரவன் தருகின்ற; 12. போற்றும்+அருள்+உற்றேன்; 13. அகப்பட்டு+அனர்த்தங்கள்+அடைந்த+எனை; 14. கடல்+தரை; 15. குற்றங்களை; 16. கருணையால்+மனித்து+உடன்; 'மன்னித்து' என வரவேண்டியது இடைக்குறைந்து 'மனித்து' என ஆளப்பட்டுள்ளது. 17. தூயன்+எனக்கு+என்று+அவஸ்தை+வகித்து; 18. இரத்தம்; 19. இருளை; 20. வெய்யோனால்+இலக்கும்; 21. அருள்+நாதன்+மறக்கேன்; 22. கால்+தலை+சுமப்பேன்; 23. துறந்து+யங்ன்; 24. கர்த்தன்+துதி+கெம்ப=இறைவனுக்குரிய துதி மேலோங்க; 25. அஷ்ட பந்தனத்தில்+அடங்கிடா+நல்; 26. எண்பெரும் ஆற்றல்கள் கொண்டவனை எவரும் அடையுமாறு.

52. தற்பொருள்

[அனைத்திலும் வலிமை வாய்ந்த பொருள் மட்டுமன்று; தாமே உருவான பொருளாகவும் உள்ள இறைவன் ஆற்றலைப் புகழும் பகுதி யாதலின் தற்பொருள் என்னும் பெயர் பெற்றுள்ளது.]

கலிவிருத்தம்

1. பேருல கத்தினிற் பெரிய ரெவரோ
சீருல கத்தினிற் சிறப்பவ ரெவர்மா
நேருல கந்தனி னிறுத்துவ[1] ரெவர்நாம்
பாருல கத்தடி பணியுந்தற்[2] பொருளே.

2. குணங்கிய[3] மனதைக் குணப்பட வருளி
இணங்கிய வாசீ ரெண்ணிலா தீந்தே[4]
உணங்கிய விதய மூக்கமு றச்செய்[5]
வணங்கிய வலனாம் வணங்குந்தற் பொருளே.

3. நெட்டைகள் குறுக்கி நெடுகிலும் மெலியும்
கட்டைகள் வளர்த்திக் கணிக்கரும் பாவ[6]
வெட்டைகள்[7] விலக்கி விளக்கரும் நீதிச்
சட்டைகள் வழங்கனாந் தாழுந்தற் பொருளே.[8]

4. துணியுறு வேதத் தூயசொற் படியே
அணியுறு மடியா ரகிலபர னசையால்[9]
பிணியுறு மாறு பிடிகடி யழித்தாள்[10]
திணியுறு பரனாஞ் சேருந்தற் பொருளே.

5. சூடிய வுரிய தூய்பெயர்க் கிசைய
நீடிய தயவு நீணிலர்க் கீட்டி[11]
வாடிய விதயம் மகிழ்வினா னிரப்பும்[12]
நாடிய வளனாம் நவிற்றுதற் பொருளே.

6. கருமத்தி னானாங்[13] காண்கொணா மீட்பைக்
குருமத்தி யஸ்தக் குமரனா லளித்து
பெருமத்தி ரங்கள் நீடுறும் வரங்கள்
தருமத்தி யாசச்[14] சயம்புதற் பொருளே.

7. ஞாலங்க ளொருங்கே நற்செழிப் படைய
காலங்க டெரிந்து[15] கனதய வியற்றிச்[16]

சீலங்க டழைய[17] செய்துயிர்க் கெல்லாம்
மூலங்க ளமைந்த முதலேதற் பொருளே.

8. ஆறுத னேர்மை[18] யறிவுதார் மீகம்
தேறுத லடையா திருந்துழல் பவர்நன்
மாறு தலுறழ வரங்களீந்[19] தலகைச்
சீறுத லொழிமா[20] தேவேதற் பொருளே.

9. கேடுற வலைந்த கேடனென் வினைகள்
வீடுற வொவ்வா விருத்தமென் றோட்டி[21]
மாடுற வழைக்கும்[22] மகத்துவ வாவி
பீடுற வீந்தாள்[23] பெருமான்றற் பொருளே.

10. சத்திய கிறிஸ்து சமயமென் கனுமா
துத்திய நன்மைச் சுடர்விட விரங்கி
நித்திய முதவி நீணிலத் தவரை
முத்திய ராக்கும் முனைவன்றற் பொருளே.

1. நேர் + உலகம் + தனில் + நிறுத்துவர்; 2. பார் + உலகத்து + அடி பணியும் + தற்பொருள்; 3. குற்றமடைந்த; 4. இணங்கிய + ஆசீர் + எண் + இலாது + ஈந்தே; 5. உணங்கிய + இதயம் + ஊக்கம் + உற + செய்; 6. கணிக்க + அரும் + பாவ; கணிக்க + அரும் = 'கணிக்கவரும்' எனவர வேண்டியது இடைக்குறைந்து 'கணிக்கரும்' என வந்துள்ளது; 7. வினைகளை; 8. வழங்கன் + நாம் + தாழும் + தற்பொருள்; 9. அகிலபரம் + நசையால்; 10. கடி + அழித்து + ஆள் = பேய்த் தன்மையானவற்றை அழித்துவிட்டு ஆள்கின்ற; 11. நீள் + நிலர்க்கு + ஈட்டி; 12. மகிழ்வினால் + நிரப்பும்; 13. கருமத்தினால் + நாம்; 14. தரும் + அத்தியாச; 15. காலங்கள் + தெரிந்து; 16. கனதயவு + இயற்றி; 17. சீலங்கள் + தழைய; 18. ஆறுதல் + நேர்மை; 19. வரங்கள் + ஈந்து; 20. சீறுதல் + ஒழி; 21. விருத்தம் + என்று + ஓட்டி = பழமை என்று விரட்டி; 22. மாடு + உற + அழைக்கும் = பக்கம் நெருங்குமாறு அழைக்கும்; 23. பீடு + உற + ஈந்து + ஆள்.

53. பறை

['பறை' எனில் பறையறிவித்தலால் எழும் ஒலியைக் குறித்து அவ்வொலி இறைவனே எனப் பெற வைக்கிறது. 'ஆதியிலே வார்த்தை இருந்தது' என்னும் யோவான் நற்செய்திக் குறிப்பே இப்பகுதிக்கு அடிப்படை எனத் தெரிகிறது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஆதியிலே யிருந்தது நம்மபறை
ஐயனிடத் திருந்தது நம்மபறை
ஆதியா யிருந்தது நம்மபறை
அம்பரனோ[1] டிருந்தது நம்மபறை.

2. சகலத்துக் கும்மூலம் நம்மபறை
தானேயோர் காரணம் நம்மபறை
அகலாது றைஜீவ னம்மபறை[2]
அவனியர் தமக்கொளி நம்மபறை.

3. இருளிலி லங்குவது நம்மபறை
இருளேற்றுக் கொள்ளாதது நம்மபறை
திருவுரு வானது நம்மபறை
ஜெகமொளி ரச்செய்வது நம்மபறை.

4. உலகத்தி லிருந்தது நம்மபறை
உயர்சான் றடைந்தது நம்மபறை
உலகையுண் டாக்கியது நம்மபறை
உலகறி யாததுவே நம்மபறை.

5. சொந்தத்தி லெழுந்தது நம்மபறை
சொந்தரொப்புக்[3] கொள்ளாதது நம்மபறை
அந்தமிகுந் திருநாமி நம்மபறை
அரியபெறு பேற்றுவழி நம்மபறை.

6. நவபிறப் பளிப்பது நம்மபறை
நவவர வாவிநல்கும்[4] நம்மபறை
பவமறத் துடைப்பது நம்மபறை
பரிபூர ணப்பொருளாம் நம்மபறை.

7. தேவமகி மையுடைத்தாம் நம்மபறை
திருக்காட்சி யருளியது நம்மபறை
சாவழித் தெழுந்தது[5] நம்மபறை
தலையெலாந் தாள்பணித னம்மபறை.

8. எழிற்கிருபை மகிமைத்து நம்மபறை
இயேசுகி றிஸ்திறையே நம்மபறை

அழியாப் பிரமாண னம்மபறை
அநாதிகு மாரனன்றோ நம்மபறை.

9. ஆளுந்திரு வரசனே நம்மபறை
ஆசாரி யன்றரிசி[6] நம்மபறை
மாளுமுல கிதனுக்கு[7] நம்மபறை
மாவல்ல ரக்ஷணிய னம்மபறை.

10. ஆனந்த விண்ணாட[8] னம்மபறை
அலகைமத நாசனே நம்மபறை
தானந்த மாகானென்றும்[9] நம்மபறை
சத்திய வார்த்தையே நம்மபறை.

1. இறைவனோடு; 2. அகலாது+உறை+ஜீவன்+நம்ம+பறை; 3. தற்பெருமை; 4. நவவரவு+ஆவி நல்கும்; 5. சாவு+அழித்து+எழுந்தது; 6. ஆசாரியன்+தரிசி=இறை வாக்கினன்; 7. விண்+நாடன்; 9. தான்+அந்தம்+ஆகான்+என்றும்=தனக்கு என்றும் முடிவில்லாதவன்.

54. பார்ப்பான்

[பார்ப்பான் என்பதற்கு மறையோன் எனப் பொருள் கொண்டு தம் மறையோனாகிய இறைவனின் தனிச் சிறப்புக்களை ஆசிரியர் இப் பகுதியில் குறிப்பிடுகிறார். ''நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்'' என்னும் எபிரெயர் நிருபப் பகுதியே இத்தலைப்புக்கு அடிப்படை எனக் கொள்ளலாம்.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஊட்டுப்புரைப் பார்ப்பானோ வெங்கள் பார்ப்பான்
உலகிற்குப் பாரமோ வெங்கள் பார்ப்பான்
நாட்டுக்குக் கெடுதியோ வெங்கள் பார்ப்பான்
நற்பரா மரிப்பனே யெங்கள் பார்ப்பான்.

2. தந்திர சாஸ்திரனோ வெங்கள் பார்ப்பான்
தன்னய நாட்டனோ வெங்கள் பார்ப்பான்
மந்திரப் பித்தேறியோ வெங்கள் பார்ப்பான்
மகிமைக்கு ணாதிபனே யெங்கள் பார்ப்பான்.

3. ஓதி மறப்பவனோ வெங்கள் பார்ப்பான்
ஒழுக்கக்கே டுள்ளவனோ வெங்கள் பார்ப்பான்
நீதிப் பிசகனோ வெங்கள் பார்ப்பான்
நித்திய பரப்பிரமமே யெங்கள் பார்ப்பான்.

4. ஆசாரக் குறையனோ வெங்கள் பார்ப்பான்
அசுத்தியுறக் கூடியனோ வெங்கள் பார்ப்பான்
வாசாலக் காரனோ[1] வெங்கள் பார்ப்பான்
மாசிலாத் தேவனே யெங்கள் பார்ப்பான்.

5. வாரபக்ஷக் காரனோ[2] வெங்கள் பார்ப்பான்
வாய்மிரட்டுக் குள்ளனோ வெங்கள் பார்ப்பான்
நேரத்தொரு கொள்கையனோ வெங்கள் பார்ப்பான்
நிருவிகற்ப[3] நாதனல்லோ வெங்கள் பார்ப்பான்.

6. பொருளாசைப் பின்புத்தியோ வெங்கள் பார்ப்பான்
பொல்லார்க் கிணக்கனோ[4] வெங்கள் பார்ப்பான்
இருளாசைக் குப்பையனோ வெங்கள் பார்ப்பான்
இயேசு கிறிஸ்துவே யெங்கள் பார்ப்பான்

7. பிறருதவி வேண்டுவோனோ வெங்கள் பார்ப்பான்
பேதக சிந்தையனோ வெங்கள் பார்ப்பான்.
மறத்தொழிற்[5] புரிபவனோ வெங்கள் பார்ப்பான்
மாறாத வள்ளலல்லோ வெங்கள் பார்ப்பான்.

8. போதனைக்கொத் தொழுகானோ[6] வெங்கள் பார்ப்பான்
பொய்ப்புதுமைக் கதையானோ வெங்கள் பார்ப்பான்
சாதனைக்கே லாதவனோ வெங்கள் பார்ப்பான்
சத்தியசம் பூரணனே யெங்கள் பார்ப்பான்.

9. செத்தவே தாகமனோ வெங்கள் பார்ப்பான்
சிலஜாதி கட்குளனோ வெங்கள் பார்ப்பான்
எத்திப்பி ழைப்பவனோ வெங்கள் பார்ப்பான்
ஏற்றநற்ச காயனல்லோ வெங்கள் பார்ப்பான்.

10. ஒருதேச வேதியனோ வெங்கள் பார்ப்பான்.
உலகொப்பாத் தாதையனோ வெங்கள் பார்ப்பான்
கருஞ்சிலை யர்ச்சிகனோ வெங்கள் பார்ப்பான்
கர்த்தாதி கர்த்தனல்லோ வெங்கள் பார்ப்பான்

1. ஏமாற்றுப் பேச்சுக்காரனோ; 2. பாரபட்சம் காட்டுபவனோ; 3. அன்பர்கட்கிடையே வேறுபாடு காட்டாதவன்; 4. பொல்லார்க்கு இணக்கனோ; 5. தீயதொழில்; 6. போதனைக்கு ஒத்து ஒழுகானோ.

55. பறையனும், பறைச்சியும்

[குறவஞ்சி இலக்கியத்தில் காணப்படும் சிங்கன் சிங்கி உரையாடலைப் போன்று பறையனுக்கும் பறைச்சிக்கும் நடைபெறும் உரையாடல் முறையில் பாடல்களை இப்பகுதியில் ஆசிரியர் அமைத்துள்ளார்.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. காரண மின்றியொரு காரிய மிலையே
கண்டதெலாம் வந்தவிதங் கழறேடா[1] பறையா?
ஆரண[2] மூன்று மரற்றும் படியே
ஆனந்த நாடர்தந்த தறியாயோ பறைச்சி.

2. மெஞ்ஞான நிலைமை மேவிய முதனரர்[3]
விலக்கிய வழிபுகு விதமென்னோ பறையா?
அஞ்ஞான சாத்த னரவுரு வெடுத்தே[4]
அணாப்பிக்[5] கெடுத்த தறியாயோ பறைச்சி.

3. ஆதியிற் பவவிரு ளழியப் பலியை
ஆண்டவன் விதித்ததி யாதுக்காய்ப் பறையா?
நீதியின் பரன்யேசு நிலம்வந்து பலியாதல்
நினைக்குங் குறிப்பெனநீ நினைக்காயோ பறைச்சி.

4. புண்ணிய கிறிஸ்தேசு புரியாக மின்றேல்[6]
போகாவோ மனுடர்செய் புன்பவங்கள் பறையா?

எண்ணிய வேறேது விதமும் நிவிர்த்திவரா
எபிரேயர் படித்தறிந் திலையோநீ பறைச்சி.

5. நிறையரட் சணிய நிருமலா னந்தமது[7]
நீயுண்ணக் கொடுத்த நேயரார் பறையா?
குறையறப் பேரன்பு குலவகங் கனிந்த[8]
குருசேறி நாடரெனக் குறியாயோ பறைச்சி.

6. பாவக்கள் ளருந்திப் பலர்பழிப் பேற்றநீ
பகைத்ததை வெறுக்கப் பண்ணியதார் பறையா?
தேவக்கள் ளாகிய திருவேத மூட்டிய
சிங்கார நாடரெனத் தெரியாயோ பறைச்சி.

7. ஈனப் பனையினிழிவான கள்ளைநிதம்
எவரும் விரும்பு மியல்பென்னோ பறையா?
ஞானப் பனையி னயமான மதுச்சுகம்
நன்கறி யாமையே நவிலணுமோ பறைச்சி.

8. பருவ காலத்திற் பகலுறங் கசடர்
பலனேது பெறுவார் பற்றேடா பறையா?
பெறுமறுப் பதிற்பிச்சைக் கலைந்தெங்கு மோடியே
பிழைக்கத் துணிவதே பேறேடி பறைச்சி.

9. மண்ணாடி நின்றே வாணாட் கழித்தால்
வருங்கால மேன்மை வருமோடா பறையா?
விண்ணாடர் வரும்நாள் வீணரென் றகற்றி
விடுவார் புகழெலாம் விலகுமே பறைச்சி.

10. சுந்தர நாடார்க்குத் தொண்டு புரிந்தால்
தொல்லையுண் டோவீற்றிற் சொல்லேடா பறையா?
இந்தரை யந்தரந் தந்தவ ரடியார்
என்றும்வாழ் வார்சிறீ யேசுஜெயம் பறைச்சி.

1. கூறுவாய்; 2. வேதம்; 3. மேவி+அமுதன்+நரர்; 4. அரவு+உருவு+எடுத்தே=பாம்பு வடிவம் எடுத்து; 5. மயக்கி; 6. புரி+யாகம்+இன்றேல்=புரிந்த பலி இல்லாவிட்டால்; 7. நிருமலம்+ஆனந்தம்+மது=தூய்மையாகிய மகிழ்ச்சியைத் தரும் தேன்; 8. குலவி+அகம்+கனிந்த.

56. பார்ப்பானும் பறையனும்

[''அன்னிய குலத்தாருடன் உறவாடுவதோ, அவர்களுடைய வீட்டிற்குச் செல்வதோ ஒரு யூதனுக்குத் தகாது என்று உங்களுக்குத்தெரியும். ஆனால் யாரையும் தீட்டு உள்ளவனென்றோ, அசுத்தமானவனென்றோ சொல்லலாகாதெனக் கடவுள் எனக்குக் காண்பித்தார்'' என்னும் அப்போஸ்தலர் பணிக் (4-28) குறிப்பின் அடிப்படையில் இப்பகுதி அமைந்துள்ளது. சாதி வேறுபாடு கூடாது என்பதே இதன் மையக்கருத்து. அது இருவருக்கிடையே எழும் உரையாடல் வழியாக வலியுறுத்தப்படுகிறது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. எட்டெட் டென்றா லெங்கேநான்
எட்டுவ தெவிடமும் பூதியமே[1]
ஒட்டு[2] நீங்க மார்க்கமுண்டோ?
ஓதி மறந்த பார்ப்பானே.

2. ஈன மின்றிமீ னத்தையாதி[3]
இருக்குஞ் சலமாடிச் சுத்தியாம்நீ[4]
ஞான மின்றியெனை யகலென்றே
நவின்றநின் புத்தியென்ன பார்ப்பானே.

3. நிலத்தை யறிந்தே வித்திறைத்து
நின்சா தியிற்கனி யேந்தாமல்
பலத்தைப் பரத்தைய ரிடங்களைநின்
பாரிப் புத்தியிதோ பார்ப்பானே.

4. நாலாம் வருணப் பிச்சைதானம்
நல்காமச் சிரார்த்தம் வாங்கிய நீ
மேலாஞ் சாதி எனவுரைக்கும்
வேதமனு வுரையென்ன பார்ப்பானே.

5. சீவிக் குதலிலா விக்கிரகத்தைச்
சேவிக்கும் நீபெருந் தீட்டாயிருக்க
கூவி யெனையகலப் போவென்றேசிக்[5]
குரைத்த முறையேது பார்ப்பானே.

6. முன்னோ ரெல்லாம் விப்பிரர்களாய்
முளைத்தன ரோகல்வி யொழுக்கத்தினால்
பின்னோர் மதிக்கச் சிறந்தனரோ நீ
பேசாய் சபைக்கண் பார்ப்பானே.

7. பறையு மெவனும் பறையனன்றோ
பறைய னென்றெனை நீபறைவானேன்
பறையும் நீயும் பறையனல்லோ
பார்க்காமற் பறைவாயோ பார்ப்பானே.

8. ஒருவ னொருத்தி நின்றுதானல்லோ
உண்டாச்சு மனுக்கோடி யனைத்தும்
கெருவங் கொண்டெனை நிஷேதமாகக்
கீறிய வரைநில்லா பார்ப்பானே.

9. மித்திய வைணவஞ் சைவமாதி
விதிக்குஞ் சாதி வரம்பையெல்லாம்
சத்திய கிறிஸ்து மார்க்கவாறு[6]
தட்டி மண்ணிடுதே பார்ப்பானே.

10 செய்கை பற்றிய பெயரேயல்லால்
சீவன் பிறப்பிலுண்டோ ஜாதிபேதம்
உய்கை பெறுசுவி சேஷஞானம்
உணர்ந்து தழுவிநின்று பார்ப்பானே.

1. புனிதமே; 2. இழிவு; 3. மீன்+நத்தை+ஆதி; 4. நீ தூய்மை யாகிறாய்; 5. போ+என்று+ஏசி; 6. மார்க்கம்+ஆறு.

57. வேளாளன்

[மனித சமுதாயம் உண்ணவும், உடுக்கவும் தேவையான பொருள்களை உழைத்துப் பயிராக்கி உதவும் வேளாளனாக இறைவனை உருவகித்துப் பாடப்பட்ட பகுதி இது. உருவகங்கள் சிறப்பாகவும் புதுமையாகவும் அமைந்துள்ளன.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஞாயப் பிரமாணக் கலப்பை கொண்டு
நளின முடனிதய நிலமுழுது
நேய வினாதூ வித்[1] தேவ மகிமை
நினறவினை வெடுப்பனம்[2] வேளாளன்.

2. மானிடராம்பசு மந்தை தன்னை
வளர்புல் லமர்நீர்த் துறையினடத்தி
தானிட ரின்றியே[3] காத்துக் கொள்ளும்
சாற்றருஞ் சமர்ததனம்[4] வேளாளன்.

3. ஒலிவச் சோலையிற்பா வோடி நன்றாய்
உயர்கொல் கதாவி னல்ல தறிசெய்து
நலிவச் சங்களின்றி[5] நாமு டுத்த
நல்லா டைதரு வனம்வே ளாளன்.

4. அஞ்சு காயம்வரப் பாடு மேவி
அரும்பெருஞ் செல்வஞ் சம்பா ரித்தே
எஞ்சு தலையற்று நாம்பி ழைக்க
ஈந்தா னிலவசம்நம் வேளாளன்.

5. கொடுத்தா னுத்தம[6] குமரே சனாய்
குலவிய மாமகிமை முற்றத் துறந்தே
எடுத்தா னமக்கா யடிமை ரூபம்
இயம்பொணா[7] வன்புறு நம் வேளாளன்

6. எல்லாமா ளெசமா னாக விருந்தும்[8]
இகத்தின் பெருமைபொடி நீறாகவே
பொல்லா ருடபாதஞ் சுத்தி செய்ய
பொருந்தின னற்புதம்நம்[9] வேளாளன்.

7. தப்போ துஞ்சத் துருவச மாகித்
தவிக்கு மெவர்க்குந்திரு மனதிரங்கி
எப்போ தும்நன் மைபுரிவ துவே
இயல்பா யுடையனம்[10] வேளாளன்.

9. குறையா தொருகாலுங் களஞ்சி யத்தில்
கூடிவ ருந்திரள் கோடிகட்கும்
அறையா னளிக்க[11] வெந்நா ளும்மே
அளவிலா வளனம்[12] வேளாளன்.

9. உருவாக் கின்றவ னெண் ணறு பொருட்கள்[13]
உயர்ந்தமாற் றாக்குவனெஞ் சுலகங்களை[14]
திருவாக் கயர்க்கி லன்கிரு பாநதி
சேனைகளின் கர்த்தனம்[15] வேளாளன்

10. இருதய வஸ்திரம் வண் ணஞ் செய்வன்
இரும்புகல் வெண்கலம்பற் பணியாக் குவன்
ஒருதய வீனங்[16] காட்டா மலேயே
உயிர்க்கெலா முதகுவனம்[17] வேளாளன்.

1. விதை தூவி; 2. விளைவு+எடுப்பன்+நம்; 3. தான்+இடர்+இன்றியே; 4. சமர்த்தன்+நம்; 5. நலிவு+அச்சங்கள்+இன்றி; 6, கொடுத்து+ஆள்+உத்தம; 7. கூறவியலாத; 8. எல்லாம்+ஆள்+எசமான்+ஆக+இருந்தும்; 9. பொருந்தினன்+அற்புதம்+நம்; 10. இயல்பாய்+உடையன்+நம்; 11. அறையான்+அளிக்க = சிலுவையில் அறையுண்டவன் அளிக்க; 12. அளவு+இலா+வளன்+நம் 13. உருவாக்கின்றவன்+எண்+அறு+பொருட்கள்; 14. உயர்ந்த+மாற்று+ஆக்குவன்+எஞ்சு+உலகங்களை; 15. கர்த்தன்+நம்; 16. ஒரு+தயவு+ஈனம்; 17. உயிர்க்கு+எலாம்+உதகுவன் = நம்.

58. இருபிறப்பாளர்

[மானிடப் பிறப்பில் நல்லோராய் வாழ்ந்தோர் அனைவரும் உலக முடிவில் இறைவன் வழங்கும் நீதிக்கேற்ப வானுலகம் அடைவர். ஆதலின் உலகில் பிறந்து மடிந்தபின் மீண்டும் புத்துயிர் பெற்று வானுலகு அடைவோர் அனைவரும் இருபிறப்பாளர் ஆவர். அத்தகைய தகுதியுடையோர் இயல்புகளை இப்பகுதிப் பாடல்கள் விளக்குகின்றன].

இரண்டடியாய்த் தம்மிலொத்துவந்த குறள்வெண்செந்துறை

1. ஞான பரனா ரருளும் நீதி
நயம்பெற் றென்றும் வாழ்தற்

கீன சுயநீ தியைவிட் டோரன்றோ
இருபிறப் பாள ராவார்.

2. கருமத்தா லடையா நீதியை மேவக்
கணிக்கரு மருமை யுற்ற[1]
இருதய விசுவாசம் பொருந்தின ரன்றோ
இருபிறப் பாள ராவார்.

3. தீய வுருவார்ச் சனைதுறந்[2] துண்மை
சிறக்கும்வல் லாவி யாலே
ஏய வருவார்ச் சனைசெய்தா ரன்றோ
இருபிறப் பாள ராவார்.

4. தீட்டிய சிலுவைப் புண்ணியோ பாயச்
செவ்வழி சென்று தாழ்ந்தே
ஈட்டிய பவமனிப்[3] படைந்தவ ரன்றோ
இருபிறப் பாள ராவார்.

5. துன்ப வலகை[4] தீவழி முனைந்து
தூ யாவி நல்கு துணையால்
இன்ப பரிசுத்த ஜீவிய ரன்றோ
இருபிறப் பாள ராவார்.

6. கெட்ட குணமுஞ் செய்கையும் மாறிக்
கிறிஸ்துவல் லாவி நவமாய்[5]
இட்ட நற்குண நற்செயல ரன்றோ
இருபிறப் பாள ராவார்.

7. அகத்தி னூலும்[6] புறத்தி லொழுக்கமும்
அமைந்தலை யாழி[7] சூழ்ந்த
இகத்திற் றங்கு மந்தண[8] ரன்றோ
இருபிறப் பாள ராவார்.

8. பொல்லா வகந்தை மற்சர மாதி[9]
போக்கியே கருணை மேவி
எல்லா நரரையும் நேசிப்போ ரன்றோ
இருபிறப் பாள ராவார்.

9. மாற்றம் மனதினி லாகி யேசு
மகத்துவ தெய்வமே யருளும்
ஏற்றனி ரட்சிப் படைந்தவ ரன்றோ
இருபிறப் பாள ராவார்.

10. துலங்குமி யேசு கிறிஸ்து புண்ணியத்தில்
சூழ்விசு வாச நலத்தால்
இலங்கும் நித்திய ஜீவனுற் றோரன்றோ
இருபிறப் பாள ராவார்.

1. கணிக்க+அரும்+அருமை+உற்ற; 'கணிக்க வரும்' என வர வேண்டியது தொகுத்தல் விகாரம் பெற்றுக் கணிக்கரும் என வந்துள்ளது; 2. உருவ வழிபாட்டினை விட்டு; 3. 'மன்னிப்பு' என்பது இடைக்குறையாய் 'மனிப்பு' என வந்துள்ளது; 4. துன்பமாகிய பேய்; 5. புதிதாய்; 6. அகத்தில்+நூலும்; 7. அமைந்து+அலை+ஆழி; 8. இகத்தில்+தங்கும்+அந்தணன்; 9. மற்சரம்+ஆதி=பொறாமை முதலியன.

59. அந்தணன்

[இறைவனைச் செந்தன்மை பூண்டொழுகும் அந்தணனாய் நினைந்து, அருட்செயல்களைப் புகழ்ந்து பாடிய பகுதியாகும்.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. உருவங் குலைந்தேங்[1] கடிநிற மடைந்தேம்
உழன்றேம் மாம்சக் கிரியைகளில்
அருவன்[2] றிருவுரு வாகியிங் கெழுந்தெமை
ஆளாக்கிக் கொண்டனை யந்தணனே.

2. சத்தியங் கிருபை பொறையன் பிரக்கம்[3]
சலிப்பறப் பிறர்க்கு நலம்புரிகுதல்
நித்திய மிரவி நிகரொளி பரப்பி
நேசித் தனையெமை யந்தணனே.

3. வருத்த மடைந்து பாரஞ் சுமந்து
மயங்கின ரிளைப்பா றுதற்பெறநீ
பெருத்த கருணா கரனாய்ச் சிலுவையில்
பெரும்பலி முடித்தா யந்தணனே.

4. மாயப் பிரபஞ் சத்தி னின்றெமை
வலிமை யுடன்மீண் டுயர்வீட்டின்
மேயப் பரமா னந்த சுகத்தில்
விடவிரங் கினையே[4] யந்தணனே.

5. வஞ்சனை யறியாய் நெஞ்செலாந் தெரிவாய்
மாய்மா லங்களைக் கண்டொழிப்பாய்
நஞ்சனை[5] தீய மதவன மழிப்பாய்[6]
நமதிரு வடியிணைக் கந்தணனே.

6. பொய்க்குரு பின்னே யலைந்துநாட் பலதைப்
போக்கி மயக்கமுற் றேகிடந்தேம்
மெய்க்குரு இயேசு கிறிஸ்துநீ சத்திய
வேத மளித்தனை யந்தணனே.

7. திறையா வயிறே குலதே வதையாய்
நின்றுழற் காரியக் குருக்களையே
இறையா யேத்தித் திரிபிழை பொறுத்தே
ஈடேற்றி வைத்தனை யந்தணனே.

8. உண்மை காட்டி யுருதி தீட்டி
ஊக்கம் நாட்டி யொழுக்கத் துக்காம்
வெண்மை யகத்தும் சூட்டி[7]நடத்துமா
மேன்மை யுனக்கே யந்தணனே.

9. ஆக்கலும் நீயே யளித்தலும் நீயே
அமல முள்ளி லுண்டாக்குவதும்
காக்கலும் நீசர்வா தீனனும் நீயே
கர்த்தாதி கர்த்தனா யந்தணனே.

10. இகத்திற் சரித்தா யிடரெலாஞ் செயித்தாய்
எங்குல மத்தி யஸ்தனனாய்
அகத்திற் றொழுவேம் புறத்துனைப் புகழ்வேம்
அகிலா னந்தநீ யந்தணனே.

1. உருவம்+குலைந்தேம்; 2. உருவமற்றவன்; 3. பொறை+அன்பு+இரக்கம்; 4. விட+இரங்கினையே; 5. நஞ்சு+அனை=நஞ்சு போன்ற; 6. மதமாகிய காட்டை அழிப்பாய்; 7. அமலம்+முள்ளில்+உண்டாக்குவதும்=முள்ளில் தூய்மையை ஏற்படுத்துவதும்.

60. வண்ணான்

[இறைவனை வண்ணானாக உருவகித்துப் பாடும் பகுதியாகும். இறைவனின் அருட்செயல்களைத் துணிகளைத் தூய்மைப்படுத்துவோனின் பணிகளாக உருவகிப்பது புதுமையாக உள்ளது]

இணைக்குறள் வெண்செந்துறை

1. அழகிய வெண்ணாடை நாற்ற முள்ள
அழுக்கேற வுருண்டு பிரண்டுழன்றேன்
''வழக்காட வம்மின்'' என்ற வழியே
வந்தேனன்கு வெளுத்தளி வண்ணானே.

2. ஊருக் கனைத்துமே யுன்றுறை யன்றி[1]
ஒர்துறை யிலுஞ்சுசி[2] யுண்மைக்கில்லையே
சேருமுன் றிறமை கேட்டு வந்தேன்
சீக்கிரம்நீ வெளுத்தளி வண்ணானே.

3. உத்தம திருவவஸ் தையுவர் முறுக்கி
உயர்மத்தி யஸ்த வெள்ளா விவைத்து
சுத்தநின் றிருரத்த நீரிற் றோய்த்து
துய்யதாய் வெளுத்தளி வண்ணானே.

4. பரிசுத்த ஜீவியமா மடியு டுப்பும்
பரமசந் தோஷமாம் மேலு டுப்பும்
கரிசித்து நம்பிக்கை யாந்தலைப் பாகையும்
கனிவுடன் வெளுத்தளி வண்ணானே.

5. நானூரும் வீடுமிங் கற்றவன்[3] கண்டாய்
நலமிகும் மேலான வீட்டைநாடி
வானூருக் கேகும்பர தேசி யாக்கும்
வாங்கநினைப் பாயோகூலி வண்ணானே

6. ஆருக்கும் வேதனம்வாங் காம[4] லேநீ
ஆனந்தமாய்வெளுத் துதவு வோனென்னும்
பேருக்குச் சாட்சிமுகங் காட்டுது கண்டேன்
பிரீதியாய்[5] வெளுத்தளி வண்ணானே.

7. பரதேசி கட்கெலா மாதி முதலாய்ப்
பரிசுத்த வெள்ளை நல்கு வள்ளலல்லோ நீ
நரதேசிக்[5] கான வெள்ளை நின் றுறைதானே
நம்பிவந்தேன் வெளுத்தளி வண்ணானே.

8. பஞ்சைப்போல் வெண்மையாய் வெளுப்பா யாமே
பாரிலுறை மழைபோலு மாக்குவாயாமே
கொஞ்சமுங் கறையின்றிச் செய்வா யாமே
குலவுமா சமர்த்தனீ வண்ணானே.

9. நீக்குவை ரத்தாம்பரச் சிவப்பையு மென்றே
நிச்சயங் கேட்டேனம்பி யோடியே வந்தேன்
மோக்கத்துக்[6] கேற்ற வெள்ளை நன் மாதிரியாய்
முயன்று நீ வெளுத்தளி வண்ணானே.

10. திருநாமம் இயேசுகிறிஸ் தென்பது தானோ?
சிரிப்பு வருதெனக்குன் செயலையெண்ண
பொருவறு நாமனே புண்ணி யா! நம
போற்றாதலை வேனோநினை[7] வண்ணானே.

1. உன் + துறை + அன்றி; 2. அடைக்கலம்; 3. நான் + ஊரும் + வீடும் + இங்கு + அற்றவன்; 4. கூலி வாங்காமல்; 5. அன்பாக; 6. மோட்சத்திற்கு; 7. போற்றாது + அலைவேனோ + நினை.

61. செம்மான்

[இறைவனைத் தோலாலாகிய பொருட்களைச் செய்யும் தொழிலாளியாக உருவகித்து இறைவனின் அருட்செயல்களைப் போற்றும் பகுதியாக இஃது அமைந்துள்ளது. ஆதியாகமத்தில் வரும், ''அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் தோல் சட்டைகளைச் செய்து ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் அணிவித்தார்'' என்னும் பகுதி இப்பாடல்களின் தோற்றத்திற்குக் கருவானது எனலாம்.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. பாக்கிய நன்னிலையை மீறுதலினாற் பறிகொடுத் தேனதா
னக்கனானே![1]
யோக்கியமா யென்மான மறைக்கஒரு தோலுடை யிட்டாயே
செம்மானே!

2. தாரணி சமாதானத்தின் சுவிசேஷத்திற் குரிய வாயத்த
மென்னும்[2]
ஏரணி பாதரட் சையதனை யென்காற் கிட்டனையே
செம்மானே.

3. மிக்கா யெழும்பிவரும் ஞானப்போரில் மேல்விழவரும்
வெட்டுக்குத் தையெறியை[3]
தக்கபடி தடுக்கமெய் விசுவாச தரும்பரிசை நல்கினையே
செம்மானே.

4. மித்தியந்[4] துள்ளிமறியும் பிரபஞ்சத்தில் மிக்கதிட னோடே
நின்றுபோராட
சத்திய விடுப்புவாரொன் றெனக்குத் தரமன தாகினையே
செம்மானே.

5. தடித்த விருதயமான தோலைத்தகு மறுபிறப்பி னாலே
பதனிட்டு
முடித்த நின்னீதி சொல்லும்வேதம் முழுது மெழுதினையே
செம்மானே.

6. பொங்கார வாவியின்[5] போராட்டத்திற் புகழுற வேயான்
போட்டுக்கொள்ள
சிங்கார மானதலைச் சீராவொன்று[6] திறமாய்ச்
செய்தீந்தனையே செம்மானே.

7. ஆட்டுத்தோல் தகசுத்தோலால் மூடியாக்கிக் கூடாரஞ் சூட்சித்
தாப்போல்[7]
பாட்டுக்கி ணங்கவுடம் பெடுத்தனைநீ பட்சமொடு
காத்தனையே செம்மானே.

8. சாயந் தீர்ந்த பாதரட்சை தந்தென் பாதங்களைப் பாதுகாக்கும்
நேயப் பெருக்கினுக் கென்னப திலை நீட்டுவேன் மாலிலையே
செம்மானே.

9. வல்லவ னுனதழ கானசெருப்பின் வாரை யவிழ்க்கவல்ல
வரெவரோ?
நல்லவ னுனதுப ரோபகார நன்றிம றக்கேனேயே
செம்மானே.

10. ஆண்டுநாற்ப தாகினாலு மழியாதுன் வேலையி லோர்வா
ரென்றாலும்
பூண்டுகொண் டேனுன் சிநேக மொன்றையே பூரணமாகவே
செம்மானே.

1. பறிகொடுத்தேன் + அதால் + நக்கன் + ஆனேன் = சிரிப்பிற்குரியவன் ஆனேன்; 2. ஆயத்தம் + என்னும் = ஆடை என்னும்;' 3. வெட்ட வருகின்ற வாள் போன்றவற்றை; 4. அநீதி; 5. பொங்கார + ஆவியின் = தீய ஆவியின்; 6. சீரா + ஒன்று = தலைமேல் போட்டுக் கொள்ளும் துணி; 7. அமைத்தாற்போல்; 6. பதிலாகத் தருவதற்கு ஒன்றுமில்லையே.

62. பட்டாரியன்

[''ஒரே முறையில் எக்காலத்திற்குமே ஒப்புக் கொடுக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவினுடைய உடலின் பலியால் நாம் பரிசுத்தராக்கப் பட்டோம்'' என்னும் எபிரேயர் திருமுகப் பகுதியின் (10—10) அடிப் படையில் எழுதப்பட்டுள்ளது. 'பாடுபட்ட தலைவனே!' என்னும் பொருளில் 'பட்டாரியா!' என இயேசுவை அழைத்து அவருடைய அருட்செயல்கள் கூறப்படுகின்றன.]

ஈரடிக்குறள் வெண்செந்துறை

1. ஆவிக் குரிய ஜீவனை நீயே யருளினா யிரங்கி
பாவி யெனக்காய்ச் சிலுவையிற் கொடிய பாடுபட் டாரியா!

2. நீச மொழிந்தி யானிணை யற்றவுன் னீதியடைந் துயவே
பாச மிலகுங் காட்சி விளக்கினாய் பாடுபட் டாரியா!

3. அத்தன் றிருவுள வெண்ணங் குறைவற யரிதிலே முடித்துப்
பத்தன் மனதினைக் கொள்ளை கொண்டனையே பாடுபட்
டாரியா!

4. அட்சயன் நினைத்திரு வருளாலே யறிநற் றுறைகாட்டி[1]
பட்சம் நிறைத்தாய் கொல்கொதாக் குருசிற் பாடுபட் டாரியா!

5. போகத் திருவுளம் பற்றினாய் மேலாம் பொறுமையிற்
சிறந்தாய்
பாதகங் கெடவே பலியா டாகிப் பாடுபட் டாரியா!

6. நூலினை வழுவித் தழுவிய நெஞ்சி னோயகன் றுயவேமறைப்
பாலினை மடிவைத் தூட்டினை தாயாய்ப் பாடுபட் டாரியா!

7. வாக்கிய முறையே[2] மண்ணுதித் தொழுகி மனுடபுத்
திரரெவரும்
பாக்கிய ராகும் மாதிரி காட்டினை பாடுபட் டாரியா!

8. நீடருட் டிரித்துவ[3] திருநா மத்தை நெஞ்சங் கனிந்தினிதாய்
பாடருள் சொரிந்தா யநாதி யன்பாற்[4] பாடுபட் டாரியா!

9. ஈன வுருப்பொய்த் தேவர் போற்றி யிழிந்தோ ரமராமெய்ப்
பான வணக்கஞ் செயவைத் தனையே பாடுபட் டாரியா!

10. இந்தத் துவித நூற்றரா[5] வானந்த மெய்த வேநின்சம்
பந்த சுவிசே ஷாநந்தத்தா லிட்டாய் பாடுபட் டாரியா!

1. நல்+துறை+காட்டி; 2. வேத வசனங்களின்படியே; 3. நீடு+அருள்+திருத்துவ; 4. பாடு+அருள்+சொரிந்தாய்+அநாதி+அன்பால்; 5. இருவிதக் கொள்கைகள் கூறும் நூல்களைத் தராமல்.

63. செட்டி

[இறைவனை வாணிகம் செய்யும் செட்டியாராக உருவகித்துப் பாடப்பட்ட பாடல்களைக் கொண்டது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஞானச் சரக்குவிற்பா னம்மசெட்டி
நல்லாதா யங்காண்பா னம்மசெட்டி
ஈனச் சரக்கழிக்கா னம்மசெட்டி
இயேசு கிறிஸ்தெனும் நம்மசெட்டி.

2. என்னைப் பெருங்கடையா னம்மசெட்டி
இனிய பண்டக்கடையா னம்மசெட்டி
கண்ணைக் கவராடை நம்மசெட்டி
கடையுண்டு விலைவாங்கா னம்மசெட்டி.

3. தேன்ரசம் பால்விற்பா னம்மசெட்டி
தெண்ணீ ரமுதுவிற்பா னம்மசெட்டி
கான்[1] விற்கான் விலைக்கொன்றும் நம்மசெட்டி
கருத்தாய்ப்பண் டம்மாற்றுவான நம்மசெட்டி.

4. இருதயப் பண்டத்துக்கு நம்மசெட்டி
எப்பொரு ளும்மாற்றுவ னம்மசெட்டி
ஒருவ ருதவியின்றி நம்மசெட்டி
உலகெலாஞ் செய்வன் செட்டு[2] நம்மசெட்டி.

5. வஞ்சனை செய்தறியா னம்மசெட்டி
வாக்குத் தவறலில்லா னம்மசெட்டி
கொஞ்சமும் நேர்பிசகா னம்மசெட்டி
கொடுத்துங் குறையாதா னம்மசெட்டி.

6. சொந்தப் பொருளுடையா னம்மசெட்டி
சுதாஸ்தி னைவுடையா[3] னம்மசெட்டி
கந்தச்[4] சரக்குடையா னம்மசெட்டி
கடுஞ்செட்டுச் செய்கிலனே நம்மசெட்டி.

7. வள்ள லெவர்க்கென்றும் நம்மசெட்டி
வான்புவி யீடில்லா னம்மசெட்டி
உள்ளக் கனிவுடையா னம்மசெட்டி
உபகாரி யுயிர்க்கெலாம் நம்மசெட்டி.

8. நட்டமிலா னெக்காலமும் நம்மசெட்டி
நாடநா திநித்திய[5] னம்மசெட்டி
அட்டபாக் கியம்பகர்வோ[6] னம்மசெட்டி
அமுதசஞ் சீவியுள்ளா னம்மசெட்டி

9. உடன்ப டிக்கைமீறா னம்மசெட்டி
உண்மைநிறை கோற்படியா[7] னம்மசெட்டி
கடன்பொறுத் திரங்குவோ னம்மசெட்டி
கதியுங் கொடுப்பவ னம்மசெட்டி.

10. ஆச்சரிய வியாபாரி நம்மசெட்டி
அருங்குருதி சிந்திக் கொண்டோ னம்மசெட்டி
வாச்சல்ய முள்ளகர்த்த[8] னம்மசெட்டி
மகிமைப் பரன்குமர னம்மசெட்டி.

1. வீணானவற்றை; 2. கணிசமான இலாபம் தரும் வாணிகம்; 3. நல்ல விளைவுடையவன்; 4. மணமுடைய; 5. நாடு+அநாதி+நித்தியன்; 6. எட்டுவகைப் பேறுகளையும் தருபவன்; 7. சற்றும் நிறை தவறாத நிறைகோலையும் நிறுவைப் படிக்கற்களையும் உடையவன்; 8. வாய்ச்சாதுரியமாகப் பேசக்கூடிய கருத்தன்.

64. ஞானத்தட்டான்

[இறைவனை அணிகலன்கள் செய்தளிக்கும் தட்டானாக உருவகித்துப் புகழும் பாடல்களைக் கொண்ட பகுதியாகும்.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. பாவக் களிம்பு நீங்கி யுள்ளம்
பத்தரை மாற்றுத் தங்கத் தூய்மையாக
தேவ நீதிக் குகையினற் புடந்தான்
செய்குவன் கருத்துடன் ஞானத் தட்டான்.

2. குறைந்த மாற்றைப் பரிசன வேதியால்[1]
கூடிய மாற்றாக்கிக் கொண்ட பின்னர்
நிறைந்த விற்பனப் பணதி[2] பண்ணுவன்
நிகழ்த்து தற்கரிய ஞானத் தட்டான்.

3. துன்ப வக்கினி யாற்சு டுகுவன்
துயர்க் கரியினைக் கொட்டி யூதுவன்
இன்ப வாறுதற் றெண்ணீர்[3] தெளிப்பன்
இயேசு கிறிஸ்தென்ற ஞானத் தட்டான்.

4. கூரிய மனோசாட்சிச் சுத்தியல் கொண்டு
கொட்டுவா னொப்ப செப்ப மாக்குவன்
சீரிய மனத்தாழ்மை யாதி யான
சிற்பணிக[4] ளமைப்பன் ஞானத்தட்டான்.

5. நல்ல சிரவணக் காதணி செய்வன்
நற்சிந் தனையாம் பதைக்கம்[5] செய்வன்

சொல்ல வொளிகாலும் நல்லொ ழுக்கச்
சுந்தரக்கா லணிமுடிப்பன் ஞானத் தட்டான்.

6. நாடிய சற்கரு மங்க ளென்னும்
நல்வித கையணிகள் சமைப்ப னன்றாய்
நீடிய காலமுரு வழியாது செய்யும்
நிபுணத் துவனேநம் ஞானத் தட்டான்.

7. மண்ணைப் பொன்னாக்கி மிளிர வைப்பான்
மாற்றுக் குறையாது வங்கம்[6] வெல்லாது
விண்ணைத் தவிசாய் பூமி படியாய்
வீற்றிருந்து பணிபுரி ஞானத் தட்டான்.

8. செப்பரிய பஞ்சகாயக் குண்ட மதிலே
சேர்த்தெவ் வுலோகத்தையு முயர்த்துவன் மாற்று
முப்பரிய தொழில்கள் கூலி யின்றியே
முடித்துக் கொடுப்பனம்[7] ஞானத் தட்டான்

9. விசுவா சக்கரம் நீட்டி னோருக்கு
மேன்மேலும் விநோதா பரணங் கொடுக்கும்
வசுவாசப் பண்டக சாலை யுடையான்
வள்ளன்மை செழித்தோனம்[8] ஞானத் தட்டான்.

10. ஒருவ னாகவுல கனைத்தி னுக்கும்
உள்ள வணிகலங்கள் செய்த ளிப்பன்
திருவனாய் விளங்குவன் றேவ தேவன்
தெற்றரவு[9] செய்யானம்[10] ஞானத் தட்டான்.

1. பக்குவமாக்கும் முறைப்படி; 2. அணிகலன்; 3. ஆறுதல்+ தெண்ணீர்; 4. சிற்பம்+அணிகள்; 'சிற்பவணிகள்' என வர வேண்டியது இடைக்குறையாகச் 'சிற்பணிகள்' என வந்துள்ளது; 5. பழக்கம்; 6. தங்கம்; 7. கொடுப்பன்+நம்; 8. செழித்தோன்+ நம்; 9. ஏமாற்று; 10. செய்யான்+நம்.

65. ராஜா

[இயேசுவை அரசனாகப் போற்றிப் புகழும் பாடல்களைக் கொண்டது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. நித்திய சிங்காச னாபதி யல்லோ
நீண்ட வாயு[1] ளுள்ளவ னல்லோ
சத்திய வேதச் சட்ட னல்லோ
தற்பர சுயம்பலோ[2] இயேசு ராஜா.

2. ஞானத் தசாங்க முடையோ னல்லோ
நரரின் றசாங்க மேலோ னல்லோ
வான சேனைக் கதிபதி யல்லோ
வள்ள லல்லோ இயேசு ராஜா.

3. ஒரோருக மும்மாறா நிலைய னல்லோ
உலகெலா மோச்சுதனிக் கோல னல்லோ
சரோருகச் செய்யமலர்த் தாள னல்லோ
சமாதானக் கர்த்த னல்லோ இயேசுராஜா.

4. சர்வ மாள்ராஜ ரீக னல்லோ
சமஸ்த சனோப காரி யல்லோ
கெர்வ ரிடும்பழிக்குஞ் சாந்த னல்லோ
கெட்டோரை மீட்போ னல்லோ இயேசுராஜா.

5. தன்னைத் தியாகஞ்செய் நல்லோ னல்லோ
சத்தியத்திற் கேசாட்சி கொடுத்தோ னல்லோ
என்னைச் சிறைமீண்ட[3] வீச னல்லோ
இரக்கத் துரையல் லோஇயேசு ராஜா.

6. நீதி யன்பு நிறைந்தோ னல்லோ
நிகழ்த்தவைக்[4] கனர்த்தமில் நிருபனல்லோ
சோதிப் பிழம்பு நீதிச் சூரியனல்லோ
சுத்தபரி சுத்த னல்லோ இயேசு ராஜா.

7. தாழ்ந்தவர்க் கருள்பொழியும் பொறைய னல்லோ[5]
தாங்கியா தரிமணிப் புயத்தோ[6] னல்லோ
வீழ்ந்தவர்க் குருகிய தந்தை யல்லோ
மெஞ்ஞான வமுதல்லோ[7] இயேசு ராஜா.

8. ஜனசத ளங்களின் மகிமை யல்லோ
சகலருக்கும் நியாயாதி பதியே யல்லோ

வனசக் கழற்றாசர்[8] பொக்கிஷ மல்லோ
மாறாத் தத்துவ னல்லோ இயேசுராஜா.

9. வற்றாத வின்பச் சமுத்திர னல்லோ
மாற்றா ரெக்காலும் வெல்லாமன்ன னல்லோ
சுற்றாமெய் யுபதேச சற்குரு வல்லோ
சூக்ஷாதி சூக்ஷ் னல்லோ இயேசுராஜா.

10. எம்பெருமா னென்னீதி[9] யென்னா னந்தம்[10]
என்சாவி லென்சீவ னென்ப ரகதி
நம்பெருமா னென்று லகரெல் லாந்தொழும்
நாட்டாண்மை யுள்ளோ னல்லோ இயேசுராஜா.

1. நீண்ட+ஆயுள்; 2. சுயம்பு+அலோ; 3. என்னைப் பாவமாகிய சிறையினின்று மீட்ட; 4. நிகழ்த்தியவைக்கு; 5. பொறுமையுடையவன்; 6. தங்கி+ஆதரி+மணிபுயத்தோன்; 7. மெஞ்ஞான+அமுது+அல்லோ; 8. வனச+கழல்+தாசர்; 9. என்+நீதி; 10. என்+ஆனந்தம்.

66. ஞானக் கல்லுளி மொங்கன்

[எவர் எது சொன்னாலும் கேளாது தன் விருப்பப்படி செயல்படுபவனைப் பேச்சு வழக்கில் 'கல்லூளிமொங்கன்' என அழைப்பர். இறைவனை அத்தகைய ஒரு கல்லுளி மொங்கனாக உருவகித்துப் பாடப்பட்ட பாடல்களைக் கொண்டது.

குறள் வெண்செந்துறை

1. எத்தேச மெக்கால மெவ்விடமும்
இஷ்டம்போ லெவற்றையுஞ் செய்துகொள்வன்
உத்தேச மொருவரு மிகனையாகா
உன்னத பராக்கிரமக் கல்லுளிமொங்கன்.

2. விரும்பிய வெவையும்பெ றாதுவிடான்
வீணரைத் தடியடி யால்முடிப்பன்
திரும்பிய கோழைத்தன மில்லையவன்பால்
தீட்டருஞ் சுயாதீனக் கல்லுளிமொங்கன்.

3. சொன்னதை யேசொல்லிக் கொண்டுநிற்பன்
துடுக்கருக் கிடுக்கணி யற்றவஞ்சான்
முன்னதைப் பின்னதாய்ப் பின்னதையும்
முன்னதாய் வைக்கவல்ல கல்லுளிமொங்கன்.

4. பாய்நதி போலிரத்தஞ்[1] சிந்திவிடுவன்
பக்ஷபாத மொன்றேனுஞ் செய்தறியான்
மாய்நதி தாண்டிய வலுதோளன்
மாற்றார்க்கு வெருவாத கல்லுளிமொங்கன்.

5. தோளிற் சிலுவை யெடுத்தேகுவன்
சுமைபளு வென்றுவிழுந் துங்கொள்வன்
ஆளி லதிசயன் கால்கைகளில்
ஆணிக ளறைந்துநிற்பன் கல்லுளிமொங்கன்.

6. முள்ளின் முடியுந் தலைசூடுவன்
முழுவுடல் மீதுமடி யேற்றுக்கொள்ளுவன்
விள்ளற் கடங்காத வித்தகமொளிர்
மேலான வந்தரங்கக் கல்லுளிமொங்கன்.

7. உன்னத மிருந்துகீ ழிறங்கிவந்தான்
உயரத் திரும்பவு மேறிக்கொண்டான்
இன்னமும் பெருமையோ டிங்குவருவன்
இயேசு கிறிஸ்தெனுங் கல்லுளிமொங்கன்.

8. அண்டகோ ளங்களைக்கைப் பந்தாக்கினான்
அகில புவனாதி காரியானான்[2]
கண்டகோ டரியாய் வண்டரையெல்லாம்[3]
கணக்குக் கேட்டறிகுவன் கல்லுளிமொங்கன்.

9. இருதயப் பெறுபே றேற்றுக்கொள்ளுவான்
ஏற்றுக் கொண்டவருக் கேற்றநண்பன்
சருவ தயாளு சத்தியபரன்
சாகாத மாவயிரக் கல்லுளிமொங்கன்.

10 நம்பினரை யீடேற்றும் மெய்வைராகி[4]
ஞானநளி னம்புரிய மிங்கிதலோலன்
வம்பினரைக் கிட்டிரட்சை நல்கவழைக்கும்
மாசிலாச் சுவிசேஷக் கல்லுளிமொங்கன்.

1. போல்+இரத்தம்; 2. புவனம்+அதிகாரி+ஆனான்;
3. தீயவரையெல்லாம்; 4. வைராக்கியம் உடையவன்.

67. சான்றான்

[இறைவனைச் சான்றாண்மை மிக்கோனாகப் புகழ்ந்து பாடப் பட்ட பாடல்களைக் கொண்டுள்ளது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. எல்லாம் படைத்தவ னெங்கள் சான்றான்
இரங்கியமு தூட்டுவோ னெங்கள் சான்றான்
கல்லா முளங்கரைப்போ னெங்கள் சான்றான்
கவலைக் கடலழிப்போ னெங்கள் சான்றான்

2. பாவ மன்னிப்போ னெங்கள் சான்றான்
பரிசுத்தம் வளர்த்துவோ னெங்கள் சான்றான்
தேவ சிரோமணி யெங்கள் சான்றான்
திரித்துவ னொருத்துவ னெங்கள் சான்றான்.

3. ஆரு மறியாதா னெங்கள் சான்றான்
அலைகடற் கெல்லையிட்டோ னெங்கள் சான்றான்
தேரு மியல்வேத னெங்கள் சான்றான்
சிறந்த வருள்வேத னெங்கள் சான்றான்.

4. மேலோக நாடாழ்வா னெங்கள் சான்றான்
விஞ்ஞானத் தசாங்க னெங்கள் சான்றான்
பூலோக வவதாரி யெங்கள் சான்றான்
புண்ணிய குருசேறி[1] யெங்கள் சான்றான்.

5. அந்தண னரச[2] னெங்கள் சான்றான்
அரியதீர்க் கத்தரிசி யெங்கள் சான்றான்
சொந்த வுயிர்த்தியாகி யெங்கள் சான்றான்
சுவிசேஷ வாக்குத்தத்த னெங்கள் சான்றான்.

6. நல்ல பரோபகாரி யெங்கள் சான்றான்
ஞானயுத்த செயசாலி[3] யெங்கள் சான்றான்
சொல்ல வரியபிரா னெங்கள் சான்றான்
தோத்திர கீர்த்தன னெங்கள் சான்றான்.

7. எண்ணன் பனைவிசய[4] னெங்கள் சான்றான்
எவ்வாயுந் திதிப்பிப்போ னெங்கள் சான்றான்
விண்சாண் பிரமாணி யெங்கள் சான்றான்
மேருகஸ்தி நிறுத்தவ னெங்கள் சான்றான்.

8. சருவ மாணாடா[5] னெங்கள் சான்றான்
தலையெலாம் பணிவோ னெங்கள் சான்றான்
கருவ மொழிப்பவ னெங்கள் சான்றான்
கிறிஸ்தே செனும்நாமி யெங்கள் சான்றான்.

9. சீவியக்கப் பல்மாலுமி யெங்கள் சான்றான்
தேசமுற்றுந் திறைகொள்வோ னெங்கள் சான்றான்
காவியச் சிறப்புடையா னெங்கள் சான்றான்
கற்தேத்தார் நூற்கடங்கா னெங்கள் சான்றான்.

10. ஆதிமுதற் பெரியோ னெங்கள் சான்றான்
அஞ்ஞான விமோசன னெங்கள் சான்றான்
நீதிபிச காதவ னெங்கள் சான்றான்
நித்தியவன் பின்சொரூபி யெங்கள் சான்றான்.

1. சிலுவை மீது ஏற; 2. அந்தணன்+அரசன்; 3. வெற்றியாளன்; 4. பனையளவு உயர்ந்த வெற்றியையுடையவன்; 5. சருவம்+ ஆள்+நாடான்.

68. சான்றோன்

[இறைவனாகிய சான்றோனின் அருட்செயல்களை விளக்கும் பாடல்களைக் கொண்டது. தலைப்புக்கேற்ப ஒவ்வொரு பாடலும் சான்றோன் என்று முடிவு பெறுகிறது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. எங்கு மிலங்கிய சோதி யாகி
இயம்பற் கரியவ நாதி யாகி
பொங்கும் பிரக்கினை[1] நீதி யாகி
பொருந்திய கோனே நம்ம சான்றோன்.

2. ஆருந் தெரியாமற் கூட விருப்பான்
அன்ப ரறியச் சகவாசஞ் செய்வான்
தேருஞ் சருவ ஞானி காணீர்
சீரிற் சிறந்த நம்ம சான்றோன்.

3. மித்திய வுலகர் விடுதலை மேவ
விரும்பிக் கனிமரி கொங்கை யருந்தி
சத்திய சாட்சி யாகிச் சிலுவை
தலைசாய்த் துயிர்விட்டோன் நம்ம சான்றோன்.

4. பாவஞ் சாபம் மரணம் யாதனை[2]
பரிகரித் திரவி[3] போலுயிர்த் தெழுந்தே
சீவ சாக்கி[4] யாகி நம்மைச்
சிறைமீண் டவனே நம்ம சான்றோன்.

5. அஞ்ஞான வலகை[5] வெஞ் சென்னி தாக்கி
அகில மனுகுலத் தெல்லோ ருக்கும்
மெஞ்ஞான பூமிமேல் வாழ்வை நல்கும்
வீரப்பிர தாபனே நம்ம சான்றோன்.

6. அருவ தேவனை யுலக மக்கள்
அனைவோர்க்கும் நன்கு விளக்கிக் காட்ட
உருவ மெடுத்து நடந்து நெறியை
ஓதிய சற்குருவே நம்ம சான்றோன்.

7. சகள நிட்கள ஞாயம் பேசித்
தாபிக்கும் விக்கிர காரா தனைகள்
நிகள[6] மாவிக் கென்னும் வேதம்
நிகழ்த்துப தேசியன்றோ நம்ம சான்றோன்.

8. எண்டிசைக் கோணமீ ரெட்டும் நிறைந்தே
இருந்து மொன்றினுங் கட்டு றாமல்
கண்டிசை யெவனுந்[7] தொழுதற் கான
கடவுளே பரிசுத்த நம்ம சான்றோன்.

9. அறிவா னெல்லா முண்மை[8] பிசகான்
ஆஸ்தானத் தெதிரி யின்க டாவினால்

முறிவா னல்லன் பலத்த சான்று
மொழிந்து காப்பவனே நம்ம சான்றோன்.

10. பொய்யான சாட்சிபல கேட்டு நட்டம்
பொருந்திய எம்மனோர் நற்கடைத் தேற
மெய்யான சாட்சிக் குருதி வார்த்து
விளம்புகிறிஸ் தேசுவே நம்ம சான்றோன்.

1. பிரதிக்கினை; உறுதி. 2. வேதனை; 3 பரிகரித்து+ இரவிபோல்; 4. சாட்சியாகி; 5. பேய்; 6. எல்லாம்; 7. கண்+ திசை+எவணும்=காணுகின்ற திசையெங்கும்; 8. அறிவான்+ எல்லாம்+உண்மை.

69. நாடாழ்வானும் நாடாழ்வியும்

[உலகைப் படைத்த இறைவனை 'நாடாழ்வான்' என்றும் உலகில் வாழும் உயிரினை நாடாழ்வி என்றும் சுட்டித் தலைவன் தலைவியாக இருவரையும் உருவகித்து இருவருக்குமிடையே நடைபெறும் உரை யாடல் வடிவத்தில் பாடல்கள் இப்பகுதியில் அமைந்துள்ளன.]

குறள் வெண்செந்துறை

1. அண்ட பிண்டமமைத் தாளும்நீர்
அடிமைரூ பெடுத்ததே னாடாழ்வா?
விண்ட மூதுரைக் கேற்கவுனை
விடுதலை யாக்கவறி[1] நாடாழ்வி.

2. வேறே வழியாய் முடியாதோ
விரும்பி யவதரித்தீர் நாடாழ்வா?
தேறே[2] பிறிதோர் மார்க்கத்தாலும்
சித்தியாசீ வாத்தும[3] நாடாழ்வி.

3. எண்ணிலாச் சேனைக் கதிபதிநீர்
ஏன்றனித் தெழுந்தீர்[4] நாடாழ்வா?
விண்ணிலா வுடுசூழ் வதுபோலுனை
விண்டூதர்[5] சேவிக்கவே நாடாழ்வி.

4. மட்டுக் கடங்காத வல்லவனீர்[6]
மனிதராற் பந்தமுற்றீர் நாடாழ்வா?

கட்டுக்கு ளான வுனைவிடுக்கவே
கருதன்பி னாலறிவாய்[7] நாடாழ்வி.

5. ஒளியா டைதரித்த கோமானீர்
உடுத்ததேன் சிவப்பங்கி[8] நாடாழ்வா?
நளியா ருனக்குயர்[9] நீதிவெண்பட்டு
நலம்பெறத் தரிப்பிக்க[10] நாடாழ்வி.

6. எங்குந் தனிச்செங்கோ லோச்சியநீர்
ஏன்கொண்டீர் மூங்கிற்கோ னாடாழ்வா?[11]
பொங்கும் வாழ்வொடுநீ பொற்செங்கோல்
பொருந்திநா டாளவே நாடாழ்வி.

7. வள்ள லுந்திருச் சிரசழுந்த
வைத்ததேன் முண்முடி நாடாழ்வா?
எள்ள லடைந்தநீ சீவகிரீடம்
என்றென்றுந் தாங்கவே நாடாழ்வி.

8. சீவாதி பதிநீர் சிலுவையிலே
சீவன் விடுத்ததே னாடாழ்வா?
ஏவா ளுடகுலம் நித்தியசீவன்
இலவச மாய்ப்பெறவே நாடாழ்வி

9. மரணம் வென்றுவிண் ணேறியநீர்
வருவீரோ சீக்கிரமாய் நாடாழ்வா?
சரணம் புகுந்தோரோ டாயிராண்டு[12]
சகமாள வருகிறே னாடாழ்வி.

10. அழியா வீடடையப் புண்ணியனுனை
அன்றியொரு நெறியுண்டோ நாடாழ்வா?
வழியாய்ச் சத்தியம் சீவனுமாய்
மன்னுமெனை விடிலிலை[13] நாடாழ்வி.

1 விடுதலை + ஆக்க + அறி; 2. தேறுவாய்; 3. சீவாத்துமாவுக்கு விடுதலை கிட்டாது; 4. ஏன் + தனித்து + எழுந்தீர்; 5. விண் + தூதர்; 6. வல்லவன் + நீர்; 7. கருது + அன்பினால் + அறிவாய்; 8. சிவப்பு + அங்கி; 9. நளியார் + உனக்கு + உயர் = தாழ்விலாதவ ராகிய இறைவன் உனக்கு உயர்ந்த; 10. அணிவிக்க; 11. மூங்கில் + கோல் + நாடாழ்வா; 12. புகுந்தோரோடு + ஆயிராண்டு; 13. மன்னும் + எனை + விடில் + இலை.

70. அன்னைப் பத்து

[திருவாசகத்தில் வரும் 'அன்னைப் பத்து' என்னும் பதிகத்தை மனத்திருத்தி இப்பகுதிப் பாடல்களுக்குத் தலைப்பிடப்பட்டுள்ளது. அன்னையை 'அன்னே?' என அழைத்து இறைவன் செயல்களில் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை வினவிக் கேட்டு விளக்கம் பெறும் பாடல்களை இப்பகுதி கொண்டுள்ளது.]

கலித்தாழிசை

1. எல்லாஞ் சிருஷ்டித்த வேகன் றரணியில்[1]
இல்லான்போற் றோன்றலே னன்னே யென்னும்?[2]
இகநிலை காட்டவோ வன்னே[3] யென்னும்.

2. யானென தென்ப திரிந்தன்றித்[4] தேவநீதி
மானென லாகுமோ[5] வன்னே யென்னும்
மாறுமோ வாக்கினை யன்னே[5] யென்னும்.

3. ஈசுர சீவபந்த மின்னதென் றாய்ந்தவர்[7]
பேசுவரோ வொன்றென வன்னே யென்னும்
பேசாதோ தன்னெஞ்ச மன்னே யென்னும்.

4. ஆனந்த மோங்க வருண்மறை[8] யொன்றேயலால்
ஞானந்தான் வேறுளதோ வன்னே யென்னும்
நாடறி யாததோ வன்னே யென்னும்.

5. மாத்தாண்டன் மன்னுகையில் வைத்தவெதிர்க் கைத்திரி
மாத்திரமே மற்றநூ லன்னே யென்னும்
மாசற்ற வேதத்தின்முன் னன்னேயென்னும்.

6. தேனைப் பழித்த திதிப்புற்ற மெய்வேதக்
கோனை[9] நிகருண்டோ வன்னே யென்னும்
கூற லரிதாமே யன்னே யென்னும்.

7. தேவ சுவிசேஷஞ் செப்புநவ மார்க்கமே
பாவ விநாசவழி[10] யன்னே யென்னும்
பாரிசுத்தம்[11] பெருக்கு மன்னே யென்னும்.

8. எங்கும் நிறைந்த விறைக்குவை விக்கிரகம்[12]
பங்க மலவோகா ணன்னே யென்னும்
பரமன் வெறுப்பதா மன்னே யென்னும்.

9. நல்ல விசுவாசம் நலியாம னிற்பதே
வல்லமைத் தொண்டாகு மன்னே யென்னும்
வன்பாவ மோய்நிலையா மன்னே யென்னும்.

10. காரண காரியங் காண்கிலோ மொன்றாக
ஆரணமுங் கூறலையே யன்னே யென்னும்
அத்துவிதா கற்றதென்னோ வன்னே யென்னும்.

1. சிருஷ்டித்த + ஏகன் + தரணியில்; 2. இல்லான்போல் + தோன்றல் + ஏன் + அன்னே + என்னும்; 3. காட்டவோ + அன்னே; 4. யான் + எனது + என்பது + இரிந்து + அன்றி; 5. தேவநீதிமான் + எனல் + ஆகுமா? 6. மாறுமோ + ஆக்கினை; 7. இன்னது + என்று + ஆய்ந்தவர்; 8. அருள் + மறை; 9. மெய்ம்மறைக்குரிய தலைவனாகிய இறைவனை; 10. பாவம் தீர்ப்பதற்குரிய வழி; 11. 'பரிசுத்தம்' என வர வேண்டியது செய்யுளுக்காக நீட்டல் விகாரம் பெற்றுள்ளது; 12. இறைவனுக்காக வைக்கப்படும் சிலை.

71. இரசாயன சாஸ்திரி

[ஒரு பொருளை இரசாயன முறையில் பிறிதொரு பொருளாக மாற்றுவதைப் போல எளியனாக இருந்த தன்னை உயர்ந்தவனாக மாற்றிய இறைவன் திருவருளை எண்ணி இறைவனை ஓர் இரசாயன சாஸ்திரி என உருவகித்துப் பாடப்பட்ட பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் தங்கையை அழைத்துக் கூறுவது போல அமைக்கப் பட்டுள்ளது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஒருசுமை மண்ணைக் கொடுத்தன்யான்
உருக்கி யதைத்தங்க மாக்கினார்
தருமதயாள ராசயன
சாஸ்திரக் கர்த்தனே தங்கையே.

2. இரும்பைச் சமுகத்தி லேட்பித்தேன்[1]
எல்லாம் பசும்பொன்ன தாக்கினார்
தரும்பு கழ்க்காம் ரசாயன
சாஸ்திரக் கர்த்தனே தங்கையே.

3. ஈயக் கட்டியை யொப்பித்தேன்
இணங்க வனைத்தும் வெள்ளியாக்கினார்
சாய னல்ல ரசாயன
சாஸ்திரக் கர்த்தனே தங்கையே.

4. கரியை முன்கொண்டு வைத்தன்யான்
கணிக்கரு மிரத்தினமே[2] யாக்கினார்
சரியே முற்றும் ரசாயன
சாஸ்திரக் கர்த்தனே தங்கையே.

5. செம்பைக் கொணர்ந்து குவித்தனான்[3]
செஞ்சுடர்க் கனகமாய் மாற்றினார்
தம்பேர் மணக்கும் ரசாயன
சாஸ்திரக் கர்த்தனே தங்கையே.

6. கல்லினை முன்வைத்துப் போற்றினேன்
கமகம வெனுஞ்சதை யாக்கினார்
சல்லிய மற்ற ரசாயன
சாஸ்திரக் கர்த்தனே தங்கையே.

7. கூட்டக் குழப்பமாய் லோகங்கள்
கொடுத்தேன் வெவ்வேறாக்கி நல்கினார்
தாட்டிக மான ரசாயன
சாஸ்திரக் கர்த்தனே தங்கையே.

8. வங்க முதற்றெவையும்[4] வென்றிடா
வாறு கொடுத்தவற்றை யாக்கினார்
தங்கம் முதல ரசாயன
சாஸ்திரக் கர்த்தனே தங்கையே.

9. மண்ணுக்கா னதைவிண்ணுக் காக்கினார்
மரணந் தனைச்சீவ னாக்கினார்
தண்ணருள் பொங்கும் ரசாயன
சாஸ்திரக் கர்த்தனே தங்கையே.

10. ஆதிமூ லத்தைத் துலக்கினார்
ஆஸ்திக வன்புநிலை நாட்டினார்

சாதிக ணேய[5] ரசாயன
சாஸ்திரக் கர்த்தனே தங்கையே.

1. சமூகத்தில் + ஏட்பித்தேன் = கொடுத்தேன்; 2. கணிக்க + அரும் + இரத்தினமே; 'கணிக்கவரும்' என வர வேண்டியது செய்யுளுக்காகக் 'கணிக்கரும்' எனத் தொகுத்தல் விகாரம் பெற்று வந்துள்ளது; 3. குவித்தன் + நான்; 4. முதற்று + எவையும்; 5. சாதிகள் + நேய.

72. ஞானார்த்தப் பிரலாபம்

['நாம் நினைப்பது வேறு; இறைவன் நினைப்பது வேறு. இறைவன் திட்டப்படியே எல்லாம் நடைபெறும்' என்னும் உண்மையை விளக்கும் பகுதியாக உள்ளது. அதனை விளக்கத் தாம் வளர்த்த உயிர்களெல்லாம் தம் ஆசைக்கு மாறாகப் போய்விட்டனவே எனத் துன்புற்றுப் புலம்புவதன் வழியாக, இறைவன் எண்ணத்தை யாரறிவார் என ஆசிரியர் உணர்த்துகிறார்.]

ஒருசார் கலிவெண் செந்துறை

1. நான்வளர்த்த நங்கணாச்சி செத்தலோ போச்சு
சுட்டலோ திண்ணேன்
நாக்குப் பொத்தலோ போச்சு
சின்னப்பயல் சொல்லைக்கேட்டுச் சிறிய னானேனே.

2. மாடப்புறா கூட்டில்வைத் தூட்டி வளர்த்தேன்
காடகம்[1] விட்டேன்
மிக்கக் கேடலோ பட்டேன்
வல்லீறுள்ளே[2] வந்தலவோ பொல்லாப் புள்ளானேன்.[3]

3. முத்துமொழித் தத்தையொன்று[4] நத்தி வளர்த்தேன்
சத்தல்[5] போபோச்சு
ஈன னெத்தல்லோ வாச்சு
மோசகால னேசத்தாலே[6] கூசியே போனேன்.

4. ஆட்டுக்குட்டி கூட்டுக்குள்ளே போட்டு வளர்த்தேன்
மேட்டுக்குப் போனேன்
கஷ்டக் கோட்டிக் காளானேன்
ஆட்டுக்குட்டி கேட்டுப்போச்சே யாயற் கென்செய்வேன்.

5. அஞ்சுசிங்கக் கண்டொஞ்சி யாறு சிங்கமே
தஞ்ச மேகொண்டேன்
வந்த பஞ்சத்தை விண்டேன்
பிஞ்சிப்புத்தி மிஞ்சிவெகு கஞ்சலா[7] வேனோ?

6. வீரியக் குதிரை யேறிவீதி போய்வெறும்
காரிய னானேன்
வெகு பூரிய னானேன்
வீணிலேவா ணாளைப்போக்கி வெட்கமா வேனோ?

7. காகம்நரி யானைமயில் காளை குரங்கே
கண்டே னுள்ளிலே
உடன்கொண்டே னெள்ளலே
கர்த்தன்றுரத் தாவிடில்நான் செத்துப் போனேனோ?

8. அணிலேற விட்டநாயா யலைந்து நிற்பேனோ ?
அடிபடு வேனோ?
முற்றுங் குடிகெடு வேனோ?
ஆசீர்வாதக் கர்த்தர்வந்து நேசித்தா ரன்றோ?

9. எலியர[8] வெனக்கிஷ்டமோ வேனி னங்குவேன்?
ஏழை கெடுவேன்?
நாளையூளை யிடுவேன்?
இயேசுராஜா ஜெயமருள லின்னுங் கூடுமே.

10. கல்லானை கரும்புதின்னற் கூடிய தொல்லையோ?
கருணை கொஞ்சமோ?
ஏழை கவலை மிஞ்சுமோ?
கரையாரைத் துரைகளாக்கு மரய[9] னுண்டுமே.

1. ஒரு பறவை; 2. காட்டுக்குள்; 3. வல்லீறு+உள்ளே;
4. பொல்லாப்பு+உள்ளானேன்; கிளியொன்று; 5. செத்து;
6. மோசகாலன்+நேசத்தாலே; 7. அற்பன்; 8. எலி+அரவு;
எலியும் பாம்பும்; 9. அரசன்.

73. நிலைமை நிர்ணயம்

[தம் தாழ்ந்த நிலைமையை யுணர்ந்து நீங்கி, உயர்ந்த நிலையை உறுதி செய்து அதனை அடைய எவையெவை வேண்டும் என ஒவ்வோ ரடியிலும் கூறுகின்ற பாடல்களை இப்பகுதி கொண்டுள்ளது.]

அடிநான்காய்த் தம்மில் ஒத்து வந்தகுறள் வெண்செந்துறை

1. தன்னை முழுது மறிய வேண்டும்
தாழ்த்தி யறிக்கை புரிய வேண்டும்
பின்னை விமோசனம் மேவ வேண்டும்
பிழையின்றி ஜீவியஞ் செய்ய வேண்டும்.

2. சந்தேகம் முற்றும் தவிர்க்க வேண்டும்
சதாவுந் திருச்சிலுவை நோக்க வேண்டும்
சிந்தை புதிதாய்ப் பிறக்க வேண்டும்
தேவாவி யானடத்த[1] லாக வேண்டும்.

3. உள்ளிலே யாலயமாக வேண்டும்
உண்மை யாவியிற் றொழவும்[2] வேண்டும்
கள்ளமே விட்டுக் கடக்க வேண்டும்
கண்டவர் சாட்சி பெறவும் வேண்டும்.

4. நித்தியம் வேதா ராட்சி[3] வேண்டும்
நெஞ்சிற் றியானம் நிறைய வேண்டும்
சத்தியம் வழுவாமற் பேச வேண்டும்
தன்னயம் வெறுத்துப் பிழைக்க வேண்டும்.

5. சாந்தம் பொறுமை தழைய வேண்டும்
சகசீவபரன் வேறென் றோரா[4] வேண்டும்
மாந்தர் குலந்துளிர்க்க வந்த நாதன்
வழங்குபுண் ணியனா யுழைக்க வேண்டும்.

6. ஜாதிபே தத்தைத் தவிர்க்க வேண்டும்
சகோதர சிநேகம் வளர வேண்டும்
ஓதிய போலே யொழுக்கம் வேண்டும்
உலக மாய்கைக்குத் தப்ப வேண்டும்.

7. வாக்கும் மனமுமொக்க வேண்டும்
வஞ்சக முகஸ்துதி களைய வேண்டும்
நோக்கும் விழியிலே கற்பு வேண்டும்
நோய்க்கிட மின்றியே யுண்க[5] வேண்டும்.

8. ஏழைகட் கிரக்கஞ் செய்ய வேண்டும்
எத்துவாளி[6] கட்கிடுதல் போக்க வேண்டும்
கோழைவிட் டுரத்துப்போ ராட வேண்டும்
கொற்ற முடியையெதிர் பார்க்க வேண்டும்.

9. இருவகை யன்பு நிறைய வேண்டும்
எவர்குற்ற மும்மறந்து போக வேண்டும்
அருமையா யுபதேசஞ் செய்ய வேண்டும்
ஆத்துமா தாயம்[7] பண்ண வேண்டும்.

10. சிலுவை தினமுஞ் சுமக்க வேண்டும்
தேவ துணைகெஞ்சிக் கேட்க வேண்டும்
சலுகைச் சீவியங் களைய வேண்டும்
சந்ததங் கிறிஸ்தவனாய் விளங்க வேண்டும்.

1. தேவ+ஆவியான்+நடத்தல்; 2. ஆவியில்+தொழவும்; 3. வேதம்+ஆராட்சி = வேத ஆராய்ச்சி; 4. வேறு+என்று+ஓர; 5. உண்ண; 6. ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு; 7. ஆத்துமம்+ஆதாயம்.

74. ஆராட்சிக் கடா

['ஆராய்ச்சி வினா' என்னும் பொருளில் 'ஆராட்சிக்கடா' என்னும் தலைப்பை ஆசிரியர் தந்துள்ளார். மனிதனது அறிவால் கடவுளின் ஆற்றலையும் செயல்களையும் அறிய முடியாது. இதனை உணர்த்தும் நோக்கத்தில் வினா-விடை வடிவத்தில் இப்பகுதி அமைந்துள்ளது.]

நான்கடி குறள் வெண்செந்துறை

1. வாக்கு மனதுக் ககோசர[1] வான்பொருள்
வாக்கு மனக்கோ சரமாவ[2] தெங்ஙனம்?
வாக்கு மனமு மிறந்தால்[3] விளக்கிடல்
வாக்கு மனதுக்கு வாய்க்குமோ பேதாய்!

2. கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்
மண்டலத் துண்மை வசப்பட லெங்ஙனம்?
கண்டவர் விண்டிடேற் காணார்க் குணர்த்துதல்
மண்டலத் தியாருக்கும் வாய்க்குமோ பேதாய்!

3. விட்ட குறையாலே மேலும் பிறப்பானால்
திட்ட முதன்மனு சென்மித்த தெங்ஙனம்?
விட்ட குறைக்கு விளக்கம் புகட்டுதல்
திட்ட மெவருக்குத் தெரியுமோ பேதாய்!

4. தன்னை யறியாதாம் வேறுந் தெரியாதாம்
மன்னிய ஞானியென வழங்குவ தெங்ஙனம்?
தன்னை யறிவதார் தலைவனைச் சார்வதார்?
மன்னத் துவிதம்[4] வழுவாதோ? பேதாய்!

5. ஒன்றிரண் டாச்சுதோ ரண்டொன்ற தாச்சுதோ?
மன்றில் வழக்கிட வாறான தெங்ஙனம்?
ஒன்றே யிருக்க வுதித்ததே னோவான்மா?[5]
நன்றாய் விளக்கியே நாட்டாயோ பேதாய்!

6. காரண காரியங் கழறினொன் றோரண்டோ?[6]
பூரண னமிசம்[7] பொருந்துவ தெங்ஙனம்?
காரண காரியங் காண்காயோ ரண்டாக
ஆரணக் கூற்றை யழிப்பாயேன் பேதாய்!

7. எல்லாம் பிரம மென்றால் மதபேதம்
சொல்லத் தருக்கிக்கத் துடங்கிய தெங்ஙனம்?
எல்லாம் பிரம மென்றா லநாதிநித்தியம்
இல்லாப் பொருளொன்று மிருக்குமோ பேதாய்!

8. இறந்த வனாத்துமா வெடுக்குமே வேறுருவம்
மறந்திடா மற்றிதி வழங்குவ தெங்ஙனம்?
இறந்தவர்க் காக விறப்போனா யூட்டினால்[8]
மறந்தொலைந் தவரங்கே வாழ்வாரோ பேதாய்!

9. இருக்கும்போ தாத்தும விரட்சிப்பைத் தேடார்க்கு
கருக்கிய பின்மற்றோர் கருமஞ்செய லெங்ஙனம்?
திருக்குளத் தந்திர வாதிகள்[9] செய்முறை
சுருக்கத்தி லறிவது துர்லவமே பேதாய்!

10. இறையருள் மெய்மறை இன்பபோ தனையைப்
பொறையொடு மாயார் புத்திதேற லெங்ஙனம்?
நிறைவரத் தூயாவி நீடருள் வேமாருக்
குறையுமோ[10] வுண்மை யுளக்கண்ணே பேதாய்.

1 மனதுக்கு + அகோசரம் = மனத்துக்கு விளங்காத பொருளான; 2. வாக்கு + மனம் + கோசரம் + ஆவது; 3. வாக்கும் + மனமும் + இறந்தால் 4. மன் + அத்துவிதம் = நிலைபெற்ற இரண்டின்மையாகிய; 5. உதித்தது + ஏனோ + ஆன்மா; 6 கழறின் + ஒன்றோ + ரண்டோ; 7. பூரணன் + அமிசம்; 8. இறந்தவர்க்காக + இறப்போரை + ஊட்டினால்; 9. திருக்கு + உளம் + தந்திரவாதிகள்; 10. மேவாருக்கு + உறையுமோ.

75. வாரணம்

[இறைவனை யானையாக உருவகித்துப் பாடியுள்ளதால் வாரணம் என்னும் பெயர் பெற்றது.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. ஆருக் கும்மடங் காத வாரணம்
அண்டகோ ளங்க ளசைக்கும் வாரணம்
போருக் கோரிணை யற்ற வாரணம்
பொருபிசா சைப்பொடிசெய் வாரணம்.

2. வீண்ம தங்க ளழிக்கும் வாரணம்
வெய்ய பவமதி லிடிக்கும் வாரணம்
பூண்ம னக்கரி[1] பழக்கும் வாரணம்
பூண்டுநல் லுதவி புரியும் வாரணம்.

3. ஆசை வனத்தை யதஞ்செயும்[2] வாரணம்
அன்பற்ற துட்டரை யடக்கும் வாரணம்
காசைக் கணக்குக் கேட்கும் வாரணம்
கண்டவர்க் கச்சம்[3] விளைக்கும் வாரணம்.

4. ஆவா கனக்கட் டறுத்த[4] வாரணம்
அகில வுலகமும் நிறைந்த வாரணம்

பாவா ளண்டிற்[5] சுமக்கும் வாரணம்
பாரங் களையேற்றுக் கொள்ளும் வாரணம்.

5. உருவ யோக மொழித்த வாரணம்
உலகநூ ற்பந்த மறுத்த வாரணம்
அருவ சொருவ வவதார ஞான
அன்பு மயமா யலங்கிய[6] வாரணம்.

6. யாரையுந் தூக்கி சுமக்கும் வாரணம்
அக்கிர மஞ்செயி லுதைக்கும் வாரணம்
காரையும் காட்டையுங் கூட்டாக்கா[7] வாரணம்
கள்ள யானைகளைக் கொல்லும் வாரணம்.

7. தத்துவக் கட்டுத் தாண்டிய வாரணம்
தன்னயக் காரர்க் கடங்காத வாரணம்
உத்தம புத்தி யுடைய வாரணம்
உயிர்க்கெ லாங்காவ லாகிய வாரணம்.

8. அன்புத் தளையு[8] ளகப்படும் வாரணம்
அன்ப ரிதய கவளங்கொள் வாரணம்
துன்புத் தொல்லை வெறுக்கும் வாரணம்
சூதகம் வைக்காச் சுயம்பான வாரணம்.

9. இந்தத் துவிதருக் கெட்டாத வாரணம்
எம்மத யானைக்கு மெட்டாத வாரணம்
சந்தத மன்பர் பொழில்வாழும் வாரணம்
சகல ருக்கும் பொதுவாம் வாரணம்.

10. வித்தை மதத்தை முறித்தெறி வாரணம்
வீண்வாக்கு வாதம் விலக்கிய வாரணம்
சத்திய வேதச் சோலைதிரி வாரணம்
தாங்கருஞ் சிலுவை சுமந்தமெய் வாரணம்.

1. மனமாகிய யானையை; 2. அழிக்கும்; 3. கண்டவர்க்கு + அச்சம்; 4. ஆகாத பாவக்கனத்தைக் கட்டோடு அறுத்த; 5. பா + வாள் + அண்டில் = பாவாகிய வாளை மேலேற்றி; 6. விளங்கிய; 7. துப்புரவு செய்யாவிட்டால்; 8. அன்பாகிய கட்டுக்கு.

76. சிங்கம்

[''யூதா குலத்தின் சிங்கமும் தாவீதின் வேருமானவர் வெற்றி பெற்றார்'' என்னும் திருவெளிப்பாடு 5-ஆம் அதிகாரம் 5-ஆம் வசனத்தை அடிப்படையாகக் கொண்டு இயேசுவைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் இப்பகுதியில் அமைந்துள்ளன.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. தோற்ற மொடுக்கந் தனக்கில்லாச் சிங்கம்
தோற்றி யொடுக்குஞ் சுயாதிப சிங்கம்
மாற்ற மொன்றும் மருவொணாச் சிங்கம்
மாட்சியுறும் யூதாக் கோத்திரச் சிங்கம்.

2. சீவர் கட்கெல் லாமேலாஞ் சிங்கம்
சித்தக் களிற்றை[1] யடக்கிய சிங்கம்
பாவர் கடைத்தேறத் தாங்கிய சிங்கம்
பட்சமிகும் யூதாக் கோத்திரச் சிங்கம்.

3. முரட்டாட் டக்காளை கொல்வல்ல சிங்கம்
முற்றுங் குரூரம் விரும்பாத சிங்கம்
பரட்டைக்[2] குணங்க ளழிக்குஞ் சிங்கம்
பரிசுத்த யூதாக் கோத்திரச் சிங்கம்.

4. பொல்லாத சாத்தானை வெல்லுஞ் சிங்கம்
பூவானில்[3] யாரும் நிகரிலாச் சிங்கம்
செல்லாத விடமெங்கு மில்லாத சிங்கம்
திருமிகும் யூதாக் கோத்திரச் சிங்கம்.

5. சாதனைப் போதனைச் சாற்றிய சிங்கம்
சாவைச் செயித்துத் தளங்கிய[4] சிங்கம்
வேதனை நீக்கி விடுவிக்குஞ் சிங்கம்
மேன்மையாம் யூதாக் கோத்திரச் சிங்கம்.

6. அன்ப ருளப்பூஞ் சோலைவாழ் சிங்கம்
ஆதிமு தற்செயங் கொண்டாளுஞ் சிங்கம்
இன்ப முடனெமை யண்டிய சிங்கம்
இரக்கமிகும் யூதாக் கோத்திர சிங்கம்.

7. கெர்ச்சிக்கும் பேய்ச்சிங்கம் பீறிய[5] சிங்கம்
கிறிஸ்தே சென்னுந் திருநாம சிங்கம்
அர்ச்சிக்கு[6] மெவரையு மாளாக்குஞ் சிங்கம்
ஆச்சரிய யூதாக் கோத்திரச் சிங்கம்.

8. துட்டர் நடுங்கவே கற்சிக்குஞ் சிங்கம்
தொண்டருக் காற்ற[7] லின்பஞ்செய் சிங்கம்
எட்டுத் திசையுமொன் றாய்நோக்குஞ் சிங்கம்
இணைகாணா யூதாக் கோத்திரச் சிங்கம்.

9. பாவ வனவிலங் கடக்குஞ்[8] சிங்கம்
பரமத குஞ்சரம்[9] பணியவை சிங்கம்
தேவ வவதாரச் சீர்மேவுஞ் சிங்கம்
செவ்விய யூதாக் கோத்திரச் சிங்கம்.

10. குற்றங்க ளொன்று மணுகாத சிங்கம்
குருதி குருசேறிச்[10] சிந்திய சிங்கம்
கொற்றமி கும்புகழ் கூடிய சிங்கம்
குணம்புரி யூதாக் கோத்திரச் சிங்கம்.

1 யானையை; 2. தீய; 3. பூவுலகிலும் வானுலகிலும்; 4. விளங்கிய; 5. கொன்ற; 6. துதிக்கும்; 7. தொண்டருக்கு ஆற்றல்; 8. விலங்கு அடக்கும்; 9. யானை; 10. சிலுவையிலேறி.

77. கோழி

['இறைவன் வரும் நேரம் நெருங்குகிறது. அவரை வரவேற்க ஆயத்தமாகுமாறு அயர்ந்திருப்போரைக் கூவி எழுப்பு' என விசுவாசத்தைக் கோழியாக உருவகித்துப் பாடிய பாடல்களைக் கொண்டது.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. சென்ற திரவு[1] விடியற்காலம்
சேருது நம்பிக்கைச் செட்டைதட்டிக்
குன்றாக் குரலை மிகவேயெழுப்பிக்
கூவுதி[2] விசுவாசக் கோழியே.

2. சீக்கிரம் வருகிறே னென்றுசென்ற
சீமான் புறப்படும் வேளையாச்சே
நோக்குநீ புலர்கால்[3] மாகுதுகூவு
நூனமறுவிசு வாசக் கோழியே.

3. பூவி லெழுந்தருளிப்[4] பாடுமுடித்துப்
பொன்னுல கேறிய விண்ணரசன்
மேவி வருநா ளறிகுறிகள்
விளங்குது கூவுவிசு வாசக்கோழியே.

4. கூடே சுகமென்று தூ ங்கிடாதே
கொடுத்த வுத்தரவை யயர்த்திடாதே
நாடே விழிக்கக் குரலெழுப்பி
நன்றாகக் கூவுவிசு வாசக்கோழியே.

5. புத்தியுள் ளோரும் புத்தியற்றோரும்
பொருத்தமாய்க் கொறட்டை போடுதல்பாரு
சத்திய ராசேந்திரன் வரலாகுதே
சட்டென்று கூவுவிசு வாசக்கோழியே.

6. உத்தமரும்நி ருத்த மருங்கொள்
உறக்கம் விழிக்க வேளையிதுவே
நித்திய மகிமையின் நிருபன்வாறார்
நீகூவு விசுவா சக்கோழியே.

7. ஆதிச் சருப்பம்[5] நடுநடுங்க
அவன்கூட் டத்தார் கிடுகிடுங்க
சோதி யுதிக்கப் போகுதென்று
தொனிக்கக் கூவுவிசு வாசக்கோழியே.

8. விண்ணோக்கிக் காத்துச் சடைவெய்தி
மேதினி மயக்கச் சுழிபுக்கினோர்
கண்ணைத் திறந்தெழுந் தறிக்கைசெய்ய
கருத்துடன் கூவுவிசு வாசக்கோழியே.

9. இரவை முழுதும் சுகபோகத்தில்
ஈனமாய்க் கழித்தவர் நாணமடைந்து
பரபரப் புடன்விழித் தாயத்தஞ்[6] செய்யப்
பலமாய்க் கூவுவிசு வாசக்கோழியே.

10. குணப்படா வுலகர் நீபோடும்
குறிப்பான சத்தத்தில் திடுக்கிட்டெழுந்து
மணமான வாயத்தஞ் செய்துகொள்ள
வாஞ்சையாய்க் கூவுவிசு வாசக்கோழியே.

1. சென்றது+இரவு; 2. கூவுவாய்; 3. விடியற்காலை; 4. உலகில் எழுந்தருளி; 5. பாம்பு; 6. விழித்து+ஆயத்தம்.

78. வார்த்தீக கண்டனம்

[உலகம் நிலைபெற்றது என அறிந்தும், வாழ்வு முடியப் போகிற நேரம் நெருங்குகிறது என உணர்ந்தும் உலக ஆசைகளை விடாமல் இருக்கிற தன்மையைச் சுட்டி காட்டிக் கண்டனம் செய்யும் இருபது பாடல்களைக் கொண்டது. 'சுந்தரியே!' என ஒரு பெண்ணை அழைத்துக் கூறுவது போல, ஒவ்வொரு பாடலும் முடிவு பெறுகிறது. கும்மிப் பாட்டின் சந்த அமைப்பில் இப்பகுதிப் பாடல்கள் உள்ளதால் இப்பாடல் வகையினைச் சுந்தரிக் கும்மி என்றே ஆசிரியர் சுட்டுகிறார்].

சுந்தரிக் கும்மி

1. நீண்ட கால முலகிருந்துஞ்—சற்றும்
நிர்விசாரம் விட்டு நீங்காமனம்
பூண்டமயக்கத்தா லுள்ளகொஞ்ச—நாளும்
போக்குதல் நல்லதோ சுந்தரியே.

2. அஞ்சும ணியும டித்தாச்சே—யதற்
கப்பால் முக்கால் மணியாச்சே
மிஞ்சிய கால்மணி நேரத்துக்—குள்ளோநீ
வேடிக்கை செய்கிறாய் சுந்தரியே.

3. காலைப் பொழுதுங் கழிந்ததே—நண்பகல்
கடந்தொருவருங் கிரியை செய்யா
மாலைக்குப் பின்வரும் இரவெழும்—போதிலோ
மல்லுக்கு நிற்கிறாய் சுந்தரியே.

4. வெள்ளைக் குதிரையை விட்டிறக்கி யாரும்
வேண்டாக் கருங்குதிரை மேலேற்றித்
தள்ளியுனைக் கொண்டு போகவரும்போதோ
சமர்த்துப் பேசுறாய் சுந்தரியே.

5. வீடு போபோ என்றேசித்—தினம்
விரட்டச் செத்தவர் தேகம்நிறை
காடு வாவா என்கும்போதோ—உல
காசையில் மிஞ்சுறாய் சுந்தரியே.

6 காலும் வளையும் நெரிந்தாச்சே-இட்ட
கழுக்கோல் கூரையும் பழுதாச்சே
மேலும் கதவெலாஞ் சிக்கல்மக்க-லாச்சே[2]
விரும்புவையோ கூட்டைச் சுந்தரியே.

7. கீத வாத்தியக் கன்னிசெத்தாள்-ருசி
கெட்டியாய்ப் பார்சுவை யாளும்செத்தாள்
போதங் கொடுக்கும் சிரோமணி-யாளுமே
போனாளே சத்தற்றுச் சுத்தரியே.

8. உறைம ழையும்பொ ழிந்தாச்சே-நானா
உண்டிகள் மேலும் வெறுப்பாச்சே
கறையொ ழிந்து பரகதி-சென்றிடக்
காதல் வராததேன் சுந்தரியே.

9. இப்போ தோசற்று நேரம்-பொறுத்தோ
என்றிருக்குஞ் சொற்ப சீவனாளில்[3]
தப்பிதம் செப்பி இரட்சிப்படை—யாமல்
சாகப் போகிறாயோ சுந்தரியே.

10. இத்தனைக் காலம்நீ லோகானு—போகத்தால்
என்னகண் டாயலுப்பன் றிச்சுகம்?
அத்தனை இந்நேர மாகிலும்-தேடிமெய்
ஆனந்தம் மேவாயோ சுந்தரியே.

11. உண்டா யுடுத்தா யுல்லாசங் கொண்டா-யிந்த
உலகத்தின் சந்தோஷம் அனுபவித்தாய்
அண்டர் பிரான்முன் கணக்குக்-கொடுக்கநீ
ஆயத்த முண்டோசொல் சுந்தரியே.

12. எல்லாந் தந்தவன் கேட்கானோ-கணக்
கேனோ நீ எண்ணாது றங்குகின்றாய்?
வல்லவன் கோபத்தீ பற்றுமுன்னே-நம்பி
மனந்தி ரும்பாயோ நீ சுந்தரியே!

13. தேகங்கி முடுபட் டாச்சுதே - ஆசையில்
சேர்ந்துதோ கிழத்தன்மை சிந்தனைசெய்
ஆகத்தை[4] இன்றுமே பாவசு- கங்களில்
அலைய விடுவாயோ சுந்தரியே!

14. கொக்கொக்க[5] ஒக்க நரைத்துதே-முதுகும்
கூனித் தள்ளாடிக்கால் மூன்றுமாச்சே
பொக்குவாய் கண்டுசி றார்நகைப் பாச்சுதே
புத்தி யடையாயோ சுந்தரியே.

15. உண்டசோ றுசெமிக் குதில்லை-வாசல்
ஒன்றும் அடங்கி நடக்குதில்லை
கண்டவர் நிந்தனை மிச்சமாச்சோ-இன்னும்
கதியை நினையாயோ சுந்தரியே!

16. ஏதெல்லாங் கூடநீ கொண்டுபோவாய்-நாளை
எப்படி வீட்டார் அனுப்பிவைப்பார்
சூதெல்லாம் கண்டும் கேட்டிருந்தும்-சற்றும்
சுரணை[7] யில்லையோ சுந்தரியே!

17. முன்னோ ரெல்லாரு மேமாண்டு-முடிந்த
முறைமை தெரியாதோ இந்நிலக்கண்[8]
உன்னோடு தோன்றி வசித்தபல-ரெங்கே?
உற்றுண ராயோ நீ சுந்தரியே!

18. போதாதோ பூவுல கனுபவம்—வீணாசை
போக்காயோ விற்பாயோ? உனையதற்கே
வேதா ளத்தொடும் பாதா—ளத்திலே
வேகுதல் நல்லதோ? சுந்தரியே.

19. ஆற்றங் கரையும் அடுத்தாச்சே-இனி
அக்கரை சென்றாலுன் நிலைமை என்ன?
நாற்ற நரகினை யோசிக்க - உன்மனம்
நடுங்க வில்லையோ சுந்தரியே!

20. சத்திய யேசுகி றிஸ்துதிருப் - பாதஞ்
சார்ந்தின்றே நம்பிமெய் மீட்படைகில்
நித்திய வாழ்விலே பங்குண்டுனக் - கல்லால்
நேருமே சஞ்சலம் சுந்தரியே!

1. சண்டைக்கு; 2. பொருந்தாமல் போய்விட்டதே; 3. சீவன்+ நாளில்; 4. உடம்பை; 5. கொக்கைப் போன்று; 6. கையில் ஊன்றி நடக்கும் கைத்தடி ஒன்றைச் சேர்ந்து மூன்று கால் ஆயிற்று; 7. உணர்ச்சி; 8. நிலத்தின்கண்.

79. அச்சோ

[திருவாசகத்தில் வரும் அச்சோப் பதிகத்தைப் போல இறைவன் தமக்குச் செய்த அருட் செயல்களை வியந்து போற்றிப் பாடிய பாடல்களைக் கொண்டது. 'அச்சோ' என்னும் வியப்பிடைச் சொல் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அமைந்துள்ளது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. பூணப் படாதன பூண்டு
புறம்பேறா வழிசென்று லைந்தேன்
காணப் படாவொருவன் கண்டு
கடைக்கணா[1] விரட்சித்தா னச்சோ!

2. தீய மனம்புதிதா காமல்
தினமு மாகாமியம்[2] புரிந்தேன்
காய மைந்துளான் கண்டு
கடைக்கணா விரட்சித்தா னச்சோ!

3. நிந்தைச் சுய நீதி கட்டி
நீசமேட் டிமைவழி[3] போனேன்
சந்தை மாற்றொருவன்[4] கண்டு
கடைகணா விரட்சித்தா னச்சோ!

4. வருணபே தச்சுழிமொத் துண்டு[5]
மயங்கியன் பின்றிநாட் கழித்தேன்

கருணாக ரன்னொருவன் கண்டு
கடைக்கணா லிரட்சித்தா னச்சோ!

5. தத்துவக் குப்பைக்குழி சாடிச்
சாகுந் தறுவாயி லானேன்
கத்துதல் கேட்டொரு நல்லான்
கடைக்கணா லிரட்சித்தா னச்சோ!

6. நாட்டும் வெளிச்சடங் காங்கிடங்கில்
நாதமற்ற பட்டியாய்க்[6] கிடந்தேன்
காட்டும் பெருந்தயவான் கண்டு
கடைக்கணா லிரட்சித்தா னச்சோ!

7. பேசும்வாய் ஞானச் சேற்றில்
பிரயோ சனமின்றி யாழ்ந்தேன்
காசும் பணமுமில்லா தொருவன்
கடைகணா லிரட்சித்தா னச்சோ!

8. எட்டுப் பழுதேணி யேற
ஏலாத் தெம்மாடி யாய்க்[7]கிடந்தேன்
கட்டா யொருபெருமான் கண்டு
கடைக்கணா லிரட்சித்தா னச்சோ!

9. உடையைந் திழந்து நக்கனாக[8]
உருண்டு கிடந்தநா யேனை
கடையனென் றுருகியோர் கர்த்தன்
கடைக்கணா லிரட்சித்தா னச்சோ!

10. பெற்றதா லந்துபு தைத்து
பெருஞ்சோம் பேறியாய் நின்றேன்
கற்றறிவற் றேனிரங்கி நல்லான்
கடைக்கணா லிரட்சித்தா னச்சோ!

1. கடைக்கண் காட்டிக் கருணைபுரிந்து; 2. தினமும் + ஆகாமியம்; 3 கீழான அகம் பாவ வழி; 4. கந்தையாகிய இழிவினை மாற்று கின்ற ஒருவன்; 5. சாதி பேதமாகிய நீர்ச்சுழியிலே அகப்பட்டு; 6. சிறப்பில்லாத அற்பனாய்; 7. ஏமாளியாய்; 8. நக்கன் — ஆக = பலரும் பார்த்துச் சிரிப்பதற்குரியவனாக.

80. இதயத்தீயும்பல்

[தீய வழியில் செல்லும் இதயத்தை நோக்கி, நல்வழி பெற அறவுரை கூறும் பாடல்களைக் கொண்டது. ஏரேமியாஸ் ஆகமத்தின் 3-ஆம் அதிகாரம் 22ஆம் வசனப் பகுதியின் மையக் கருத்தைக் கொண்டது.]

அறுசீர் ஆசிரிய விருத்தம்

1. கண்டவை யாவையும் நற்றினை[1]
 கற்பனை பத்தையுந் தாண்டினை
விண்டவை[2] மீறி நடந்தனை
 வேதனைக் குள்ளுனை யாக்கினை
பண்டவை நீத்துளந் தாழ்த்தியுன்
 பாவமெ லாமறிக் கையிட்டுத்
தொண்டவை சார்ந்துநீ செய்வையேல்
 சொல்லரும் பேரின்ப மெய்துமே.

2. கூறிய போதனை கேட்டிலை[3]
 கொற்றவன் மீதன்பு கூர்ந்திலை
நாறிய[4] பேர்மணஞ் சேர்த்திலை
 நல்லவர் தோழமை கொண்டிலை
தூறிய[5] பேய்வழி விட்டிலை
 தூய்மறை நேர்நெறி காத்திலை
தேறிய நம்பிக்கை செய்வையேல்
 தீட்டரும்[6] பேரின்ப மெய்துமே.

3. சத்திய சாஸ்திரங் கற்கலை[7]
 தற்பர னுவப்புற நிற்கலை
துத்திய மிறைவற்குச் சொல்லலை
 சோதனை கண்டுநீ வெல்லலை
மித்திய பூவின்பந் துறக்கலை
 வீணினாட்[8] போக்கினை யாயினும்
நித்திய மினியிறை யிறைஞ்சுகில்
 நீங்கரும் பேரின்ப மெய்துமே.

4. ஆசையை யறிவின்கீ ழாக்கலை
 ஐம்பொறி புலனொளி மேவலை

பூசையை யொருமிப்போ[9] டாற்றலை
பொற்பதந் தலைகொண்டு வாழலை
மாசையை[10] மண்ணைவெ றுக்கலை
வஞ்சனை மாற்றலை யெனினும்நீ
ஒசையை யிறைக்கிட வெண்ணுகில்
உன்னத பேரின்ப மெய்துமே.

5. நோக்கினை யிலைகுரு ஸேசுவை
நோற்றனை யிலைவிசு வாசத்தால்
தாக்கினை யிலைபொரு கடியினை[11]
தாண்டினை யிலைசக மாயையை
வீக்கினை[12] யிலையுத்தி வேதத்தில்
வீணனீ[13] யாயினுந் திருமொழி
வாக்கினை நம்பிநீ யடைவையேல்
மாறிடாப் பேரின்ப மெய்துமே.

6. நானென தென்பதைக் கொல்வையேல்
நல்விசு வாசங்கைக் கொள்வையேல்
சூனெனக்[14] கண்டவை தள்வையேல்
சுவிசேஷ மார்க்கமே செல்வையேல்
மானென[15] நொந்துநீ கரைவையேல்
வையக மடங்கலுஞ் சோபிக்கும்
பானெனத்[16] தேசுமிழ் நன்னிலை
பற்றிய பேரின்ப மெய்துமே.

7. பத்தியின் வேஷங்கள் போக்குகில்
பரிசுத்த ஜீவிய மாக்குகில்
புத்தியுன் றந்திரம் நீக்குகில்
பொய்யறிக் கைசொலல் மாய்க்குகில்
சுத்தியின் புதுமனம் வாய்த்திடில்
சுந்தர தேவடி கள்புகும்
முத்தியின் வீட்டினி லோர்பொதும்
முடிவிலாப் பேரின்ப மெய்துமே.

8. நித்தமா யானந்த சோதியாய்
நின்மல மாய்ப்பரி பூரண
பத்தமா யெல்லாம றிந்துறை
பரனுக் குனைமுழு மனதொடுந்
தத்தமா யின்றைக்கேட் பிப்பையேல்[17]
சந்தோஷ மாயேற்று மாசுறாச்
சுத்தமா யுன்னைப்பு துக்குவர்
தொல்லைதீர் பேரின்ப மெய்துமே.

9. ஊனமாய்க் கண்டவை வெறுத்திடில்
உண்மைவெ ளிச்சத்தி னின்றிடில்
மானமாய்க் குவிந்தவை கொண்டிடில்
மானிலப் பொய்த்தேவர் நீத்திடில்
பானமாய்ப் போனக மாயுளப்
பாக்கிய மாய்வழி சீவனாய்
ஞானமாய் இயேசுவைக் கண்டிடில்
நவிலரும் பேரின்ப மெய்துமே.

10. நன்றொழி பதினெழுந் தேய்ந்திடில்
நற்பரன் றூ யாவிக் கனியெனும்
ஒன்றொழி யொருபரன் செழித்திடில்
உள்ளத்தி லுண்மை வளர்ந்திடில்
புன்றொழி லாருற வற்றிடில்[18]
பூரண கிருபையைப் பற்றிடில்
என்றொழி யும்புகழ் சந்ததம்
இலக்கிய பேரின்ப மெய்துமே.

1. பற்றினாய்; 2. கூறியவை; 3. கேட்கவில்லை; 4. மணம் வீசுகின்ற; 5. தீயவழிப்படும்; 6. கூறுவதற்கரிய; 'தீட்டவரும்' என வர வேண்டியது தொகுத்தல் விகாரமாய் தீட்டரும் என வந்துள்ளது; 7. கற்கவில்லை; 8. வீணில்+நாள்; 9. மனமொன்றி; 10. பொன்னை; 11. தீமையை; 12. கட்டவில்லை; 13. வீணன்+நீ 14. தீயதென; 15. மயக்கமென; 16. கதிரவன் என; 17. இன்றைக்கு+ஏட்பில்லையேல்; 18. புன்மை+தொழிலார்+உறவு+அற்றிடில்.

81 பஞ்சரத்தினம்

[ஒளிதரும் இரத்தினம் போன்ற உலக உயிர்கட்கு ஒளியாம் இறைவனைச் சரணடைந்து போற்றும் ஐந்து விருத்தப் பாக்களைக் கொண்டமையால் 'பஞ்சரத்தினம்' என்னும் பெயர் பெற்றது.]

எண்சீர் விருத்தம்

1. ஒன்றாய் மூன்றாய் நின்றாய் சரணம்
ஒருவனே கடவு ளாகினாய் சரணம்
நன்றாய் வரங்க ளிடுவாய் சரணம்
நானா நலமு மருள்வாய் சரணம்
குன்றாய் நாளு மொன்றாய்[1] சரணம்
குருவென நிலமுற் றெழுந்தாய் சரணம்
நின்றாய் துணையாய் மாறாய் சரணம்
நேசா வாசா வீசா[2] சரணம்.

2. இகலா ரெரிகோ விடித்தாய்[3] சரணம்
இடும்பைம் புரமே யெரித்தாய்[4] சரணம்
பகலா ரம்புலி நிறுத்தினாய்[5] சரணம்
பரவையிற் பாதை திறந்தோய்[6] சரணம்
அகலா ரடைக்கல மானாய் சரணம்
அபிரமுக் குரைமொழி முடித்தாய்[7] சரணம்
புகலா ரிரக்கினு மிடுவாய் சரணம்
போதா நீதா நாதா சரணம்.

3. அருளை மழையெனப் பொழிவாய் சரணம்
ஐங்கண் டமுஞ்சபை யமைத்தோய் சரணம்
மருளை யறவே தொலைப்பாய் சரணம்
மாசறு சிலுவை யாகா[8] சரணம்
தெருளை[9] யுமிழ்மறை யளித்தோய் சரணம்
தெவுட்டா ஞான வமுதா சரணம்
இருளை யிடுகடி[10] யொழித்தாய் சரணம்
இறையே நிறையே பொறையே சரணம்.

4. பெருவா னவரு மறியாய்[11] சரணம்
பிரபஞ்சக் கலைகளுங் குறியாய்[12] சரணம்

திருவா பரண மிடுவாய்[13] சரணம்
சிந்தைக் கொளிசெய் தேவே சரணம்
அருவா யமர்மா வநாதியே[14] சரணம்
அவதா ரத்துரு வெடுத்தாய்[15] சரணம்
கருவா யமைத்தெமைக் காப்போய் சரணம்
கதியே நிதியே பதியே சரணம்.

5. அத்தா வமலா[16] சரணஞ் சரணம்
ஆதி சோதி சரணஞ் சரணம்
சித்தா சீலா சரணஞ் சரணம்
சேனைக டேவனே[17] சரணஞ் சரணம்
முத்தா நடுநலா[18] சரணஞ் சரணம்
மூவுல கதிபனே சரணஞ் சரணம்
எத்தா வாக்கனே[19] சரணஞ் சரணம்
இயேசு கிறிஸ்துவே சரணஞ் சரணம்.

1. என்றும் என்னோடு ஒன்றுவாயாக; 2. வாசா+ஈசா; 3. எரிகோ நகரை அழித்தாய்; 4. ஐந்து நகர்களை எரித்தாய்; 5 பகலிலே நிலவை நிறுத்தினாய்;; 6. கடலில் பாதையை அமைத்தாய்; 7. ஆபிரகாமுக்குத் திருவுரை தந்தாய்; 8. சிலுவையை யாகத்திற் குரியதாய்க் கொண்டவனே; 9. தெளிவு; 10. தீமை; 11. வான வரும்+அறியாய்; 12. கலைகளால் குறிப்பிட்டுக் கூற முடியாதவனே; 13. திரு+ஆபரணம்+இடுவாய்; 14. அருவாய்+அமர்+மா+அநாதியே; 15. அவதாரத்து+உரு+எடுத்தாய்; 16. அத்தா+அமலா; 17. சேனைகள்+தேவனே; 18. நடுநிலையில் நின்று நலம் தருபவனே; 19. ஏமாற்றாத வாக்கினை உடையவனே.

82. ஞானச்சாழல்

[திருவாசகத்தின் திருச்சாழலை மனத்திருத்திப் பாடப்பட்ட பகுதி யாகும். திருச்சாழலில், ஒரு பெண்ணிடம் சிவபெருமான் திருச்செயல் களின் உண்மைகளை வினவி அறிவது போன்றே இயேசுபிரான் திரு வருளுக்கான காரணங்களைப் பெண்ணிடம் கேட்டுணரும் தன்மையில் பாடல்களைப் படைத்துள்ளார். ஒவ்வொரு பாடலும் 'சாழலோ ' என் னும் சொல்லைக் கொண்டு முடிவுறுகிறது. ஞானச்சாழலின் முதற் பாடல் 'பூசுவதும்' எனத் தொடங்குவது போலவே இப்பகுதியின் முதற் பாடலும் தொடங்குகிறது.]

கலிவிருத்தம்

1. பூசுவதுஞ் செங்குருதி பூண்பதுவுந் திருச்சிலுவை
பேசுவதுஞ் சுவிசேஷம் பெற்றியிதென்[1] காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டெனிலி
யேசுபரன் றிருச்சாய விலக்கிடலே சாழலோ.

2. அளவற்ற வுயிர்தோற்றி யமுதூட்டி யாளமலன்[2]
சளமுள்ள பூவின்[3]மரி தன்மகவேன் காணேடி
வளமல்கு மறுபிறப்பால் மனுக்கடமை மகராக்கத்[4]
தளம்பற்ற வவதாரந் தானமைதல் சாழலோ.

3. என்னப்ப னென்மீட்ப னெல்லோருக் கும்மீசன்
பன்னரிய பாடுகளைப் பட்டதென்ன காணேடி?
மன்னுயிரை யீடேற்றும் மத்தியஸ்த மேமுடிக்க
உன்னதமெய் யன்பதுகொண் டுற்றதுவே சாழலோ.

4. அலைசூழும் புவியனைத்து மாக்கியமா தேவனுக்குத்
தலைசாய்க்க விடமொழிந்த தாச்சரியங்[5] காணேடி?
நிலைவாழ்வார் விண்ணாட்டி னீசநரர்[6] வாழ்ந்திருக்க
மலையாம லெம்மானிவ் வாறானான் சாழலோ.

5. சருவுல கங்களையுந் தக்கவிதி செயுமிறையோன்
கெருவநரர் முன்ஞாயங் கேட்கநின்றான் காணேடி?
திருவடியைச் சரணடைந்தோர் தீர்வைதினஞ் சேமமுறக்
குருபரனம்[7] நடுவானிக் கோலங் கொண்டான் சாழலோ.

6. விண்ணமர்ந்து மணிமுடிநம் வேந்தர்சிரஞ் சூட்டுபரன்
முண்முடியைத்[8] திருச்சிரசில் மொய்த்ததென்ன காணேடி?
மண்ணுலகர் நித்தியக்கண் மகிமைமுடி சூடுதற்கே
அண்ணலிறை கொண்டபரி வாச்சரியஞ் சாழலோ.

7. சீவாதி பதியேசு சிலுவைமிசை யுயிர்த்தானம்
பூவானு மதிசயிக்கப் பொழிந்ததென்ன காணேடி
பாவாட்க ளாமனுக்கள்[9] பாணரகிற்[10] சாகாமல்
ஓவாமெய்க் கதிமேவி யுய்யவன்றோ சாழலோ.

8. சருவவி யாபகனாய்த் தாரணியெல் லாம்நிறைந்தோன்
திருவுடற்கல் லறைகாண்கச் சென்றதென்ன காணேடி?

அருவருப்பார் நரர்பாவ மக்கிரம மத்தனையும்
நிருமூலித்[11] திறைவர்திரு நீதிபெறச் சாழலோ.

9. ஈடேறு ஞானவழி இயேசிறைவ னாயிருக்கக்
காடேறு வழியோடக் காரியமேன் காணேடி?
கேடேறு மனந்தொழில்சேர் கெடுசேர்தி யாமலகைச்
சூடேறு பொய்ப்போதந் துரிதிலிறுஞ்[13] சாழலோ.

10. ஒன்றுமொன்று மிரண்டெனலை யுதாகரிக்க வகையிழிந்தார்
வென்றிகுன்றா மறைவிருத்தம் விடுத்தலென்ன காணேடி?
நன்றியுன்னல்[14] மெய்யுணர்வு நல்லிதய மில்லாமை
அன்றிமன்றுட் டூயாவி[15] யடையாமை சாழலோ.

1. சிறப்பென்ன?; 2 அமுது + ஊட்டி + ஆள் + அமலன்; 3. கடல் சூழ்ந்த பூவுலகின்; 4. மக்களாக்க; 5. தலைசாய்க்க + இடம் + ஒழிந்தது + ஆச்சரியம்; 6. விண் + நாட்டில் + நீசநரர்; 7. குருபரன் + நம்; 8. முள் + முடி; 9. பாவ + ஆட்களாம் + மனுக்கள்; 10. பாழ் + நரகில்; 11. அழித்து; 12. பேய்; 13. துரிதில் + இறும் = சீக்கிரம் அறுந்து போகும்; 14. நன்றியை நினைத்தல்; 15. மன்றுள் + தூய் + ஆவி.

83. தாய் வாசகம்

[ஒரு தாய் தன் குழந்தைக்கு அறிவுரை கூறுவது போல இறைவன் பெருமைகளைச் சுட்டும் பாடல்களைக் கொண்டது.]

குறள் வெண்செந்துறை

1. அன்பே யவதரித்த வழக[1] னென்றாள்
அப்பனு மம்மையு மானா[2] னென்றாள்
இன்பே யிருப்ப தவன்றா[3] ளென்றாள்
இயேசு கிறிஸ்தெனு மிறைவ னென்றாள்.

2. ஞானச் சுமைதாங்கி நல்லவ னென்றாள்
நன்மைக் களஞ்சியம் நட்பா[4] றென்றாள்

ஈனத் துறையினர்க் கெட்டா னென்றாள்
எங்கும் நிறைபூரணன்றா னென்றாள்.

3. தீய மதகுஞ்சரச் சிங்கே[5] றென்றாள்
செகத்து வாதத் ததீத[6] னென்றாள்
நேயப் பயிர்வளர் மாரி யென்றாள்
நிருவிகற் பன்வாக்கு மாறா னென்றாள்.

4. வந்தான்சென் றாவின்னம் வருகிறா னென்றாள்
வல்லரெல் லாமுன்னர் புல்ல ரென்றாள்
தந்தான் றிருவாக்குத் தள்ளா னென்றாள்
சகலசம் பத்துங் குறையா னென்றாள்.

5. பாலர்நே யன்முதியோ ரிட்ட[7] னென்றாள்
பாடுபட்ட தேவாட்டுக் குட்டி யென்றாள்
சீலமொ ழுக்கஞ் சிறந்தோ னென்றாள்
சேர்ந்தோர் பழுதில்விடாத்[8] தெய்வ மென்றாள்.

6. சீச்சீ யுலகவாழ்வு மாய்கை யென்றாள்
திருப்பர லோகவாழ்வே நிச்சய மென்றாள்
மூச்சு பறிவேளைக் காட்சி[9] யென்றாள்
முச்சூடுந்[10] தனைத்தந்த மூர்த்தி யென்றாள்.

7. அன்புச் சமயத் ததிபதி யென்றாள்
ஆரண நாதனருளாவி யென்றாள்
துன்பு சகிக்கத் துணைவ னென்றாள்
துரையென் றாள்சீ வகரை யென்றாள்.

8. ஆங்காரப் பூண்டை யறுப்போ னென்றாள்
ஆத்துமா வைக்கணக்குக் கேட்போ னென்றாள்
ஈங்கித யாசன விறையோ னென்றாள்
எப்படி யும்புரக்க வல்ல னென்றாள்.

9. முச்சுகிர் தங்காக்கு மாவியா னென்றாள்
மூர்த்தியிடந் தீர்த்தமெட்டா[11] முத்த னென்றாள்
சச்சிதா னந்தத் தலைவ னென்றாள்
சருவபொய் மதவிநா[12] சன்றா னென்றாள்.

10. எல்லார்கை விட்டாலும் நீக்கா னென்றாள்
எக்குடிக்கு மெத்தலைக்கும் மேலா னென்றாள்
சொல்லால ளக்கா மகீப னென்றாள்
சுதனே வாழ்க வாமென்[13] னென்றாள்.

1. அவதரித்த+அழகன் ; 2. அப்பனும்+அம்மையுமானான் ; 3. இன்பே+இருப்பது+அவன்+தாள் ; 4. நட்பு+ஆறு ; 5. சிங்கம்+ஏறு ; 'சிங்கவேறு' என்பது செய்யுளுக்காக தொகுத்தல் விகாரமாக 'சிங்கேறு' என ஆளப்பட்டுள்ளது. 6. வாதத்து+அதீதன்=விவாதங்கட்கு அப்பாற்பட்டவன் ; 7. முதியோர்+இட்டன்=முதியோருக்கு விருப்பமானவன் ; 8. தம்மைச் சேர்ந்தோரைக் கைவிட்டு விடாத ; 9. மூச்சுப் பறிவேளைக்கு+ஆட்சி=மூச்சு நின்று விடுவதற்குப் பொறுப்பாளன் ; 10. முழுதும் ; 11. தீர்த்தம்+எட்டா ; 12. பொய் மதங்களை அழிப்பவன் ; 13. வாழ்க+ஆமென்.

84. தந்தை மந்திரம்

[வாழ்க்கையில் நல்வழியில் நடக்க வேண்டிய அறிவுரைகளைத் தந்தை கூறுவது போல் அமைந்த பாடல்களைக் கொண்டது.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. எல்லார்க்கும் நல்லானா யிருக்க வேண்டும்
இறைதிரி காலம்பூ சிக்க[1] வேண்டும்
பொல்லாரின் சேர்க்கை களைய வேண்டும்
பூண்டுநூ லாராட்சி செய்ய வேண்டும்.

2. பாவஞ்செய் யாமற் பிழைக்க வேண்டும்
பரமன் றுணையைப் பெறவும் வேண்டும்
காவலாய் மனதை நடத்த வேண்டும்
கள்ளமற் றுள்ள[2] தியம்ப வேண்டும்.

3. வித்தார முங்கெடும்பும்[3] மாற்ற வேண்டும்
வீண்காலம் போக்கல் விலக்க வேண்டும்
செத்தாரைப் போற்றீமைக் காக[4] வேண்டும்
சீவியாய் நன்மைக்குக் காண்க[5] வேண்டும்.

4. கடவுளுக் குள்ளே யிருக்கவேண்டும்
கருத்திற் கடவு ளமர்த்த வேண்டும்
மடமுறு வீண்கவலை யொழிக்கவேண்டும்
மனது கபடமற்று வாழ வேண்டும்.

5. ஜீவ விமிசை[6] தவிர்க்க வேண்டும்
சிந்தை செயலன்பு தோன்ற வேண்டும்
நாவ டக்கியே பேச வேண்டும்
ஞானிக ளோடுற வாக வேண்டும்.

6 தேவ தியானஞ் செழிக்க வேண்டும்
சிறந்தஜீ வியநோக்க னாக வேண்டும்
பாவ வுல்லாசம் வெறுக்க வேண்டும்
பரிசுத்த மான விரதம் வேண்டும்.

7. பிறப்பா கியபவம் நீங்க வேண்டும்
பிறவிவே றிலையென் றுணரவேண்டும்
திறம்பா விசுவாசம் வளர வேண்டும்
ஜெயந்தினங் கண்டு மகிழ வேண்டும்.

8. தன்னைத் தாழ்மையா யெண்ண வேண்டும்
தலைவன் றிருமகிமை தேட வேண்டும்
அன்னை யன்பை நினைக்க வேண்டும்
அந்நியரைச் சந்தோஷம் வருத்தவேண்டும்.

9. அஞ்ஞான மாய்கை கடக்க வேண்டும்
அஞ்சையும்[7] பரனருளா லடக்க வேண்டும்
மெஞ்ஞான வீதி யுலாவ வேண்டும்
வித்தை மதவிதண்டை[8] விலக்க வேண்டும்.

10. உள்ளும் புறமு மொக்க வேண்டும்
உம்பர வீட்டை[9] நாட வேண்டும்
தெள்ளும் மதியமிர்தங் கொள்ள வேண்டும்
சிந்தை புதுருபத் திலங்க வேண்டும்.

1. வணங்க; 2. கள்ளம்+அற்று+உள்ளது; 3. வித்தாரமாகப் பேசுவதையும் தீமையையும்; 4. செத்தாரைப் போல்+தீமைக்கு+ஆக; தீமையை அமைதியாகப் பொறுத்துக் கொள்ள வேண்டும்; 5. காண; 6. ஜீவ+இமிசை; 7. ஐம்பொறிகளையும்; 8. சமய விவாதம்; 9. வானுலகத்தை.

85. தேகம்

[தன் உடலை இறைவனது ஆலயமாக எண்ணி, அதன் சிறப்புக்களை விளக்கும் பாடல்களைக் கொண்டுள்ளது. தலைப்பிற் கேற்ப, ஒவ்வொர் அடியும் தேகம் என முடிவு பெறுகிறது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஆதியின் மண்ணா[1] லமைந்திடுந் தேகம்
அப்பாற் சுக்கில விருத்தியாந் தேகம்
சோதியின் சாய றரித்திடுந்[2] தேகம்
சூட்ச மெவையு மிணையிலாத் தேகம்.

2. தேவ வாலய மாகிய தேகம்
செகத்துக்கும் பரத்துக்கும் பங்குள்ள தேகம்
ஜீவ பலியாக வேண்டிய தேகம்
திருவிறை ஞானம் விளங்கிய தேகம்.

3. மித்திய மார்க்கர்க்கு விளங்காத தேகம்
மேலான நோக்க மமைவுற்ற தேகம்
சத்திய வேதியர் தெளிவிக்குந் தேகம்
சாவுற்று முயிர்பெற்று[3] வாழ்ந்திடுந் தேகம்.

4. ஆத்துமா வின்வீ டாகிய தேகம்
அலபுல[4] மயக்கத் தோற்றமித் தேகம்
கூத்துக்குப் பொய்வேட மல்லவித் தேகம்
கூத்துதோ டாதிநித் தியம்பெறுந்[5] தேகம்.

5. மீறு தலாற்கறை கொண்டவித் தேகம்[6]
மீட்பாற் பரிசுத்த மாகிடுந் தேகம்
கூறு மம்பர னாளுந்[7] தேகம்
குருதியி னால்விலை நேடிய[8] தேகம்.

6. பரிசுத்த மாய்க்காக்க வேண்டிய தேகம்
பார்க்க வதிசயந் தோன்றிடுந் தேகம்
கரிசித்துப்[9] போஷிக்க வவசிய தேகம்
கர்த்தனுக் கேகணக் கொப்பிக்குந்[10] தேகம்.

7. தேவ பராமரிப் பேற்றிடுந்[11] தேகம்
திருவாக்கி னாற்பிழைப் பூட்டிடுந் தேகம்
பாவக் களைபறித் திடவேண்டுந் தேகம்
பழுது படுத்தினாற் கேள்வியாந் தேகம்.

8. கர்த்தன் செயலுக்குச் சாட்சியாந் தேகம்
காசினி யறிஞர் திகைந்திடுந் தேகம்
விர்த்திப் படுத்தின் மேற்போகுமித் தேகம்
வீணாக்கி னாருக்கு வினைசெயுந் தேகம்.

9. நானா செனன மெடுக்காது தேகம்
நற்கதி யலதுதுற் கதிமேவு தேகம்
தானா யிருப்பவன் றந்திடுந் தேகம்
சாகா வரம்பெறற் கானவோர் தேகம்.

10. நன்மைக்காய்ப் பாடு படவேண்டுந் தேகம்
நாதன் கனத்துக்[12] குழைக்கவேண்டுந் தேகம்
தின்மைக்கு முற்றிலும் நீக்கிடிற் றேகம்
திரியேக ரைப்பெற்றுச் செழிக்குமே தேகம்.

1. ஆதியில்+மண்ணால் ; 2. சாயல்+தரித்திடும் ; சாவுற்றும்+உயிர்பெற்று ; 4. ஆரவார ; 5. இறைவனோடு என்றும் வாழ வேண்டிய ; 6. இறைவன் கட்டளையை மீறியதால் பாவக் கறையைப் பெற்ற தேகம் ; 7. கூறும்+அம்பரன்+ஆறாம் ; 8. தேடிய ; 9. கவனமாக ; 10. கணக்கு+ஒப்பிக்கும்; 11. பராமரிப்பு+ஏற்றிடும்; 12. சிறப்புக்கு.

86. ஆத்துமா

[இறைவனல் படைக்கப்பட்ட தன் ஆன்மாவின் சிறப்புக்களைக் கூறும் பாடல்களால் அமைந்தது. பாடலின் ஒவ்வோர் அடியும் தலைப் பிற்கேற்றவாறு ஆத்துமா என்று முடிவு பெறுகிறது.]

இருகுறள் வெண்செந்துறை

1. தேக வரண்மனை வாசஞ்செய் யாத்துமா
சித்துணர்ச்சி சித்தஞ் சேர்ந்தொளி ராத்துமா

ஆக சாட்சி[1] யுடைய தாத்துமா
அதினான் கியல்கொண்[2] டுலவிடு மாத்துமா.

2. மாசிலா தநிலை பெற்ற வாத்துமா
வஞ்சனை யாற்பவ மருவிய வாத்துமா
தேசிலங் கும்பரன் றேற்றிய வாத்துமா
திருவிசு வாசத்தா லீடேறு மாத்துமா.[3]

3. ஆதி நித்திய வஸ்துவா மாத்துமா
அமல னுக்குவே றாகிய வாத்துமா
நீதி தவறி நிலைகெட்ட வாத்துமா
நின்மல குருதியா னிமலமா மாத்துமா.[4]

4. பற்பல சென்ம மெடுக்கா தாத்துமா
பார்பிறந் திறந்து தீர்ப்புறு மாத்துமா
தற்பர னோடொப் புரவாகு மாத்துமா
சாயுச்சி யம்பெறா தோர்போது மாத்துமா.[5]

5. சீல வொற்றுமை மேவாதா மாத்துமா
தெய்வமே யாகிப் போகா தாத்துமா
சால வைக்கிய மாகலா மாத்துமா
தத்துவ மசிபொருந் தாதே யாத்துமா.

6. அப்புப்பு போலே கலந்தாலு மாத்துமா
அத்துவித மாகா; துவிதமே யாத்துமா
ஒப்புயர் வின்மை யிலான்பர மாத்துமா
உண்டாகிப் பந்தப் படுவசீ வாத்துமா.

7. பூரண ரட்சிப்புப் பெற்றிடு மாத்துமா
பூவுல கிற்சிரேஷ் டம்முற்ற[6] வாத்துமா
காரண னைத்துதித் தேற்றிடு[7] மாத்துமா
காசினி[8] யாவிற்கு மேலான வாத்துமா.

8. மெய்விசு வாச மடையாத வாத்துமா
வெய்ய பவம்வெல்லக் கூடாத வாத்துமா
பொய்விசு வாசப் புரளிசெய் யாத்துமா
புன்பவம் போம்வழி காணாத்து ராத்துமா.[9]

9, சத்திய வேத வொளிபெறா வாத்துமா
தற்பரன் மேலன்பு கூராத வாத்துமா
நித்திய வாழ்விற்குத் தூரமா மாத்துமா
நிட்களம் நம்பிக்கை யாற்பெறு மாத்துமா.

10. தேவன் சுயம்பு சிருஷ்டி யாத்துமா
சீபதி பூரணன் மட்டுள தாத்துமா
மாவன் புளன்பரன் வன்மன தாத்துமா[10]
மலசம் பந்த மனிதனே யாத்துமா.

1. மனச்சாட்சி; 2. அதில்+நான்கு+இயல்+கொண்டு=பகுத்தறிவு, உணர்வு, அநாதிக்ராநிஷ்கரம், தீர்ப்பிடு பலி; 3. விசுவாசத்தால்+ஈடேறும்+ஆத்துமா; 4. குருதியான்+நிமலமாம்+ஆத்துமா; 5. போதும்+ஆத்துமா; 'வாழ்வு போதும்; இனி வேண்டாம்' எனக் கூற முற்படும் ஆத்துமா; 6. சிரேஷ்டம்+உற்ற; 7. துதித்து+ஏற்றிடு; 8. உலகம்; 9. காணா+துர்+ஆத்துமா; 10. மனது+ஆத்துமா.

87. குடும்பன்

[இறைவனை நல்ல விவசாயக் குடும்பத்தின் தலைவனாக எண்ணிப் போற்றிப் புகழும் பாடல்களைக் கொண்டது)

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. எங்கும் பரந்திருப்ப னெங்கள் குடும்பன்
ஏற்றவுயிர்ப் பயிர்செய்வ னெங்கள் குடும்பன்
தங்குந் தலமிங்கிலா[1] னெங்கள் குடும்பன்
தானே சுயாதிபதி யெங்கள் குடும்பன்.

2. போராட்ட நாட்டா னெங்கள் குடும்பன்
புகழ்வெற்றித் தேசத்தா னெங்கள் குடும்பன்
பாராட்ட நற்சுவாமி யெங்கள் குடும்பன்
பத்திப் பயிர்வளர்ப்போ னெங்கள் குடும்பன்.

3. நல்லமுன் மாதிரியா னெங்கள் குடும்பன்
நடக்கைக்குச் சட்டதிட்ட னெங்கள் குடும்பன்
பொல்லாப்பொன் றும்படையா[2] னெங்கள் குடும்பன்
போஷிப்யாண்யா ரையும்நன்றா யெங்கள் குடும்பன்.

4. பூரணசம் பாத்திய னெங்கள் குடும்பன்
புண்ணிய விலவச[3] னெங்கள் குடும்பன்
ஆரண பொக்கிஷ னெங்கள் குடும்பன்
ஆதரிப்பிற் றவறாதா னெங்கள் குடும்பன்.

5. பொறுமைச் சமுத்திர னெங்கள் குடும்பன்
பொல்லார்நல் லாக்குவ னெங்கள் குடும்பன்
வறுமைக் கிடமிடா னெங்கள் குடும்பன்
வல்லாதி வல்லனே யெங்கள் குடும்பன்.

6. பருவகா லமறிந்தோ னெங்கள் குடும்பன்
பலநிலச்சீர்தெரிந்தோ னெங்கள் குடும்பன்
இருதய பூமியா னெங்கள் குடும்பன்
இரக்ஷணிய விளைவெடுப்பா னெங்கள் குடும்பன்.

7 சித்திரப் போதனையா னெங்கள் குடும்பன்
சிரமந் தளராதா னெங்கள் குடும்பன்
சூத்திரங் கள்புரியா னெங்கள் குடும்பன்
குமரப ரனியேசு எங்கள் குடும்பன்.

8. நஞ்சைபுஞ் சையுடையா னெங்கள் குடும்பன்
நதிகுளந் துரவுடையா னெங்கள் குடும்பன்
மிஞ்சுகா விகளுள னெங்கள் குடும்பன்
வெகுகோடிக் காண்டவனே யெங்கள் குடும்பன்.

9. கேட்டவர்க் கெல்லாமீவ னெங்கள் குடும்பன்
கிருபைச் சொரூபியே யெங்கள் குடும்பன்
நாட்டத்து ரையென்று மெங்கள் குடும்பன்
நலியாத் திரவிய னெங்கள் குடும்பன்.

10. விண்ணாளும் நாதனே யெங்கள் குடும்பன்
விண்ணாடர் பணிகொள்வோ னெங்கள் குடும்பன்
மண்ணாளும் தேவனே யெங்கள் குடும்பன்
மண்ணாடர்[4] தலைதாழ்வோ னெங்கள் குடும்பன்.

1. தலம்+இங்கு+இலான்; 2. படைக்க மாட்டான்; 3. புண்ணிய+இலவசன்; 4. மண்+நாடர்.

88. தச்சன்

[இறைவனைச் சிறந்த தச்சனாக உருவகித்துப் போற்றிப் புகழும் பாடல்களைக் கொண்டது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஒன்று மில்லாத வாதி காலம்
ஒருதுணைக் காரண மும்மி லாமல்
நன்று துலங்குந் திருவார்த் தைகொண்டு
நல்லதொழி லியற்றினன் றேவ தச்சன்.

2. வானத்தைப் பூமியைச் சராச ரங்களை
வகைதொகை யாக வகுத்துக் கையாள
ஞானத்தை யுடைய மனுடர் தமையும்
நலமாய்ச் சிருஷ்டித்தான் பரம தச்சன்.

3. உடலை யாத்து மாவை யாவியை
ஒன்றாக்கி யாணிற் பெண்ணைத் தோற்றி
கடலை மணற்கரைக் குள்ளே யடக்கிக்
கட்டினா னதிசய ஞானத் தச்சன்.

4. அண்ட கோளங்களை யந்த ரத்திலே
அரியதன் வாக்கா தரத்தி னிறுத்தி[1]
கண்ட வர்பிர மித்து நோக்கி
கைதொழக் காரணமா னானமல தச்சன்.

5. இத்திர வநித்திரப்[2] பொருள்வி நோதம்
இகபர வாசி கட்குமெட் டரிதே[3]
சந்திர சூரிய தார கைக்கெலாம்
தளங்கொளி மூலமானான் வல்ல தச்சன்.

6. எல்லாம் பலுகிப் பெருக வைத்தான்
இனவின வாகார பானம் வகுத்தான்
உல்லா சப்போக்கு வரத்து மிட்டான்
உட்கரு விகள்செய்தான் றெய்வ தச்சன்.

7. புத்தி யுத்தி சத்தி சித்தியும்
புகழான பத்தி முத்தி வழியும்

நித்தி யத்துக் குதவு பொருளும்
நிர்ணயப் படுத்தினான் பெரிய தச்சன்.

8. ஆளுகை செய்ய வடங்கி யொழுக
அதிக்கிர மித்தாற் சிட்சை செய்ய[4]
நீளுகை யான திட்டவட் டங்கள்
நிலைசெய் துவந்தா[5] னிலவு தச்சன்.

9. தாவர விலைபூ[6] கனிக ளழகும்
சரவுட லுயிர்வினை பலன்சி றப்பும்
பூவடர்[7] நதிசுனை யருவி வனப்பும்
பூட்டினான் காட்டினான் வானத் தச்சன்.

10. சாஸ்திரி சாஸ்திர மெட்ட தீதமாம்[8]
தாவர லோக ஜீவ வர்க்கங்கள்
வாஸ்தப மாயிட்டா[9] னவதா ரத்தில்
மனுவுடல் தனக்கெடுத்தா னன்புத் தச்சன்.

1. வாக்கு+ஆதாரத்தில்+நிறுத்தி; 2. இந்திர+அதிந்திர; 3. எட்ட+அரிதே; 'எட்ட வரிதே' என வர வேண்டியது செய்யுளுக்காக 'எட்டரிதே' என ஆளப்பட்டுள்ளது; உலகினோர் அறிவுக்கு எட்ட அரிதானவன்; 4. வரம்பு மீறினால் அடங்கச் செய்ய; 5. நிலை செய்து+உவந்தான்; 6. தாவரம்+இலை+பூ; 7. பூக்கள் நிறைந்த; 8. எட்டு+அதீதம்+ஆம்; எட்டுவதற்கு அபூர்வமான; 9. உண்மை யானான்.

89. குலாலன்

[இறைவனை மண்பாண்டங்கள் செய்யும் குயவனாக உருவகித்துப் போற்றும் பாடல்களைக் கொண்டுள்ளது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. அரிய பெரிய வுருக்க ளெல்லாம்[1]
ஆக்கி யுயிர்கொடுத்துக் கனப்ப டுத்தி
உரிய காரண னாகி நின்றே
ஒச்சியப் படுவனே ஞானக் குலாலன்.

2. திருச்சித்த மாந்தண்ட சக்க ரத்தில்
திருவுளப் படியே பலவி தங்களாய்
உருக்கள மைப்பன் விநோத மாக
உன்னத சுயாதீ னக்கு லாலன்.

3. கனமா யொன்றைக்கன வீனமா யொன்றை
கருத்துக் கிணங்கவே வனைந்து வைப்பன்
மனம்போ லெல்லா முருப்ப டுத்த
வல்லவ னல்லவன் றேவ குலாலன்.

4. மண்ணா லேமனு வுருவ மாக்கி
மகத்துவத் திருவாய்ச் சுவாச மூதிக்
கண்ணாற் கடாட்சித் தாசீர் வதித்துக்[2]
கமழ்கா வமர்ந்தினன்[3] பரமகு லாலன்.

5. ஒன்றுமில் லாமையி னின்றெல் லாமும்
உருவாக் கியவை தம்மிற் பலுக[4]
குன்றாவேற் பாடுண் டாக்கிக்[5] காக்கும்
கூறருஞ் சீவவார்த் தைக்கு லாலன்.

5. இம்மைக்கும் மறுமைக்கு மான வுருக்கள்
இயற்றுவன் சடப்பொருள் சித்துப் பொருளும்
செம்மையாய்ச் செய்து சிறக்க வைப்பன்
சிங்காரச் சிருஷ்டிக னான் குலாலன்.

7. அழிவுக்குரிய வுருக்கள் வனைவன்
அழியா நித்திய வுருவும் வனைவன்
மொழியா ரணமீ றிருத யங்களை
முழுதும் புதிதாய் வனைவல்ல குலாலன்.

8. கெத்சே மனையில் மண்பி சைந்து
கிருத்திர ரான்மனை யுருவ னைந்து
தீத்தக் கொல்கொதாச் சூளை போட்டு
செழிரட்சை யுருவருள் சீவ குலாலன்.

9. கோப பாத்திர மான வற்றை
குலவுங் கிருபா பாத்திர மாக
தாப முடனே யாக்கி வைப்பன்
தயவு நிறைந்த யிறையாங் குலாலன்.

10. வெந்து விரிந்தது முடைந்த ழிந்ததும்[6]
மீளவும்நற் கலமாக் கிடளம் வல்லன்
சொந்தன் தயாளன் ஞான பூரணன்
சொற்றற் கரியோனே[7] நம்ம குலாலன்.

1. உருவங்களையெல்லாம் ; கடாட்சித்து+ஆசீர்வதித்து ;
3. சோலையில் அமர்த்தினான் ; 4. பெருக; 5. குன்றா+ஏற்பாடு+உண்டாக்கி ; 6. விரிந்ததும்+உடைந்து+அழிந்ததும்;
சொற்றற்கு+அரியோனே.

90. கோனார்

[மக்களாகிய மந்தையை மேய்க்கும் ஆயனாக இறைவனை எண்ணிப் போற்றிய பாடல்களைக் கொண்டது.]

இரட்டைக் குறள் வெண்செந்துறை

1. கட்புலனுக் கெட்டா வரூபக்[1] கோனார்
காரண மான வநாதிக் கோனார்
உட்புலனுக் கொளிசெய் யுரிமைக் கோனார்
உலகி லவதரித்த சிநேகக் கோனார்.

2. ஆடுகளையறியும் ஞானக் கோனார்
அவைகளா லறியப் பட்ட கோனார்
நீடு நாளது போகக்[2] கோனார்
நிறைபுல் லமர்நீர் கண்ட கோனார்.

3. பேர்சொலி யழைக்கும் பெரியகோனார்
பீதி யறமேய்க்கும் வலிமைக் கோனார்
நேர்வழி நடத்தும் பழக்கக் கோனார்
நெருங்குமா பத்தறிந்து[3] காக்குங் கோனார்.

4. கறவலாட் டைமெதுவாய் நடத்துங் கோனார்
கால்முடத் தைத்தோளிற் சுமங்குங் கோனார்
திறமுடன் றம்மந்தை மேய்க்குங் கோனார்
சீவனையு மாடுகட்காய்க் கொடுக்குங் கோனார்.

5. சத்திய வாவியாற் றேற்றும்[4] கோனார்
சாவிருட் பள்ளத்திலுந் திடத்தும்[5] கோனார்
நித்திய ஜீவனைக் கொடுக்குங் கோனார்
நிகரிலாத் தயவுண்மை பூண்ட கோனார்.

6. துட்ட விலங்குகட் கஞ்சாக்[6] கோனார்
சூழி லடித்துப் பறத்தும்[7] கோனார்
திட்ட மாயெலாம் பார்க்குக் கோனார்
செகத்துக் கெல்லா மொப்பற்ற கோனார்.

7. சாந்தம் பொறுமை தழைத்த கோனார்
தம்மையே ஆடுகட்காய்த் தந்த கோனார்
ஏந்தலாய்க் கிடையை மடங்குங் கோனார்
ஏணியாய் நின்றுபரஞ் சேர்க்குங் கோனார்.

8. கூலி மேய்ப்பரை வெறுங்குங் கோனார்
கொழுத்த கடாக்களை யடக்குங் கோனார்
வேலி வாசலாய் நிற்குங் கோனார்
வெவ்விருட் டீங்கு[8] விலக்குங் கோனார்.

9. அம்பரக்[9] கொட்டகைக்கு நடத்துங் கோனார்
ஆனந்த மேய்ச்ச லாங்கே யாக்குங் கோனார்
சிம்பல்தளைச் சாது வாக்கும்[10] கோனார்
செவியகத் தின்பூட்டிக்[11] களிக்குங் கோனார்.

10. நீங்காம னித்திய மிருக்குங் கோனார்
நியாயத் தீர்ப்பிற் பிசகாக்[12] கோனார்
தாங்கியே தோள்சிலுவை சுமந்த கோனார்
தயாநிதி இயேசு கிறிஸ்து கோனார்.

1. கண் + புலனுக்கு + எட்டா + அரூப; 2. நாள் + அநுபோக;
3. நெருங்கும் + ஆபத்து + அறிந்து; 4. ஆவியால் + தேற்றும்;
5. திடப்படுத்தும்; 6. விலங்குகட்கு + அஞ்சா; 7. விரட்டும்;
8. வெவ் + இருள் + தீங்கு; 9. வானுலக; 10. முரட்டுத்தனமுடைய வற்றை சாதுவாக ஆக்கும்; 11. செவி + அகத்து + இன்பு + ஊட்டி;
12. தவறாத.

91. திருக்காவல் நாட்டம்

['நாட்டம்' எனில் விருப்பம் எனப் பொருள்படும். இறைவன் தன்னைக் காத்தருள வேண்டும் என்னும் விருப்பத்தை வெளிப்படுத்தும் பாடல்களைக் கொண்டுள்ளமையால் திருக்காவல் நாட்டம் என்னும் தலைப்பைப் பெற்றுள்ளது.]

கொச்சகக் கலிப்பா

1. கோடாத பெருங்கருணை குடிகொண்ட விதயனுனைப்
பாடாத தினம்நாவு பழியேற்கு மெனவுருகி
வாடாத மொழியாய்ந்து மணங்கமழ்பண் டொடையாக்கிச்
சூடாத நிலைமையெனைத் தொடராமற் காப்பாயே.

2. துற்குணத்தை விருத்திசெயுந் துகள்கடிதுன்[1] முயல்வகற்றி
நற்குணத்தை வளர்த்துவிக்க நரகுலத்தார்க் குதவுமதி[2]
பொற்குணத்தை யுடையாவி பொழிபரனே இளகாதுற்
கற்குணத்தை யறப்போக்கிக் கதிவழியிற் காப்பாயே.

3. கண்டேனே யுனைஞானங் கணியுங்கற் பகத்தருவாய்
அண்டேனே யினியேது மமலனுனை யகன்றெளியேன்
கொண்டேனே திருவருளாற் குறையாமெய்ப் பலனைந்தும்
விண்டேனே சபைகேட்க விசுவாசங் காப்பாயே.

4. தேடுகின்ற மனைவாசந் திகையாம லொழுகிடினும்
ஓடுகின்ற வனவாச மொழுங்காகப் புரிந்திடினும்
நாடுகின்ற வுயர்நீதி நரகுலத்துக் குனையொழியக்
கூடுகின்ற வகையிலையே குறுகாமற் காப்பாயே.

5. அரித்துவரு முபத்திரவ வருநதிதரண் டிடவிழிவாய்ச்
சிரித்துவரு பிணவடியார் திறற்பகையை வெலநின்மேல்
உரித்துவரு மாறிரங்கி வுதவுவதா ருனையலதன்[4]
றெரித்துவரு நடுவிதிநா ளெனக்கானோய் காப்பாயே.

6. பூமரை நலராக்கிப்[5] புதுவழியி னடத்திறைவா
தாமரை மலருளத்திற் றருமு னதம்[6] வரமடைந்து
தீமரை[7] மனந்திரும்பச் செயும்வலிமை மறைமொழியால்
காமரை நிமலநெறிக் கருத்தாககக் காப்பாயே.

7. துட்டனாய்த் தினந்திரளைத் தொலை ''லல்லி''[8] யுனக்கதிக
இட்டனாய்ச் செல்வழைத்தா யெழிற்சிலுவைக் காட்சியினால்

கட்டனாய்க் கண்டுமத்தி காணவுற்றான் றனையாண்டாய்
நட்டனாய்ப் புரளாம னன்கெனையுங்[9] காப்பாயே.

8. பேரறங்கள் புரிந்தாலென் பெருந்தவங்கண் முடித்தாலென்
ஏரறங்க ளருந்தவங்க ளியேசிறைவா யெற்குநீயே
போரறங்கண் மிகவிளக்கிப் புலைக்குணுங்கை[10] மடங்கடித்து
நேரறங்கள் வழுவாம னிலைக்கவெனைக் காப்பாயே.

9. காணுகின்ற வெவர்க்குமவர் கருத்திசையச் சொலிப்போதல்
நாணுகின்ற முறையெனலை நன்குணர்ந்து திருவேதம்
பூணுகின்ற வுயர்ஞானம் புகன்றுளக்கண் களிப்பாகத்
தோணுகின்ற வாவியிருந்[11] துணையருளிக் காப்பாயே.

10. ஒருப்பத்து நெறிமீறி[12] யுலைந்தவெனைத் தடுத்தாளத்
திருப்பத்துப் புண்ணியங்கள் சிலுவைமிசை சவதரித்தோய்[13]
குருப்பத்துத் தீவினையின் கூட்டமற விஷமுடைய
சருப்பத்துத் தலையுடைத்த சமர்ந்தலங்கக்[14] காப்பாயே.

1. தீமை நிறைந்த துன்பமான; 2. உதவும்+அதி; 3. மனம் இரங்காத தீய கல்போன்ற குணத்தை; 4. உதவுவது+ஆர்+ உனை+அலது+அன்று; 5. புவியில் உள்ளோரை நல்லவராக்கி; 6. தரும் உன்னதமான; 7. தீயவரை; 8. தொல்லையை விரும்பு பவன்; 9. புரளாமல்+நன்கு+எனையும்; 10. தீய குணங்கொண்ட பேயினை; 11. தோணுகின்ற+ஆவி+இடும்; 12. பத்துக் கட்டளை களை மீறி; 13. சிலுவையில் பாடுபட்டுத் தோற்றுவித்தாய்; 14. பகைவர் கலங்குமாறு.

92. ஜெபத்தூது

[செபம் செய்தல் என்பது இறைவனிடம் பேசுவதே எனலாம். இறைவனைப் போற்றுதல், இறைவனிடம் வேண்டுதல், தம் கருத்தைத் தெரிவித்தல் ஆகியவை செபத்துள் அடங்கும். ஆசிரியர் செபமாகக் கூற வேண்டியவற்றை ஒரு குயில் வழியாகக் கூறி அனுப்புகிறார். செபத்தை இறைவனிடம் கூற வேண்டிய தூது மொழியாகக் குயிலிடம் கூறுவதால் செபத்தூது எனத் தலைப்பிடப்பட்டிருக்கிறது.]

அறுசீர் விருத்தம்

1. கீத மினிய செபக்குயிலே
கேளாய் விசுவா சச்சிறையால்[1]

காத மோர்வீச் சாய்ப்பறந்து
காதன் மிகுந்தி[2] ராப்பகலாய்
வேத நச்சுக்[3] குழல்வழிநான்
விமலன் வரப்பார்த் திருப்பதைநீ
போத மிகுசீ யோனாடன்
பொன்மன் றுரைத்து வருவாயே.

2. சீரார் பரத்திலொ ருநல்லிடம்
செயப்போ கின்றே னதைமுடித்திங்
கேரார் மகிமை மூன்றுடனே
இறங்கிச் சேர்ப்பே னதிலென்ற
நேரார் மொழியைத் தினம்நம்பி
நெஞ்சத் தருத்தி[4] பெருகுதென
பேரார் மோட்ச நாடனுழை[5]
பேசிக் குயிலே வருவாயே.

3. ஆக மதனிற் குடியிருப்ப
தையன்[6] வரவின் வாஞ்சையொன்றே
ஏக சீவ நாயகன்போல்
இகப ரக்க ணெவருமிலை[7]
சோக மூளு தவர்நினைப்பால்
சோலை பயிலுஞ் சிறுகுயிலே
வேக மாய்ச்சென் றுயர்நாடன்
விரையக் கூறி வருவாயே.

4. உன்னை மான[8] விரைந்தேக
ஒருவ ருளரோ நானுமின்னும்
தன்னை யெனக்காய் முழுத்தானம்
தந்த வெனது நாயகரும்
தின்னைப் புகழ்ந்தார் செபக்குயிலே
நீபோய் மாறா வளநாடன்
என்னை யழைத்தங் கேசெல்லற்
கிணங்க வுரைத்து வருவாயே.

5. துய்ய திரைக்கப் பானின்று[9]
சுடரும் நாண வொளிகாலும்
செய்ய முகத்தைக் காண்பித்தால்
தீரா தாவ லிங்களியேன்

உய்ய வதிசீக் கிரம்வரவே
உற்ற தெனவிண் ணாடன்வயின்
மெய்ய தாயின் பக்குயிலே[10]
விரைவிற் பகர்ந்து வருவாயே.

6. ஆருந் தேடாக் காலத்தென்
அண்டை யிரங்கித் தோன்றியன்பு
கூறு மார்க்கந் திறப்பாக்கிக்
குன்றா வடையா ளந்தரித்துத்
தேரும் வாக்கிட் டினும்வருவேன்
சினமென் றெழுந்த திருநாடன்
சேருங் காலம் நீளுதென்றே
செப்பிக் குயிலே வருவாயே.

7. கடியா னதுசோ தனைபுரிந்து
கலங்க வைக்கு துலகுடலும்
மூடியா வமரிட் டடிமைகொள[11]
முயர்ச்சி செய்கின் றனபலமாய்
விடியா விரவிற் படுபுறவாய்
மெலிகின் றேனென் றபயமென்றோர்
அடியாச் சுவர்க்க நாடன்பால்
அரற்றிக் குயிலே வருவாயே.

8. பூமி பழுத்து முதிர்ந்ததெங்கும்
பொல்லாப் பெல்லாம் மலிந்திந்த
நேமி பலபாற் கொடுநரகின்
நிலையிற் க்காண்கின் றதுவுமலால்
காமி[12] குடியன் சூதனுக்கே
கால மாதீ னப்படுதாம்[13]
சாமி வரவா வசியமென்றே
சாற்றிக் குயிலே வருவாயே.

9. கிழக்கே பார்த்த முகமாகக்
கிடக்கு தமல ருடலெல்லாம்
வழக்கே சொலுதாஞ் சபையின்வித்து
வருகைக் காய்த்த மாகுமினெண்
முழக்கே புரிதன்[14] பரின்குழுநீ

முத்தி நாட் டினுளிசென்று
சழக்கே யகல வரவென்மனு[15]
சாற்றிக் குயிலே வருவாயே.

10. காள மேழா வதைமுழக்கக்[16]
கால மினுமா[17] கலையோபர
தாளம் வேதா ளக்குலத்தைக்
தாழ்த்த நாளின் னுஞ்செலுமோ?
கூளம் பிரிய மணிகளெலாம்
குலவக் காலச் சக்கரத்தை
ஆளம் பரநா டனுக்கோதி
ஆசைக் குயிலே வருவாயே.

1. சிறகால்; 2. காதல் மிகுந்து; 3. காதல் மிகுதியால் வேதம் நச்சுக் குழலாகத் தோன்றுகிறது; 4. நெஞ்சத்து+அருத்தி = நெஞ்சத்தில் ஆசை; 5. நாடன்+உழை = நாடனிடம்; 6. குடியிருப்பது+ஐயன்; 7. இகபரக்கண்+எவருமிலை = இகத்திலும் பரத்திலும் எவரும் இல்லை; 8. போல என்னும் பொருள்படும் உவம உருபு; 9. துய்ய திரைக்கு+அப்பால்+நின்று = தூய்மையான கடலுக்கு அப்பால் இருந்து; 10. மெய்யதாய்+இன்பக்குயிலே; 11. அமர்+இட்டு+அடிமைகொள = போர் செய்து அடிமையாக்க; 12. காமம் நிறைந்தவன்; 13. காலம்+ஆதீனப்படுதாம் = காலம் அதிகமாகிறது; 14. முழக்கே புரிது+அன்பரின் குழு; 'புரிகிறது' என்னும் சொல் புரிது என மரூஉ மொழியாக ஆளப்பட்டுள்ளது; 15. என் மனுவாகிய இறைவன் வருமாறு; 16. காளம்+ஏழாவதை முழக்க; 17. காலம்+இனும்+ஆகலையோ.

93. வெற்றிக்கொட்டு

'கைத்தாள ஒலி முழங்க அவரைப் புகழ்ந்தேத்துங்கள்' என்னும் சங்கீதத்தின் (150-5) அடிப்படையில், இறைவனின் வெற்றிச் செயல்களை முழக்கும் பாடல்களைக் கொண்டுள்ளதால் 'வெற்றிக் கொட்டு' என்னும் தலைப்பைப் பெற்றுள்ளது. தலைப்பிற்கேற்ப, ஒவ்வொரு பாடலும் 'டம் டம் டம் டம்' என்னும் கொட்டு முழக்குடன் முடிவுறுகிறது.]

குறள் வெண்செந்துறை

1. ஆதி நெறியை மீறச் செய்த
அரவ லூர்தி[1] தீய வெண்ணம்
பூதி யாகப்[2] பலிமுறை மாந்தர்
புகலாக் கினன்பரன் டம்டம் டம்டம்.

2. தூய நிலைமை நல்லு டுப்பைத்
தொலைத்து நக்க ரான[2] மனுடர்
மேய வத்தியிலை நீக்கித் தோலுடை
விரும்பி யிட்டனன் றேவன் டம்டம் டம்டம்.

3. நல்லவனைப் பொல்லான் கொன்று போட்ட
நட்டந் தீரச் சேத்தையுகந் தளித்து
வல்லவனைப் போற்றுசபை வையத் தாச்சு
மகிழ்ந்தடி வெற்றிக்கொட்டு டம்டம் டம்டம்.

4. மிஞ்சியவக் கிரமத்தால் வெள்ளங் கோர்த்து
மேதினி யழிந்துமோர் பேழை யாலே
எஞ்சியகு டும்பமொன்றால் மனுக்கள் பலுக
ஏகன்றிரு வுளமானான் டம்டம் டம்டம்.

5. அஞ்ஞான மிஞ்சிய காலத்தா ருள்ளே
அமலன் கிருபைகொண் டொரும லடனை
மெஞ்ஞான ஜாதி யாய்ப்ப லுக்கிட
விரும்பியழைத் தாண்டான் டம்டம் டம்டம்.

6. வாக்குத் தத்தம் பெற்ற ஜாதி
வாழ்ந்து சுகிக்க மறைப்பூமி யொன்றை
ஆக்கினன் கோயிற் குருக்க ளாதி
அலங்கவைத் தான்புகழ் டம்டம் டம்டம்.

7. கிரியாற் புதம்ஞா னாற்பு தங்கள்[3]
கெம்பீர மாய்நடத்திப் பேயை நசுக்கி
உரிய வேதநெறி ஜோதி கால
ஒழுங்குசெய் தானிறை டம்டம் டம்டம்.

8. காலம் திறைவே றியபோது புவியில்
கன்னி மகவாகி நீதி முடித்து

கோலக் குருசிற் பலியாகி யெழுந்து
குடியோட்டி னான்பசாசை டம்டம் டம்டம்.

9. மேலான விசுவாசப் பாதை நடந்து
மெய்யான ரட்சிப்பைப் பெற்று வாழ
மாலான[4] தடைக ளொழித்து விட்டான்
மகிழ்ந்து சிறந்துகொட்டு டம்டம் டம்டம்.

10. கண்ணி தெறித்துநாம் தப்பிக் கொண்டோம்
கருணையி னாலிது வாய்த்தது முற்றாய்.
எண்ணி யிருந்தவெண்ணம் வீணா யலகை[5]
எரிவீழ்ந் தொழிந்தது டம்டம் டம்டம்.

1. பாம்பு வாகனத்தில் வந்த பேய்; 2. சிரிப்பிற்கிடமான; 3. கிரியை + அற்புதம் + ஞானம் + அற்புதங்கள்; 4. மாயைகளை யுடைய; 5. பேய்.

94. பூரண ரட்சகர்

[உலகத்தோருக்கு மீட்பளிக்கக் கூடியவர் இயேசு ஒருவரே என்னும் கருத்தை வலியுறுத்தும் பாடல்களைக் கொண்டது. ''தம் வழியாகக் கடவுளை அணுகிச் செல்வோரை முற்றும் மீட்க வல்லவராயிருக்கிறார்'' (எபிரேயர் 7-25) என்னும் விவிலியப் பகுதி இதற்கு அடிப்படையாகும்.)

குறள்வெண் செந்துறை

1. மூர்த்தி தீர்த்தந் தலங்க ளாலே
மொய்த் துவிதவா ராட்சி யாலே[1]
பூர்த்தி யாகாவீ டேற்றம்[2] நரர்க்குப்
பூரண ரக்ஷகரி யேசு தேவே.

2. விருத்த சேதனஞ் சடங்கா சாரம்
விரும்பி யைந்து நேரத் தொழுகை
பொருத்த வீகையு[4] மீட்கா நரரைப்
பூரண ரக்ஷகரி யேசு தேவே.

3. வாடிக்கை யானபிரார்த் தனைகள் படித்து
மரித்தோரை மத்தியஸ்த ராக்கிக் குருவைக்
கூடிப்பா வஞ்சொலியும்[5] பயனே யில்லை
குவலய ரக்ஷகரி யேசு தேவே.

4. வேதாதந்தஞ் சித்தாந்தந் தெளிந்திட் டாலும்
மெய்கண்டார் போலே துணிந்திட் டாலும்
போதாந்த மாரிபொழிந் திடுனு மென்னே
பூரண ரக்ஷகரி யேசு தேவே.

5. தத்துவ சாஸ்திரங் கற்றிட் டாலும்
சருவகல் விப்பட்டம் பெற்றிட் டாலும்
பொத்துவ ரத்திலை[6] மனுக்க ளீடேறப்
பூரண ரக்ஷகரி யேசு தேவே.

6. வாதங்கள் பேசிச் செயித்திட் டாலும்
மகம்மது பாப்புவி யாசர் வந்தாலும்
பூதங்கள் பொருதப் படையாய் நிற்கினும்
பூரண ரஷரி யேசு தேவே.

7. நாத்திகர் நாத்தழும் பேற விதண்டை
நானா விதம்பேசினுஞ் சாத்தான் சங்கம்
பூத்தகு தற்கம்மலை போலெ திர்ப்பினும்
பூரண ரக்ஷகரி யேசு தேவே.

8, எண்ணிலாச் சிலுவைப் பகைஞர் திரண்டே
எழும்பினுங் கனைக்கினு மிடர்கள்[7] செயினும்
புண்ணியம் விசுவாசி கட்கு நல்கும்
பூரண ரக்ஷகரி யேசு தேவே.

9. விண்ணின்கீழ் பூமியின் மாந்தரி னுள்ளே
மீட்புற இலைவேறே நாம மொன்றும்
புண்ணிய நாட்டரே யோடிச் சேரும்
பூரண ரக்ஷகரி யேசு தேவே.

10. நாட்டிய நரதந் திரங்களி னாலே[8]
நன்மைவ ராதாத் துமத்துக் கென்றும்[9]
பூட்டிய தேவதந் திரங்கள் பயில்க
பூரண ரக்ஷகரி யேசு தேவே.

1. அத்துவித+ஆராட்சியாலே; 2. பூர்த்தி+ஆகா+ஈடேற்றம்; 3. மனிதருக்கு; 4. பொருத்த+ஈகை; 5. சொல்லியும்; 6. வழியொன்றுமில்லை; 7. கனைக்கினும்+இடர்கள்; 8. மனித தந்திரங்களினால்; 9. வராது+ஆத்துமத்துக்கு+என்றும்.

95. புனர் ஜனனத் தெளிவு

[மறுபிறப்பு உண்டு என்னும் கொள்கையை மறுத்துப்பாடிய பாடல்களைக் கொண்டது. 'ஞானப்பெண்ணே' எனப் பெண்ணை முன்னிறுத்திப் பாடும் சித்தர் பாடலைப் போலப் பாங்கியிடம் கூறுவது போல் ஒவ்வொரு பாடலும் 'ஞானப் பாங்கி' என முடிவுறுகிறது. மனிதனின் குணவியல்புகளையே பல்வேறு பிறப்புக்களாகக் காட்டியிருப்பது நயமாக உள்ளது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. ஒருக்கால் மாதா வயிற்றிற் பிறந்திவ்
வுலகிருந் திறந்தவர்[1] ஞானி யாமட்டும்[2]
பெருக்கால் நானா சராச ரங்களாய்
பிறப்ப ராங்கேள்[3] ஞானப்பாங்கி.

2. இப்படிப் பிறப்ப தாத்து மாவாம்
இந்த வாத்துமா வொன்றே யொன்றாம்
செப்படி வித்தைபோ லிதுபல் லுயிராய்ப்
செனிக்குதாம்[4] பிரமமாம் ஞானப்பாங்கி.

3. எத்தனை கோடியோ ஜன்ம மெடுத்தோய்ந்
தேறுமாம்[5] பிரமசா யுச்சிய மின்னும்
மெத்தவுண் டவர்கூறு விப்பிரர் பொய்யை
விட்டியான்[6] கூறக்கேள் ஞானப் பாங்கி.

4. ஒருதரம் பிறப்பது மிறப்பதும் பின்னர்
உன்னதனின் நியாயத் தீர்ப்படைந் திருப்பதும்
அருள்வே தத்தே வெளிப்ப டுத்திய
அழகிய வுபதேசம் ஞானப்பாங்கி.

5. மறுபிறப் படைய வேண்டு மென்பது
மனமாறி பிறப்பதா மிச்சீ வியத்தில்

உறுமிந்தப் பிறப்பை யடையார் செல்லார்
உன்னதவம் பரவீடு ஞானப் பாங்கி.

6. இந்து சிநேகிதர் சொல்லும் பிறப்புக்
கியம்பலா மொருகருத்[7] தெண்ணி லாதாய்
சிந்தையிற் செனிக்குந் துரெண்ணஞ்[8] செயலுந்
தீட்டுமொவ் வொருசன்மம் ஞானப் பாங்கி.

7. திருட்டெலி தந்திரம் நரிகு ரங்கு
சேஷ்டை பெருமை மயில்பொய் பச்சோந்தி
பெருங்கழு கிச்சை[9] நாய சுத்தம்[10]
பேய்நாய் பகையறி ஞானப் பாங்கி.

8. மோகங் கழுதை குதிரை யடமாம்
முரட்டாட்டம் மாடு யானை மதமாம்
காகம் வஞ்சக மபகடம்[11] பாம்பு
கன்னலஞ்செய் யாத்திருத்தல்[12] ஞானப் பாங்கி.

9. இப்படி யாக நிமிஷந் தோறும்
எடுக்கின்றான் குணப்படா மனுஷன் ஜன்மம்
ஒப்படி இங்ஙனம் மிக்க பயனாம்
ஒழியடி மற்றவை ஞானப் பாங்கி.

10. இன்றைக் கேநவ குணம்புதுச் செயலும்
எய்திக் கொள்ளி யேசுவினல் லாவியால்
துன்றிய பின்பல பிறவி யில்லை
சூட்சஞ் சத்தியம் ஞானப் பாங்கி.

1. உலகு+இருந்து+இறந்தவர்; 2. ஞானி+ஆம்+மட்டும்; 3. பிறப்பாராம்+கேள்; 4. தோன்றுகிறதாம்; 5. ஜன்மம்+எடுத்து+ஓய்ந்து+ஏறுமாம்; 6. விட்டு+யான்; 7. இயம்பலாம்+ஒரு கருத்து; 8. செனிக்கும்+துர்+எண்ணம்; 9. பெரும்+கழுகு+இச்சை; 10. நாய்+அசுத்தம்; 11. வஞ்சகம்+அபகடம்; 12. கல்+நலம்+செய்யாது+இருத்தல்.

96. கிறிஸ்தவன்

[உண்மைக் கிறிஸ்தவனின் இயல்புகளை இப்பகுதிப் பாடல்கள் விளக்குகின்றன.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவைக்
கதிவழி யென்றுநம்பி யேற்றுக்கொண்டு
விர்த்தி யாய்விசு வாசநல் லொழுக்கத்தில்
மென்மேலும் வளருவோன் கிறிஸ்தவன்.

2. குறைவுறுஞ் சுயநீதி முற்றும் நிகழ்ந்து
குமர பரனியேசு சம்பாதித்த
நிறைவுறுந் தேவநீதி நிரம்பப் பெற்று
நிமலஜீ வியஞ்செய் வோன்கிறிஸ்தவன்.

3. தீய பாவத்துக்குத் தினமும் மரித்துத்
திருநீ திக்குநா டோறும் பிழைத்து
மாயத் தனமின்றி யுள்ளும் புறம்பும்
மன்னுமன் புடையவனே கிறிஸ்தவன்.

4. உள்ளான மனுஷனிற் பெலம டைந்தும்
ஊனப் புறம்பான மனுஷனிலோ
தெள்ளான தினத்தேய் வடைந்துந் தேவ
திருமகி மைகூட்டு வோன்கிறிஸ்தவன்.

5. எட்டுப் படியேறி முப்படி தாண்டி
இரக்ஷணிய பெருமான் சாயல்காட்டி
அட்ட பாக்கிய சாலி யாகித்தூ
யாவியா லலங்கு[1] வோன்கிறிஸ்தவன்.

6. கெட்ட பழைய குணங்கள் செயல்கள்
கிறிஸ்துநல் லாவிமறு பிறப்பாலொழிந்தே
திட்ட முடன்சிலுவை தினமு மெடுத்து
ஜீவியஞ் செய்வோ னேகிறிஸ்தவன்.

7. திரியேக தேவ மகிமை ஒன்றையே
சிந்தையுட் கருதிநாட் செலவுசெய்வோன்
பரிசுத் தாவியினா னடத்தப் படுவோன்[2]
பரலோக ராஜ்யம் பெறுங்கிறிஸ்தவன்.

8. சுயசித்தந் தேவ சித்தத் தமைத்து
சூழ்நிலைமை யெதிலும்மன ரம்மியனாய்
நயமுட னாத்துமா தாயஞ்[3] செய்வோனாய்
நன்மை புரிகுவோன் கிறிஸ்தவன்.

9. தூய வைந்துடை தரித்துப் பரம
சுந்தரச்சர் வாயுத வர்க்கம்பூண்டு
நேய வைம்பல[4] நிச்சயத் தோடே
நிதமுஞ்சஞ் சரிப்பவ னேகிறிஸ்தவன்.

10. திருரத்தத் தீர்த்தத் துறையி லாடி
தேவநீதிவெண் பட்டுடை சூடி
குருமத்தி யஸ்தவறை[5] வாசஞ் செய்வோன்
குணமாறிப் பிறந்தொளிர் மெய்க்கிறிஸ்தவன்.

1. தூய்+ஆவியால்+அலங்குவோன் = தூயஆவி பெற்றுவிளங்குபவன்; 2. ஆவியினால்+நடத்தப்படுவோன்; 3. நயமுடன்+ஆத்தும+ஆதாயம்; 4. நேய+ஐம்பல; 5. குருமத்தியஸ்த+அறை.

97. சுவர்க்க நாட்டம்

(விண்ணுலக நாட்டத்தை வெளிப்படுத்தும் பாடல்களைக் கொண்டது. இவ்வுலகிற்கும் மேலுலகிற்கும் பொருந்துமாறு இடங்களை, நகரங்களை, ஊர்களை, இருபொருள்படப் பாடல்களில் கையாண்டிருப்பது நயமாக உள்ளது. இருபொருட் சுவை இப்பாடல்களில் உள்ளதை மற்றவர்களுக்குத் தெளிவாக உணர்த்துவதற்குப் பாடல்வகையைச் சுட்டிய பின் சிறு தலைப்பும், பாடல்களின் முடிவில், இவ்வுபயார்த்தக் காதலந்தர் முகமாய்ப் பொருளுணர்ந்தின்புறுவரான்றோர்; அல்லாதார் குருமுகத்தறிதற்கடன்'' என்னும் குறிப்பும் ஆசிரியரால் தரப்பட்டுள்ளன.]

வெண்செந்துறை

(உபயார்த்தக் காதல்)

1. பெருவனந் தாண்டியே பேரைமலை நீங்கித்
திருவனந் தாபுரியைச் சேருவது மெந்நாளோ.

2. பஞ்சாப்பு விட்டடியேன்[1] பாவற் புரிதாண்டி
அஞ்சாமல் ராஜபுத னஞ்சேர்வ தெந்நாளோ.

3. சிற்றா ருதயபுரி[2] சேராம லுச்சினிக்கும்
முற்றும் விஜயநகர் மொய்த்திடுவ தெந்நாளோ.

4. கோலபுரி நீங்கியான் கோவைகுண் டூரகன்று
வால சிதம்பரத்தில் வாழ்ந்திருப்ப தெந்நாளோ.

5. அந்தமான் றீவுக் கடுக்காமல் வங்கோல்விட்
டெந்தையி னாலிலங்கை யெய்திடுவ தெந்நாளோ.

6. கள்ளக் குறிச்சிவிட்டுக் காயங் குளந்தாண்டி
எள்ளாத் திருவாங்கூ ரேகும்நா ளெந்நாளோ.

7. ஆற்றூரைத் தாண்டியபின் னார மொழியொழிந்து
போற்றியூர் சேர்ந்து புகழ்படைப்ப தெந்நாளோ.

8. கோட்டையடி கடந்து கும்பகோ ணத்தைவிட்டுச்
சாட்டுப்பு தூர்நீங்கித் தாபமற லெந்நாளோ.[3]

9. நெட்டாங்கோ டொட்டாம[4] னெல்வேலி பற்றாமல்
திட்டூரிற் சென்றிறையைச் சேவிப்ப தெந்நாளோ.

10. கட்டையாங் கோட்டைக் கடந்துகரி யல்தாண்டி
சட்டமா யாளூரைத் தானடைவ தெந்நாளோ.

11. இறைச்சிகுளஞ் சிக்காம லீசாந்தி தள்ளிக்
குறைச்ச லில்லா நல்லூரைக் கூடுவ தெந்நாளோ.

12. தன்னூர்விட் டுக்கடந்து சற்சமதா னத்தோடு
மன்னுந் தலைச்சேரி வாழ்வெய்த லெந்நாளோ.

13. ஒட்டப் பிடார வுறவற்று மேலூர்க்கு
நாட்டத் துடனடந்து[6] நன்குறுவ தெந்நாளோ.

14. கருவூர் கழிந்ததற்பின் கண்ட தொந்தியூரை
மருவி யுழன்றநிலை மாறிநிற்ப தெந்நாளோ.

15. அயரக் கிடந்துறங்கு மாலப் பிழைநீங்கி
உயர விளையிலுவந்திருப்ப தெந்நாளோ.

16. உருவ மயலகற்றி யுன்னத வாழ்வீகத்
திருவாரூர் சென்று சிறந்திருப்ப தெந்நாளோ.

17. ஆவிதனை யச்சுறுத்து மச்சங் குளங்கடந்து
காவிரிபூம் பட்டணத்திற் காலமிட லெந்நாளோ.[6]

18. மாயவரம் பற்றாமல் மைசூ ரடுக்காமல்
நேய மதுரை நிலைத்திருப்ப தெந்நாளோ.

19. கூடலூ ராவற் குறைந்தே புதுச்சேரி
நாடறிய நானமர்ந்து நன்றாவ தெந்நாளோ.

20. மின்னும்பொன் னேரி மிரட்டுசுழிக் கேங்காமல்
மன்னார் கோவிற்புகுந்து வாழும்நா ளெந்நாளோ.

21. கொல்லந் தறுகாமற் கொச்சியிச்சி யாதுதிரு[7]
வல்லம டைந்து மகிழ்ந்திருப்ப தெந்நாளோ.

22. மோகக் கழுகுமலை மொய்க்காமற் சீர்மையுறை
நாகர்கோ விற்றரித்து நான்வாழ்வ தெந்நாளோ.

23. காட்டுப் புதூரைக் கருதித் தறுகாமல்
மேட்டுப் புதூரை விரைந்தடைவ தெந்நாளோ.

24. ஒழுகின சேரி யுலைந்தவண்டிப் பற்றற்
றழகிய வான்வண்டி[8] யானேற லெந்நாளோ.[9]

25. கச்சி சடையாமற் கணியாகுளம் புக்காமல்
மெச்சுசமா தானபுரம் மேவுவது மெந்நாளோ.

26. சிறையின் கீழ்விட்டுச் செயபு ரந்தங்கி
முறையோ டரசாட்சி முழக்குவ தெந்நாளோ.

27. இருகருத் தின்றியே யெப்பொதுங் கொண்டாடும்
எருசலேம் பட்டணத்தி லின்புறுவ தெந்நாளோ.

28. சீதப்பால் புக்கித் திகைப்பாட்ட மாகாமல்
பூதப்பாண் டிக்குளாய்ப் பூரிப்ப தெந்நாளோ.

29. வீம னகரி விலகி யனுதினமும்
சேமந்தா ழாக்குடியைச் சேர்ந்துய்வ[10] தெந்நாளோ.

30. ஈனக் கருத்துவிட்டுள் ளின்பங்கு திபோடும்
ஞான புரியினலம் நான்றுய்ப்ப[11] தெந்நாளோ.

1. விட்டு+அடியேன்; 2. சிற்றூர்+உதயபுரி; 3. தாபம்+அறல்+எந்நாளோ?; 4. நெட்டாக்கோடு+ஒட்டாமல்; 5. நாட்டத்துடன்+நடந்து; 6. காலம்+இடல்+எந்நாளோ?; 7. கொச்சி+இச்சியாது; 8. அழகிய+ஆவி+வண்டி; 9. யான்+ஏறல்+எந்நாளோ?; 10. சேர்ந்து+உய்வது; 11. நான்+துய்ப்பது.

98. விசுவாச விசுவாசவியல்

[உண்மை விசுவாசம், விசுவாசமின்மை ஆகிய இரண்டின் இயல்புகளையும் மூன்று விருத்தங்களில் விளக்குகிறார். முதல் விருத்தம் 28 சீர்களிலும், இரண்டாம் விருத்தம் 8 சீர்களிலும், மூன்றாம் விருத்தம் 7 சீர்களிலும் உள்ளன. 2, 3 ஆம் விருத்தங்கட்கு உள் தலைப்புக்கள் தரப்பட்டுள்ளன. இறுதியில் விசுவாசத்தின் அடிப்படை ஒரு குறள் வெண்பாவில் கூறப்பட்டுள்ளது.]

ஆசிரிய விருத்தம்

1. ஒப்பரிய விசுவாசம் நம்பும்நல் லுறுதியாய்
உண்மையொளி றிறைவன் வாக்கை,
உறுமவிசு வாசமோ வனுமானம்,[1] நலம்பெற
உயர்பொறுதி[2] யாயி ருக்கும்
உன்னத விசுவாசம், நடுங்கவிசு வாசமோ
உடனாத்தி[3] ரங்கொண் டிடுமாம்,
மூங்குமா றுதலிடும் விசுவாச, மலறுதலை
உண்டாக்கு[4] மவிசு வாசம்,
செப்பரிய விசுவாசஞ் சந்தோஷ மேதரும்,
திணிக்குமற் றதுக வலையே,
சேர்பார மெளிதாக்கும் விசுவாசம், மலையெனத்
தீட்டுமதை யவிசு வாசம்,
தீவிரித் தெழுப்பிவிடும் விழுந்தோரை விசுவாசம்,
சிரித்துகீட் டளும்பி றிதுவே[5]

தேவனை யடுத்துவரச் செயும்முதற் கடைநீக்கும்,
தேநட்பு,[6] பகைமு றைகாண்
எப்பரிய கிருபைக்குட் படுத்தும்விசு வாச, மயல்
எரிகோபத் தீயை மூட்டும்,
இதயசுசி[7] நல்கும்விசு வாசமசுத் தத்திலே
இருத்துமற்[8] றதுநீ தியைத்தான்
இலவச மாய்த்தரும் விசுவாச மாக்கினைக்
கேதுவிட் டளுத்து மயறான்[9]
இறைக்குப்பொ ருந்தவைக்குங் கிரியை விசுவாசம்
ஏற்காதியற் றும்மற் றதுகாண்
தப்பரிய கிறிஸ்தருமை காட்டுமவிசு வாசமயல்
சடுதியாய் மாற்றி யகலும்
சந்ததங்[10] கிறிஸ்துவில் வாழ்விக்கும் விசுவாசம்
தாழ்விக்கு மவிசு வாசம்
தட்டாத மறுமையை நோக்கும்விசு வாசமித்
தரணிபார்த் தயரும் பினது
சாமிவழி யினிதெனும் முதல்கடை கடினமெனும்
தனிவிசுவா சத்தி னிலையே.[11]

விசுவாசத்துக்குரிய அடையாளங்கள்

2. சீர்நிறைந்த கிறிஸ்தருமை யுள்ளோ ராமே
தேவவார்த்தை யெதினு மினிமை யாமே
கார்நிறைந்த பாவமுற்றுங் கசப்பா மேமா
கர்த்தரிடஞ் செயுஞ்செப மின்ப மாமே
ஏர்நிறைந்த[12] நல்லோர்க ளிஷ்ட ராமே
எழிற்றேவ பத்தியொன்றே[13] யலுவலாமே
சூர்நிறைந்த விவ்வுலகம் வெறுமை யாமே
சூழ்சாவு விருப்பாமே மெய்யன் போர்க்கே.

விசுவாசிக்கிறவர்கள்

3. புண்ணிய கிறிஸ்துவைத் தம்மிரு தயவறை[14]
பொங்கமாய்த்[15] தரித்திருக் கின்றார்[16]
பொருந்தவைத் திருக்கின் றார்தின நோக்கினில்
புகலருஞ்[17] சுவர்க்க லோகத்தை
திண்ணிய வடிகீழ் பதித்திருக் கின்றார்
திரிவுறு முலகினை மேலாம்

திவியா[18] வியைத்தம் தேற்றர வாளனாய்ச்[19]
சிறக்கவேற் றிருக்கின்றார் தமக்குக்
கண்ணிய பரன்பயங் காவலாய்க் கொண்டார்
கர்த்தரின் சனமவர் தோழர்
கருணையன் கட்டுரை யமுதமா யேற்றார்
கதிவழி யிறைபரி சுத்தம்
நண்ணிய விசுவாசம் யாவுமேற் கொள்ளும்
நவிந்துகீழ்ப் படுமவிஸ் வாசம்
நாடுவர் பரலோ கம்மிலாய்ப் புகுத
நல்விசு வாச முள்ளவரே.

சாரம்

குறள் வெண்பா

4. விசுவாச மவ்விசுவா[20] சங்கண் குருடு[21]
நிசுவாசஞ் சீவனாம் நேர்.[22]

1. உறும்+அவிசுவாசமோ+அனுமானம்; 2. உறுதி; 3. உடன்+ஆத்திரம்; 4. அலறுதலை+உண்டாக்கும்; 5. கீட்டு+அழும்+பிறிதுவே; 6. தேவனுடைய நட்பு; 7. தூய்மை; 8. இருத்தும்+மற்றது; 9. அளுத்தும்+அயல்+தான்; 10. எப்பொழுதும்; 11. விசுவாசத்தில்+நிலையே; 12. அழகு மிகுந்த; 13. எழில்+தேவ+பத்தி+ஒன்றே; 14. இருதய+அறை; 15. நிறைவாக; 16. வைத்திருக்கின்றார்; 17. சொல்லுதற்கரிய; 18. திவிய+ஆவியை; 19. ஆறுதல் தருபவனாய்; 20 விசுவாசம்+அவிசுவாசம்; 21. அவிசுவாசம் குருட்டுக்குச் சமம்; 22. தூய விசுவாசம் உயிருக்குச் சமம்.

99. அவனே நானாவது

[இறைனோடு இரண்டறக் கலந்து மனிதன் இறைவனாகவே ஆகிவிடலாம் என்னும் கொள்கை தவறானது; இறைவனின் ஆற்றல்களை முழுதும் மனிதன் பெற இயலாது என்பனவற்றை விளக்கும் பாடல்கள் அடங்கியுள்ளன.]

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

1. தானா யிருந்தா லனைத்துயிரும்
தானே படைத்தாற் காத்தழித்தால்
கோனா யிருந்தாற்[1] சுகதுக்கம்
கொடுத்தே பரித்தா லமலனென்றால்[2]
வானா யிருந்தால் முடிவிலதேல்
வாணாட்[3] குறுக்கம் மறுக்கமின்றேல்
ஆனா லன்றோ வவனேநான்
ஆவ தாகு மறிவோரே.

2. தன்னை யறியு மறிவிருந்தால்[4]
சடத்தை[5] யழியா தேகாத்தால்
பின்னைப் பிறவி யிலதாகில்
பேச்சின் முன்னி லைமாறில்
அன்னை பிதாவோ டகம்பிள்ளை[6]
அடுத்தோர் தொடுத்தோ ரிலராகில்
மன்னை[7] யவனே நானாக
மதிக்க லாகு மறிவோரே.

3. எங்கும் நிறைந்த பொருளானால்
எல்லா மறிந்தோ னாயிருந்தால்
பொங்குஞ் சருவ பலமுளதேல்
புகழ்சேர் கதிதன் வசமாகில்
மங்குந் தீமை கீழடக்கும்
மாட்சி யமைந்தால் நலமேசெய்
பங்குண் டெனிலே யவனேநான்
ஆவ பறைவா[8] மறிவோரே.

4. கேட்ட வரங்கள் பிறர்க்களித்தால்
கெடுநோய் மூப்புச் சாவொழிந்தால்
நாட்ட முழுது மயற்காக[9]
நயமாய்க் கண்டா லகத்திலுறு
வாட்ட மின்றாற் பசியின்றேல்
மனதிற் கவலை யுபாதியிலேல்[10]
கோட்ட மின்றி யவனேநான்
ஆவ கொளலா மறிவோரே.

5. பொன்மாற் றுளதேற் பணதிக்கும்
பொன்னொப் பென்பாம் பொன்னென்பாம்
பொன்மாற் றிலதேற் புகற்கில்லேம்
பொன்பூ ஷணதிஷ் டாந்தம்போல்[11]
நன்மாற் றிறையு முயிருமென்றால்
நன்மாற் றுயிர்க்குக் காண்கலையே[12]
நன்மாற் றிலதே லவனேநான்
ஆவ நகைப்பே யறிவோரே.

6. தத்து வத்தின் விசாரணையால்
சடம்பொய் யுயிர்மெய் யதுபிரமம்
எத்து மாரோர்[13] பம்மபா
வத்தா லிருண்ட தெனிற்பிரமம்
தொத்து மெவைக்கும் மறைபடுமோ?
சுழலஞ் ஞானப்[14] பிறப்புறுமோ?
ஒத்து மொழியி னவனேநான்
ஆவ தொவ்வு மறிவோரே.

7. சுத்தப் பிரமத் தின்மாயை
தொடரத் திரிகு ணங்கள்வர
அத்த திரிமூர்த் திகடோன்ற[15]
அனைத்துங் கிளம்பிக் கெட்டொடுங்க
சுத்தப் பிரமந் தொடர்மாயைத்
துவக்க மென்னோ சந்தேகம்
இத்த[16] தெளினே யவனேநான்
ஆவ திசையு மறிவோரே.

8. மாயா பலமே யனைத்துமவை
வழுத்தும்[17] பொய்மற் றுளதில்லை
நேயா வென்னிற் சொற்றுவர்சொல்
நிசமோ மாயா பலமன்றோ?
ஓயா மாயை யொருநாளும்
உணரா பிரமம் பாடாணம்[18]
வாயா தாசு மவனேநான்
ஆவ வாத மறிவோரே.

9. குதித்துக் குதித்தத் துவிததுறை
குனித்தென் னான்மா வலகடவுள்
துதித்துத் துதித்தம்பர ன்றிருத்தாள்
தொழுமின் பாவவறிக் கைசெய்மின்
மதித்து மதித்துத் தத்வமசி
வாத வெறும்பேச் சுபயமில்லை
உதித்து தித்து[19] மவனேநான்
உறுவ துடைவே யறிவோரே.

10. நாறும் பிணத்தைச் சுடுமுனரே
நசிப்பா[20] ருளரோ சுடுதடியை
கூறுந் தீமை யொழியாமே
குமைய நன்மை விட்டோமென்
றேறு வாதந்[21] தவறன்றோ?
ஈனற் கரச ருரைபயனென்?
மாறுங் குணம்போ யவனேநான்
ஆவ மாட்டா தறிவோரே.

1. அரசனாயிருந்தால்; 2. பரித்தால்+அமலன்+என்றால்; 3. வாழ்+நாள்; 4. அறிவு+இருந்தால்; 5. உடலை; 6. பிதாவோடு+அகம்+பிள்ளை; 7. மன்+ஐ = நிலைபெறும் தலைவன்; 8. ஆவ+பறைவாம்; 9. முழுதும்+அயற்கு+ஆக = முழுவதும் அயலாருக்காக; 10. கவலை+உபாதி+இலேல் = கவலைகள், துன்பங்கள் இல்லையேல்; 11. வெளிப்படுவதுபோல; 12. காணவில்லையே; 13. ஏமாற்றுபவர்கள்; 14. சுதல்+அஞ்ஞானம்; 15. திருமூர்த்திகள்+தோன்ற; 16. ‘இற்றது’ என்பது எதுகைக்காக ‘இத்தது’ எனத் திரிதல் விகாரமாய் ஆளப்பட்டுள்ளது; 17. வாழ்த்தும்; 18. நஞ்சு; 19. உதித்து+உதித்து; 20. வருத்துவர்; 21. என்று+தேறு+வாதம்.

100. சகத்துவாத தண்டாயுதம்

[பகைவனை வெல்லுதற்குரிய தண்டாயுதம் போல உலகில் பிற சமயக் கொள்கைகளை எதிர்க்கும் பாடல்களைக் கொண்டுள்ளமையால் ‘சகத்துவாத தண்டாயுதம்’ என்னும் தலைப்பைப் பெற்றுள்ளது. தோழியிடம் தம் கருத்துக்களைக் கூறும் முறையை ஆசிரியர் மேற்கொண்டுள்ளதால் ஒவ்வொரு பாடலும் ‘தோழி’ என முடிவு பெறுகிறது.]

இரட்டைக்குறள் வெண்செந்துறை

1. எல்லா மாயு மல்ல வாயும்
இலைபொரு ளிருக்கி லென்னோ சபலம்?
பொல்லா நாஸ்தி கத்தின் புதைப்பே[1]
புகலுஞ் சகத்து வாதந் தோழி!

2. கண்ட தனைத்துங் கடவு ளென்றால்
ககன புவனம் மாயை என்றே
விண்ட வுரைக்குமன மென்னேசிந்து
வேதாந்தஞ் சூதாந்தந்[2] தோழி.

3. தேகம் பொய்ய மதனுட் டங்கும்[3]
தேகி[4] பிரமமா மனைத்துந் தானாம்
ஊகம் பருத்த வியாச ருரையாம்
உற்றுண்மை[5] சோதித் தறிதி தோழி!

4. மாடேறி பருந்தேறி யன்னமேறி
மயிலேறி யெலியேறி வெண்மா வேறி
நாடேறித் தொழுகின்றார் நாமென் கின்றார்
நாட்டுறார் முன்னிலை யிதென்ன தோழி!

5. இருக்கு தாம்பிரம மொன்ற தனுக்கோ[6]
இல்லையாஞ் செயலுஞ் செய்விக்கை குணமும்
திருக்கு மாயை யொன்று தோன்றிச்
செயுதாமைந் தொழிலீ தென்ன தோழி.

6. மாயா வாதி பிரம வாதி
மற்று முள்ள வாதி யெல்லாம்
தேயாப் பிரமமென் றோதி யந்நியம்
செப்ப வெழுந்த தென்ன தோழி!

7. எல்லாம் மாயையெனச் சொல்வோர் சொல்லும்
என்னவாம் மாயையல வென்ன லாமோ ?
நல்லாருக் கிவ்வுப தேசங் கொடிய
நஞ்செனத்தோன்றிவி டாதோ தோழி !

8. புத்தி மான்கள்சொல் லத்து விதத்தைப்
பொய்மட மென்க லாமா வென்றால்

சத்தி பூசையி னூற்செய் தோரும்
சார்புத்தி மான்க ளன்றோ தோழி.

9. பவுண்ட ரீக[7] யாகங் கற்பித்த
பண்டித ரறிவிற் றாழ்ந்தவ ரோகாண்
கவுண்ட ரன்றிமேன் மக்க ளதனை
கைக்கொள் ளாரிகழ் வாரே தோழி !

10. ஆதி யரவனுப தேச மெல்லாம்[8]
அடுக்கார் மெய்த்தேவ பத்தராம் மக்கள்
சோதி யருள்வேதத் துறைக்கண் ணமர்ந்து
தூய்சுவி சேஷாந்தங் கற்றுநிற் றோழி[9]

1. நாத்திகக் கொள்கைகளின் அடக்கம் ; 2. வேதாந்தம்+சூதாந்தம் ; 3. அதனுள்+தங்கும் ; 4. உடலையுடையவன் ; 5. உற்று+உண்மை ; 6. ஒன்று+அதனுக்கோ ; 7. தாமரை+மீது; 8. அரவன்+உபதேசம்+எல்லாம் ; 9. நில்+தோழி.

101. ஊஞ்சல்

[பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் வரும் ஊசற் பருவப் பாடல்களைப் போன்று ஊஞ்சலாடும்பொழுது பாடிக் கொண்டே ஆடுவதற்கு உகந்த முறையில் இப்பகுதிப் பாடல்கள் உள்ளன. ஊஞ்சலாக விவிலியம் காட்டப்பெறுவதும், நதியில் குளித்துத் தூய ஆடைகளை உடுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் நீதி, ஒழுக்கம் ஆகியவை உருவகிக்கப் படுவதும் சிந்தனைக்குரியன.]

கழிநெடிலாசிரியவிருத்தம்

1. தப்பறு பழைய வேற்பாட்டின்[1]
சதுர்ப்பிரி வசையாக் காற்க ளாக்கி
ஒப்பறு புதியவேற் பாட்டின்மூன்
றுறுப்பையங் கயிறு[2] பலகையாக்கி
மப்பறு மீட்பா னந்தமீறும்[3]
மதுரப் புதுப்பண் பாடியெவரும்
செப்பறு தேவ புகழ்துலங்கத்
திவிய சீவியமா மூஞ்சலாடாய்[4]

2. கூறிய கருமக்கி யானங்கொண்டு[5]
கூடாத வான்ம[6] ரக்ஷணியம்
தேறிய கருணைக்கி யானத்தினால்
சித்தித்த பரமா னந்தவெறி
ஏறிய வூக்கங்[7] கடைப்பிடித்தே
இங்கிதந் தங்கு தேவபத்தி
பாறிய[8] மனுட ருறவைவிட்டு
பரிசுத்த சீவியமா மூஞ்சலாடாய்.

3. மாசறு பரமன் றிருச்சோரி
மாநதி யாடித் தரிப்பவரின்
காசறு தேவ நீதியாடை
கட்டிநற் குணமாங் கலணணிந்து
தேசறு பழைய வொழுக்கவுடை
தீப்பணி களைந்து புவிபாச
ஆசறு வைராக் கியம்பொருந்தி
அமல சீவியமா மூஞ்சலாடாய்.

4. தந்திர வாதி கொடுஞ்சருப்பச்
சதியுப தேச மாயவலை
வந்திர வதுபோல் வளையாமல்
வல்லாவி யருளுந் துணையடைந்து
சந்திர மாய்வீற் றுயர்சுவிசே
ஷாந்தோப தேசப் பாலருந்தி
மந்திர முறைகள் பிசகாமல்
மாசறு சீவியமா மூஞ்ச லாடாய்.

5. தத்துவ மெனப்பேர் புறங்காட்டி
தற்பரன் மறுமை யில்லையெனும்
எத்துவம் பான நூற்கள்பல
இயம்பி நடிப்போ ரும்பலராம்
அத்துவம் வாய்க்கா தையனோடே
அவ்வழி யீதறியா தம்மார்க்கமே
நத்துவம் பரைவிட் டுணர்விலங்கி[9]
நல்லசீ வியமா மூஞ்சலாடாய்.

6. மெஞ்ஞானப் பரிதி சுடர்விரிக்க
மெய்வே தாந்தக்கண் டேர்ச்சியுள்ள[10]

விஞ்ஞானப் பத்த ரகங்களிக்க[11]
வெறும்பே ரொன்றைச் சூடிக்கொண்ட
புஞ்ஞான நூற்றொண் டாதிகைக்கப்[12]
பூலோக முழுதும் மயங்கநிற்கும்
அஞ்ஞான மாது மனந்திரும்ப
அமல சீவியமா மூஞ்சலாடாய்.

7. துன்பங்க ளாலே வாடாமல்
சோதனைக் கிடமாய்த் தூங்காமல்
இன்பங்க ளுறும்போ தகங்கரியா
திடறற் கேதுவாய்[13] நில்லாமல்
புன்பங்க தடைவர்[14] சேராமல்
புத்தியிற் பிரகா சம்பொருந்தி
நன்பங்க தடைந்தெந் நாளும்வாழ[15]
நறியசீ வியமா மூஞ்சலாடாய்.

8. சத்துரு நிந்தை பெருத்துளக்கண்
டாங்காமை[16] மிஞ்சி வருந்தினாலும்
மித்துரு மார்சே ராபத்திலே[17]
விலகி லோபங் காட்டினாலும்
முத்துரு வினைக ளடர்ந்தேறி[18]
மும்முர மாய்ப்போர் மூட்டினாலும்
சித்துரு தேவ துணையைநம்பிச்
சிறந்தசீ வியமா மூஞ்சலாடாய்.

9. தாங்கற்கு மிஞ்சு பிணிக்குறைவால்
சடலமும் மனமு மாத்துமாவும்
நீங்கற்குப் பெரிய நோவுதுக்கம்
நெருக்கமும் வரினும் விசுவாசத்தால்
வாங்கற்கு நாடு மெவர்களுக்கும்
வள்ளன் மையுடைய கிறிஸ்துகரம்
தாங்கற்கு வல்ல தெனத்தேறி[19]
சத்திய சீவியமா மூஞ்சலாடாய்.

10. சீரிய மோசே பாட்டுப் பாடி
சிறந்த தவிதாசாப் பாட்டுப் பாடி
நேரிய மீரியாம் பாட்டுப் பாடி
நிலவு தெபோராள் பாட்டுப் பாடி

ஆரிய மரியம் பாட்டுப் பாடி
அச்சுதன் புதிய பாட்டுப் பாடி
வீரிய சிலுவைக் கொடிய சைய
மெய்ஞ்ஞான சீவியமாமூஞ்ச லாடாய்.

1. பழைய+ஏற்பாடு; 2. மூன்று+உறுப்பை+அம்+கயிறு; 3. மப்பு+அறு+மீட்பு+ஆனந்தம்+மீறும்; 4. சீவியமாம்+ஊஞ்சலாடாய்; 5. பலன்களால்; 6. கூடாத+ஆன்ம; 7. ஏறிய+ஊக்கம்; 8. தீய; 9. நத்து+வம்பரை+விட்டு+உணர்வு+இலங்கி; 10. வேதத்தில் தேர்ச்சியுள்ள 11. பத்தியுடையோர் உள்ளம் மகிழ; 12. புன்மை+ஞானம்+நூல்+தொண்டர்+திகைக்க; புன்மை+ஞானம் = 'புன் ஞானம்' என்பது எதுகை நோக்கிப் 'புஞ்ஞானம்' என அமைந் துள்ளது; 13. இன்பங்கள்+உறும்போது+அகம்+கரியாது+இடறற்கு+ஏதுவாய்; 14. புன்+பங்கு+அது+அடைவர்; 15. நன்+பங்கு+அது+அடைந்து+எந்நாளும்+வாழ; 16. பெரும்+துன்பங்கள் தாங்காமை = பெருந்துன்பங்களைத் தாங்காமல்; 17. மித்துருமார்+சேர்+ஆபத்திலே; 18. முந்து+உரு+வினைகள்+அடர்ந்து+ஏறி; 'முந்துரு' என்பது எதுகை நோக்கி 'முத்துரு' என வந்துள்ளது; 19. வல்லது+என+தேறி.

102. ஞானப்பந்தாட்டு

[இலக்கியங்களில் வரும் பந்தாட்டங்களை மனத்துட் கொண்டு பெண்கள் பந்தாடும்பொழுது பாடுவதற்காக இப்பகுதிப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அதற்கேற்ற வகையில் ஒவ்வொரு பாடலின் இறுதி யும் 'பந்தடிப்போம்வாரீர் பாவை நல்லீர்' என முடிவுறுகிறது.]

எண்சீர் விருத்தம்

1. சத்திய வேதாந்த போதங் கற்று
தக்கநம் பிக்கையுள் ளத்த மர்ந்து
எத்திய பேய்மயல் முற்றுந் தாண்டி
எண்படி முப்படி யேறிச் சென்று
துத்திய கிறிஸ்தவ சீவிப் பான
சுந்தரா னந்தங்க ளுறுங்க ளத்தில்[1]
பத்திய திலங்கநம்[2] பரனைப் பாடிப்
பந்தடிப் போம்வாரீர் பாவை நல்லீர்.

2. காட்டுக்குள் வழிதப்பி யோடி யலைந்து
கலங்கித் தவித்தநாம் வ்ாழ மோட்ச
நாட்டுக்குள் ளிருந்துகண் ணோக்கி யன்பே
நல்லோரு திருமேனி யாகி யெழுந்து
வீட்டுக்குள் ளாகநற் பாதை காட்டி
மேவிடை யூறுந்தீர நல்கு கருணை
பாட்டுக்குள் ளடங்காவென் றாலும் பாடிப்
பந்தடிப் போம்வாரீர் பாவை நல்லீர்.

3. காதாரச் சுவிசேஷ ஞானங் கேட்டு
கதித்தமெய் விசுவாச மன்பு றுதியும்
தீதார மற்போடுந் தீய வலகை[3]
சிதையமர் வென்றநற் சிந்தைத் தெளிவும்
ஆதார மூலனைப் பூச னைசெய்
அதிமகிழ் வுந்துலங் கிடவே கர்த்தன்
பாதார விந்தப்பு கழ்ச்சி பாடிப்
பந்தடிப் போம்வாரீர் பாவை நல்லீர்.

4. தேக்கிய காருண்யக் கண்கள் பாடி
தேற்றிய வபயஸ்தக் கைகள் பாடி
வாக்கிய நறவம்பெய்ச்[4] செவ்வாய் பாடி
மன்றாட்டுக் கேடிருக் காது பாடி
யோக்கிய மத்தியஸ்தச் செய்கை பாடி
ஓதரும் நித்தியசி நேகம் பாடி
பாக்கிய முறைதுய்ய பாதம் பாடிப்
பந்தடிப் போம்வாரீர் பாவை நல்லீர்.

5. பூமேவு புண்ணிய பாதை யானைப்
பொருந்தினார்க் கருந்துணை யீட்டு வானைக்[5]
காமேவு மான்மதிருப் பாட்டில்[6] வந்த
கலக்கம்வென் றௌமைக்கைக் கொண்ட தேவை
நாமேவு துதிக்கெலா முரிய நாதனை
ஞாயப்பிர மாணம்நிறை வேற்றி யாகனை
பாமேவு களிப்பனைப் போற்றிப் பாடிப்
பந்தடிப் போம்வாரீர் பாவை நல்லீர்.

6. அடர்ந்தவெம் பாவத்தின் றுயர மாற்றி[7]
அழுக்கான சுய நீதிக் கந்தை களைந்தே

இடர்ந்தவெம் பரனீதி யாடை சாத்தி
எழும்புசோ தனைவெலற் கேந்த லீந்து[8]
தொடர்ந்தவெம் யாத்திரையில் முன்செ லற்காம்
துணையனு தினஞ்செய் திழிவாய்[9] நம்மில்
படர்ந்தவெம் பவமறு நீதனைப் பாடிப்
பந்தடிப் போம்வாரீர் பாவை நல்லீர்.

7. ஓங்கிய மூங்கிலா ரணிய[10] மெனவுள்
ளுள்ளேமு ளைக்கும்பிர பஞ்சக் கவலை
தாங்கிய கொடியவ ருத்தந் தீர்ந்து
தம்பிரான் மேற்பார மனைத்துஞ் சுமத்தி
தேங்கிய வருண்மன[11] ரம்மிய மேவித்
தேவ கணங்கள்கண் டதிச யிக்க
பாங்கிய ரிசைந்திறை யன்பைப் பாடிப்
பந்தடிப் போம்வாரீர் பாவை நல்லீர்.

8. கிட்டரும்[12] ரட்சணிய மதிலி னுள்ளே
கிளரொளி தவழ்சபைக் கிரகந் திருத்தி
முட்டரும் வேதாமு தாதி யளித்து[13]
முத்திநப் பிக்கைமஞ் சத்தி லுறக்கி[14]
எட்டரும் கிருபைக்க ரங்கொண் டெழுப்பி
இன்பத்து டனல்லூ ழியங்கள் வாங்கும்
பட்டரும் பரன்றிருக் கீர்த்தி பாடிப்
பந்தடிப் போம்வாரீர் பாவை நல்லீர்.

9. தேம்பொழி தண்டலை[15] நின்று கந்தம்
செறிதூள் கொண்டெறி தென்றலெனத் தீயாவி
நாம்பொழி மகிழ்ச்சியின கீதத் துக்கும்
நற்சீவி யப்பந்து விநோதத் துக்கும்
தீம்பொழி யாதர வாயி ருக்கச்[16]
சிந்தனை வேறென்ன வாதி யேதேன்
பாம்பொழி[17] யைக்கியம் பலித்தற் பாடிப்
பந்தடிப் போம்வாரீர் பாவை நல்லீர்.

10. உன்னுதற் கெட்டருந் திரித்து வத்தின்
உடன்படிக் கைநிறை வேற்றி நமது
கன்னுதற் குரியவு ளத்திற் படர்ந்த
கன்மஷ மறுவழி வாய்த்து நம்மை

மென்னுதற் கிருந்தபேய்ப் பற்க டகர்ந்தே[18]
விட்டதால் நாமுற்ற மீட்புக் காக
பன்னுதற் கரும்புதுப்[19] பாக்கள் பாடிப்
பந்தடிப் போம்வாரீர் பாவை நல்லீர்.

1. சுந்தரம்+ஆனந்தங்கள்+உறும்+களத்தில் ; 2. பத்தி+அது+இலங்க+நம் ; 3. தீது+ஆர+மல்+போடும்+தீய+அலகை ; தேன் பெய்த ; 5. அரும்+துணை+ஈட்டுவானை ; 6. கா+மேவும்+ஆன்ம+திருப்பாட்டில்; 7. துயம்+ஆற்றி; 8. சோதனை+வெலற்கு+ஏந்தல்+ஈந்து ; 9. செய்து+இழிவாய் ; 10. மூங்கிலைப் போல ; 11. அருள்+மனம் ; 12. கிட்ட+அரும் ; கிட்டவரும் என்பது தொகுத்தல் விகாரமாய்க் ' கிட்டரும் ' என வந்துள்ளது ; 13. வேத+அமுது+ஆதி+அளித்து ; 14. மஞ்சத்தில்+உறக்கி= மஞ்சத்தில் உறங்கச் செய்து ; 15. தேன் பொழியும் சோலை ; 16. ஆதரவாய்+இருக்க ; 17. பாம்பு வடிவில் வந்த பேயினை விட்டு நீங்கி, இறைவனோடு ஐக்கியம் உண்டாவதற்கு ; 18. பேய்+பற்கள்+தகர்ந்தே 19. பன்னுதற்கு+அரும்+புது.

103. திருக்கழல்

[அம்மானைப் பாடல்கள் 'அம்மானை' என்று முடிவு பெறுவதைப் போன்று கழல் விளையாட்டுப் பாடல்கள் ' கழல் ' என முடிவு பெறுகின்றன. கழல் விளையாடும்பொழுது இறைவனின் இயல்பு, ஆற்றல், அருட்செயல் ஆகியவற்றை வியந்தேத்திப் போற்றிப் புகழும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. ஒன்று, இரண்டு, மூன்று என்ற முறையில் எண்ணலங்காரம் அமையப் பாடியிருப்பது சிந்தனைக்குரியது].

கலித்தாழிசை

1. ஒருவரே தேவ னுகந்தாவி[1] யாலே
அருச்சிப்ப துச்சிதமென்[2] றாடாய்கழல்
ஆகுமி ரட்சிப்பென் றாடாய்கழல்.

2. இருதோ ணியிற்கா லிடுகில் விழுதல்
வருவது நிச்சயமென் றாடாய் கழல்
வான்கதி சேராயென் றாடாய் கழல்.

3. மூன்றா ளொருவராய் மொய்முறை பேரருள்
ஆன்றோ ரறிவாரென் றாடாய்கழல்
ஆனந்தங் கொள்வாரென் றாடாய்கழல்.

4. நாலுபேர்[3] கூறிறை நல்ல சரித்திரமெய்
நூலுட னூடாடென்[4] றாடாய்கழல்
நூதன சீவியமென் றாடாய்கழல்.

5. ஐந்து திருக்காயத் தானந்தப் புகலின்றே
நைந்துரு கிச்சேரென் றாடாய்கழல்
ஞான மதுவேயென் றாடாய்கழல்.

6. ஆறுன் னுளத்தி லமர்ந்தோடும் நம்பிக்கை
தேறுகி லுண்மையென் றாடாய்கழல்
சீர்பெற்று வாழ்வாயென் றாடாய்கழல்.

7. ஏழுடு வேந்திய[5] யேசுபெரு மான்பதம்
சூழுவ தேதுறவென்[6] றாடாய்கழல்
தொல்லை தொலையுமென் றாடாய்கழல்.

8. எட்டுக் குணஞ்செய லீரைந்துளான் றிருத்தாள்
விட்டுப் பிரியீரென் றாடாய்கழல்
மேல்வீடு சித்தியென் றாடாய்கழல்.

9. ஒன்பதா விக்கனிக ளுள்ளிற்[7] செழிக்கவே
மன்னு பிறப்படையென் றாடாய்கழல்
மறுமைசென் முன்னமென்[8] றாடாய்கழல்.

10. பத்துரை[9] மீறிமெய்ப் பத்தமிலி[10] நீயுய்யக்
கத்தனடு வானதெண்ணி[11] யாடாய்கழல்
கதியாதீ னங்கிறிஸ்தென்[12] றாடாய்கழல்.

1. தேவன் + உகந்து + ஆவி; 2. அருச்சிப்பது + உச்சிதம் + என்று;
3. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நால்வர்;
4. நூலுடன் + ஊடாடு + என்று; 5. ஏழ் + உடு + ஏந்திய;
6. சூழுவது + ஏது + உறவு + என்று; 7. ஒன்பது + ஆவி + கனிகள் + உள்ளில்; 8. மறுமை + செல் + முன்னம் + என்று; 9. பத்து + உரை;
10. பத்தம் + இலி; 11. கத்தன் + நடுவான் + அது + எண்ணி;
12. கதி + ஆதீனம் + கிறிஸ்து + என்று.

104. நற்புத்தி

[உண்மைக் கிறித்தவ வாழ்விற்குரிய நெறிமுறைகள் கூறும் பாடல் களைக் கொண்டது. பாடலுக்குரிய சந்தத்தையும் தொடக்கத்தில் ஆசிரியர் சுட்டியுள்ளார்.]

நொண்டிச் சிந்து

(தனதனைத் தானானை-தந்தானைத் தானனைத் துதிதினந் தானானே)

1. ஆதிமத்தி யாந்த ரஹித சச்சிதா
னந்தவொரே தேவனுண் டந்தத் தேவனை
ஜோதிவீசுஞ் சத்திய வேதம்-கூறுமொரே
சூக்ஷவழி கற்றுத்தொழு மாக்ஷி யாகவே.

2. விக்கிரகா ராத னைவிடு-மூகர்க்கது[1]
வேண்டுமென்போ ரெத்துரையைத் தாண்டு[2] பிழைப்பாய்
அக்கிரம மிதைப்போ லுண்டோ?-அனைத்தையும்
ஆக்கிறைக் குருக்கள்பல[3] வாக்குத லென்னோ?

3. வீணாய்நீ தேவ நாமத்தை-உருப்போட்டு
மெய்ப்பத்தி விடாதே யோய்வு நாளையாசரி
வாணாளை வர்த்தனை[4] செய்யும்-ஐங்குரவர்
வழிபா டிழந்தருஞ்செ றிப்பிழக்கா்தே.[5]

4. கொலைவிப சார மகற்று-களவினைக்
கொஞ்சமுஞ் செய்யாதே பொய்யை நஞ்செனக்களை
அலையாதே யிச்சை வனம்நீ-எவற்றினும்
அதிகமாய் நேசிதேவைக் கதியை யடைவாய்.

5. உன்னளவு நேசி பிறரை-இந்தவதி[6]
உத்தம நெறிகளைநீ பத்தியாய்ச் சிந்தி
உன்னைநீயே சோதித் தறிவாய்-இப்படியே
ஒழுகினையோ தினஞ்சற்றும் வழுக வில்லையோ?[7]

6. ஐயையோ நீபெரும் பாவி-உன்பாவம்
அலைகடல் மணலெண் ணம்[8] மலைக ளளவாம்
ஐயை யோ! கிநே கிதனே!-மன்னிப்பைநீ
அடையா விடினரகி[9] லிடைய வருமே.

7. என்னசெய்ய வெண்ணு கின்றனை? தேவகோபம்
இரையுதுன்மேற் பெருநெருப்பாய்க் கரையா யோர்மனம்
உன்னதனார் நமக்கி ரங்கித்-திருச்சுதனை
உலகுதிக்கச் செய்தவரும்[10] நலம தைநினை.

8. அவதார புருஷன் யேசு-கிறிஸ்து
ஆதிக்கும் மனுக்களுக்கும் நீதி நடுவன்
பவநிவா ரணம் வாய்க்கச்-சிலுவையிலே
பரிந்துயிர் யாகமாக மரித்து யிர்த்தார்.

9. பரன்சு தன்றிருக் குருதி-விசுவாசம்
பாவநாச ஜீவநதி மேவி முழுகு
நரகு லங்கடைத் தேற-வேறுவழி
நாதனேற் படுத்தவில்லை பூதலத் தெங்கும்.

10. நம்பினோர் வம்பிற் போகார்-ரக்ஷணியம்
நன்கடைவார் மன்னிப்பொடு துன்னு தூய்மையும்
தம்பிரானி யேசுபுகலை[11]-இன்றைக்கேநீ
சார்ந்துகொண்[12] ணெறிசெலற் காந்துணை செய்வார்.

11. ஜாதி மேன்மைக் கிழுக்கா மென்றே-இயேசுதேவன்
தண்ணடிப் புண்ணியமுறப் பின்னிடா தேநீ
நீதியே ஜாதிமேன் மையாம்-அந்தநீதி
நேசக்கி றிஸ்துவிசு வாசத்தா லாமே.

12. என்றுமிவ் வுலகிருப் பாயோ?-சாவுந்
திழுக்கையி லழுது[13] தொழுதால் விடுமோ?
ஒன்றே தேவை யென்றே-பரமகுரு
உரைதிரு வுபதே சவரை யினிலை.[14]

13. வீண்க வலையெல் லாம்விடு-தினந்தோறும்
வேண்டிக்கொள் நன்மைகளை யாண்டவனிடம்
மாண்பொரு ளியாவு மளிப்பார்-தேவமகிமை
வரமுய[15] லியேசுபரன் சரணற் றுணையே.[16]

14. கண்காட் சிதனை நாடி-அலைந்தேநீ
கண்டபல னலுப்பன்றி விண்டிடற் குண்டோ?
மண்மாட்சி யாவும் மோசமே-கிறிஸ்துவிசு
வாசந்தரு மைம்பலனோ ஆ! சதா மெய்யே.

15. விபகரிப்பிற் றெய்வ மொன்றுதான்-உனக்கானால்
வீட்டிலோ வனந்ததெய்வக் கோட்டி யுண்டல்லோ?
உபதேசம் பெற்றீ டேறு-கிறிஸ்தவ
உத்தம போதகரிடஞ் சத்தியஞ் சொன்னேன்.

16. அத்துவித ஞானநூ லிந்நாள்-நீயும்பிறரும்
ஆசித்துப் படித்துபேசல் யோசித்துப் பார்க்கில்
பத்தருக்குண் டாகும் வியப்பே-ஏனெனில்
பகட்டத்து வைதம் நாஸ்திகத் தொப்பாமே.

17. மேனாட்டுக் கல்வி யுயர்வால்-அநித்தியவிம்
மேதினி சுகிப்பதுவே போதுமோ? ஐயோ!
வானாட்டு நித்திய வீட்டு-வாழ்வடைய
மனந்திரும்பிக் குணப்படுதற் கினந்தா மதமேன்?

18. மரணவேளை கொடுக்குந் தானம்-மோக்ஷத்தின்
வாசல்திறந் தளிக்குமோ? நீச நரரின்
சரணம் நமக்கிடு மோபுகல்?-இயேசுமகா
தற்பரனின் பொற்பதமே யற்புத புண்யம்.

19. காடேறும் பிறம தங்கள்-மயக்கிச் சொல்லும்
கள்ளவழி தள்ளியேசு வள்ளலை யண்டு
வீடேறும் வழிந டத்தி-மரணத்தின்மேல்
வெற்றிநல்கிக் கொற்றமுடி யுற்றிடச் செய்வார்.

20. சதுர்வேத மங்க மாறும்-புராணங்களும்
சஞ்சலத்துறை யிவ்வுண்மை நெஞ்சிலிருத்து
பொதுதேவ சத்திய வேதம்-தினமுமோதிப்
பூரண நற் புத்திபெற்றுச் சீரடை வையே.

1. மூகர்க்கு+அது; 2. எத்து+உரையைத்+தாண்டு; 3. ஆக்கு+இறை+குருக்கள்+பல; 4. வீணாக்கும்; 5. செழிப்பு+இழக்காதே; 6. இந்த+அதி; 7. தவறவில்லையோ?; 7. மணல்+எண்ணம் = மணல் அளவு எண்ணிக்கை; 9. அடையாவிடில்+நரகில்; 10. உலகு+உதிக்க+செய்த+அரும்; 11. இயேசுவிடம் சரணடைதலை; 12. சார்ந்து+கொள்+நெறிசெயற்கு; 13. சாவு வந்து+இழுக்கையில்+அழுது; 14. உபதேச வரையில்+நிலை; 15. வரமுயல்+இயேசுபரன்; 16. சரண்+நல்+துணையே.

105. வாழ்த்து

[நூலின் இறுதிப் பகுதி வாழ்த்தாக அமைந்துள்ளது.]

வஞ்சித்துறை

வாழி வாழி சௌமியம்[1]
வாழி வாழி மெய்த்துறை
வாழி வாழி யைங்குலம்[2]
வாழி வாழி யன்பரோ!

1. அமைதி; 2. ஐ + குலம் = தலைவனுடைய குலம்.

சௌமியத் துறை தலையட்டவணையும் கவித்தொகையும்

	தொகை	பக்கம்
அக்கைச்சி	10	33
அச்சோ	10	157
அதியச பத்து	10	82
அந்தணன்	10	123
அந்திக் காப்பு	10	86
அம்மானை	10	72
அரிதுணர்த்தல்	10	63
அலந்தேன்பத்து	10	28
அவனேநானாவது	10	195
அன்னைப்பத்து	10	141
ஆத்துமா	10	170
ஆராட்சிக்கடா	10	147
ஆவாள்	10	55
ஆனந்தநளினம்	10	57
இதயத்தியம்பல்	10	159
இயேசு கிறிஸ்து விளக்கப் பதிகம்	10	26
இரசாயன சாஸ்திரி	10	142
இரக்ஷண்ய வியப்பு	10	54
இருபிறப்பாளர்	10	121
உரிமை பாராட்டல்	10	89
ஊஞ்சல்	10	200
ஊர்	10	49
ஏலாமைக்கிரங்கல்	10	103
கருக்குப் பட்டயம்	10	91
கனவு	10	31
காதல்	10	35
காளம்	10	71
கிறிஸ்தவன்	10	189

குடும்பன்	10	172
குணலை	10	104
குலாலன்	10	175
கோழி	10	152
கோனார்	10	177
சகத்துவாத தண்டாயுதம்	10	198
சரணப் பங்கயப் பதிகம்	10	17
சரணப் பதிகம்	10	6
சரணப்பத்து	10	3
சான்றான்	10	136
சான்றோன்	10	137
சிங்கம்	10	151
சுகம்	10	50
சுதந்தரன்	20	38
சுயநீதி	10	65
சுவர்க்க நாட்டம்	30	190
செட்டி	10	129
செபதூதுப் பதிகம்	10	180
செம்மான்	10	126
ஞானச்சாழல்	10	163
ஞானத்தட்டான்	10	131
ஞானப்பால் கறவெனல்	10	62
ஞானவெற்றியுந்தி	10	77
ஞானக் கல்லுளி மொரங்கன்	10	134
ஞானப்பந்தாட்டு	10	203
ஞானாமிர்தம்	10	80
ஞானார்த்தப் பிரலாபம்	10	144
ஞானோபதேச விம்பில்	25	83
தச்சன்	10	174
தந்தை மந்திரம்	10	167
தலைகொள் பதிகம்	10	19
தற்பொருள்	10	111
தாய் வாசகம்	10	165
திருக்கழல்	10	206

திருக்காவல் நாட்டம்	10	179
திருத்தாட் பதிகம்	10	24
திருப்பல்லாண்டு	10	93
திருநாம விளக்கப் பதிகம்	10	21
தேகம்	10	169
தேவ வல்லபம்	10	44
தொழுதேன் பத்து	10	15
தொழுவாம் பதிகம்	10	13
தோழிப்பெண்	10	107
நமப்பதிகம்	10	1
நமோ பதிகம்	10	9
நற்புத்தி	20	208
நாடன்	10	96
நாடாழ்வானும் நாடாழ்வியும்	10	139
நிலைமை நிர்ணயம்	10	146
பஞ்சரத்தினம்	5	162
பட்டாரியன்	10	128
பணிவாற்றல்	10	47
பறை	10	112
பறையனும் பறைச்சியும்	10	116
பாங்கி சாக்ஷியம்	10	79
பார்ப்பான்	10	114
பார்ப்பானும் பறையனும்	10	118
பாவியினறிக்கையும் இரட்சையும்	20	98
புனர் ஜனனத் தெளிவு	10	187
பூரண ரட்சகர்	10	185
பெருமாள்	20	41
போற்றிப் பதிகம்	10	4
மண்சட்டி	10	101
மனரம்மியானந்தம்	10	52
ராஜா	10	132

வண்ணான்	10	125
வரவு வழுத்தல்	10	36
வற்புறுத்தல்	10	67
வாழ்க்கைப்பாடு	13	59
வாரணம்	10	149
வார்த்தீக கண்டனம்	20	154
வாழ்த்து	1	211
விசுவாசக் குறத்தி	10	69
விசுவாசப் பாம்பாட்டு	25	74
விசுவாச வவிசுவாசவியல்	4	193
வெற்றிக்கொட்டு	10	183
வேளாளன்	10	119
விஷயம் 105க்குக் கூடியகவி	1902	